தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறைவாரியான அறிவிப்புகள்

(04.07.2019 முதல் 20.07.2019 வரை)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக்கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறை வாரியான அறிவிப்புகள் (04.07.2019 முதல் 20.07.2019 வரை)

சிறப்பு வெளியீடு எண் 34

தமிழரசு

இலவச வெளியீடு

ஆகஸ்ட் 2019

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக்கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறை வாரியான அறிவிப்புகள் (04.07.2019 முதல் 20.07.2019 வரை)

வ. எண்.	மானியக் கோரிக்கை எண்	துறையின் பெயர்	பக்க எண்
		உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை	
1.	22	காவல்	1
2.	23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்	6
3.	21	**நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை**	12
		பொதுப்பணித்துறை	
4.	39 & 40	கட்டடங்கள் மற்றும் பாசனம்	19
5.	38	**பொதுத்துறை**	39
6.	16	**நிதித்துறை**	43
7.	26	**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**	46
8.	**36**	**திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை**	63
		சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை	
9.	54	வனம்	65
10.	43	**பள்ளிக் கல்வித்துறை**	73
11.	49	**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை**	85
		கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை	
12.	12	கூட்டுறவு	87
13.	14	**எரிசக்தித்துறை**	94

வ. எண்.	மானியக் கோரிக்கை எண்	துறையின் பெயர்	பக்க எண்
		உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை	
14.	37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை	99
15.	34	**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**	104
16.	42	**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை**	126
		கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை	
17.	7	மீன்வளம்	141
18.	35	**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை**	165
19.	33	**சட்டத்துறை**	168
		உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை	
20.	3	நீதி நிருவாகம்	169
21.	24	சிறைச்சாலைகள்	174
		தொழில்துறை	
22.	27	சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்	179
23.	20	**உயர்கல்வித்துறை**	182
24.	45	**சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை**	189
25.	52	மாற்றுத்திறனாளிகள் நலத்துறை	197
		தொழில்துறை	
26.	27	பெருந்தொழில்	203
		சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை	
27.	15	சுற்றுச்சூழல்	209
		கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை	
28.	13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு	217

வ. எண்.	மானியக் கோரிக்கை எண்	துறையின் பெயர்	பக்க எண்
29.	17	**கைத்தறி, கைத்திறன் துணிநூல் துறை**	227
		கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை	
30.	6	கால்நடை பராமரிப்பு	230
31.	19	**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை**	244
32.	5	**வேளாண்மைத்துறை**	298
		தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை	
33.	28	செய்தி மற்றும் விளம்பரம்	312
34.	30	எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை	319
		வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	
35.	41 & 51	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	324
		சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை	
36.	29	சுற்றுலா	339
		வணிக வரி மற்றும் பதிவுத்துறை	
37.	10 & 11	வணிக வரிகள், முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு	346
		கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை	
38.	8	பால்வளம்	354
39.	44	**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை**	361

வ. எண்.	மானியக் கோரிக்கை எண்	துறையின் பெயர்	பக்க எண்
40.	18	**பட்டுவளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள்**	367
41.	48	**போக்குவரத்துத் துறை**	371
42.	25	**உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை** இயக்கூர்திகள் சட்டங்கள் – நிருவாகம்	375
43.	32	**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**	382
44.	31	**தகவல் தொழில்நுட்பவியல் துறை**	389
45.	4	**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**	397
46.	46	**தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை** தமிழ் வளர்ச்சி	404
47.	29	**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை** கலை மற்றும் பண்பாடு, அருங்காட்சியகங்கள், தொல்லியல்	421
48.	18	**கதர் மற்றும் கிராமத் தொழில்கள்**	432
49.	47	**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை** இந்து சமய அறநிலையத்துறை	436
50.	9	**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**	447

❖ ❖ ❖

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

காவல்துறை

மானியக் கோரிக்கை எண். 22

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

மானியக் கோரிக்கை எண். 23

காவல் துறை

1. **மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காவல் நிலையங்கள் மற்றும் சிறப்பு பிரிவுகளில் களப்பணியில் ஈடுபட்டுள்ள 72,000 காவல் ஆளிநர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஆகும் வாகன எரிபொருள் செலவுக்கான தொகை, எரிபொருள் படியாக வழங்கப்படும். இதற்காக அரசுக்கு ஆண்டொன்றுக்கு 30 கோடி ரூபாய் தொடர் செலவினம் ஏற்படும். (Fuel Allowance to Police Personnel)**

    - காவல் நிலையங்கள் மற்றும் சிறப்பு பிரிவுகளில் களப்பணியில் ஈடுபட்டுள்ள சுமார் 72,000 காவல் ஆளிநர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு 5 லிட்டர் பெட்ரோலுக்கு உண்டான வாகன எரிபொருள் செலவு, எரிபொருள் படியாக வழங்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு தொடர் செலவினம் 30 கோடி ரூபாய் ஏற்படும்.

2. **மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தஞ்சாவூர் மாவட்டம் சோழபுரம், நாமக்கல் மாவட்டம் செங்கரை, மதுரை மாநகரம் திருப்பாலை மற்றும் மாட்டுத்தாவணி மற்றும் தருமபுரி மாவட்டம் பாலக்கோடு உட்கோட்டத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையம் உட்பட 5 புதிய காவல் நிலையங்கள்**

14.75 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். (Formation of 5 new Police Stations at a cost of Rs.14.75 Crore)

- **3.51** கோடி ரூபாய் செலவில், தஞ்சாவூர் மாவட்டம் திருப்பனந்தாள், சுவாமிமலை மற்றும் கும்பகோணம் தாலுகா காவல் நிலையத்திற்குட்பட்ட பகுதிகளை பிரித்து, சோழபுரத்தில் புதிய காவல் நிலையம் உருவாக்கப்படும்.

- **2.23** கோடி ரூபாய் செலவில், நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட செங்கரையில் புதிய காவல் நிலையம் உருவாக்கப்படும்.

- **3.86** கோடி ரூபாய் செலவில், மதுரை மாநகரம் திருப்பாலையில் புதிய மிதவகை (Medium type) காவல் நிலையம் உருவாக்கப்படும்.

- **3.86** கோடி ரூபாய் செலவில், மதுரை மாநகரம் மாட்டுத்தாவணியில் புதிய மிதவகை (Medium type) காவல் நிலையம் உருவாக்கப்படும்.

- **1.29** கோடி செலவில், தருமபுரி மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு உட்கோட்டத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையம் உருவாக்கப்படும்.

3. **மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருப்பூர் மாவட்டத்தில் சைபர் கிரைம் பிரிவு ஒன்று 91.74 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும். (Formation of Cyber Crime Wing at Tiruppur at a cost of Rs.91.74 Lakh)**

- **91.74** இலட்சம் ரூபாய் செலவில், திருப்பூர் மாவட்டத்தில் சைபர் கிரைம் பிரிவு ஒன்று உருவாக்கப்படும்.

4. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம், அரியலூர் மாவட்டம் கீழப்பழூர், கோயம்புத்தூர் மாவட்டம் தடாகம், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர், மதுரை மாவட்டம் மேலூர் மேலவளவு ஆகிய 5 இடங்களில் புதிய காவல் நிலைய கட்டடங்கள், திண்டுக்கல் மாவட்டம், பழனியில் போக்குவரத்து காவல் நிலைய கட்டடம், தமிழ்நாடு சிறப்பு காவல் 1ஆம் படையணிக்காக நிருவாகக் கட்டடம், இராஜரெத்தினம் விளையாட்டு அரங்கத்திற்கு சுற்றுச்சுவர், பெண் அலுவலர் / ஆளிநர்களுக்கு தங்குமிடம் மற்றும் கூடுதல் அறைகள், ஈரோட்டில் துப்பறியும் நாய் பட்டி (Dog Kennel) மற்றும் தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு இணைப்புக் கட்டடம் ஆகிய கட்டடங்கள் மொத்தம் 21.33 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.(Construction of Police Buildings at a cost of Rs.21.33 Crore)

1.23 கோடி ரூபாய் செலவில், விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் காவல் நிலையத்திற்கு கட்டடம் கட்டப்படும்.

- 1.14 கோடி ரூபாய் செலவில், அரியலூர் மாவட்டம் கீழப்பழூர் காவல் நிலையத்திற்கு கட்டடம் கட்டப்படும்.
- 98.87 இலட்சம் ரூபாய் செலவில், கோயம்புத்தூர் மாவட்டம் தடாகம் காவல் நிலையத்திற்கு கட்டடம் கட்டப்படும்.
- 1.62 கோடி ரூபாய் செலவில், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் காவல் நிலையத்திற்கு கட்டடம் கட்டப்படும்.
- 1.04 கோடி ரூபாய் செலவில், மதுரை மாவட்டம் மேலூர் மேலவளவு காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

- **74.05** இலட்சம் ரூபாய் செலவில், திண்டுக்கல் மாவட்டம், பழனி போக்குவரத்து காவல் நிலையத்திற்கு கட்டடம் கட்டப்படும்.

- **4.33** கோடி ரூபாய் செலவில், திருச்சி தமிழ்நாடு சிறப்பு காவல் **1**–ஆம் படையணிக்காக நிருவாகக் கட்டடம் கட்டப்படும்.

- **2.39** கோடி ரூபாய் செலவில், சென்னை மாநகரத்திலுள்ள இராஜரெத்தினம் விளையாட்டு அரங்கத்திற்கு சுற்றுச்சுவர் கட்டப்படும்.

- **1** கோடி ரூபாய் செலவில், சென்னையில் தற்போதுள்ள பெண் அலுவலர் / ஆளிநர் தங்குமிடத்தில் கூடுதல் அறைகள் மற்றும் தங்குமிடங்கள் கட்டப்படும்.

- **68.22** இலட்சம் ரூபாய் செலவில், ஈரோட்டிலுள்ள ஆயுதப்படை வளாகத்தில் துப்பறியும் நாய் பட்டி (Dog Kennel) கட்டப்படும்.

- **6.17** கோடி செலவில், தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு இணைப்புக் கட்டடம் கட்டப்படும்.

5. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காவல் துறை தலைமையகத்தின் அனைத்து ஆவணங்களும், 5.10 கோடி ரூபாய் செலவில் எண்ம இலக்க முறையில் காப்பகப்படுத்தப்படும். (Archiving of Digitized Records at a cost of Rs.5.10 Crore)

- **5.10** கோடி ரூபாய் செலவில், காவல் துறை தலைமை அலுவலகத்தின் நிருவாகம், தலைமையகம், நலன் மற்றும் சட்ட ஒழுங்கு பிரிவுகள் குறித்த முக்கிய கோப்புகளை

எதிர்கால பார்வைக்காக காப்பகப்படுத்துவது கட்டாயத் தேவையாகின்றபடியால் அனைத்து ஆவணங்களும், எண்ம இலக்க முறையில், காப்பகப்படுத்தப்படும்.

6. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காவல் துறையில் வாகன மேலாண்மை மற்றும் சொத்து மேலாண்மை ஆகியவற்றில் 'தானியக்கம்' (Automation) 25 இலட்சம் ரூபாய் செலவில் அமல்படுத்தப்படும். (Automation of the Police Department in the areas of Fleet Management and Asset Management at a cost of Rs.25 Lakh)

- 25 இலட்சம் ரூபாய் செலவில், காவல் துறையின் வாகன மேலாண்மை மற்றும் சொத்து மேலாண்மை ஆகிய பகுதிகளில் 'தானியக்கம்' (Automation) அமல்படுத்தப்படும்.

7. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், அனைத்து காவல் ஆணையரகங்களுக்கும் மின் ரோந்து காவல் முறை (E-Beat System) 1.26 கோடி ரூபாய் செலவில் அமல்படுத்தப்படும். (Implementation of E-Beat System at a cost of Rs.1.26 Crore)

- 1.26 கோடி ரூபாய் செலவில், சேலம் மாநகரில் நடைமுறையிலுள்ள மின்ரோந்து காவல் முறையானது அனைத்து காவல் ஆணையரகங்களிலும் அமல்படுத்தப்படும்.

8. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சட்டம் மற்றும் ஒழுங்கு அலகுகளுக்கு, உடல் இணை புகைப்படக் கருவி (Body Worn Cameras) மற்றும் ஆளில்லா விமானங்கள் (Drones) 1.38 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும். (Purchase of

Body Worn Cameras and Aerial Surveillance System at a cost of Rs.1.38 Crore)

- 1 கோடி ரூபாய் செலவில், 20 சட்டம் மற்றும் ஒழுங்கு அலகுகளுக்கு (மாநகரங்கள் மற்றும் மாவட்டங்கள்) தலா 10 உடல் இணை புகைப்படக் கருவிகள் வாங்கப்படும்.

- 38 இலட்சம் ரூபாய் செலவில், காவல் சரகங்கள் மற்றும் ஆணையரகங்களுக்கு வான்வெளி கண்காணிப்பு முறைமை ஏற்படுத்தி தேவையான வான்வெளி கண்காணிப்பு மற்றும் காணொளி பதிவினை உறுதி செய்யும் பொருட்டு, 16 ஆளில்லா விமானங்கள் (Drones) வாங்கப்படும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை

9. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காவல்துறையில் பதக்கம் பெறும் ஒவ்வொருவருக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் கூடிய பதக்கச்சுருள் வழங்கப்படும். (Hon'ble Chief Minister's Scroll for Medals)

- 3.12 இலட்சம் ரூபாய் செலவில், காவல்துறையில் பதக்கம் பெறும் ஒவ்வொருவருக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் கூடிய பதக்கச்சுருள் வழங்கப்படும். இந்த பதக்கச்சுருள், பதக்கம் பெற்றவரின் வாழ்நாள் நினைவாக விளங்கும்.

10. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கோயம்புத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன் பாளையம் மற்றும் தொண்டாமுத்தூர், ஈரோடு மாவட்டம் நம்பியூர், நாமக்கல் மாவட்டம் வெப்படை,

சென்னை மாவட்டம் அண்ணாநகர், காஞ்சிபுரம் மாவட்டம் மகாபலிபுரம் மற்றும் மேடவாக்கம், விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி, திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான், திருச்சி மாவட்டம் சமயபுரம், நாகப்பட்டினம் மாவட்டம் மணல்மேடு, விழுப்புரம் மாவட்டம் திருநாவலூர், மதுரை மாவட்டம் வாடிப்பட்டி, சேலம் மாவட்டம் காடையாம்பட்டி ஆகிய 14 இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களும் மற்றும் சென்னை மெரினா கடற்கரையில் மீட்புப்பணிகள் நிலையமும், 17.25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (Formation of new Fire & Rescue Services Stations)

- **2.34** கோடி ரூபாய் செலவில், கோயம்புத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன் பாளையம் மற்றும் தொண்டாமுத்தூரில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அமைக்கப்படும்.

- **1.17** கோடி ரூபாய் செலவில், ஈரோடு மாவட்டம் நம்பியூரில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும்.

- **1.17** கோடி ரூபாய் செலவில், நாமக்கல் மாவட்டம் வெப்படையில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும்.

- **1.17** கோடி ரூபாய் செலவில், சென்னை மாவட்டம் அண்ணாநகரில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும்.

- **2.34** கோடி ரூபாய் செலவில், காஞ்சிபுரம் மாவட்டம் மகாபலிபுரம் மற்றும் மேடவாக்கத்தில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அமைக்கப்படும்.

- 1.17 கோடி ரூபாய் செலவில், விருதுநகர் மாவட்டம் காரியாபட்டியில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும்.

- 1.17 கோடி ரூபாய் செலவில், திருநெல்வேலி மாவட்டம் கங்கை கொண்டானில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும்.

- 1.17 கோடி ரூபாய் செலவில், திருச்சி மாவட்டம் சமயபுரத்தில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும்.

- 1.17 கோடி ரூபாய் செலவில், நாகப்பட்டினம் மாவட்டம் மணல்மேட்டில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும்.

- 1.17 கோடி ரூபாய் செலவில், விழுப்புரம் மாவட்டம் திருநாவலூரில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும்.

- 1.17 கோடி ரூபாய் செலவில், மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும்.

- 1.17 கோடி ரூபாய் செலவில், சேலம் மாவட்டம் காடையாம்பட்டியில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும்.

- 87 இலட்சம் ரூபாய் செலவில், சென்னை மாவட்டம் மெரினா கடற்கரையில் உள்ள பெசன்ட் ரோட்டில் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும்.

11. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கோயம்புத்தூர் மாவட்டம் பீளமேடு, திருப்பூர் மாவட்டம் திருப்பூர் மற்றும்

அவினாசி, திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி, தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், சேலம் மாவட்டம் கெங்கவல்லி ஆகிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு புதிய கட்டடமும், மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூரில் மாதிரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய கட்டடமும், 16.57 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (Construction of Buildings for the Fire & Rescue Services Stations)

- **1.51** கோடி ரூபாய் செலவில், கோயம்புத்தூர் மாவட்டம் பீளமேடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

- **1.51** கோடி ரூபாய் செலவில், திருப்பூர் மாவட்டம் அவினாசி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

- **1.51** கோடி ரூபாய் செலவில், திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

- **2.96** கோடி ரூபாய் செலவில், தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

- **2.56** கோடி ரூபாய் செலவில், திருப்பூர் மாவட்டம் திருப்பூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

- **1.51** கோடி ரூபாய் செலவில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

- 1.51 கோடி ரூபாய் செலவில், சேலம் மாவட்டம் கெங்கவல்லி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

- 3.50 கோடி ரூபாய் செலவில், கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூரில் மாதிரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய கட்டடம் கட்டப்படும்.

12. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சென்னை மாவட்டம் வேப்பேரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் மற்றும் 2 அலுவலர் குடியிருப்புகள், காஞ்சிபுரம் மாவட்டம் துரைப்பாக்கத்தில் 6 அலுவலர் குடியிருப்புகள் மற்றும் சேலம் மாவட்டம் சங்ககிரியில் 13 (12 + 1) குடியிருப்புகளும், 6.01 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (Construction of Buildings and Quarters for the Officers, Personnel of Fire & Rescue Services Department)

- 2.31 கோடி ரூபாய் செலவில், சென்னை மாவட்டம் வேப்பேரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் மற்றும் 2 அலுவலர் குடியிருப்புகள் கட்டப்படும்.

- 1.35 கோடி ரூபாய் செலவில், காஞ்சிபுரம் மாவட்டம் துரைப்பாக்கத்தில் 6 அலுவலர் குடியிருப்புகள் கட்டப்படும்.

- 2.35 கோடி ரூபாய் செலவில், சேலம் மாவட்டம் சங்ககிரியில் 13 குடியிருப்புகள் (1 அலுவலர் + 12 பணியாளர்கள்) கட்டப்படும்.

13. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், 54 மீட்டர் உயரம் கொண்ட வான்நோக்கி நகரும் ஏணியுடன் கூடிய ஊர்தி ஒன்று 12 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும். (Procurement of

one Aerial Ladder Platform of 54 meters at a cost of Rs.12 Crore)

- 12 கோடி ரூபாய் செலவில், 54 மீட்டர் உயரம் கொண்ட, வான்நோக்கி நகரும் ஏணியுடன் கூடிய ஊர்தி ஒன்று, பழைய மகாபலிபுரம் சாலைக்கென (OMR) பிரத்யேகமாக வாங்கப்படும்.

14. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தீ விபத்து மற்றும் மீட்புப்பணிகளை வானிலிருந்து கண்காணிக்க 50 ஆளில்லா விமானங்கள் 1 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும். (Procurement of 50 Drones for aerial survey of Fire accidents and Rescue Services at a cost of Rs.1 Crore)

- 1 கோடி ரூபாய் செலவில், தீ விபத்து மற்றும் மீட்புப்பணிகளை வானிலிருந்து கண்காணிக்க 50 ஆளில்லா விமானங்கள் (Drones) வாங்கப்படும்.

15. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், 1,500 தீயணைப்பு பணியாளர்களுக்கு தற்காப்பு சாதனங்களுடன் கூடிய உடைகள் (Personnel Protective Equipment) 8.54 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். (Providing of Personnel Protective Equipment to 1,500 Fire Personnel at a cost of Rs.8.54 Crore)

- 8.54 கோடி ரூபாய் செலவில், 1,500 தீயணைப்பு பணியாளர்களுக்கு தற்காப்பு சாதனங்களுடன் கூடிய உடைகள் (Personnel Protective Equipment) வழங்கப்படும்.

❖ ❖ ❖

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

மானியக் கோரிக்கை எண். 21

1. சென்னை பெருநகர பகுதியில் 9 இடங்களில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு, பாலங்கள் கட்டவும் மற்றும் ஒரு இணைப்புச் சாலை அமைக்கவும், ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை ரூ.2.35 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் சென்னை பெருநகர பகுதியில் (i) ஹால்டா சந்திப்பு முதல் அடையார், பசுமை வழிச்சாலை மற்றும் சாந்தோம் நெடுஞ்சாலை வழியாக கலங்கரை விளக்கம் வரை, (ii) வடபழனியிலிருந்து போரூர் வரை (iii) சின்னமலை முதல் வேளச்சேரி புறவழிச்சாலை வரை, (iv) அம்பத்தூர் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் சந்திப்பு, (v) வால்டாக்ஸ் சாலையில் பேசின் பால சந்திப்பு, (vi) அம்பேத்கர் கல்லூரி அருகில் வியாசர்பாடி சந்திப்பு ஆகிய இடங்களில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கும் மற்றும் அடையாரில் உள்ள திரு.வி.க. பாலம் முதல் மறைமலை அடிகள் பாலம் வரை அடையாறை ஒட்டி புதிய இணைப்புச் சாலை அமைக்கவும் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை ரூ.1.70 கோடியில் தயாரிக்கப்படும்.

திருமங்கலம் – முகப்பேர் சாலையில் உள்ள DAV பள்ளி மற்றும் வேலம்மாள் பள்ளி அருகில் நடைமேம்பாலம் அமைக்கவும் அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து பணிமனை அருகில் சாலை மேம்பாலம் அமைக்கவும் விரிவான திட்ட அறிக்கை ரூ.65 இலட்சத்தில் தயாரிக்கப்படும்.

2. ஒன்பது மாவட்டங்களில், 32 இடங்களில் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலங்கள் கட்டுவதற்கு ரூ.3.50 கோடி செலவில் திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருவண்ணாமலை மாவட்டத்தில் சித்தாத்தூர், விழுப்புரம் மாவட்டத்தில் மரக்காணம் மற்றும் தாயனூர், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பாலக்கொல்லை மற்றும் கு.கள்ளக்குறிச்சி, பெரம்பலூர் மாவட்டத்தில் கீழ்பெரம்பலூர், ஈரோடு மாவட்டத்தில் பவானி மற்றும் கீழ்பவானி வாய்க்கால் பகுதியில் 9 பழமையான பாலங்களுக்கு பதிலாக புதிய பாலங்கள், கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியில் 9 தரைப்பாலங்களுக்கு பதிலாக புதிய பாலங்கள், சேலம் மாவட்டத்தில் தெடாவூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் காளியப்ப கவுண்டன்புதூர், திருச்சி மாவட்டத்தில் இ.புதூர், ஓமந்தூர் மற்றும் எடையாத்துமங்கலம், கிளிக்கூடு கிராமங்களை இணைக்கும் வகையில் பாலம், புதுக்கோட்டை மாவட்டத்தில் கீழ்குடி மற்றும் பெருமருதூர் கிராமங்களை இணைக்கும் வகையில் பாலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் தென்பெரம்பூர் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் உள்ள 32 ஆற்று பாலங்களை புதுப்பித்து கட்ட விரிவான திட்ட அறிக்கை ரூ.3.50 கோடியில் தயாரிக்கப்படும்.

3. இரயில்வே மேம்பாலங்கள் 3 இடங்களில் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.1.08 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மதுரை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் 3 இரயில்வே மேம்பாலங்கள் புதிதாக கட்ட விரிவான திட்ட அறிக்கை ரூ.1.08 கோடியில் தயாரிக்கப்படும்.

4. சாலை மேம்பாலங்கள் 7 இடங்களில் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காஞ்சிபுரம் மாவட்டத்தில் படப்பை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒசூர் உள்வட்ட சாலை, ஈரோடு மாவட்டத்தில் எஸ்.எஸ்.வி.என். பள்ளி முதல் சுவஸ்திக்கார்னர் வரை, தேனி மாவட்டத்தில் நேரு சிலை, திருப்பூர் மாவட்டத்தில் சந்தைப்பேட்டை, மதுரை மாநகரில் மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் மற்றும் அண்ணா பேருந்து நிலையம் ஆகிய 7 இடங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க சாலை மேம்பாலங்கள் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

5. புறவழிச்சாலைகள் 10 நகரங்களில் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், விழுப்புரம் மாவட்டத்தில் அவலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டத்தில் விருதாச்சலம், தருமபுரி மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி, சேலம் மாவட்டத்தில் ஜலகண்டாபுரம், திருப்பூர் மாவட்டத்தில் அவிநாசி, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், திருச்சி மாவட்டத்தில் துறையூர் (பகுதி–3), தேனி மாவட்டத்தில் தேனி மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய 10 நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

6. ரூ.155.80 கோடி மதிப்பீட்டில் 17 மாவட்டங்களில் 42 ஆற்றுப்பாலங்கள் கட்டப்படும்

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், 17 மாவட்டங்களில் உள்ள 379 கிராமங்களில் வசிக்கும் 9,59,356 மக்கள் பயனடையும் வகையில், ரூ.155.80 கோடி

மதிப்பீட்டில் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 42 ஆற்றுப்பாலங்கள் கட்டப்படும்.

7. 1,456 கி.மீ நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தப்படும்

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், 1,456 கி.மீ. நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்து மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தப்படும்.

8. சென்னை பெருநகர பகுதியில் 2 சாலைப்பணிகள் மற்றும் 2 மேம்பாலங்கள் ரூ.409 கோடி மதிப்பில் கட்டப்படும்

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கிழக்கு கடற்கரைச் சாலை மற்றும் திருவான்மியூர் லேட்டிஸ் பால சாலை சந்திக்கும் இடத்தில் மேம்பாலம் கட்டும் பணி, கிழக்கு கடற்கரைச் சாலையை நான்கு வழித்தடத்திலிருந்து ஆறு வழித்தடமாக அகலப்படுத்தும் பணி மற்றும் தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை பணி ஆகியவை ரூ.299 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், சென்னை, இராஜீவ் காந்தி சாலையில் டைடல் பார்க் சந்திப்பில் இரண்டு “U” வடிவ மேம்பாலங்கள் ரூ.110 கோடி மதிப்பில் கட்டப்படும்.

9. சென்னை பெருநகர பகுதியில் 13 மேம்பாலங்கள், 2 இரயில்வே பாலங்கள், 2 நடை மேம்பாலங்கள் மற்றும் 1 ஆற்றுப்பாலம் ஆகிய 18 பணிகளை மேற்கொள்ள முதற்கட்டமாக நிலம் கையகப்படுத்தும் பணிகள் ரூ.1,122 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சென்னை பெருநகர பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் காட்டுபாக்கம், அக்கரை, அம்பத்தூர், ஆவடி, மாதவரம்,

இராமாபுரம், குன்றத்தூர், கைவேலி, சேலையூர், கொரட்டூர், வடபழனி–P.T. ராஜன் சாலை சந்திப்பு, மத்தியகைலாஷ் மற்றும் மடிப்பாக்கம் ஆகிய 13 இடங்களில் சாலை மேம்பாலம், பாடிகுப்பத்தில் ஒரு உயர்மட்ட பாலம், கேந்திரிய வித்தியாலயா (FOB) மற்றும் தாம்பரத்தில் உயர்மட்ட நடைபாதை (Sky walk), கொரட்டூரில் ஒரு இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்துதல் மற்றும் அம்பத்தூரில் இரயில்வே மேம்பாலம் ஆகிய பணிகள் சென்னை போக்குவரத்து நெரிசலை குறைக்கும் திட்டத்தில் (Chennai City Traffic Decongestion Project (CCTDP)) புதிய வளர்ச்சி வங்கியின் (NDB) நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் முதற்கட்டமாக ரூ.1,122 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

10. செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC) மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் சாலைகள் பராமரிக்கப்படும்

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சாலைகளை நல்லமுறையில் பராமரிப்பதற்காக செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC) மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகள் பராமரிக்கப்படும்.

11. பழநியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி கோயிலுக்கு செல்லும் சாலைகளில் ரூ.58.50 கோடி மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திண்டுக்கல் மாவட்டத்தில் பழநியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு பயன்படும்

வகையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு இக்கோயிலுக்கு செல்லும் சாலைகளில் மேம்பாட்டு பணிகள் ரூ.58.50 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

12. சாலை பாதுகாப்புப் பணிகள் ரூ.300 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நடப்பாண்டில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு (CRIDP) திட்டத்தில் ரூ.200 கோடி மதிப்பிலும், சாலை பாதுகாப்பு நிதியில் இருந்து ரூ.100 கோடி மதிப்பிலும் ஆக மொத்தம் ரூ.300 கோடி மதிப்பிலான சாலை பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

13. அலுவலகக் கட்டடங்கள் மற்றும் அலுவலக குடியிருப்புகள் ரூ.26.50 கோடி மதிப்பில் கட்டப்படும்

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நெடுஞ்சாலைத்துறையின் பயன்பாட்டிற்காக திருவாரூர் கோட்ட அலுவலகம், திருத்துறைபூண்டி, குடவாசல், முசிறி, லால்குடி, அரியலூர், பாபநாசம், திருவிடைமருதூர், சீர்காழி, நம்பியூர், மடத்துக்குளம், திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு ஆகிய இடங்களில் 12 உட்கோட்ட அலுவலக கட்டடங்கள், தரங்கம்பட்டியில் பிரிவு அலுவலகம் மற்றும் சேலம் நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகுக்கு வட்டம் மற்றும் கோட்ட அலுவலகம் ஆகிய 16 கட்டடப்பணிகள் ரூ.4.60 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட சாலை திட்டம், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் மற்றும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு கழகம் ஆகிய அலுவலகங்களுக்கு சென்னையில் ரூ.13 கோடி மதிப்பில் அலுவலகக் கட்டடம் மற்றும்

ரூ.8.90 கோடி மதிப்பில் தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு சென்னையில் 14 எண்ணிக்கையிலான குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்படும். மேலும், மழைநீர் வடிகால் சேகரிப்பு மற்றும் கழிவு நீரை மறுசுழற்சி முறையில் பயன்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

14. தரக்கட்டுபாட்டு உட்கோட்டங்களுக்கு 42 வாகனங்கள் ரூ.3.90 கோடியில் வாங்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சாலை மற்றும் பாலப்பணிகளின் தரத்தை ஆய்வு செய்வதற்காக 42 தரக்கட்டுப்பாட்டு உட்கோட்டங்களுக்கு ஈப்புகள் ரூ.3.90 கோடியில் வாங்கப்படும்.

15. நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிப்பதற்கு 68 புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய பயிற்சி நிலையத்தில், நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுக்கு தொடர்ச்சியாக பயிற்சிகள் அளிப்பதற்கு 26 பதவிகளில் 68 புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும்.

❖ ❖ ❖

பொதுப்பணித்துறை

கட்டடங்கள் மற்றும் பாசனம்

மானியக் கோரிக்கை எண்கள். 39 & 40

1. 3 மாவட்டங்களில் புதிதாக நீர்தேக்கம், ஏரி மற்றும் கசிவு நீர் குட்டை அமைக்கும்பணிகள் ரூபாய் 137 கோடியே 42 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், தெற்கு கல்லிடைக் குறிச்சி கிராமத்தில் எலுமிச்சையாறு ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்க கட்டுமானப் பணிகள் ரூபாய் 110 கோடி மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம் சொக்கனூர் அக்ரஹாரம் கிராமத்தில் பொன்னி ஒடையின் குறுக்கே ஒரு புதிய ஏரி அமைக்கும் பணி ரூபாய் 27 கோடி மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், சேந்தமங்கலம் கிராமத்தில் ஒரு கசிவு நீர் குட்டை அமைக்கும் பணி ரூபாய் 42 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

2. 2 மாவட்டங்களில் புதிதாக கடைமடை நீரொழுங்கி மற்றும் கதவணை அமைக்கும் பணிகள் ரூபாய் 505 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், தென்னம்பட்டிணம் கிராமத்தில் திருவாலி ஏரியின் உபரி நீர் வழிந்தோடியான நாட்டுக்கண்ணி மண்ணியாற்றின் குறுக்கே கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும்,

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நஞ்சை புகலூர் கிராமத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் பணி ரூபாய் 495 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

3. 8 மாவட்டங்களில் 12 தடுப்பணைகள் ரூபாய் 105.90 கோடி மதிப்பீட்டிலும், 2 மாவட்டங்களில் 2 அணைக்கட்டுகள் ரூபாய் 8.94 கோடி மதிப்பீட்டிலும், 2 மாவட்டங்களில் 2 படுகை அணைகள் ரூபாய் 13.50 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், பொடங்கம் கிராமத்தில் புல எண்.31இல் வரட்டாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், செவ்வூர் கிராமத்தில் வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 8 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், சூடியூர் கிராமத்தில் வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 8 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வி.களத்தூர் கிராமத்தின் அருகே கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய்6 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், பாண்டகப்பாடி கிராமத்தில் கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 6 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், வெங்களத்தூர் கிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 27 கோடி மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஜம்பை ‘அ’ கிராமம் க.ச.எண்.962/1–ல் பவானி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 18 கோடி மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டைமேடு கிராமத்தில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், கொளப்பாக்கம் மற்றும் சேப்பாக்கம் கிராமங்களுக்கு அருகே கோமுகி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 6 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், பூதாமூர் அருகே மணிமுக்தா ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 16 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், சாத்தன்குடி கிராமத்தில் தெற்காற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், திரளி கிராமத்தில் கவுண்டாநதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம், மதயானைப்பட்டி கிராமத்தில் பேராம்பூர் வாரியின் குறுக்கே அணைக்கட்டு அமைத்து ஆவூர் கண்மாய்க்கு நீர் வழங்கும் பணி ரூபாய் 2 கோடியே 94 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், சின்னாற்றின் குறுக்கே அமைந்துள்ள பழுதடைந்த அணைக்கட்டினை மறுகட்டுமானம்

செய்து வடக்கலூர் அக்ரஹாரம் ஏரிக்கு நீர் வழங்கும் பணி ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும்,

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், மருதேரி கிராமம், அகரம் – மருதேரி பாலத்தின் அருகே பெண்ணையாற்றின் குறுக்கே படுகை அணை அமைக்கும் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், ஒட்டியம்பாக்கம் கிராமத்தில், மதுரப்பாக்கம் ஓடையின் குறுக்கே வெள்ளக்கட்டுப்பாட்டு மதகு மற்றும் படுகை அணை கட்டும் பணி ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

4. 5 மாவட்டங்களில் 5 இடங்களில் வெள்ள உபரி நீரினை திருப்பும் பணிகள் ரூபாய் 632.87 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கேசர்குலிஅல்லா அணையிலிருந்து வெள்ளக் காலங்களில் வெளியேறும் உபரி நீரை அணையின் இடதுபுறக் கால்வாயின் நெடுகை 5.275 கி.மீஇல் புதிய பிரிவுக் கால்வாய் அமைத்து கோட்டூர் ஜெர்தலாவ் ஏரி, திருமல்வாடி ஏரி மற்றும் தாசன் ஏரி ஆகிய 3 ஏரிகளுக்கு வழங்கும் பணி ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், தெற்கு நாடு கிராமம் கைகாண்வளவு காட்டாற்றிலிருந்து உபரி நீரை, சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையம் வட்டம், கரியகோயில் நீர்தேக்கத்திற்கு திருப்பும் பணி ரூபாய் 7 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மேட்டூர் அணையின் மழைக்கால வெள்ள உபரிநீரை சேலம் மாவட்டத்தில் சரபங்கா வடிநிலத்தில் உள்ள

வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நீர் வழங்கும் பணி ரூபாய் 565 கோடி மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம் வரட்டுப்பள்ளம் அணைக்கு மணியாச்சிப்பள்ளத்தின் வெள்ளநீரை கொண்டு செல்லும் திட்டத்திற்கு தொழில் நுட்ப திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ரூபாய் 27 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆயக்குடி கிராமம் வரதமாநதி அணை வெள்ள நீரினை ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டிகருங்குளத்திற்கு கொண்டு சேர்க்கும் பணி ரூபாய் 60 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

5. 5 மாவட்டங்களில் 8 இடங்களில் புதிய கால்வாய் அமைக்கும் பணிகள் ரூபாய் 32.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கிருஷ்ணகிரி அணையின் வலதுபுறக் கால்வாய் நீட்டிப்பு திட்டத்தில் நெடுகை 7.100 மீட்டரில் புதிய பிரிவுக் கால்வாய் அமைத்து காட்டூர் கிராமத்தில் உள்ள எலங்குட்டை ஏரிக்கு நீர் வழங்கும் பணி ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம் கடனா ஆற்றில் காங்கேயன் அணைக்கட்டின் கீழுள்ள மாறன் குளத்திலிருந்து கல்லூர் குளம் வரை புதிய கால்வாய் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், ஊர்மேலழகியான் கிராமம் வண்ணான்குளம் வழங்கு கால்வாயிலிருந்து கருங்குளத்திற்கு புதிய கால்வாய் அமைக்கும் பணி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம் வடக்குபச்சையாறு நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ், 7 குளங்களை சேர்ப்பதற்கு புதிய கால்வாய் அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கூடலூர் கிராமத்தில் 18ஆம் கால்வாயில் நெடுகை 0 மீ முதல் 1,250 மீ வரை கட் & கவர் (Cut & Cover) தளம் அமைக்கும் பணி ரூபாய் 21 கோடி மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் வட்டம், மலட்டார் ஓடையிலிருந்து அத்திக்கிணறு குளம் வரை புதிய கால்வாய் அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், சாஸ்தாவிநல்லூர் கிராமம் புத்தன் தருவை குளத்திற்கு செல்லும் கால்வாயிலிருந்து சாஸ்தாவிநல்லூர் குளத்திற்கு புதிய கால்வாய் வெட்டி தண்ணீர் வழங்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், நிலையூர் நீட்டிப்பு திட்டத்தில் சோழங்குருணி கண்மாயிலிருந்து நெடுங்குளம் நெடுஞ்சாலையினை ஒட்டி சிறிய வாய்க்கால் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

6. 3 மாவட்டங்களில் 4 இடங்களில் புதிய பாலம் அமைக்கும் பணிகள் ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கிராம மக்கள் மற்றும் மாணவர்கள் பயனடையும் வகையில்,

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், ஆனங்கூர் கிராமத்தில் இராஜா வாய்க்கால் மைல் 2/3 குறுக்கே பாலம் அமைக்கும் பணி ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் மேற்கு கரை கால்வாயின் குறுக்கே சரகம் 11.390 கி.மீ.இல் பாலம் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம்,காலிங்கராயன் வாய்க்கால் மைல் 16இல் அமைந்துள்ள பாலத்தினை மறுக்கட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், வேட்டை பெரியாம்பாளையம் கிராமம் பவானி பகிர்மான வாய்க்கால் மைல் 1–5–300இன் குறுக்கே பாலம் அமைக்கும் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

7. தஞ்சாவூர் மாவட்டத்தில் 2 இடங்களில் தடுப்பணைகளும், ஒரு இடத்தில் விவசாயிகள் இயக்கமும், பராமரிப்பும் செய்யும் வகையில் தடுப்பணையுடன் கூடிய நீரேற்று திட்டமும் ரூபாய் 32 கோடியில் அமைக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்தில், இராஜாமடம் கிராமத்தில் அக்னியாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், பொன்னவராயன் கோட்டை கிராமத்தில் நசுவினி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், ஏனாதி கிராமத்தில் மகாராஜசமுத்திரம் ஆற்றின் குறுக்கே விவசாயிகள் இயக்கமும், பராமரிப்பும் செய்யும் வகையில் தடுப்பணையுடன் கூடிய ஒரு நவீன நீரேற்று பாசனத் திட்டமும் ரூபாய் 32 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

8. இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தக்கோன்வலசை கிராமத்தில், கடல் அரிப்பு தடுப்பு சுவர் கட்டும் பணி ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கடலரிப்பை தடுக்கும் பொருட்டு இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஒன்றியம்,

இராமேஸ்வரம் வட்டம், சாத்தக்கோன்வலசை கிராமத்தில் சீனியப்பா தர்கா அருகில் கடல் அரிப்பு தடுப்பு சுவர் கட்டும் பணி ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

9. காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கல்பட்டில் குளவாய் ஏரியினை மீட்டெடுத்து குடிநீர் ஆதாரம் மேம்படுத்தும் திட்டம் ரூபாய் 90 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காஞ்சிபுரம் மாவட்டத்தில், செங்கல்பட்டில் குளவாய் ஏரியினை மீட்டெடுத்து, சென்னையின் நீட்டிக்கப்பட்ட புறநகர் மற்றும் செங்கல்பட்டு பகுதிகளுக்கு குடிநீர் ஆதாரம் மேம்படுத்தும் திட்டம் ரூபாய் 90 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

10. தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் ரூபாய் 61 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருவாரூர் மாவட்டத்தில், காவேரி மற்றும் வெண்ணாறு ஆற்றில் நிலத்தடி நீர் செறிவூட்டும் 155 ஆழ்துளை கிணறுகள் மற்றும் ஏரிகளில் 26 நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டுமானங்கள் அமைக்கும் திட்டம் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டத்தில் காவேரி, வெண்ணாறு மற்றும் அக்னியாறு ஆகிய ஆறுகளில் நிலத்தடி நீர் செறிவூட்டும் 605 ஆழ்துளை கிணறுகள் மற்றும் ஏரிகளில் 99 நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டுமானங்கள் அமைக்கும் திட்டம் ரூபாய் 49 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

11. 9 மாவட்டங்களில் 9 பாசனக் கட்டுமானங்கள் ரூபாய் 30.80 கோடி மதிப்பீட்டிலும், 10 மாவட்டங்களில் 13 கால்வாய்கள்

ரூபாய் 156.28 கோடி மதிப்பீட்டிலும், 4 மாவட்டங்களில் 4 பாசன ஏரிகள் ரூபாய் 185.50 கோடி மதிப்பீட்டிலும் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், குமரம்பட்டி கிராமத்தில், குமரம்பட்டி அணைக்கட்டினை புனரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், வடக்கு மலட்டாற்றின் குறுக்கே அமைந்துள்ள பூவரசன்குப்பம் அணைக்கட்டினை புனரமைத்தல் மற்றும் தளவானூர் அணைக்கட்டில் தலை மதகு அமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், திருத்தலையூர் கிராமம் திருத்தலையூர் பெரிய ஏரி மற்றும் சின்ன ஏரியினை சீரமைத்து சாலை பாலம் மற்றும் நீரொழுங்கியினை புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், தானிப்பாடி கிராமத்தில் பாம்பனாறு ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள மண்கொரம்பினை நிரந்தர கட்டுமானமாக மாற்றி அமைக்கும் பணி, சின்னையம்பேட்டை அணைக்கட்டின் வழங்குக் கால்வாயினை புனரமைக்கும் பணி மற்றும் தானிப்பாடி அணைக்கட்டின் வழங்கு கால்வாயினை மேம்படுத்தும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வாலிகண்டாபுரம் கிராமத்தில் உள்ள வாலிகண்டாபுரம் அணைக்கட்டினை புனரமைக்கும் பணி ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், ராஜகிரி கிராமத்தில் குடமுருட்டி ஆற்றில் மைல் 47/6இல், திருமலைராஜன்,

குடமுருட்டி நீரொழுங்கியினை புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், ஊத்துக்கடவு கிராமத்தில் வெண்ணாறு மைல் 53/3–4இல் ஊத்துக்கடவு நீரொழுங்கியினை புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், போடிநாயக்கனூர் கிராமம் அணை பிள்ளையார் கோவில் அருகில் உள்ள ராஜவாய்க்கால் அணைக்கட்டை புனரமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், தாமரைப்பாக்கம் அணைக்கட்டின் மேல்புறத்தில் குறுக்குச் சுவர் அமைக்கும் பணி மற்றும் கீழ்புறத்தில் உள்ள தண்ணீர் வேகத்தை கட்டுப்படுத்தும் கட்டுமானப் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், எடப்பாடி நகரத்திலுள்ள சரபங்கா நதி நெடுகை 42.80 கி.மீ. முதல் நெடுகை 43.30 கி.மீ. வரை புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 4 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், எடப்பாடி நகரத்திலுள்ள சரபங்கா நதி நெடுகை 43.30 கி.மீ. முதல் நெடுகை 43.80 கி.மீ. வரை புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 4 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம், நந்தன் கால்வாய் நெடுகை 0 கி.மீ. முதல் 12.40 கி.மீ. வரை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி ரூபாய் 12 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம் மற்றும் கோபிசெட்டிபாளையம் வட்டம், கீழ்பவானித்திட்ட பிரதான வாய்க்காலின் கூகலூர் பகிர்மான வாய்க்காலின் மைல் 0/0 முதல் கடைமடை வரை புனரமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 83 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் விரிவாக்க கால்வாயின் நெடுகை 0 கி.மீ. முதல் 2 கி.மீ. வரை உள்ள பகுதிகளை புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம் உடுமலைக் கால்வாயினை நெடுகை 16.600 கி.மீ. முதல் 23.170 கி.மீ. வரை மற்றும் அதன் பகிர்மானக் கால்வாய்களில் விடுபட்டுள்ள பணிகளை புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பரம்பிக்குளம் பிரதான கால்வாயின் நெடுகை 36 கி.மீ. முதல் 39.500 கி.மீ. வரை புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம் மற்றும் வட்டம் திருகண்ணமங்கை வாய்க்காலினை புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், திருமங்கலம் பிரதான கால்வாயின் 1வது கிளை வாய்க்கால் புனரமைக்கும் பணி ரூபாய் 7 கோடி மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், நாரணதேரன்பட்டி கிராமத்தில் கேசவபுரம் கண்மாய் வழங்கு கால்வாயினை நெடுகை 1,900 மீ முதல் 2,820 மீ வரை நவீனப்படுத்தும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டத்தில் உள்ள பி.டி.ராஜன் கால்வாய் மற்றும் பாலகிருஷ்ணாபுரம் கிளைக் கால்வாயினை புனரமைக்கும் பணி ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம், கள்ளரதிணிபட்டி, திருமலை, நாமனூர், மேலபூங்குடி, சாளூர், சோழபுரம், நாலுக்கோட்டை கிராமங்களில் உள்ள சீல்டுகால் கால்வாய் மற்றும் கண்மாய்களை புனரமைக்கும் மற்றும் சீரமைக்கும் பணி ரூபாய் 22 கோடி மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், அந்தியூர் மற்றும் பவானி வட்டங்களுக்கு உட்பட்ட மேட்டூர் மேற்கு கரை கால்வாய் நெடுகை 19.685 கி.மீ. முதல் 43.200 கி.மீ. வரை புனரமைக்கும் பணி (நெருஞ்சிப்பேட்டை முதல் பவானி வரை) ரூபாய் 65 கோடி மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், துறையூர் மற்றும் முசிறி வட்டம் ரெட்டியாப்பட்டி ஏரி, கரிகாலி ஏரி மற்றும் உத்தாண்டம்பட்டி ஏரிகளை புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், பாளையம் கிராமத்தில், விராலிப்பட்டி குக்கிராமத்தில் உள்ள கசிவு நீர் குட்டையை புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் வட்டம் ஆர்.எஸ். மங்கலம் பெரிய கண்மாயினை நவீனப்படுத்தும் பணி ரூபாய் 19 கோடி மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம் கழுவேலி ஏரியில் கட்டமைப்பு அமைத்து கழுவேலி ஏரியினை மீட்டெடுத்து, 2 டி.எம்.சி. அடி நீரினை தேக்குதல் மற்றும் கடல் நீர் உட்புகுதலை தடுக்கும் பணி ரூபாய் 161 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

12. 2 மாவட்டங்களில் 2 பாலங்கள் ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டிலும், கடலூர் மாவட்டத்தில் 2 பாசன கட்டுமானங்களின் அடைப்புக்

கதவுகள் ரூபாய் 20.71 கோடி மதிப்பீட்டிலும், 2 மாவட்டங்களில் தடுப்புச் சுவர் கட்டும் பணி ரூபாய் 16.20 கோடி மதிப்பீட்டிலும் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர்மேற்குகரை கால்வாய் 0/0 இல் பாலம் மற்றும் தலை மதகினை புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

கோயமுத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், வடசித்தூர் கிளைக்கால்வாயின் நெடுகை 14.350 கி.மீ, 14.540 கி.மீ, 15.372 கி.மீ. மற்றும் 16.106 கி.மீ.இல் உள்ள பாலங்களை மறுசீரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம் வெள்ளாற்றின் குறுக்கே அமைந்துள்ள பெலான்துறை அணைக்கட்டின் அடைப்பு கதவுகள் மற்றும் அதன் உபகரணங்களை புனரமைக்கும் பணி ரூபாய் 10 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம் வெள்ளாற்றின் குறுக்கே அமைந்துள்ள தொழுதூர் நீரொழுங்கியின் அடைப்பு கதவுகள் மற்றும் அதன் உபகரணங்களை புனரமைக்கும் பணி ரூபாய் 10 கோடியே 21 இலட்சம் மதிப்பீட்டிலும்,

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், மின்னாத்தூர் பெரியகுளம் உபரி நீர் வாய்க்காலினை தூர்வாரி மின்னாத்தூர் கிராமம் முதல் கந்தர்வக்கோட்டை கிராமம் வரை தடுப்பு சுவர் கட்டும் பணி ரூபாய் 1 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், அக்கரை ஜெயங்கொண்டப்பட்டினம் கிராமம் அருகே கொள்ளிடம் ஆற்றின் இடது கரையில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி ரூபாய் 15 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

13. திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலைச் சுற்றி உள்ள வையாபுரி மற்றும் சிறுநாயக்கன் குளங்களை புனரமைத்தல் மற்றும் 2 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும்பணி ரூபாய் 51.85 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலைச் சுற்றி உள்ள வையாபுரி மற்றும் சிறுநாயக்கன் குளங்களை புனரமைத்து, நீர்நிலைகளுக்கு வந்து சேரும் கழிவுநீர் கால்வாய்களை புனரமைத்து, 2 சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணி ரூபாய் 51 கோடியே 85 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

14. 8 மாவட்டங்களில் 14 இடங்களில் புதிய பாசன திட்டங்கள் குறித்த ஆய்வு பணிகள் மற்றும் மட்டளவு எடுக்கும் பணிகள் ரூபாய் 5.86 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கீழ்க்கண்ட புதிய பாசன திட்டங்களுக்கு விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் வட்டம் கோமுகி அணையின் மேல்புறத்தில் கல்படை ஆற்றின் குறுக்கே ஒரு சிறிய அணையும், பொட்டியம் ஆற்றின் குறுக்கே ஒரு சிறிய அணையும் அமைத்து கூடுதல் நீர்தேக்கம் ஏற்படுத்தும் திட்டத்திற்கு ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், அன்றாயநல்லூர் கிராமம் அருகே பெண்ணையாற்றில் வெள்ளக்காலங்களில் வரும் வெள்ள மிகை நீரை பயன்படுத்தி கோரையாறு மற்றும் மலட்டாறு பகுதிகளில் நிலத்தடி நீரை செறிவூட்டும் திட்டத்திற்கு ரூபாய் 8 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டம், சீர்காழி மற்றும் சிதம்பரம் வட்டம், அளக்குடி மற்றும் திருக்கழிப்பாலை கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடல்நீர் உட்புகுவதை தடுக்கும் பொருட்டு ஒரு தடுப்புச் சுவர் அமைக்கும் பணிக்கு ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் நில அளவை பணிகள், மண் பரிசோதனை பணிகள் மற்றும் மாதிரி ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டம், கருப்பூர் மற்றும் மாதிரிவேளூர் கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 43 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், தூத்தூர் கிராமம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், வாழ்க்கை கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 23 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நெரூர் கிராமம் மற்றும் நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஒருவந்தூர் கிராமங்களுக்கு இடையே காவேரி ஆற்றின் குறுக்கே நெடுகை 122.24 கி.மீ.இல் கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், குளித்தலை கிராமம் மற்றும் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், முசிறி கிராமங்களுக்கு இடையே காவிரி ஆற்றின் குறுக்கே நெடுகை 161.54 கி.மீ.இல் கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தாமரைகுளம் கிராமத்தில் பழையாற்று நீரை நீரேற்று திட்டம் மூலம் இராதாபுரம் கால்வாய்க்கு கொண்டு செல்லும் திட்டத்திற்கு ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டில் ஆய்வு பணிகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், ஞாலம் கிராமத்தில் தடவையாற்றின் குறுக்கேசிறிய நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண்தன்மை ஆய்வுப் பணி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் நம்பியாற்றின் குறுக்கே புதிய அணைக்கட்டு கட்டி புதிய கால்வாய் அமைத்து, வெள்ளநீரை குட்டம் மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளுக்கு வழங்கும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண்தன்மை ஆய்வுப் பணி ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம் புதூர் வட்டம் இரட்டை குளத்திலிருந்து ஊத்துமலை வரை கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண்தன்மை ஆய்வு பணி ரூபாய் 7 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள வறண்ட ஓட்டப்பிடாரம் மற்றும் எட்டையாபுரம் பகுதிகளுக்கு, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தாமிரபரணி, கடனாநதி, சிற்றாறு மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள உப்போடை மற்றும் கல்லாறு ஆகியவற்றை இணைத்து வெள்ளநீர் கால்வாய் மூலம் நீர் வழங்கும் திட்டத்திற்கு மட்டஅளவு மற்றும் மண்தன்மை ஆய்வுப் பணி ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், மருதூர் கீழக்கால்வாய் மற்றும் பேரூர் புறவழிக் கால்வாயினை அகலப்படுத்தி புதிய வெள்ளநீர் கால்வாய் அமைத்து கோரம்பள்ளம் குளம் மற்றும் சாயர்புரம் தேரிப்பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்திற்கு மட்ட அளவு மற்றும் மண்தன்மை ஆய்வு ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தென்பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஈச்சம்பாடி அணைக்கட்டின் மழைக்கால வெள்ள உபரி நீரை நீரேற்று திட்டத்தின் மூலம் அரூர், பாப்பிரெட்டிபட்டி மற்றும் மொரப்பூர் வட்டங்களில் உள்ள ஏரிகள் குளங்கள் மற்றும் குட்டைகளுக்கு நீர் வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

15. ஹோல்ட்ஸ்வர்த் அணைக்கட்டின் பூங்காவினை மேம்படுத்துதல், மண் தன்மை மற்றும் ஆராய்ச்சி கோட்டத்தின் ஆய்வகங்களுக்கு நவீன பரிசோதனை கருவிகள் வழங்குதல் மற்றும் திருச்சி, திட்ட உருவாக்க வட்ட அலுவலகம் சீரமைக்கும் பணி ஆகியவை ரூபாய் 1.91 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், பொதுப்பணித்துறையில் பின்வரும் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கடயக்குடி கிராமத்தில் ஹோல்ட்ஸ்வர்த் அணைக்கட்டின் பூங்காவினை மேம்படுத்தி இணைப்புக் கட்டிடம் கட்டும் பணி ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

சென்னை, பொதுப் பணித்துறையின் மண் தன்மை மற்றும் ஆராய்ச்சி கோட்டத்தின் கீழுள்ள மண் பரிசோதனை

ஆய்வகங்களுக்கு உரிய நவீன பரிசோதனை கருவிகள் ரூபாய் 26 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

திருச்சி மாவட்டம் மற்றும் வட்டம், திட்ட உருவாக்க வட்ட அலுவலகத்தினை சீரமைக்கும் பணி ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

16. 2 மாவட்டங்களில் தரக்கட்டுப்பாட்டுக் கோட்ட அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டும் பணி மற்றும் 3 மாவட்டங்களில் ஆய்வகத்திற்கு உபகரணங்கள் வாங்கும் பணி ரூபாய் 11 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தரக்கட்டுப்பாட்டு அலுவலகங்களுக்கு, ஆய்வகத்துடன் கூடிய கோட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி மொத்தம் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

சென்னை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள தரக்கட்டுப்பாட்டுக் கோட்டங்கள் மற்றும் உபகோட்டங்களின் ஆய்வகத்திற்காக உபகரணங்கள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

17. மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு நீதிபதிகள் குடியிருப்புகளில் மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சென்னை, அடையாறு, பசுமைவழிச்சாலையில் உள்ள மாண்புமிகு அமைச்சர்கள் குடியிருப்பு மற்றும் மாண்புமிகு நீதிபதிகள் குடியிருப்பு வளாகங்களில் சுகாதார வசதி, உட்புறச் சாலை மற்றும் தெருவிளக்கு அமைத்தல் ஆகிய மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

18. சென்னை, சைதாப்பேட்டை அரசு குடியிருப்பில் கழிவுநீர் மறுசுழற்சி அமைப்பு, மழைநீர் சேகரிப்பு மற்றும் வடிகால் அமைப்பு ரூபாய் 3.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் உள்ள அரசு ஊழியர் குடியிருப்பு வளாகத்தில் கழிவுநீர் மறுசுழற்சி மற்றும் மறுஉபயோகத்திற்கான அமைப்பு ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் உள்ள அரசு ஊழியர் குடியிருப்பு வளாகத்தில் மழைநீர் வடிகால், சேகரிப்பு மற்றும் மேற்பரப்பு வடிகால் அமைப்பு ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

19. மதுரையில் பொதுப்பணிப் பணியாளர் பயிற்சி நிலையக் கட்டடம் மற்றும் 3 மாவட்டங்களில் உபகோட்ட அலுவலக கட்டடங்கள் புதியதாக ரூபாய் 5.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மதுரையில் உள்ள பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலியில் உள்ள மின் கோட்டம் மற்றும் மின் உபகோட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் ரூபாய் 1.20 கோடி மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல்லில் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பழனியில் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

20. 3 மாவட்டங்களில் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் குடியிருப்புகள் ரூபாய் 2.60 கோடி மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் செயற்பொறியாளர் குடியிருப்பு புதிய கட்டடம் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

நாகப்பட்டினத்தில் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் புதிய குடியிருப்புகள் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும்,

திருவாரூரில் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் புதிய குடியிருப்புகள் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

❖ ❖ ❖

பொதுத்துறை

மானியக் கோரிக்கை எண். 38

1. மும்பையில் ஒரு புதிய ‘‘தமிழ்நாடு இல்லம்’’ அமைக்கப்படும்.

அரசு அலுவல் ரீதியாக புதுதில்லிக்கு செல்லும் மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் தங்குவதற்கு ஏதுவாக புதுதில்லியில் தமிழ்நாடு இல்லம் இயங்கி வருகிறது.

இதே போன்று மும்பையிலும் ‘‘தமிழ்நாடு இல்லம்’’ தொடங்க பல்வேறு தரப்பிலும் பெறப்பட்ட கோரிக்கையினை ஏற்று, மும்பை செல்லும் மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் தங்குவதற்கு ஏதுவாகவும், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி மேம்பட, மும்பையில் உள்ள பல்வேறு நிறுவனங்களிடம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், தமிழ்நாட்டின் சுற்றுலா மற்றும் கலாச்சார வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் விதமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மகாராஷ்டிரா மாநிலம், மும்பை நகரத்தில் புதிதாக ‘‘தமிழ்நாடு இல்லம் மற்றும் தமிழ்நாடு கலாச்சார மையம்’’ ஒன்றும் அமைக்கப்படும்.

2. சென்னை அரசு விருந்தினர் மாளிகையில் புதிய ‘‘உடற்பயிற்சிக் கூடம்’’ அமைக்கப்படும்.

பல்வேறு மாநிலங்களிலிருந்து சென்னைக்கு வருகை புரியும் அரசு விருந்தினர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் தங்குவதற்கு ஏதுவாக, சென்னை சேப்பாக்கத்தில் அரசு விருந்தினர் இல்லம் இயங்கி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், இங்கு தங்கும் விருந்தினர்களின் பயன்பாட்டிற்காக புதிதாக ரூ.10 இலட்சம் செலவில் ‘‘உடற்பயிற்சிக் கூடம்’’ ஒன்று அமைக்கப்படும்.

3. மதுரை மாவட்டத்தில் ரூ.88 இலட்சம் செலவில் முன்னாள் படைவீரர்கள் நல அலுவலகத்துடன் கூடிய புதிய முன்னாள் படைவீரர் மையக் கட்டடம் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மதுரை மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்கள் நலத்துறைக்கு சொந்தமான நிலத்தில், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களின் பயன்பாட்டிற்காக, முன்னாள் படைவீரர்கள் நல அலுவலகத்துடன் கூடிய புதிய முன்னாள் படைவீரர்கள் மையக் கட்டடம் ரூ.88 இலட்சம் செலவில் கட்டப்படும்.

4. முன்னாள் படைவீரர்கள் பிள்ளைகளுக்கு உயர் கல்விக்கான உதவித் தொகையை உயர்த்தி வழங்குதல்.

முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு தொகுப்பு நிதியிலிருந்து தொழில் கல்வி சார்ந்த பட்டப் படிப்புகள், பட்ட மேற்படிப்புகள், பட்டயப் படிப்புகள், சான்றிதழ் படிப்புகள் மற்றும் அறிவியல் சார்ந்த இளங்கலை மற்றும் முதுகலை படிப்புகளுக்கு ஆண்டுத்தோறும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இக்கல்வி உதவித் தொகை கீழ்க்காணும் வகையில் உயர்த்தி வழங்கப்படும்.

வ. எண்.	பெயர்	தற்போது வழங்கப்படும் தொகை (ரூ.)	உயர்த்தப்படும் தொகை (ரூ.)
1.	கலை மற்றும் அறிவியல் கல்வி இளங்கலை/ முதுகலை படிப்புகள்	2,500/–	10,000/–
2.	தொழில் சார்ந்த கல்வி பட்டப் படிப்புகள், பட்ட மேற்படிப்புகள்	14,000/–	25,000/–

3.	பல்தொழில்நுட்ப பயிலக படிப்பு	11,500/–	20,000/–
4.	தொழில் பயிற்சி படிப்பு	2,500/–	10,000/–

முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகள் 2,900 பேர் பயனடையும் பொருட்டு ரூ.4.32 கோடி தொகுப்பு நிதியிலிருந்து கூடுதலாக செலவிடப்படும்.

5. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்த 5,542 பேருக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர நிதியுதவிகள் ரூ.7.69 கோடி கூடுதல் செலவினத்தில் உயர்த்தி வழங்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு வழங்கப்படும் கீழ்க்காணும் மாதாந்திர நிதியுதவிகள் உயர்த்தி வழங்கப்படும்.

6. முன்னாள் படைவீரர்களின் / கைம்பெண்களின் ஒரு மகளுக்கு வழங்கப்பட்டு வரும் திருமண நிதியுதவி ரூ.20 ஆயிரத்திலிருந்து ரூ.25 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் மற்றும் இரண்டாவது மகளுக்கு இந்நிதியுதவி நீட்டிப்பு செய்து வழங்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், முன்னாள் படைவீரர் / கைம்பெண்ணின் ஒரு மகளுக்கு வழங்கப்பட்டு வரும் திருமண நிதியுதவி ரூ.20,000/–லிருந்து ரூ.25,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும். மேலும் இந்நிதியுதவி முன்னாள் படைவீரரின் / கைம்பெண்ணின் இரண்டாவது மகளுக்கும் நீட்டிப்பு செய்து வழங்கப்படும்.

7. வேலைவாய்ப்பு, படிப்பு மற்றும் பிற காரணங்களுக்காக அயல்நாடு செல்லும் தமிழர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

தமிழ்நாட்டிலிருந்து வேலை வாய்ப்பு, படிப்பு மற்றும் பிற காரணங்களுக்காக தமிழர்கள், வெளிநாடுகளுக்கு செல்லும்

முன்னர் அவர்தம் கடமைகள், உரிமைகள் குறித்து கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு / சட்ட நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், 50 பயிற்றுனர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, இப்பயிற்றுனர்கள் மூலம் மாவட்டந்தோறும் மாதம் ஒருமுறை, மாணவர்கள் தொழிற்கல்வி பயிலும் கல்வி நிலையங்கள் (ஐ.டி.ஐ. மற்றும் பாலிடெக்னிக்) மற்றும் வேலைவாய்ப்பு மையங்களில் பயிற்சி அளித்திட, மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ள "மாவட்ட நல மையம் (வெளிநாடு வாழ் தமிழர்கள்)" மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்பயிற்சியானது, வெளிசெல் அனுமதி (ECR) பெற்று, வெளிநாடுகளுக்கு வேலை மற்றும் படிப்பு உள்ளிட்ட காரணங்களுக்காகச் செல்லும் தமிழர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

8. பின்தங்கிய நிலையில் உள்ள தாயகம் திரும்பியோர் (Repatriates) பயன் பெறும் வகையில் 'அனைவருக்கும் வீடு' (Housing for All) திட்டத்தின் கீழ், 500 வீடுகள் நகர்ப்புற பகுதிகளில் ஒதுக்கீடு செய்யப்படும்

தமிழ்நாட்டில், பல்வேறு மாவட்டங்களில் வசித்து வரும் தாயகம் திரும்பியவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வருகின்றனர். பின்தங்கிய நிலையில் வசிக்கும் தாயகம் திரும்பிய மக்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், 'அனைவருக்கும் வீடு' (Housing for All) என்னும் திட்டத்தின் கீழ், 2019–2020ஆம் நிதியாண்டில் 500 வீடுகள் நகர்ப்புற பகுதிகளில் ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ ❖ ❖

நிதித் துறை

மானியக் கோரிக்கை எண். 16

1. **திண்டுக்கல் மாவட்டக் கருவூலத்திற்கு சுமார் 11,227 சதுர அடி பரப்பளவில் 2.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.**

33 ஆண்டுகளுக்கு மேல் பழமையான திண்டுக்கல் மாவட்டக் கருவூல கட்டடம் பழுதடைந்துள்ளதாலும், ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்திடும் வகையிலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுமார் 11,227 சதுர அடி பரப்பளவில் 2.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.

2. **காஞ்சிபுரம் மாவட்டக் கருவூலத்திற்கு சுமார் 21,658 சதுர அடி பரப்பளவில் 4.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் மாவட்டக் கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்திடும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுமார் 21,658 சதுர அடி பரப்பளவில் 4.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

3. தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமைத் திட்டச் செயலாக்கத்திற்கு தகவல் அட்டை (Data card) வழங்குதல்.

தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை எனும் இணையதளம் வழியாக இயங்கும் கணினி மென்பொருள் மூலம், தணிக்கை தொடர்பான தகவல்களை, தணிக்கையாளர்கள் நாள்தோறும் பதிவேற்றம் செய்யலாம். இதற்கு இணையதள வசதி அவசியமாகும். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கூட்டுறவுத் தணிக்கைத் துறை தணிக்கையாளர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் செலவில் தகவல் அட்டை (Data card) வழங்கப்படும்.

4. கூட்டுறவுத் தணிக்கைத் துறையில் நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு துறை செயல்பாடுகள் குறித்த பயிற்சி அளித்தல்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, நியமிக்கப்படும் கூட்டுறவு தணிக்கைத் துறை பணியாளர்களுக்கு, தணிக்கை, தணிக்கைத் தொடர்பான சட்டங்கள், தணிக்கை நடைமுறைச் சிக்கல்கள், சிறப்புத் தணிக்கை, தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை மற்றும் அலுவலக நடைமுறை ஆகியவை குறித்த துறை சார்ந்த சிறப்புப் பயிற்சி அளித்திட பயிற்சிக்கான பயிற்றுநர்கள், பயிற்சிப் புத்தகங்கள், பயிற்சிக் காலத்தில் ஏற்படும் உணவுச் செலவுகள் போன்ற பயிற்சிக் கட்டமைப்பு வசதிகள் 10 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

5. அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையின் பெயர் "மாநில அரசுத் தணிக்கைத் துறை" என மாற்றம் செய்யப்படும்.

அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையின் பணி மற்றும் கடமைகள் திருத்தியமைக்கப்பட்டதைத் தொடர்ந்து தனிச் சட்டங்களின்கீழ்உருவாக்கப்பட்டநிறுவனங்களின்தணிக்கை,தனிச் சட்டங்களின் கீழ் உருவாக்கப்படாத நிறுவனங்களின் தணிக்கை, அரசுத்துறைகளின் உள் தணிக்கை மற்றும் அரசின் நிதியுதவி பெறும் அரசுத்துறைகளின் பல்வேறு நிறுவனங்கள், வாரியங்கள் திட்டங்களின் தணிக்கையும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருவதை கருத்தில் கொண்டும், துறையின் எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையின் பெயர் "மாநில அரசுத் தணிக்கைத் துறை" என மாற்றம் செய்யப்படும்.

❖ ❖ ❖

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

மானியக் கோரிக்கை எண். 26

1. சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் சுயநிதி திட்டத்தின் கீழ் 1,253 குடியிருப்பு அலகுகள் ரூ.349 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

மக்களின் வீட்டுவசதி தேவையினை நிறைவேற்றும் பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், சோழிங்கநல்லூர், நொளம்பூர், கொரட்டூர், ஜாபர்கான்பேட்டை, பரனூர், ஒசூர் பகுதி–19, திருப்பூர் முதலிபாளையம், கோயம்புத்தூர் சிங்காநல்லூர் மற்றும் புதுக்கோட்டை பகுதி–I ஆகிய இடங்களில் சுயநிதி திட்டத்தின் கீழ் 1,253 குடியிருப்பு அலகுகள் ரூ.349 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

2. காஞ்சிபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில், 1,148 மனைகள் ரூ.48.21 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் உருவாக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அருகேயுள்ள பரனூர் மற்றும் மதுரை மாவட்டத்தில் கூடல் புதூர், தோப்பூர் உச்சப்பட்டி ஆகிய இடங்களில் 1,148 மனைகள் ரூ.48.21 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

3. சென்னை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள பயன்படுத்தத் தகுதியற்ற வாரியக் கட்டடங்களை இடித்து விட்டு, 303 குடியிருப்பு அலகுகள் மற்றும் வணிக/அலுவலக

வளாகங்கள் ரூ.150.68 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் பயன்படுத்த தகுதியற்ற வாரிய வணிக வளாகங்கள் மற்றும் வாரிய வாடகைக் குடியிருப்புகள் ஆகியவற்றை இடித்து விட்டு, அதிக தரைப்பரப்பு குறியீட்டில் மறுகட்டுமானம் செய்ய உத்தேசித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், சென்னையில் உள்ள கே.கே.நகர், திருவான்மியூர், நந்தனம் விரிவாக்கம், அண்ணாநகரில் உள்ள 3வது நிழற்சாலை, சிந்தாமணி வணிக வளாகம், 12வது பிரதான சாலை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் வாரியத்தின் நிதியினைக் கொண்டு 303 குடியிருப்பு அலகுகள் மற்றும் வணிக/அலுவலக வளாகங்கள் ரூ.150.68 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

4. **கோயம்புத்தூரில் வணிக மற்றும் அலுவலக வளாகம் ரூ.9.10 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், கோயம்புத்தூர் கணபதி பகுதியில் வணிக மற்றும் அலுவலக வளாகம் ரூ.9.10 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

5. **தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கீழ் இயங்கி வரும் 7 கோட்டங்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் ரூ.94.84 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கீழ் இயங்கி வரும் 7 கோட்ட அலுவலகங்களுக்கான சொந்தக் கட்டடம் கட்ட ஏதுவாக

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், வேலூர், ஒசூர், தோப்பூர்–உச்சப்பட்டி துணைக்கோள் நகரம் திருநெல்வேலி, திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய 7 கோட்ட அலுவலகக் கட்டடங்கள் ரூ.94.84 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

6. மதுரை மாவட்டம், தோப்பூர்–உச்சப்பட்டியில் விருந்தினர் மாளிகை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், மதுரை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுவரும் தோப்பூர்–உச்சப்பட்டி துணைக்கோள் நகரத்தில் 5,000 சதுர அடி நிலப்பரப்பில் 4,800 சதுர கட்டட பரப்பளவு கொண்ட 9 அறைகளுடன் கூடிய விருந்தினர் மாளிகை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

7. நீலகிரி மாவட்டம், கூடலூரில் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளின் மறுகட்டுமானம் ரூ.13 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், நீலகிரி மாவட்டம், கூடலூரில் உள்ள பயன்படுத்த தகுதியற்ற 60 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகளுக்கான மறுகட்டுமானம் ரூ.13 கோடி மதிப்பீட்டில் அரசு நிதியினைப் பெற்று கட்டப்படும்.

8. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கீழ் இயங்கும் 14 கோட்ட அலுவலகங்களுக்கு புதிய வாகனங்கள் ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் வாங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், கே.கே.நகர், தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு கிராமம், பட்டினப்பாக்கம், சிறப்பு திட்ட கோட்டம்-I, மதுரை, தோப்பூர்–உச்சப்பட்டி துணைக்கோள் நகரம், திருநெல்வேலி, தஞ்சாவூர், ஓசூர், ஈரோடு, கோயம்புத்தூர், சிறப்பு திட்ட கோட்டம்–III, சேலம் மற்றும் வேலூர் ஆகிய வீட்டுவசதி வாரிய கோட்ட அலுவலகங்களுக்கு ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் 14 புதிய வாகனங்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நிதியில் வாங்கப்படும்.

9. தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நில ஆவணங்கள், நிருவாக நடவடிக்கைகள் மற்றும் திட்டப்பணிகள் உட்பட வாரியத்தின் அனைத்து செயல்பாடுகளையும் மின்னணுமயமாக்கல் மற்றும் மென்பொருள் மூலம் கண்காணிக்கும் திட்டம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நில ஆவணங்களைக் மின்னணுமயமாக்கல், மேம்படுத்தப்பட்ட தகவல்களை உடனுக்குடன் இணையத்தில் பதிவேற்றம் செய்தல் ஆகியன தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் செயல்படுத்தபடவுள்ளது. மேலும் நிருவாகம், வழக்குகள், நிதிமேலாண்மை மற்றும் ஒதுக்கீட்டாளர்களின் மனு ஆகிய வாரிய செயல்பாடுகளுக்கான இணையதளம் மற்றும் அரசின் திட்ட பணிகளை மென்பொருள் மூலம் கண்காணித்துச் செயல்படுத்துவதற்கான திட்டம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

மேற்காணும் மென்பொருள் மற்றும் இணையதளத்தினைப் பயன்படுத்தி தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய செயல்பாடுகளைக் குறைந்த நேரம் மற்றும் செலவில் விரைந்து கண்காணித்து செயல்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

10. அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகள் மற்றும் குடிசைப்பகுதி மாற்றுவாரியத்திற்கு சொந்தமான இதர காலி இடங்களில் பொருளாதாரத்தில் நலிவுற்ற குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகள் மற்றும் குடிசைப்பகுதி மாற்றுவாரியத்திற்கு சொந்தமான பகுதிகளிலுள்ள உபரி இடங்களில் 500 சதுர அடி முதல் 650 சதுர அடி பரப்புள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு அவர்களது வாங்கும் திறனுக்கேற்ற விலையில் சந்தை விலையினை விட குறைவாக விற்கப்படும். இந்நிதியாண்டில் 1,000 குடியிருப்புகள் கட்டப்பட்டு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

11. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023இன் கீழ், குடிசைப்பகுதிகளற்ற நகரங்களை உருவாக்க 1.06 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் / வீடுகள் ரூ.4,860 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023இன் கீழ் குடிசைப்பகுதிகளற்ற நகரங்களை உருவாக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 24,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 82,000 தனி வீடுகள் ரூ.4,860 கோடி செலவில் கட்டப்படும்.

12. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் 15,948 சதுரஅடி பரப்பளவில் அலுவலர்கள் பணியாற்றுவதற்குரிய கூடுதல் அலுவலகக் கட்டடம் மற்றும் புதிய கூட்ட அறை ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகளின் அளவு தற்போது பல மடங்கு அதிகரித்துள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், பல்வேறு திட்டப் பணிகளுக்காக பணியாற்றும் அலுவலர்களுக்கு உரிய அலுவலக இடம் ஏற்படுத்த 15,948 சதுர அடி பரப்பளவு கொண்ட அலுவலக இடம் மற்றும் புதிய கூட்ட அறை கொண்ட கட்டடம் ரூ.3.75 கோடி செலவில் கட்டப்படும்.

13. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய திருச்சிராப்பள்ளி கோட்ட அலுவலகக் கட்டடத்தில் கூடுதல் தளங்கள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய திருச்சிராப்பள்ளி கோட்ட அலுவலகம், 5 மாவட்டங்களில் நகர்ப்புற குடிசை வாழ் குடும்பங்களின் மேம்பாட்டிற்காக குடியிருப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. திருச்சிராப்பள்ளி கோட்ட அலுவலகத்திற்கான நிருவாக அலுவலகக் கட்டடத் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தற்போதுள்ள அலுவலகத்தில் முதல் தளம் அலுவலக பணிக்காகவும் இரண்டாம் தளம் வணிக பயன்பாட்டுக்காகவும் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

14. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய அலுவலக பணிகளைக் கணினிமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய அனைத்து நிருவாக, திட்டப்பணிகளைக் கண்காணித்தல், நிதி பரிவர்த்தனை மற்றும் செயல்பாடுகளைக் கணினிமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய அலுவலகத்தின் செயல்முறைகள், இணையதள அடிப்படையிலான அறிக்கை மற்றும் கண்காணிப்பு அமைப்பு இணையதள முறையில் நிதி பரிவர்த்தனை செய்தல், குடியிருப்பினை ஒதுக்கீடு செய்தல், கிரையப்பத்திரங்கள் வழங்குதல் மற்றும் பொது மக்களின் குறைகளை இணையதளம் மூலம் பதிவு செய்தல் ஆகிய பணிகளுக்காக கணினிமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

15. சென்னைக்கு அருகிலுள்ள பெரும்பாக்கம் பகுதியில் உலக அளவிலான வீட்டுவசதிக் கட்டுமானத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 1,152 குடியிருப்புகள் ரூ.121.01 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், சென்னைக்கு அருகில் உள்ள பெரும்பாக்கம் பகுதியில் உலக அளவிலான வீடுகள் கட்டுமானத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 1,152 குடியிருப்புகள் ரூ.121.01 கோடி செலவில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படும்.

16. முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் ஓர் உறுப்பினருக்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை மொத்தம் ரூ.100 கோடி கடன் வழங்கப்படும்.

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களைப் புனரமைத்து கிராமப்புற அளவில் அவற்றின் உறுப்பினர்களுக்குக் கடன் விரைந்து கிடைத்திட வழிகோலும் வகையிலும் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் ஈட்டும் பிரிவு மக்களின் கடன் தேவையை நிறைவு செய்யும் பொருட்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்க உறுப்பினர்களுக்கு ரூ.100 கோடி கடன் வழங்கப்படும். அதிகபட்சம் ஓர் உறுப்பினருக்கு ரூ.20 இலட்சம் வரை கடன் வழங்கப்படும்.

17. திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் 42,000 சதுர அடி பரப்பளவில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு கல்வி நிதி/கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் நிதியுதவி மூலம் திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் 42,000 சதுர அடி பரப்பளவில் ரூ.5 கோடி செலவினத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும்.

18. திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் ரூ.12.75 கோடி மதிப்பீட்டில் மாணவியர் விடுதி கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் ஆணைப்படியும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு கல்வி நிதி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் நிதியுதவியுடன் திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் ரூ.12.75 கோடி மதிப்பீட்டில் மாணவியர் விடுதி கட்டப்படும்.

19. முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் கடன் பெற்று கடன் தொகை முழுவதையும் சங்கத்திற்குச் செலுத்தி அசல் ஆவணங்கள் திரும்ப அளிக்கப்படாமல் உள்ள 4,548 உறுப்பினர்களுக்கு அசல் ஆவணங்கள் திரும்ப வழங்கப்படும்.

முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் கடன் பெற்று கடன் தொகை முழுவதையும் திரும்பச் செலுத்தி அசல் ஆவணங்கள் திரும்ப வழங்கப்படாமல் உள்ளவர்களுக்கு, உறுப்பினர் நலன் கருதி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 31.05.2019 வரை 407 சங்கங்களிடமிருந்து வர வேண்டிய தொகையை பற்று வைத்து 4,548 உறுப்பினர்களுக்கு அசல் ஆவணங்கள் திரும்ப வழங்கப்படும். தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு இதனால் ஏற்படும் நிதி இழப்பு கலைக்கப்பட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துகளை விற்பனை செய்வதன் மூலம் ஈடு செய்யப்படும்.

நகர் ஊரமைப்பு இயக்ககம்

20. நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் 1,200 சதுர அடிக்கு குறைவான கட்டடத்திற்கு அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் அனுமதி வழங்க தவறும் பட்சத்தில் தானாகவே திட்ட அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படியும், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் 1,200 சதுர அடிக்கு குறைவான கட்டடத்திற்கு அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் அனுமதி வழங்க தவறும் பட்சத்தில் தானாகவே திட்ட அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.

21. நகர் ஊரமைப்புத் துறையின் திட்டக்குழும / மண்டல அலுவலகங்களை மறுசீரமைத்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனி அலுவலகம் மொத்தமாக ரூ.2.31 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், நகர் ஊரமைப்புத் துறையின் திட்டக்குழும / மண்டல அலுவலகங்களை மறுசீரமைத்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனி அலுவலகம் மொத்தமாக ரூ.2.31 கோடி செலவில் ஏற்படுத்தப்படும். அது மாவட்டத்தின் திட்டப்பகுதி மற்றும் திட்டமில்லா பகுதிகளை உள்ளடக்கியிருக்கும்.

22. பொதுமக்கள் பயன்பெற ஏதுவாக அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகள் மற்றும் கட்டட அனுமதி விவரங்கள் நகர் ஊரமைப்புத்துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், பொதுமக்கள் பயன்பெற ஏதுவாக அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகள் மற்றும் கட்டட அனுமதி விவரங்கள் நகர் ஊரமைப்புத்துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

23. நகர் ஊரமைப்புத்துறையின் தலைமை அலுவலகத்திற்கு இரண்டு வாகனங்கள், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட அலுவலகங்களுக்கு தலா ஒரு வாகனம், ஆக மொத்தம் 4 வாகனங்கள் அலுவலக பயன்பாட்டிற்கென ரூ.26 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தலைமை அலுவலகத்திற்கு இரண்டு வாகனங்கள், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட அலுவலகங்களுக்கு தலா ஒரு வாகனம், ஆக மொத்தம் 4 வாகனங்கள் அலுவலக பயன்பாட்டிற்கென ரூ.26 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

24. மலையிடப் பாதுகாப்பு குழும பகுதிகளில் திட்ட அனுமதி விரைவாகப் வழங்கும் வகையில் ஒப்புதல் அளிக்கும் நடைமுறைகள் எளிமையாக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், மலையிடப் பாதுகாப்பு குழும பகுதிகளில் திட்ட அனுமதி விரைவாகப் வழங்கும் வகையில் ஒப்புதல் அளிக்கும் நடைமுறைகள் எளிமையாக்கப்படும்.

25. பொதுமக்கள் மனைப்பிரிவு மற்றும் கட்டட அனுமதி தொடர்பான விதிமுறைகள் குறித்த ஆலோசனைகளைப் பெற ஏதுவாக நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர் அலுவலகம் மற்றும் அனைத்து சார்நிலை அலுவலகங்களிலும் தகவல் மற்றும் ஆலோசனை மையம் ஏற்படுத்தப்படும்.

மனைப்பிரிவு மற்றும் கட்டட அனுமதி தொடர்பான விதிமுறைகள் குறித்த ஆலோசனைகளை பொதுமக்கள் பெற ஏதவாக மாண்புமிகு

இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அலுவலகம் மற்றும் அனைத்து சார்நிலை அலுவலகங்களிலும் தகவல் மற்றும் ஆலோசனை மையம் ஏற்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

26. புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து முனையம் (முன்னர் சென்னை புறநகர் பேருந்து நிலையம்) மற்றும் மாதவரம் புறநகர் பேருந்து முனையம் ஆகியவற்றில் கண்காணிப்பை மேம்படுத்த ரூ.2.25 கோடி செலவில் முகம் அடையாளம் காட்டும் கேமராக்கள் பொருத்தப்படும்.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து முனையம் (முன்னர் சென்னை புறநகர் பேருந்து நிலையம்) மற்றும் மாதவரம் புறநகர் பேருந்து முனையம் ஆகியவற்றில் கண்காணிப்பை மேம்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், பேருந்து முனையங்களில் குற்ற நடவடிக்கைகளைத் தடுக்கும் பொருட்டும் ஏற்கெனவே உள்ள கேமராக்களின் தரத்தை மேம்படுத்தும் வகையிலும் ரூ.2.25 கோடி செலவில் முகம் அடையாளம் காட்டும் கேமராக்கள் பொருத்தப்படும்.

27. 2006 முதல் 2014ஆம் ஆண்டு வரையிலான கட்டட அனுமதி வரைபடங்கள் மற்றும் 2000ஆம் ஆண்டு முதலான மனைப்பிரிவு வரைபடங்கள் மின்னணு மயமாக்கப்பட்டுள்ளதினைத் தொடர்ந்து அதற்கு முந்தைய எல்லா வரைபடங்களும் மின்னணுமயமாக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், 2006 முதல் 2014ஆம் ஆண்டு வரையிலான கட்டட அனுமதி வரைபடங்கள் மற்றும் 2000ஆம் ஆண்டு முதலான மனைப்பிரிவு வரைபடங்கள் மின்னணுமயமாக்கப்பட்டுள்ளன. அதற்கு முந்தைய எல்லா வரைபடங்களும் மின்னணுமயமாக்கப்படும்.

28. கள ஆய்வின் போது அதிகாரிகள் அளவீடுகளைத் துல்லியமாக மேற்கொள்ள வசதியாக நவீன லேசர் முறை சார்ந்த உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், கள ஆய்வின் போது அதிகாரிகள் அளவீடுகளைத் துல்லியமாக மேற்கொள்ள வசதியாக நவீன லேசர் முறை சார்ந்த உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும்.

29. திட்ட அனுமதி வழங்கும் போது அமைவிடத்தைத் துல்லியமாக அறியவும் விதியிலிருந்து விலகிய பகுதிகளை கண்டறியவும் வரைபடங்களில் புவிசார் நிலைப்படுத்துதல் முறை, ஆயத் தொலைவுகளைக் குறிப்பிடும் முறை நடைமுறைப்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், திட்ட அனுமதி வழங்கும் போது அமைவிடத்தை துல்லியமாக அறியவும் விதியிலிருந்து விலகிய பகுதிகளைக் கண்டறியவும் வரைபடங்களில் புவிசார் நிலைப்படுத்துதல் முறை, ஆயத் தொலைவுகளையும் குறிப்பிடும்முறை நடைமுறைப்படுத்தப்படும்.

30. சென்னை நகரில் மண் தன்மை குறித்த தகவல் சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து சேகரிக்கப்பட்டு நிகழ்நிலையில் பதிவேற்றப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், சென்னை நகரில் மண் தன்மை குறித்த தகவல் சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து சேகரிக்கப்பட்டு நிகழ்நிலையில் பதிவேற்றப்படும்.

31. கோயம்பேட்டிலுள்ள மலர் அங்காடிக்கு கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள 3 ஏக்கர் பரப்பளவில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் நவீன மலர் அங்காடி விரிவுபடுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், கோயம்பேட்டிலுள்ள மலர் அங்காடிக்கு கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள 3 ஏக்கர் பரப்பளவில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் நவீன மலர் அங்காடி விரிவுபடுத்தப்படும்.

32. கோயம்பேடு அங்காடிகளில் பணியாற்றிவரும் தினக்கூலி பணியாளர்களின் வசதிக்காக கழிப்பிட வசதியுடன் கூடிய தங்கும் விடுதி ரூ.2 கோடி செலவில் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், கோயம்பேடு அங்காடிகளில் பணியாற்றிவரும் தினக்கூலி பணியாளர்களின் வசதிக்காக கழிப்பிட வசதியுடன் கூடிய தங்கும் விடுதி ரூ.2 கோடி செலவில் கட்டப்படும்.

33. வேளச்சேரி துரித இரயில் நிலையத்தில், இரண்டு (ம) நான்கு சக்கர வாகனங்களுக்கான பல அடுக்கு வாகன நிறுத்துமிடம்

ரூ.80 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் நிறுவப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், வேளச்சேரி துரித இரயில் நிலையத்தில், இரண்டு (ம) நான்கு சக்கர வாகனங்களுக்கான பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் ரூ.80 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் நிறுவப்படும்.

34. திருமழிசை குத்தம்பாக்கம் கிராமத்தில் 20 ஏக்கர் பரப்பளவில் ரூ.1,500 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், திருமழிசை குத்தம்பாக்கம் கிராமத்தில் 20 ஏக்கர் பரப்பளவில் ரூ.1,500 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

35. காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலை நகர் புதுநகரில் சமுதாயக்கூடம் ரூ.4 கோடி மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலை நகர் புதுநகரில் சமுதாய கூடம் ரூ.4 கோடி மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்யப்படும்.

36. சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தினுள் முதல்வர் இல்லமாக அமைந்திருக்கும் புராதனக் கட்டடம் புனரமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், மாநிலக் கல்லூரி

வளாகத்தினுள் முதல்வர் இல்லமாக அமைந்திருக்கும் புராதனக் கட்டடத்தினை புனரமைக்க திட்டமிடப்படுள்ளது.

37. சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்திலுள்ள 59 காலி பணியிடங்கள் (உதவி திட்ட அமைப்பாளர்–17, திட்ட உதவியாளர் நிலை.I–15, திட்டஉதவியாளர் நிலை.II–27) உடனடியாக நிரப்பப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்திலுள்ள 59 காலி பணியிடங்களை (உதவி திட்ட அமைப்பாளர்–17, திட்ட உதவியாளர் நிலை.I–15, திட்ட உதவியாளர் நிலை.II–27) நிரப்பப்படும்.

38. திட்ட அனுமதி விண்ணப்பங்கள் மற்றும் பணி நிறைவுச் சான்றிதழ் போன்றவை காகித பயன்பாடில்லாமல் நிகழ்நிலை மூலம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், திட்ட அனுமதி விண்ணப்பங்கள் மற்றும் பணி நிறைவுச் சான்றிதழ் போன்றவை காகித பயன்பாடில்லாமல் நிகழ்நிலை மூலம் வழங்க ஏதுவாக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஒற்றைச் சாளர இணையத்தை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

39. சென்னை பெருநகர வளர்ச்சிப் பகுதியில் 1,200 சதுர அடிக்கு குறைவான கட்டடத்திற்கு அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் அனுமதி வழங்க தவறும் பட்சத்தில் தானாகவே திட்ட அனுமதி வழங்கப்பட்டதாக கருதப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், சென்னை பெருநகர வளர்ச்சிப் பகுதியில் 1,200 சதுர அடிக்கு குறைவான கட்டடத்திற்கு அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் அனுமதி வழங்க தவறும் பட்சத்தில் தானாகவே திட்ட அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.

❖ ❖ ❖

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மானியக் கோரிக்கை எண். 36

1. நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட வாரியான பிரிவு அமைத்தல்.

(Setting up of District Level Sustainable Development Goals (SDG) Cell)

மாவட்ட வாரியாகவும், வட்டார வாரியாகவும் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளின் செயற்திட்டங்கள் சென்றடைந்த தொலைவினைக் கண்டறியவும், தொடர்ந்து கண்காணிக்கவும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாவட்ட வாரியான பிரிவுகள் உருவாக்கப்படும்.

2. நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளுக்கான துறை வாரியான சிறப்புப் பிரிவு அமைத்தல்.

(Formation of Sustainable Development Goals (SDG) Units in Departments)

நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை மாநில அளவில் முழுமையாக அடைந்திட துறை ரீதியான கூட்டு முயற்சியும் ஒத்துழைப்பும் இன்றியமையாதவை.

எனவே முன்னேற்றத்தினை கண்டறியவும் தொடர்ந்து கண்காணிக்கவும் ஒவ்வொரு துறையிலும், சிறப்பு பிரிவு ஒன்றை உருவாக்குவது இன்றியமையாததாகும்.

ஆகவே, துறை வாரியான நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தைக் கண்டறியவும், தொடர்ந்து கண்காணிக்கவும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சிறப்பு பிரிவுகள் உருவாக்கப்படும்.

3. மாநிலத்தின் பின்தங்கிய வட்டாரங்கள், ஏனைய வட்டாரங்கள் மற்றும் மாவட்டங்களின் வளர்ச்சியை தரவரிசைப்படுத்துதலும், விருது வழங்குதலும்.

(Award and Ranking the Performance of Backward Blocks, Other Blocks and Districts in the State)

மாவட்டம் மற்றும் வட்டாரங்களின் வளர்ச்சிக்கான காரணிகளை, நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளின் இணையதள கண்காணிப்பு பலகையின் செயல்பாட்டுடன் இணைப்பதன் வாயிலாக, அவற்றின் செயல்பாட்டின் அடிப்படையில் மாதந்தோறும் தரவரிசைப்படுத்தவும் கண்காணிக்கவும் இயலும்.

மாநிலத்தின் பின்தங்கிய வட்டாரங்கள், ஏனைய வட்டாரங்கள் மற்றும் மாவட்டங்களின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் வகையில், மாதந்தோறும் தரவரிசைப்படுத்தி அதனடிப்படையில் சிறப்பாக செயல்படுவனவற்றைக் கண்டறிந்து, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஆண்டுதோறும் விருது வழங்கப்படும்.

❖ ❖ ❖

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

வனம்

மானியக் கோரிக்கை எண். 54

1. நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடல் ஆமைகள் பாதுகாப்பு மையம் அமைத்தல்.

கடல் வாழ் உயிரினங்களான ஆலிவ்ரிட்லிஸ் மற்றும் கடல் பசு ஆகியவை எண்ணிக்கையில் குறைந்து வருவதால் பொது மக்களிடையே கடல் ஆமை மற்றும் கடல் பசுக்களைப் பாதுகாப்பது குறித்து எடுத்துரைப்பதையும் மற்றும் உள்ளூர் மக்களுக்கு சூழல் சுற்றுலா வாய்ப்புகளை மேம்படுத்துவதையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு நாகப்பட்டினம் மாவட்டத்தில், கோடியக்கரை வனச் சரணாலயத்தின் அருகில் பொருத்தமான இடத்தில் கடல் ஆமை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தரம் வாய்ந்த முப்பரிமாண அருங்காட்சியகத்துடன் சூரியசக்தி மூலம் கிடைக்கப்பெறும் மின்சாரத்தைப் பயன்படுத்தி நவீன வசதிகளுடன் கூடிய கடல் ஆமை பாதுகாப்பு மையம் 2019–2020ஆம் ஆண்டு 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். வனத்துறையின் பங்களிப்புடன் சூழல் சுற்றுலா மேலாண்மைக் குழுவால் இம்மையம் நிருவகிக்கப்படும்.

2. கோயம்புத்தூரில் தொலைஉணர்வு கருவிகள் மூலம் மனித–யானை மோதல்களுக்குத் தீர்வு.

மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை ஒட்டியுள்ள தமிழகக் கிராமங்களில் மனித–யானை மோதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் வேளாண் குடிமக்களுக்கு பயிர்ச் சேதமும்

மனித உயிரிழப்பும், உடைமைகளுக்குச் சேதமும் உண்டாகிறது. கடந்த இரண்டு வருடங்களில் 20 மனித உயிர் இழப்புகள் 17 மனித காயங்கள், மனித உடைமைகளுக்கும் பயிர்களுக்கும் அதிக அளவிலான சேதம் காட்டு யானைகளால் ஏற்பட்டுள்ளது.

யானைகளை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களின் சிரமத்தை குறைக்கும் விதத்திலும், பொது மக்களின் பாதுகாப்பு கருதியும் வனப்பகுதியிலிருந்து மனித வாழ்விடங்களுக்குள் யானைகள் புகுவதை கண்காணிப்பதற்காக, செயற்கை நுண்ணறிவினைக் கொண்டு தொலைதூரக் கட்டுப்பாட்டு தெர்மல் கேமரா, கண்காணிப்பு படப்பிடிப்பு கருவி, கட்டுப்பாட்டு அறையுடன் கூடிய முன்னெச்சரிக்கை அமைப்பு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கோயம்புத்தூர் வனக்கோட்டத்தில் 2019–2020ஆம் ஆண்டு 7.24 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

3. கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வனஉயர் பயிற்சியகம் மற்றும் வைகை அணையில் உள்ள தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றை மேம்படுத்தி நவீனப்படுத்துதல்.

தமிழ்நாடு வனத்துறையில் உள்ள அனைத்து சீருடை, அமைச்சு பணியாளர்கள், மாநில வனப்பணி மற்றும் இந்திய வனப்பணி அலுவலர்களுக்கு பயிற்சி மையமாக கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வனஉயர் பயிற்சியகம் திகழ்கிறது. 1912ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பயிற்சியகம் பல மாநிலங்களை சேர்ந்த வனச்சரக அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கும் முக்கிய பயிற்சி மையமாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாடு வனஉயர் பயிற்சியகத்தின் ஒரு அங்கமாக தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கல்லூரி 1962ஆம் ஆண்டு தேனி மாவட்டம் வைகை அணையில் துவங்கப்பட்டு வனத்துறை சீருடை களப்பணியாளர்களான வனக்காப்பாளர்கள், வனவர்கள் ஆகியோருக்கு அடிப்படை

பயிற்சி வழங்கும் மையமாக செயல்பட்டு வருகின்றது. தற்போது தமிழ்நாடு வனச்சீருடை பணியாளர்கள் தேர்வாணையம் குழுமம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 597 வனக்காப்பாளர்கள் மற்றும் 268 வனவர்கள் இப்பயிற்சியகத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர். நேரடி நியமனம் மூலம் தேர்ந்தெடுக்கப்படும்.

வனச்சீருடை பணியாளர்களுக்கு உயர்தர பயிற்சி வழங்குவது அவசியமாகிறது. அதிநவீன தொழில்நுட்ப பயிற்சி அளிப்பதற்கு இந்த பயிற்சியகங்களின் உள்கட்டமைப்பு மற்றும் பயிற்சி வசதிகளை அதிநவீன தரத்திற்கு மேம்படுத்தப்பட வேண்டும். எனவே தமிழ்நாடு வனஉயர் பயிற்சியகம் மற்றும் தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கல்லூரி, ஆகியவற்றின் தரத்தினை மேம்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு வனஉயர் பயிற்சியகத்தின் உள்கட்டமைப்பினை நவீனப்படுத்தும் விதமாக புதிதாக 15 அறைகள் கொண்ட பெண்கள் விடுதி கோயம்புத்தூர் மற்றும் வைகை அணை பயிற்சி மையங்களில் கட்டுவதற்கும் வகுப்பறை, ஆய்வுகூடம், கணிணி அறை, நூலகம், கலையரங்கம், அருங்காட்சியகம் அமைப்பதற்கும் புதிய குடியிருப்புகள் கட்டவும், ஏற்கெனவே உள்ள குடியிருப்புகளை பராமரித்து புதுப்பிக்கவும் மற்றும் வாகனங்கள் வாங்குவதற்கும் 15.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் 2019–2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

4. முன்நிலை வனத்துறை களப்பணியாளர்களின் குடியிருப்புகளுக்கு சிறப்பு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

தமிழ்நாடு வனத்துறையில் முன்நிலை பணியாளர்களாக பணியாற்றி வரும் வனச்சரக அலுவலர்கள், வனவர்கள், வனக்காப்பாளர்கள் மற்றும் வனக்காவலர்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ், ஒவ்வொரு வருடமும் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 2,540 குடியிருப்புகளில் 50% குடியிருப்புகள் நல்ல நிலையில் இல்லை. இருப்பினும் நல்ல

நிலையில் இல்லாத இக்குடியிருப்புகளில் வனக்களப்பணியாளர்கள் குடியிருந்து கொண்டு தங்களது பணியினை செவ்வனே பணியாற்றி வருகின்றனர். அநேக குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு, குடிநீர், கழிவுநீர் மற்றும் கட்டடங்களின் சுவர் மற்றும் தளங்களில் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இக்குடியிருப்புகளுக்கு மூன்று வருடங்களில் வருடத்திற்கு 10 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 30 கோடி ரூபாய் நிதியில் சிறப்பு பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். 2019–2020ஆம் ஆண்டிற்கு 10 கோடி ரூபாய் செலவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

5. வனத்துறையின் பராமரிப்பின் கீழ் வரும் மரக்கிடங்குகள் சோதனைச் சாவடிகள், அலுவலகங்களில் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் வனப்பாதுகாப்பினை பலப்படுத்துதல்

குற்றங்களைத் தடுப்பதற்காக கடந்த சில ஆண்டுகளாக கண்காணிப்பு கேமராவை வைத்து கண்காணிக்கப்படுகிறது. குற்றங்களைத் தடுக்கவும் பாதுகாப்பை மேம்படுத்தவும் கண்காணிப்பு கேமரா பொருத்துவது தற்போதைய காலகட்டத்தில் இன்றியமையாததாக உள்ளது.

வனத்துறையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட போதிலும் மதிப்பு மிக்க தேக்கு, சிவப்பு சந்தன மரங்கள் மற்றும் சந்தன மரங்கள் ஆகியன திருடப்படுவது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. மேலும் வனச்சோதனை சாவடி பணியாளர்களைத் துன்புறுத்துதல் மற்றும் வன உயிரினங்களிடம் நடக்கும் குற்றங்கள், வன ஊழியர்களை தாக்குதல் போன்ற சம்பவங்கள் சமூக விரோதிகளால் அவ்வப்போது நடைபெறுகிறது. அரிதான மரங்கள் திருடப்படுவதை தடுக்கவும் வனக் குற்றச்செயலில் ஈடுபடுவோரை கண்காணிக்க முக்கியமான இடங்களில் கண்காணிப்பு கேமராவை பொருத்துவதன்

மூலம் மேற்படி குற்றங்களை தடுத்து உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்க இயலும்.

எனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வனத்துறை அலுவலகங்கள், அரசு சந்தன மரக்கிடங்கு, மரக்கிடங்கு மற்றும் சோதனைச்சாவடிகளில் 2019–2020ஆம் ஆண்டு 1.03 கோடி ரூபாய் செலவில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்படும்.

6. வண்டலூரில் அமைந்துள்ள உயர்நிலை வன உயிரினப் பாதுகாப்பு நிறுவனத்தில் உலகத்தரம் வாய்ந்த வன உயிரினக்கல்வி மற்றும் விடுதி வசதி ஏற்படுத்துதல்

சமீப காலமாக சுற்றுச்சூழலில் ஏற்பட்டு வரும் மாற்றங்களால் வனவிலங்கு ஆய்வுகள் மற்றும் சூழலைப் பற்றிய விழிப்புணர்வு முக்கியத்துவம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் உயர்நிலை வன உயிரினப் பாதுகாப்பு நிறுவனம் வன உயிரின ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பிற்காக முதன்மை நிறுவனமாக வண்டலூரில் நிறுவப்பட்டு, இந்த இலக்கை எய்திட மிகவும் பாடுபட்டு வருகிறது. இந்நிறுவனம் தற்போது வன உயிரின தடயவியல் பிரிவிலும் மற்றும் வன விலங்குகள் ஆரோக்கியத்தில் தரமான ஆராய்ச்சி செய்து வரும் நிலையில் தமிழ்நாட்டின் வனத்துறையில் பணியாற்றும் களப்பணியாளர்களுக்கும் மற்றும் பிற துறையை சார்ந்த பணியாளர்களுக்கும் வனவிலங்கு குற்றவியல் புலனாய்வு பற்றிய பயிற்சியும் அளிக்கிறது. மேலும், இந்நிறுவனமானது ஒரு மாத கால அளவிலான குறுகிய கால பயிற்சிகளை தற்சமயம் கல்லூரி மாணவர்களுக்கு பயிற்றுவிக்கிறது. எதிர்வரும் காலத்தில் தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் கால சவால்களை மேற்கொள்ளுவதற்காக இந்நிறுவனத்தில் வனஉயிரின பாதுகாப்பு மேலாண்மைக்கான குறுகிய கால மற்றும் நீண்டகால சான்றிதழ் படிப்புகள், தொழில்நுட்ப படிப்புகள், பட்டயப்படிப்புகள் மற்றும்

ஆராய்ச்சியாளர் படிப்புகளை வழங்கிட உத்தேசித்துள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச அளவிலான நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற முயற்சிக்கிறது. இந்தியாவில் இத்தகைய மிகச் சில நிறுவனங்களே உள்ளன. எனவே, இந்த நிறுவனத்தின் தரத்தை உயர்த்துவதன் மூலம் இளம் மாணவர்கள் இந்நிறுவனத்தில் பயிற்சிகளை பெற ஈர்க்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

இத்தகைய லட்சிய திட்டங்களை மேற்கொள்வதற்கு இந்நிறுவன வளாகத்தில் விடுதி அமைப்பது அவசியமாகிறது. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2019–2020ஆம் ஆண்டில் சர்வதேச தரத்திலான குளிர்சாதன வசதியுடன் கூடிய 25 அறைகள் கொண்ட பசுமைக் கட்டட விடுதி 8.35 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். இவ்விடுதி, முதுநிலை அலுவலர்கள், விஞ்ஞானிகள், மற்றும் சர்வதேச ஆய்வாளர்கள் ஆகியோருக்கு தனித் தனி அறைகள், நவீன சமையலறை மற்றும் உணவு உண்ணும் அறை, நூலகம், சூரிய உதவியுடன் கூடிய தடையற்ற மின்சாரம், அதிவேக இணைய இணைப்பு கணிணி, தொலைகாட்சி, பொழுதுபோக்கு, உள் மற்றும் வெளி விளையாட்டு அரங்குகள், பூங்கா, வாகன நிறுத்தங்கள் ஆகியவைகளைக் கொண்டதாக இருக்கும்.

7. காஞ்சிபுரம் மாவட்டம் தண்டரை மற்றும் புல்லேரியில் அமைந்துள்ள மருத்துவ குணமுள்ள தோட்டங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

உலக அளவில் இந்தியா பல்வேறு வகைத் தாவரங்கள் செறிந்ததாகத் திகழ்வதுடன் சுமார் 7,000க்கும் மேற்பட்ட மருத்துவ குணம் கொண்ட தாவர வகைகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் 1,840 மருத்துவ குணமுள்ள தாவர வகைகள் தமிழ்நாட்டில் காணப்படுகின்றன. இத்தாவர வகைகள் ஆயர்வேதா, யுனானி,

சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய மருத்துவ சிகிச்சைக்கு பயன்படுத்தப்படுகிறது.

இந்திய மக்களுக்கு மருத்துவ குணம் கொண்ட தாவரங்கள், பாரம்பரிய மருத்துவத்திற்கு மட்டும் இல்லாமல் வியாபார ரீதியாகவும் மூலிகை தொழில்புரிவோருக்கு வாழ்வாதரமாகவும், சுகாதாரத்தை பாதுகாப்பதற்கும் பயன்படுகிறது. மருத்துவ குணமுள்ள தாவரங்களில் இருந்து வியாபாரத்திற்கு உகந்த 242 மூலிகை தாவரங்கள் பயன்படுவதுடன் அதிலிருந்து ஆண்டுக்கு சுமார் 100 மெ.டன் அளவு மூலிகைகள் பயன்படுத்தப்படுகிறது. எனவே, இவ்விலை மதிப்பில்லா மருத்துவ குணமுள்ள இத்தாவர வகைகளை முழுமையாக பாதுகாக்க வேண்டியுள்ளது.

காஞ்சிபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு அமைந்துள்ள செங்கற்பட்டு வனக்கோட்டத்தில் தண்டரை மற்றும் புல்லேரி பகுதிகளில் முக்கியமான இரண்டு மருத்துவ குணம் கொண்ட தாவரங்கள் உற்பத்தி செய்யும் பகுதி உள்ளது. புல்லேரி மருத்துவ தாவர தோட்டம், செங்கற்பட்டு வனச்சரகத்தைச் சார்ந்த நென்மேலி காப்புக்காட்டிற்கு அருகாமையில் சுமார் 46.70 ஏக்கர் பரப்பளவிலும் மற்றும் தண்டரை மருத்துவ தாவர தோட்டம் புல்லேரி தோட்டத்தின் பக்கத்தில் உள்ளதுடன் 25 ஏக்கர் பரப்பளவு கொண்ட பகுதியாகவும் உள்ளது. இந்த தோட்டங்களில் ஏறத்தாழ சுமார் 100 வகையான அரிதான மற்றும் உயிரியல் ரீதியாக மருத்துவ குணமுள்ள செடிகள் அமையப்பெற்று உள்ளன.

இந்த மருத்துவ குணமுள்ள தோட்டங்களை மேம்படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி புல்லேரி மற்றும் தண்டரை மூலிகை பண்ணை தோட்டங்களில் மூன்று ஆண்டுகளில் 3.34 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். 2019–2020ஆம் ஆண்டில் இத்திட்டம் 2.47 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

8. திண்டுக்கல் சிறுமலையில் பல்லுயிர்பூங்கா அமைத்தல்

தென்னிந்தியாவின் கிழக்குத் தொடர்ச்சி மலையின் தெற்கு கடை கோடியில் அமைந்துள்ளது சிறுமலை. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மேற்கு மலை தொடர்ச்சியில் அமைந்துள்ள கொடைக்கானல் மலைக்கு அருகில் உள்ளது. சிறுமலையில் வளமான பல்லுயிர் வகைக் காடுகளும், அதே நேரத்தில் நடுமலை பகுதியில் வெப்ப மண்டல வறண்ட இலையுதிர் காடுகளும் அமைந்துள்ளன. வளர்ந்துவரும் மக்கள்தொகைப் பெருக்கம் மற்றும் காபி தோட்டங்கள், பழத்தோட்டங்கள் மற்றும் பல காய்கறி பயிர்கள் பயிரிடுதல் ஆகியவற்றின் விளைவாக சிறுமலையிலுள்ள அரிய வகை தாவரங்களும், மூலிகை தாவரங்களும் அழிவின் விளிம்பிற்கு தள்ளப்பட்டுள்ளன.

சிறுமலை மலைகளின் தாவரங்கள் கணக்கெடுப்பு ஆய்வின்படி தென்னிந்தியாவில் உள்ள தாவர வகைகளில் 536 வகை உயர் தாவரங்களையும், 895 சிற்றினங்களையும் கொண்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

விரைவான நகரமயமாக்கல், அதிக மக்கள் தொகை மற்றும் இயற்கை வளங்களை அதிகமாக சுரண்டுவது போன்ற செயல்கள் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் பன்முகத்தன்மை அழிவதற்கு காரணமாக அமைகின்றன. வளர்ந்து வரும் நகரங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் இழந்த பன்முகத்தன்மையை மீட்டெடுக்கும் விதமாக அரிதான மற்றும் அழியும் தருவாயில் உள்ள உயிரினங்கள், தாவரங்களை பாதுகாக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி திண்டுக்கல் மாவட்டம், சிறுமலையில் 5 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மூன்றாண்டுகளில் பல்லுயிர்ப் பூங்கா அமைக்கப்படும். 2019–2020ஆம் ஆண்டில் இத்திட்டம் 2.43 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். ❖

பள்ளிக் கல்வித் துறை

மானியக் கோரிக்கை எண். 43

1. கல்வி மாவட்ட அளவில் 88 மாதிரி பள்ளிகளை அமைத்தல்.

தமிழ்நாட்டிலுள்ள 120 கல்வி மாவட்டங்களில் ஏற்கெனவே 32 மாதிரி பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது, மீதமுள்ள 88 கல்வி மாவட்டங்களிலும் தலா ஒரு பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இப்பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, கல்வி கற்கும் தரத்தை மேலும் உயர்த்தும் வகையில், வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப இப்பள்ளிகள் மாதிரி பள்ளிகளாக மேம்படுத்தப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பள்ளி ஒன்றிற்கு 20 இலட்சம் ரூபாய் வீதம் 17.60 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

2. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் பயிலும் மாணவர்களுக்கான கற்பிப்புக் கட்டணத்தை இரத்து செய்தல்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு கற்பிப்பு கட்டணம் கிடையாது. அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுடைய பெற்றோர்களின் பொருளாதார நிலையை கருத்தில்கொண்டும், மாணவர்களின் கற்றல் ஆர்வத்தை ஊக்கப்படுத்தும் விதமாகவும் ஆங்கில வழியில் பயிலும் மாணவர்களுக்கான கற்பிப்பு கட்டணம் முழுவதுமாக இரத்து செய்யப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

3. சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்.

தமிழகத்தில் சிறைச்சாலைகளிலுள்ள சிறைவாசிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் 8, 10 மற்றும் 12 ஆகிய வகுப்புகளுக்கான அரசுத் தேர்வுகள் சிறைச்சாலை வளாகத்திலேயே நடத்தப்பட்டு வருகின்றன. தமிழக அரசின் இச்செயல்பாட்டிற்கு மேலும் மெருகூட்டும் வகையில் தமிழகத்தில் உள்ள சிறைச்சாலைகளில் கண்டறியப்பட்டுள்ள முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாத 757 சிறைவாசிகளுக்கு அடிப்படை எழுத்தறிவை வழங்கிட, பள்ளிக் கல்வித் துறையின் வாயிலாக சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 14.60 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

4. வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறும் 2 மாவட்டங்களில் (Aspirational Districts) சிறப்பு பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வித் திட்டம்.

தமிழ்நாட்டில் வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறும் இரண்டு மாவட்டங்களான (Aspirational Districts) விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில், 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி கண்டறியப்பட்டுள்ள 1,68,716 கல்லாதோருக்கு அடிப்படை எழுத்தறிவினை வழங்கிடும் வகையில், 2019ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை “சிறப்பு பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டம்” செயல்படுத்தப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 6.23 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

5. மாணவர்களின் வருகை குறித்து பெற்றோர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) அனுப்புதல்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் வருகையை உறுதிப்படுத்தும் வகையிலும், மாணவர்கள் பாதுகாப்பாக பள்ளிக்கு வருகைபுரிந்த தகவலை பெற்றோர்களுக்கு தெரிவிக்கும் வகையிலும் மாணவர்களின் வருகை குறித்த தகவல் அவர்களுடைய பெற்றோர்களுக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

6. 223 மேல்நிலைப் பள்ளிகளில் அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் அமைத்தல். (Atal Tinkering Laboratories)

மாணவர்களிடையே அறிவியல் ஆர்வம், படைப்பாற்றல் மற்றும் கற்பனைத் திறனை ஊக்குவிக்கும் புதுமைத் திட்டமாக 44 பள்ளிகளில் அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது 223 பள்ளிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, அறிவியல் உபகரணங்கள், உணர்விகள் (Sensors), மின்னணுவியல் கருவிகள், முப்பரிமாண அச்சுப்பொறிகள், தானியங்கிக் கருவிகள் (Robotic Equipment), கணினிகள் மற்றும் நுண்கட்டுப்பாட்டு பலகைகள் வழங்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பள்ளி ஒன்றிற்கு 20 இலட்சம் ரூபாய் வீதம் 223 பள்ளிகளுக்கு 44.60 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

7. மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் தனிக்கவனம் குறித்து ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.

இணைய பாதுகாப்பு, பாலின பாகுபாடு, பதின்பருவக் கல்வி, சுய விழிப்புணர்வு, பிறர் மனநிலை அறிந்து செயல்படுதல், மன அழுத்தம் மற்றும் உணர்ச்சிகளைக் கையாளும் திறன் போன்ற கருப்பொருள்களில் மாணவர்களின் தன்னம்பிக்கையை மேம்படுத்தும் நோக்குடன், மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் தனிக்கவனம் (Safety and Security) என்ற புதுமையான திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் **2,34,691** ஆசிரியர்களுக்கு தேவையான பயிற்சி அளிக்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி **18.39** கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

8. 2,381 அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு முன்பருவக் கல்வி சார்ந்த சிறப்புப் பயிற்சி அளித்தல் மற்றும் குழந்தை மைய கற்றல் சூழலை உருவாக்குதல்.

அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் பொருட்டு **2,381** அரசு நடுநிலைப் பள்ளிகளில் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் முன்பருவக் கல்வி தொடங்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுவதுடன் குழந்தை மைய கற்றல் சூழல் ஏற்படுத்துவதற்கான வசதிகளும் உருவாக்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி **16.83** கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

9. மாணவர்களுக்கான ஒருங்கிணைந்த நலவாழ்வுத் திட்டம்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உடல்நலன், மனநலன், பாலியல் சமநிலை பேணுதல், சத்துமிக்க உணவு, சுகாதாரம், போதைப் பொருட்களின் தீமை பற்றிய விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு, தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்கும் வழிமுறைகள், தன்சுத்தம், வன்முறை மற்றும் உடலில் ஏற்படும் காயங்களுக்கான பாதுகாப்பு மற்றும் முதலுதவிப் பயிற்சி போன்ற உடல் மற்றும் மனநலம் பேணுகின்ற வழிமுறைகள் கற்றுத் தரப்படும் வகையில் "மாணவர்களுக்கான ஒருங்கிணைந்த நலவாழ்வுத் திட்டம்" செயல்படுத்தப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 12.31 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

10. 53 கல்வி மாவட்டங்களில் தொழிற்கல்வித் திட்டத்தை விரிவுபடுத்துதல்.

மாணவர்கள் தங்களுடைய பாடத் திட்டத்தோடு திறன் சார்ந்த கல்வியைப் பெறும் வகையில் 67 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் கல்வி மாவட்டங்களின் எண்ணிக்கை 120 ஆக உயர்த்தப்பட்டுள்ளதை அடுத்து, மீதமுள்ள 53 கல்வி மாவட்டங்களில் ஒரு கல்வி மாவட்டத்திற்கு ஒரு பள்ளி வீதம் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி திட்டம் விரிவுபடுத்தப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 6.10 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

11. மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு பட்டயக் கணக்காளர் (CA) படிப்பிற்கான வழிகாட்டு பயிற்சியளித்தல்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக NEET போன்ற போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதுபோலவே இந்த கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மேல்நிலை வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் வகையில் பட்டயக் கணக்காளர் (CA) படிப்பிற்கான வழிகாட்டு பயிற்சிகள் அளிக்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

12. 100 அரசு பள்ளிகள் மற்றும் 44 மாணவியர் விடுதிகளுக்கு சூரிய ஒளி மின் வசதி ஏற்படுத்துதல்.

மரபுசார் ஆற்றல் மூலங்களில் பயன்பாட்டைக் குறைத்து, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களைப் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தும் பொருட்டு, 50 அரசுத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், கூடுதலாக மின்சார வசதி தேவைப்படும் 50 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஆக மொத்தம் 100 அரசு பள்ளிகள் மற்றும் 44 மாணவியர் விடுதிகளுக்கு சூரிய ஒளி மின் வசதி ஏற்படுத்தப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 4.51 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

13. 10 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

10 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் விடுதி, பயிற்சி அரங்கம், ஆய்வகம் ஆகியவற்றைப்

பராமரித்தல் மற்றும் பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 4.37 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

14. 32 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் ஆராய்ச்சி செயல்பாடுகளுக்கான சிறப்பு செயல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

32 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக கல்வித் தரத்தினை உறுதி செய்யவும், கற்றல் இடர்பாடுகளுக்குத் தீர்வு காண்பதன்மூலம் ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை மேம்படுத்திக்கொள்ளவும், கற்றல் செயல்பாடுகளில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை களையவும், சிறப்பு செயல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஒரு மாவட்ட பயிற்சி நிறுவனத்திற்கு 10 இலட்சம் ரூபாய் வீதம் 3.20 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

15. இரண்டு புதிய உண்டு உறைவிடப் பள்ளிகளைத் தொடங்குதல்.

பின்தங்கியுள்ள சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகளின் சேர்க்கையை அதிகரிக்கும் பொருட்டு, பெரம்பலூர் மாவட்டடம், ஆலத்தூர் வட்டம், மலையப்ப நகரிலும், திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் வட்டம், வள்ளியூரிலும் இரண்டு புதிய உண்டு உறைவிடப் பள்ளிகள் தொடங்கப்படும். இத்திட்டத்தின்மூலம் நரிக்குறவர் சமூகத்தைச் சாா்ந்த குழந்தைகள் பெரும் எண்ணிக்கையில் பயன்பெறுவார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் ஆணைப்படி 2.84 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

16. ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட திறன் அட்டைகள் (SMART CARDS) வழங்குதல்.

தமிழகத்திலுள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் பள்ளிக் கல்வி அலுவலகங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய மேம்படுத்தப்பட்ட திறன் அட்டைகள் வழங்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1.17 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

17. 12 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் மொழி, கணிதம், அறிவியல், சமூக அறிவியல் சார்ந்த ஆய்வகங்களை மேம்படுத்துதல்.

மாறிவரும் கல்விச் சூழலில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் தர மேம்பாடு என்பது முக்கியத்துவம் பெறுகிறது. இதனை அடைவதற்கு, பணிமுன் பயிற்சியினை அளிக்கும் 12 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் உள்ள மொழி, கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆய்வகங்களுக்குத் தேவையான பொருட்கள் வழங்கி மேம்படுத்தப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1.50 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

18. மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் சிறப்புப் புலங்களை உருவாக்குதல்.

புதிய பாடப் புத்தகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு அளிப்பதற்கும் மாணவர்களின் கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் மொழிகள், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் மற்றும் கல்வியியல், தொழில்நுட்பம் ஆகியவற்றிற்கான சிறப்புப் புலங்கள் உருவாக்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 20 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

19. இரண்டு நூலகங்களுக்குப் புதிதாக கட்டடம் அமைத்துத் தருதல்.

சென்னை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில், நூலகங்களை பொது மக்கள் அதிகளவில் பயன்படுத்துவதைக் கருத்தில் கொண்டு வாசகர்கள் பயன்பாடு அதிகமுள்ள, இலவசமாகக் காலிமனை பெறப்பட்டுள்ள 2 நூலகங்கள் தெரிவு செய்யப்பட்டு, அந்நூலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் அமைத்துத் தரப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நூலகமொன்றுக்கு 40 இலட்சம் ரூபாய் வீதம் 80 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

20. சேலம் மாவட்ட மைய நூலகத்தில் குழந்தைகளுக்கான சிறப்பு நூலகம் அமைத்தல்.

வருங்கால இளைய தலைமுறையான குழந்தைகளின் கல்வியில் மிகுந்த அக்கறையுடன் பல்வேறு மாற்றங்களை தமிழ்நாடு அரசு புகுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பள்ளிகள் வழியாக

மாணவர்கள் கல்வித் திறன் பெறுவது மட்டுமின்றி பொது அறிவினை வளர்த்துக்கொள்வதற்கு ஏதுவாகவும், குழந்தைகளை ஆர்வத்துடன் நூலகத்தை நோக்கி ஈர்க்கும் வகையிலும் குழந்தைகளுக்கான அனைத்து வசதிகளுடன்கூடிய சிறப்பு நூலகம், சேலம் மாவட்ட மைய நூலக வளாகத்தில் அமைக்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 50 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

21. அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் செவி மற்றும் பேச்சுத் திறன் குறைபாடுடையவர்களுக்கான சிறப்புப் பிரிவு தொடங்குதல்.

பொது நூலகங்களைப் பயன்படுத்தும் மாற்றுத் திறனாளிகளின் நலன் கருதி மாவட்டந்தோறும் செயல்படும் 32 மாவட்ட மைய நூலகங்களிலும் செவி திறனற்றோர் மற்றும் பேச்சுத் திறனற்றோருக்கான சிறப்புப் பிரிவு தொடங்கப்படும். இப்பிரிவில் சைகை மொழி அகராதி, உயர் கல்வி சார்பு சைகை மொழி குறுந்தகடுகள் மற்றும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் வகையில் அனைத்து வசதிகளும் வழங்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஒரு மாவட்ட மைய நூலகத்திற்கு 1.50 இலட்சம் ரூபாய் வீதம் 32 மாவட்ட மைய நூலகங்களில் 48 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

22. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான நாட்குறிப்பேடுகள் வழங்குதல்.

மாணவ, மாணவியரின் வீட்டுப்பாடங்கள் தொடர்பான குறிப்புகளை எழுதி அனுப்பவும், அவர்களின் கற்றல் செயல்பாட்டினை

ஆசிரியர் மற்றும் பெற்றோர்கள் கண்காணிக்கும் வகையிலும் ஏற்கெனவே அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நாட்குறிப்பேடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு முதல் அத்திட்டத்தினை 6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு விரிவுபடுத்தி, அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு நாட்குறிப்பேடுகள் வழங்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

23. பள்ளிகளில் செயல்படும் பெற்றோர் ஆசிரியர் கழகங்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்.

மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த தமிழகத்திலுள்ள அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சிறப்பாக செயல்படும் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகங்களை ஊக்குவிக்கும் வகையில் ஒரு கல்வி மாவட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பள்ளிக்கு ரூ.50,000/– ஊக்கத்தொகை வழங்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ரூ.50,000/– வீதம் 120 கல்வி மாவட்டங்களுக்கு 60 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

24. தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்.

மாணவ, மாணவியரின் உடல்திறனை வளர்க்கும் பொருட்டு, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு

ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று, தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் **3** முதல் **5**ஆம் வகுப்பு வரை பயிலும், மாணவ, மாணவியருக்கு அவர்களுடைய விளையாட்டுத் திறனைக் கண்டறிந்து ஊக்குவிக்கும் பொருட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

❖ ❖ ❖

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

மானியக் கோரிக்கை எண். 49

1. சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் ரூ.825 இலட்சம் செலவில் செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைத்தல்.

உயர் நிலையிலான தடகளப் போட்டிகள் அனைத்தும் தற்போது செயற்கை இழை ஓடுதளப் பாதைகளில் மட்டுமே நடத்தப்படுவதால், நேருபூங்காவிளையாட்டுவளாகத்தில்உள்ளதடகளஓடுபாதையினை செயற்கை இழை தடகள ஓடுபாதையாக மாற்றி அமைப்பது மிகவும் அவசியமாகிறது. எனவே, இப்பகுதியில் உள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர் பெரிதும் பயன் பெறும் வகையில் சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.825 இலட்சம் செலவில் செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைக்கப்படும்.

2. மதுரை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விளையாட்டு விடுதிகளில் ரூ.132.31 இலட்சம் செலவில் சிறப்பு பழுது பார்க்கும் பணிகள் மற்றும் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக பள்ளி மாணவ, மாணவியர் தங்கி விளையாட்டுப் பயிற்சி பெறும் வகையில் 27 விளையாட்டு விடுதிகள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. மதுரை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள

விளையாட்டு விடுதிகளில் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் மற்றும் கூடுதல் வசதிகள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 132.31 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

3. வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சிக் கூடத்தை ரூ.150 இலட்சம் செலவில் தரம் உயர்த்துதல்.

வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சிக்கூடம் தினசரி பயிற்சிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வசதியைப் பயன்படுத்தி பெருமளவில் ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டு வீரர்கள் உருவாகியுள்ளனர். எனவே, மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள் நடத்துவதற்கு ஏதுவாக, வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சிக்கூடம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 150 இலட்சம் ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

4. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் மின்னணு மொழி ஆய்வகம் ரூ.14.52 இலட்சம் செலவில் அமைத்தல்.

மாணவர்கள் கல்வி கற்க சரியான சூழலை அமைப்பதற்கும், அவர்களது கல்வி சிறக்கவும், நவீன முறை கல்விச் சூழலில் நேர்முகத் தேர்வினை எதிர்கொள்ளவும், வேலைக்காக பல்வேறு இடங்களுக்குச் செல்லவும் மின்னணு மொழி ஆய்வகம் அத்தியாவசியமாகிறது. எனவே, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் மின்னணு மொழி ஆய்வகம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 14.52 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். ❖

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

கூட்டுறவு

மானியக் கோரிக்கை எண். 12

1. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் ரூ.57.36 இலட்சம் மதிப்பீட்டில் மைக்ரோ ஏடிஎம் (Micro ATM) இயந்திரங்கள் நிறுவுதல்

பொதுமக்களுக்கு அரசினால் வழங்கப்படும் அனைத்து சேவைகளை வழங்கவும், கிராமப் புறத்திலுள்ள மக்கள் தங்கள் வசிப்பிடத்திலேயே நவீன வங்கியியல் சேவைகளை பெறவும், தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு ரூ.57.36 இலட்சம் மதிப்பீட்டில் மைக்ரோ ஏடிஎம் இயந்திரங்கள் மூலம் சேவைகள் வழங்கப்படும்.

2. கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் தானிய ஈட்டுக் கடன் உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்

வேளாண் விளைப்பொருட்களை இருப்பு வைத்து இலாபகரமான விலை கிடைக்கின்ற பொழுது, விற்று பயனடையும் நோக்கத்துடன், விவசாயிகளுக்கு வழங்கப்படும் தானிய ஈட்டுக் கடனின் உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

3. கூட்டுறவு நிறுவனங்களால் ஏற்கெனவே வீட்டு வசதிக் கடன் ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தி வழங்கியது போல் தற்போது தனிநபர் நகை கடனளவு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்

கூட்டுறவு நிறுவனங்களால் ஏற்கெனவே பொதுமக்களுக்கு வழங்கப்படும் வீட்டு வசதிக் கடன் ரூ.20 இலட்சத்திலிருந்து

ரூ.30 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது. அதே போல், கூட்டுறவு நிறுவனங்களின் வாணிபத்தினை அதிகரிக்கும் பொருட்டு, நகைக்கடன் வழங்குவதற்கான தனிநபர் கடன் உச்ச வரம்பு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

4. 27 கூட்டுறவு நிறுவனங்களின் அலுவலகக் கட்டடங்கள் ரூ.2.71 கோடி மதிப்பீட்டில் விரிவாக்குதல்

கூட்டுறவு நிறுவனங்களின் தரத்தினை உயர்த்தி, நவீன உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வசதிகளுடன் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பாக சேவையினை வழங்கும் பொருட்டு, 23 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 1 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் 3 மத்தியக் கூட்டுறவு வங்கி கிளைகள் என ஆக மொத்தம் 27 கூட்டுறவு நிறுவனங்களின் தற்போதைய அலுவலகக் கட்டடங்கள் ரூ.2.71 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்படும்.

5. 5 மத்திய கூட்டுறவு வங்கிகளில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் 7 புதிய கிளைகள் துவக்குதல்

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை புரியும் வகையிலும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வியாபாரத்தை அதிகரிக்கும் பொருட்டும், 5 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில், ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் 7 புதிய கிளைகள் துவக்கப்படும்.

6. 61 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.2.08 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு அம்சங்கள் மேம்படுத்துதல்

கூட்டுறவு நிறுவனங்களில் நகைக்கடனுக்கு ஈடாக பெறப்பட்ட வாடிக்கையாளர்களின் நகைகள் மற்றும் இதர மதிப்புமிக்க பொருட்களை பாதுகாக்கும் வகையில், பாதுகாப்பு வசதியினை மேம்படுத்தும் பொருட்டு, 15 கூட்டுறவு நிறுவனங்களில் நவீன

உயர்தர பாதுகாப்புப் பெட்டகங்கள் ரூ.67.50 இலட்சம் மதிப்பீட்டிலும், 10 கூட்டுறவு நிறுவனங்களில் வாடிக்கையாளர் பாதுகாப்பு பெட்டகங்கள் ரூ.30.10 இலட்சம் மதிப்பீட்டிலும், 15 கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பு பெட்டகங்கள் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டிலும், 19 கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்புக் கதவுகள் ரூ.62.70 இலட்சம் மதிப்பீட்டிலும், 1 கூட்டுறவு நிறுவனத்தில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 1 கூட்டுறவு நிறுவனத்தில் பாதுகாப்பு அறை ரூ.2 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 61 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.2.08 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

7. 51 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி அமைத்தல்

கூட்டுறவு நிறுவனங்களின் சேவையினை மேம்படுத்தும் வகையில் வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக, 51 கூட்டுறவு நிறுவனங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் சாதனங்கள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக சாலைகளுக்கு ரூ.80.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல், நவீனமயமாக்குதல் மற்றும் சுயசேவைப்பிரிவை நவீனமயமாக்குதல்

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சேவையினை மேம்படுத்தும் பொருட்டும், பண்டகசாலைக்கு பொலிவான தோற்றத்தை ஏற்படுத்தவும், நாமக்கல் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையில் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும், இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோர்

கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் அலுவலகக் கட்டடம் நவீனமயமாக்கும் பணி ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் தூத்துக்குடியில் உள்ள மதுரா கோட்ஸ் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலையின் சுயசேவைப்பிரிவு கட்டடத்தினை நவீனமயமாக்கல், கணினிமயமாக்கல் மற்றும் விரிவாக்கம் செய்தல் ஆகிய பணிகள் ரூ.25.50 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.80.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

9. திருநெல்வேலி மற்றும் சிவகங்கை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் பெட்ரோல் மற்றும் டீசல் வழங்கும் நிலையம் அமைத்தல்

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளின் வியாபார நடவடிக்கைகளை அதிகரித்திடவும், பொதுமக்களுக்கு பயனளிக்கும் வகையிலும், திருநெல்வேலி மற்றும் சிவகங்கை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் பெட்ரோல் மற்றும் டீசல் வழங்கும் நிலையங்கள் அமைக்கப்படும்.

10. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.7.37 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல்

ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின், ஏல மையத்தில் தானியங்கி நகரும் அமைப்புடன் (Automatic Conveyor System) கூடிய வேளாண் விளைபொருள் ஏல மையம் ரூ.2.49 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படுத்துவதுடன் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், 1,000 மெ.டன் அளவு கொண்ட கிடங்கில் குளிர்பதன வசதி ரூ.95 இலட்சம்

மதிப்பீட்டிலும், ரூ.34.20 இலட்சம் மதிப்பீட்டிலும் வேளாண் விளைபொருள் உலர்களம் மற்றும் ஏலக்களம் அமைக்கப்படும்.

திருச்சி மாவட்டத்தில், துறையூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.47 இலட்சம் மதிப்பில் வெங்காய அறுவடை இயந்திரம், வெங்காய சேமிப்புத் தொட்டி மற்றும் வெங்காய கூழ் தயாரிக்கும் அலகு ஆகியவையும், சிறுதானியங்கள் பதனிடும் அலகு ரூ.70 இலட்சம் மதிப்பீட்டிலும் சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கடலை எண்ணெய் பிழியும் அலகு ரூ.43.87 இலட்சம் மதிப்பீட்டிலும் நிறுவப்படும்.

மதுரை மாவட்டம், பேரையூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உளுந்தின் தோல் நீக்கி தரம் பிரிக்கும் அலகு (Dhal Color Sorter) ரூ.26.97 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

கடலூர் மாவட்டம் சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.27 இலட்சம் மதிப்பில் அப்பளம் தயாரிக்கும் அலகு நிறுவப்படுவதுடன் இச்சங்கத்தில் ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

கரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்படுவதுடன் தென்காசி செங்கோட்டை தாலுக்கா வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.16.80 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலக சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் கடையநல்லூரில் உள்ள கிட்டங்கியினை புதுப்பித்தல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படும்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க கொங்கணாபுரம்

கிளை வளாகத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

11. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் 3 மண்டல அலுவலகங்களுக்கு சுற்றுச் சுவருடன் கூடிய புதிய அலுவலகங்கள் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் கட்டுதல் மற்றும் மூன்று பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை மையங்கள் அமைத்தல்

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் திருவண்ணாமலை, சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மண்டலங்களுக்கான மண்டல அலுவலகங்கள் தற்போது இல்லை. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உரம் உள்ளிட்ட இடுபொருட்கள் தொடர்பான சேவையை விரைவாக வழங்கும் பொருட்டு, திருவண்ணாமலை, சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் தலா ரூ.75 இலட்சம் வீதம் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் மண்டல அலுவலகங்கள் கட்டப்படும். மேலும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் சார்பாக திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் எரியோடு ஆகிய 3 இடங்களில் இந்தியன் ஆயில் நிறுவனத்துடன் இணைந்து பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும்.

12. மூன்று மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களை ரூ.1.77 கோடி மதிப்பில் நவீனமயமாக்குதல்

தருமபுரி, திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு அச்சகங்கள் முறையே ரூ.33 இலட்சம், ரூ.125 இலட்சம் மற்றும் ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

13. இரண்டு மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களுக்கு ரூ.98 இலட்சம் செலவில் சொந்த அலுவலகக் கட்டடம் கட்டுதல்

நாமக்கல் மற்றும் திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு, நாமக்கல்

மாவட்டக் கூட்டுறவு அச்சகத்தில் முதல் தளம் ரூ.31 இலட்சம் மதிப்பிலும் திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு அச்சகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் ரூ.67 இலட்சம் மதிப்பிலும் கட்டப்படும்.

14. சென்னை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ரூ.1.05 கோடி மதிப்பில் புதிய கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்கள் துவக்குதல்

சென்னை மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மாணவர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் சென்னை மற்றும் தூத்துக்குடியில் ரூ.1.05 கோடி மதிப்பில் இரண்டு புதிய கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்கள் துவக்கப்படும்.

15. சேலம் மாவட்டம், சின்னக்கல்ராயன் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.75 இலட்சம் மதிப்பில் வணிக வளாகம் கட்டுதல்

சேலம் மாவட்டத்திலுள்ள சின்னக்கல்ராயன் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பழங்குடியின உறுப்பினர்கள் நலன் மற்றும் சங்கங்களின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்படும்.

❖ ❖ ❖

எரிசக்தித் துறை

மானியக் கோரிக்கை எண். 14

1. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வடசென்னை அனல் மின் நிலையம்I மற்றும் II–ற்கான நீர்த்தேவையின் ஒருபகுதியை பூர்த்தி செய்ய வடசென்னை அனல் மின் நிலையம்–IIஇல் ஒரு நாளுக்கு 10 மில்லியன் லிட்டர் (10 MLD) நிறுவு திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் சுமார் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில்நிறுவ முதற்கட்டமாக ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

2. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கிளன்மார்கனில் உலக தரம் வாய்ந்த “புனல் மற்றும் மரபுசாரா எரிசக்தி ஆராய்ச்சி மையம்” (Howard Centre) நிறுவப்படும். இந்த மையத்திற்கு தொடக்கப் பங்களிப்பாக ரூபாய் 50 இலட்சம் வழங்க தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் உத்தேசித்துள்ளது.

3. வெள்ளம் மற்றும் புயல் போன்ற இயற்கை சீற்றங்களால், மின் தொடரமைப்பு கட்டமைப்பானது மிகவும் சேதமடைவதன் விளைவாக முக்கிய தொடரமைப்பு இணைப்புகள் மற்றும் துணை மின் நிலையங்கள் பரவலாக பாதிக்கப்படுவதால், விநியோகம் நீண்டகாலத்திற்கு பாதிக்கப்படுகிறது. ஆகவே, மின்தொடரமைப்பு கட்டமைப்பை உடனடியாகவும் தற்காலிகமாகவும் மீட்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 765 கி.வோ வரையிலான

கட்டமைப்பிற்கு ஏற்ற இரண்டு தொகுப்பு “அவசர மீட்பு அமைப்பு” (Emergency Restoration System) ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

4. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி விவசாய மின் இணைப்பு பெற காத்திருப்பு பட்டியலிலுள்ள விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் விரைந்து விவசாய மின் இணைப்பை பெறும் வகையில் விரைவு (துட்கல்) மின்னிணைப்பு வழங்கல் திட்டத்தின் மூலம் 5 குதிரைத்திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம், 7.5 குதிரைத்திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம், 10 குதிரைத்திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் மூன்று இலட்சம் மற்றும் 15 குதிரைத்திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் நான்கு இலட்சம் வீதம் ஒரு முறை கட்டணம் செலுத்தும் 10,000 விண்ணப்பத்தாரர்களுக்கு இந்த வருடமும் இலவச விவசாய மின் இணைப்பு வழங்கப்படும்.

5. சீர்மிகு சென்னை (Smart City) திட்டத்தின் கீழ் பரப்பு சார்ந்த மேம்பாட்டிற்காக (Area based development) தியாகராய நகர் பகுதியில் 1.41 இலட்சம் நுகர்வோர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வினைத்திறன் மிகுமின்னளவியை, வானொலி அலைகற்றை (Radio Frequency) பரிமாற்ற தொழில் நுட்ப அடிப்படையில் பொருத்துவதற்கான திட்டம் ரூபாய் 120 கோடி மொத்த மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

6. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு

மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திலும் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகத்திலும் ரூபாய் 150 கோடி மொத்த மதிப்பீட்டில் நிறுவன வள திட்டமிடல் (Enterprise Resource Planning) மென் பொருள் செயலாக்கத்திற்கு கொண்டுவரப்படும்.

7. புதிய தொழில்நுட்பத்தை நடைமுறைபடுத்துவதோடு கைமுறை செயல்பாட்டினை (Manual Operation) குறைப்பதற்காகவும் மற்றும் பெருகிவரும் மின்தேவையை பூர்த்தி செய்யவும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சென்னையில் ஏழு (7) எண்ணிக்கை 33/11 கி.வோ முழுமையான தானியங்கி வளிமகாப்பு (Complete Auto GIS) துணை மின் நிலையங்கள் ரூபாய் 170 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி திருப்பூர் மின் பகிர்மான வட்டத்திற்கு ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் புதிய மத்திய அலுவலக கட்டடம் அமைக்கப்படும்.

9. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நாமக்கல் மாவட்டத்தில் பள்ளிபாளையத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மின் பகிர்மான கோட்டம், ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

10. தலைமை அலுவலகம் மற்றும் கள அலுவலகத்திற்குமான தகவல் தொடர்புகளை மேம்படுத்த, தலைமை அலுவலகம், ஒன்பது மண்டல அலுவலகங்கள் மற்றும் 44 மின் பகிர்மான அலுவலகங்களுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா

அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி காணொளி மூலம் இணைத்து கருத்தரங்கு (Video Conferencing) நடத்தும் வசதி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் செயல்முறைப்படுத்தப்படும்.

11. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் தகுதியான நிதியுதவியைத் தவிர்த்து, மாநில அரசின் மானியமான ரூ.15,000/–த்துடன், புதுப்பிக்கப்பட்ட மூலதன ஊக்கத் தொகை திட்டத்தின் வாயிலாக ஒரு கிலோவாட் திறன் கொண்ட மின் அமைப்புடன் இணைக்கக் கூடிய சூரிய மேற்கூரை மின் நிலையங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 5,000 வீடுகளில் ரூபாய் 7.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

12. ‘‘விவசாயத்தில் எரிசக்தி மற்றும் நீர் மேலாண்மை சிக்கனம்’’ (SEWA) என்ற முன்னோடி ஆய்வு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

13. தமிழகத்தைப் பசுமை மாநிலமாக மாற்றும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால், தமிழகம் முழுவதும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மிகப்பெரிய அளவில் விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்.

14. எரிபொருள் மற்றும் மரபுசார்ந்த எரிசக்தியின் பயன்பாட்டை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறைகளில் குறைப்பதற்கு,

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை "ஆற்றல் திறன் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்புகளை ஊக்குவிப்பு" என்ற ஒருங்கிணைந்த திட்டத்தினை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் நடைமுறைபடுத்தப்படும்.

15. தர நிர்ணய ஆய்வு கூடத்தில் உள்ள சோதனைக் கருவிகளின் தரத்தினை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்துவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நவீன தொழில்நுட்ப சோதனைக் கருவிகள் ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

❖ ❖ ❖

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

மானியக் கோரிக்கை எண். 37

1. **கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ள மதுபானத் தொழிலில் ஈடுபட்டு மனம் திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதி வழங்குதல்**

Providing Assistance for Rehabilitating persons who have been weaned away from illicit distillation and illicit liquor trade

தமிழ்நாட்டில், கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் அதன்மூலம் ஏற்படும் தீமைகளை முற்றிலும் களையவும், இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களை கள்ளத்தனமாகக் கடத்துதல், விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு சிறைத்தண்டனை பெற்று விடுதலையாகி, மனம் திருந்துபவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காகவும், அவர்கள் மீண்டும் இத்தொழிலைத் தொடராமல் வேறு தொழில்களை மேற்கொள்ள உதவுவதற்காகவும், 2011–2012ஆம் ஆண்டு முதல் ரூ.5 கோடி மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டிலும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.5 கோடி மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்படும்.

2. மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளுதல்

Conducting Awareness Campaigns against Consumption of Liquor

மது அருந்துதலுக்கு மக்கள் அடிமையாகாமல் இருக்கவும், அவ்வாறு மது அருந்தும் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் அப்பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடனும், மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ள, மாவட்டந்தோறும் போலி மதுபானங்கள் மற்றும் கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் தீமைகளைப் பற்றி விழிப்புணர்வுப் பிரச்சாரம் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்த, 2011ஆம் ஆண்டு முதல் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியானது, 2015–2016ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு நிதி ஆண்டிலும் ரூ.3 கோடியாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியாண்டிலும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல்

Pay increase for TASMAC Retail Vending Personnel

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் 26,056 சில்லறை விற்பனைப் பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் தொகுப்பூதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள். டாஸ்மாக் நிறுவனத்தில் பணியாற்றும் சில்லறை விற்பனைப் பணியாளர்களான மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் உதவி விற்பனையாளர்களுக்கு 2011ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை, ஒவ்வொரு ஆண்டும் முறையே ரூ.500/–, ரூ.400/– மற்றும்

ரூ.300/– என தொகுப்பு ஊதியமானது உயர்த்தி வழங்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு இந்த ஊதிய உயர்வு முறையே ரூ.750/, ரூ.600/– மற்றும் ரூ.500/– என உயர்த்தி வழங்கப்பட்டது. இந்த ஆண்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் உதவி விற்பனையாளர்களுக்கு மாத தொகுப்பு ஊதியம் முறையே ரூ.2,000/– கூடுதலாக உயர்த்தி வழங்கப்படும்.

இந்த ஊதிய உயர்வுகள் ஏப்ரல், 2019 முதல் நடைமுறைப்படுத்தப்படும். இதனால், டாஸ்மாக் நிறுவனத்தில் பணிபுரியும் 7,074 மேற்பார்வையாளர்களும், 15,435 விற்பனையாளர்களும் மற்றும் 3,547 உதவி விற்பனையாளர்களும் பயன்பெறுவர். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூ.62.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. **தெளிந்த சாராவி, போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுவகைகள் ஆகியவற்றின் கடத்தல்களைக் கண்டுபிடித்து கைப்பற்றும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு அலுவலர்களுக்கும் மற்றும் அவர்களுக்கு உதவும் உள்ளூர் காவலர்களுக்கும் பண வெகுமதிகள் வழங்குவதற்கான ஊக்க நிதியினை உயர்த்தி வழங்குதல்**

Enhancing the amount for giving monetary rewards to Prohibition Enforcement Wing Officials and local Police who help in seizure of smuggled Rectified Spirit, spurious and non-duty paid liquor

தமிழ்நாட்டில், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் கீழ் 96 அலகுகள் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் ஆணையரகங்களில் இயங்குகின்றன. தெளிந்த சாராவி, போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபான

வகைகள் ஆகியவற்றின் கடத்தல்களைக் கண்டுபிடித்து கைப்பற்றும் இந்த அலகுகளில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் அவர்களுக்கு உதவும் உள்ளூர் காவலர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கு பண வெகுமதிகள் வழங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி சென்ற ஆண்டு ரூ.10 இலட்சம் என ஒதுக்கீடு செய்யப்பட்ட வெகுமதி தொகையானது, இந்த ஆண்டு ரூ.15 இலட்சம் என உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. போதைமீட்பு மையங்களின் (De-addiction Centres) அன்றாட மற்றும் நிரந்தர செலவிற்காக நிதி உதவி அளித்தல்

Financial Assistance for day-to-day expenditure and permanent expenditure to the De-addiction Centres

அரசு, குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களை மீட்டு மறுவாழ்வு அளிப்பதற்காக மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் போதை மீட்பு மையங்களை (De-addiction Centres) ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளது. இந்த மையங்களில் குடிப்பழக்கத்திற்கு அடிமையான ஏராளமானோர் சிகிச்சைக்காக வந்த வண்ணம் உள்ளனர். அவர்களுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க மனநல மருத்துவர், உளவியலாளர், சமூகசேவகர், செவிலியர் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும், மேலும், இந்த நோயாளிகளுக்கு உணவு, மருந்துகள் மற்றும் பிற இனங்களில் அன்றாட செலவுகள் செய்யவும், இந்த மையங்களுக்கு தேவையான மரத் தளவாடங்கள், போர்வைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்யவும் நிதி தேவைப்படுகிறது.

மேற்கண்ட இனங்களில், கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், வேலூர் ஆகிய ஏழு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அமைந்துள்ள போதை மீட்பு மையங்களுக்கு ரூ.**3.64** கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.**3.64** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ ❖ ❖

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மானியக் கோரிக்கை எண். 34

1. பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இதர மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பாதாள சாக்கடை திட்டங்கள், குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தியதாலும் மற்றும் இயற்கை இடர்பாடுகளாலும் சேதமடைந்த சாலைகள் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சாலைகளை சீரமைத்து மேம்படுத்தும் பணிக்காக உருவாக்கப்பட்ட நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் சென்னை பெருநகர மாநகராட்சி, பிற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் செயல்படுத்தியதாலும் மற்றும் இயற்கை இடர்பாடுகளாலும் சேதமடைந்த சாலைகள் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

2. பம்மல் மற்றும் அனகாபுத்தூர் நகராட்சிகளில் பாதாள சாக்கடை திட்டம் ரூ.211.15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பொதுமக்கள் நலன் கருதி சுற்றுச்சூழல் மற்றும் பொது சுகாதார பாதிப்புகளை தடுக்கும் நோக்கத்துடன் சென்னை பெருநகரை ஒட்டி

அமைந்துள்ள பம்மல் மற்றும் அனகாபுத்தூர் நகராட்சிகளில் பாதாள சாக்கடை திட்டம் ரூ.211.15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

3. பல்லாவரம் நகராட்சியின் குடிநீர் தேவையினை சமாளிக்க திரிசூலம் மலை கல்குவாரி நீர் ஆதாரங்களைக் கொண்டு புதிய குடிநீர்திட்டம் ரூ.13.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பல்லாவரம் பகுதியில் தற்போது நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டினை தவிர்க்கும் பொருட்டு, திரிசூலம் ஊராட்சிப் பகுதியில் கைவிடப்பட்ட 6 கல்குவாரிகள் கண்டறியப்பட்டு, அவற்றில் தேங்கியுள்ள மழைநீரினை சுத்திகரிப்பு செய்ய 5 MLD கொள்ளவு கொண்ட 3 சுத்திகரிப்பு மையங்கள் ரூ.13.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

4. தஞ்சாவூர் மாநகராட்சியில் பகுதி வாரியான மண்டல அளவுமானி முறையை (District Metering Area) செயல்படுத்தி பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க, குடிநீர் விநியோக கட்டமைப்புகள் மேம்படுத்த ரூ.43.03 கோடி செலவில் ஒரு முன்னோடி திட்டம் செயல்படுத்தப்படும் .

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சீரான முறையில் தேவையான அளவு குடிநீரினை உரிய நீர் அழுத்தத்துடன் வழங்குவதை உறுதி செய்ய, குடிநீர் விநியோகத்தில் நவீன தொழில்நுட்பமான பகுதி வாரியான மண்டல அளவுமானி முறை (District Metering Area) கோட்பாட்டினை பயன்படுத்தி, விநியோகப் பகுதியினை சிறு சிறு பகுதிகளாக பிரித்து குடிநீர் வழங்க, குடிநீர் விநியோக கட்டமைப்புகள் ரூ.43.03 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

5. ஏற்கனவே நகராட்சிகளில் செயல்படுத்தப் பட்டு வரும் 49 கசடு கழிவு சுத்திகரிப்பு அமைப்புகளின் (Faecal Sludge Treatment Plant) தொடர்ச்சியாக, கொமாரபாளையம் நகராட்சியில் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் கசடு கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சிறிய மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு ஒரு மாற்று ஏற்பாடாக கசடுகழிவு மேலாண்மைத் திட்டத்தினை, ஏற்கனவே 51 நகராட்சிகள் மற்றும் 59 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில், 49 நகரங்களில் கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையம் செயல்பட எடுத்துவரும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து, கொமாரபாளையம் நகராட்சியில் செயல்படுத்த தோராயமாக ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

6. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செம்மையாக செயல்படுத்தி கண்காணிக்க ஏதுவாக நகராட்சி நிருவாக ஆணையரகம், மாநகராட்சிகள் மற்றும் மண்டல நிருவாக அலுவலகங்களில் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை பிரிவுகள் உருவாக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மக்கள் தொகை அடிப்படையில் தினசரி உருவாகும் திடக்கழிவு அளவினை கணக்கிட்டும் மற்றும் கழிவுகளின் தன்மையை கருத்தில் கொண்டும் அந்தந்த உள்ளாட்சிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப முறை அறிந்து திடக்கழிவுகளை அறிவியல் ரீதியாக நீடித்த நிலையான முறையில் தீர்வு செய்வதை தொடர் கண்காணிப்பு

செய்வதற்காக, தனிப்பிரிவு, மாநில அளவில் நகராட்சி நிருவாக ஆணையரகத்திலும், மண்டல அளவில் நகராட்சி நிருவாக மண்டல அலுவலகத்திலும் மற்றும் அனைத்து மாநகராட்சிகளிலும் உருவாக்கப்படும்.

7. மாநகராட்சிகளில் உருவாகும் திடக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் முழுமையாக தீர்வு செய்யும் விதமாக தேசிய அனல் மின் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி சாத்தியக் கூறுகள் உள்ள மாநகராட்சிகளில் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகத்திலுள்ள 15 மாநகராட்சிகள் (சென்னை உட்பட), 121 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் தினந்தோறும் உருவாகும் சுமார் 7,011 மெட்ரிக் டன் மக்கும் தன்மை உள்ள கழிவுகள் மற்றும் 6,733 மெட்ரிக் டன் மக்காத தன்மை கொண்ட உலர் கழிவுகளுக்கு நீடித்த நிரந்தர தீர்வாக மேற்படி எரி தன்மை கொண்ட உலர் திடக்கழிவுகளை எரிபொருளாக பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க ஏதுவாக தேசிய அனல் மின் நிறுவனத்துடன் (National Thermal Power Corporation) புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) ஏற்படுத்தி தமிழகத்தில் திடக்கழிவு மின்சக்தி ஆலைகள் நிறுவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

8. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உருவாகும் திடக்கழிவுகளில் நெகிழி மற்றும் எரிதன்மை கொண்ட உலர் கழிவுகளை பாதுகாப்பான முறையில் தீர்வு செய்ய, முதற்கட்டமாக சாத்தியக்கூறுகள் உள்ள மாநகராட்சிகளில் தனியார் பங்களிப்புடன் சிறிய எரியூட்டும் அலை அலகுகள் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உருவாகும் திடக்கழிவின் மற்றொரு கூறான மக்காத தன்மை கொண்ட நெகிழி மற்றும் எரி தன்மை கொண்ட உலர் கழிவுகள் சுமார் 3000 மெட்ரிக் டன் நாளொன்றுக்கு பிரித்தெடுக்கப்பட்டு, இவற்றில் ஒரு பகுதி தற்போது சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு எரிபொருளாக பயன்படுத்திட அனுப்பப்படுவதாக இருப்பினும், இவற்றை பாதுகாப்பான முறையில் எரியூட்டி தீர்வு செய்ய சாத்தியகூறுள்ள மாநகராட்சிகளில் தனியார் பங்களிப்புடன் சிறிய எரியூட்டும் அலை அலகுகள் ஏற்படுத்தப்படும்.

9. காவேரி, பவானி, தாமிரபரணி, திருமணிமுத்தாறு, சரபங்கா, வசிஷ்டா, பாலாறு, அர்ஜுனா, வைப்பாறு, தென்பெண்ணை, கெடிலம் ஆகிய ஆறுகளில் நீர் மாசுபடுதலை தவிர்க்க சேலம் மாநகராட்சி, பள்ளிபாளையம், குளித்தலை, கொமாரபாளையம், அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம், எடப்பாடி, ஆத்தூர், நரசிங்கபுரம், சிவகாசி, திருத்தங்கல், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய நகராட்சி பகுதிகளுக்குட்பட்ட ஆற்றுப் பகுதிகளில் ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்த உரிய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளில் உருவாகும் கழிவுநீர், ஆறுகளில் சென்று கலந்து மாசு ஏற்படா வண்ணம் குடிநீர் ஆதாரங்களை பாதுகாக்கவும் மற்றும் குடிநீர் சம்மந்தமான பல்வேறு தொற்று நோய்கள் ஏற்படா வண்ணமும் கழிவுநீர் கலப்பதை தடுக்க உறுதி செய்யும் வகையில், காவேரி, பவானி, தாமிரபரணி, திருமணிமுத்தாறு, சரபங்கா, வசிஷ்டா, பாலாறு, அர்ஜுனா, வைப்பாறு, தென்பெண்ணை,

கெடிலம் ஆகிய ஆறுகளில் நீர் மாசுபடுதலை தவிர்க்க, சேலம் மாநகராட்சி மற்றும் மேற்படி ஆற்றுப் பகுதிகளை சுற்றியுள்ள நகராட்சிப் பகுதிகளில் உரிய தொழில்நுட்பத்துடன் சுத்திகரிப்பு செய்ய ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்த உரிய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்படும்.

10. பெரு நகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களில் தெரு விளக்குகளை தொலைதூரத்திலிருந்து கண்காணிக்கும் முறை (Remote Group Monitoring System) ரூ.46.20 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பெரு நகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் தெரு விளக்குகளை தொலை தூரத்திலிருந்து கண்காணிக்கும் முறை (Remote Group Monitoring System) ரூ.46.20 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு நடைமுறைபடுத்தப்படும். இவ்வாறு அமைப்பதால், தெரு விளக்குகள் எரிகின்ற விபரங்கள் மற்றும் மின் அளவீடுகளை (Voltage, current etc.,) தொலை தூரத்திலிருந்து கண்காணித்து தெரு விளக்கு பழுதுகள் சம்பந்தமான குறுஞ்செய்தி உரிய பொறியாளருக்கு அனுப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுத்து நிவர்த்தி செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.

11. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பசுமைப் பரப்பை அதிகரிக்க ரூ.15 கோடி செலவில் 50,000 எண்ணிக்கையில் மரக்கன்றுகள் நடவு செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பெருநகர சென்னை மாநகரில் கடந்த 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், வர்தா புயலின் காரணமாக வேரோடு சாய்ந்த இலட்சக்கணக்கான

மரங்களை ஈடு செய்யும் வகையில், 2018–2019ஆம் நிதியாண்டில் 23,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேலும் பசுமைப் பரப்பை அதிகரிக்க ஏதுவாக 2019–2020ஆம் நிதியாண்டில் ரூ.15 கோடி செலவில் 50,000 எண்ணிக்கையில் மரக்கன்றுகள் நடவு செய்யப்படும்.

12. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில், புதிதாக 35 பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் திறந்தவெளி நிலங்களில் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பொது மக்களின் புத்துணர்ச்சியை அதிகப்படுத்துவதற்காகவும், உடல் நலத்தை காக்கவும், தியானம் மற்றும் மூச்சுபயிற்சி செய்யவும், சுற்றுப்புறத்தினை காக்கவும், பசுமை பரப்பை அதிகரிக்கவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு, 35 பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

13. சென்னை நகரில் கண்ணாடி இழை (Optical Fibre) உட்கட்டமைப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் சிறப்பு திட்டமாக பொது–தனியார் கூட்டமைப்பு முறையில் கீழ்நிலை பெட்டகம் அமைக்கும் பணி ரூ.200 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கண்ணாடி இழை (Optical Fibre) உட்கட்டமைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து சென்னை மாநகரப் பகுதியில் சிறப்பு திட்டமாக கீழ்நிலைப் பெட்டகம் அமைக்கும் பணி பொது–தனியார்

கூட்டமைப்பு முறையில் 25 ஆண்டுகள் பராமரிக்கும் வகையில் ரூ.200 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இந்த பொது கண்ணாடி வடம் அனைத்து இடங்களிலும் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு மூலம் அமைக்க இயலும். மேலும், இந்த இடங்களின் உரிமை பெருநகர சென்னை மாநகராட்சியின் வசமே இருக்கும். 6 கண்ணாடி வடங்கள் அமைப்பதன் மூலம் அனைத்து அரசாங்க அலுவலகங்கள், மருத்துவமனைகள், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் மற்றும் வார்டு அலுவலகங்களை இணைக்க இயலும்.

14. கஸ்தூரிபாய் இரயில் நிலையம் முதல் திருவான்மியூர் இரயில் நிலையம் வரை பக்கிங்ஹாம் கால்வாய் கரையில் சாலை மற்றும் மிதிவண்டி பாதை அமைத்து சுற்றுப்புறத்தை மேம்படுத்தும் பணி ரூ.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தகவல் தொழில்நுட்ப பெரு நிறுவனங்கள் அமைந்துள்ள முக்கிய பிரதான சாலையான இராஜீவ்காந்தி சாலையின் ஒருபுறம் அமைந்துள்ள பக்கிங்ஹாம் கால்வாய் கரையில் கஸ்தூரிபாய் இரயில் நிலையம் முதல் திருவான்மியூர் இரயில் நிலையம் வரை மிதிவண்டி பாதையுடனான சுற்றுப்புறத்தை மேம்படுத்தும் பணி சுமார் 2,100 மீட்டர் நீளத்திற்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

15. மாம்பலம் கால்வாயை எழிலூட்டும் பொருட்டு ரூ.80 கோடி செலவில் அழகு படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாம்பலம் கால்வாயில் தேவையான இடங்களில் தடுப்பு சுவர் கட்டுதல், கால்வாயின் இரு புறங்களிலும் கரையில் உள்ள நிலத்தை சமன் செய்து அழகு படுத்துதல், பல்வேறு இடங்களில் ஆங்காங்கே

சிறிய அளவில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை கட்டுதல், மிதக்கும் தோட்டங்கள் அமைத்தல் ஆகியவை உள்ளடக்கிய பணிகளை இக்கால்வாயின் சுற்றுப்புறப்பகுதிகள் பயன்பெறும் வண்ணம் மேற்கொண்டு, இந்த கால்வாயினை புனரமைப்பு செய்து, மீட்டெடுத்து சென்னை மாநகருக்கு எழிலூட்டும் விதமாக மாம்பலம் கால்வாயை ரூ.80 கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

16. சென்னை மாநகருக்கு 1 டி.எம்.சி. தண்ணீர் கிடைப்பதற்கு ஏதுவாக சென்னையில் உள்ள 114 நீர்நிலைகள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னையில் உள்ள நீர் நிலைகளின் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு சென்னை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் ரூ.18.2 கோடி செலவில் 52 நீர்நிலைகளை புனரமைக்கும் பணி மற்றும் ரூ.16 கோடி செலவில் 25 ஏக்கர் பரப்பளவு கொண்ட வில்லிவாக்கம் குளத்தை புனரமைக்கும் பணிகளும் அடங்கும். இது தவிர, சென்னையில் அடங்கியுள்ள 114 நீர் நிலைகளை ரூ.100 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து, சீர்படுத்தி அதன் மூலம் நகர்பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தி சென்னை மாநகருக்கு 1 டி.எம்.சி. தண்ணீர் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படும்.

17. நிலத்தடி நீர்மட்டம் உயர்த்துவதற்கு ஏதுவாக பெருநகர சென்னை மாநகராட்சியில் சுமார் 2,000 இடங்களில் ரூ.12.52 கோடி செலவில் மழைநீர் சேகரிக்கும் கிணறுகள் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை 2001ஆம் ஆண்டிலிருந்து அமைத்து வருகிறது. இக்கட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்தி, நிலத்தடி நீர்மட்டத்தை பெருக்குவதற்கு, பெருநகர சென்னை மாநகராட்சியால் சுமார் 2,000 இடங்களில் மழைநீர் சேகரிக்கும் கிணறுகள் ரூ.12.52 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

18. பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் –8இல் செயல்பட்டு வரும் செனாய் நகர் அவசரகால மகப்பேறு மருத்துவமனை அமைந்துள்ள இடத்தில் ரூ.8.44 கோடி மதிப்பீட்டில் 100 படுக்கை வசதி கொண்ட புதிய மருத்துவமனை கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–8இல் செயல்பட்டு வரும் 30 படுக்கை வசதியுடன் கூடிய செனாய் நகர் அவசரகால மகப்பேறு மருத்துவமனை அமைந்துள்ள இடத்தில், ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் 100 படுக்கை வசதியுடன் கூடிய புதிய மருத்துவமனை கட்டும் பணி ரூ.8.44 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்டும்.

19. பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை சுற்றுப்புறம் மாசடையாத வகையில் கொடுங்கையூர் வளாகத்தில் சோதனை முறையில் 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன இயற்கை உயிரி எரிவாயு தயாரிக்கும் பணி சுமார் ரூ.9.50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் தினசரி 50 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளை பயன்படுத்தி நவீன இயற்கை உயிரி எரிவாயு நிலையம் ரூ.9.50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

20. பெருநகர சென்னை மாநகராட்சியின் 10 மண்டலங்களில் உள்ள மாநகராட்சி சுகாதார பரிசோதனைக் கூடங்களை பகுப்பாய்வுக் கூடங்களாக மேம்படுத்தும் பணி ரூ.11.74 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் 15 மண்டலங்களில் செயல்பட்டு வரும் பரிசோதனை கூடங்களில், 1, 2, 3, 4, 5, 7, 11, 12, 14 மற்றும் 15 ஆகிய 10 மண்டலங்களில் உள்ள மாநகராட்சி பொது சுகாதார பரிசோதனைக் கூடங்களை பகுப்பாய்வுக் கூடங்களாக மேம்படுத்தும் பணி ரூ.11.74 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

21. பேரூராட்சிப் பகுதிகளில் 360 கி.மீ நீளமுள்ள பல்வேறு வகையான சாலைகள் ரூ.200 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் ஆண்டில், ரூ.200 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன், பேரூராட்சிகளில் உள்ள 360 கி.மீ. நீளமுள்ள சாலைகள் தரம் உயர்த்தப்படும்.

22. குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைகளின் கழிவு நீர் வெளியேறி அருகாமையில் உள்ள 6 ஆற்றுப்படுகைகளில் கலப்பதை தவிர்க்க 30 பேரூராட்சிகளில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, குடியிருப்புகள் மற்றும் தொழிற்சாலைகளின் கழிவு நீர் வெளியேறி அருகாமையில் உள்ள காவேரி, பவானி, அமராவதி, சரபங்கா, வசிஷ்டா மற்றும் தாமிரபரணி ஆகிய 6 ஆறுகளில் கலந்து மாசு படுவதை தவிர்க்கும் விதமாக முசிறி, சிறுகமணி, மோகனூர், பரமத்தி வேலூர், புஞ்சைபுகளூர், பவானிசாகர், சிறுமுகை, மடத்துக்குளம், ஓமலூர், பூலாம்பட்டி, பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர், பேளூர், ஸ்ரீவைகுண்டம், ஆத்தூர், ஏரல், ஆழ்வார்திருநகரி, தென்திருப்பேறை, ஆறுமுகநேரி, முக்கூடல், கோபாலசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, சேரன்மகாதேவி, வீரவநல்லூர், பத்தமடை, மேலசேவல், குத்தாலம், திருக்காட்டுப்பள்ளி, ஆனைமலை மற்றும் திருவையாறு ஆகிய 30 பேரூராட்சிகளில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

23. தங்குதடையின்றி குடிநீர் வழங்கிட 5 பேரூராட்சிகளில் ரூ.4.85 கோடி செலவில் புதியதாக உறை கிணறுகள் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தேசூர், செஞ்சி, விக்கிரவாண்டி, மணலூர்பேட்டை மற்றும் உளுந்தூர்பேட்டை ஆகிய 5 பேரூராட்சிகளில் தடையின்றி குடிநீர் வழங்கிட ரூ.4.85 கோடி மதிப்பீட்டில் புதியதாக உறை கிணறுகள் அமைக்கப்படும்.

24. பேரூராட்சிகளில் தற்போது மேற்கொள்ளப் பட்டுவரும் நீர் நிலை புனரமைப்புப் பணிகளைத் தொடர்ந்து, இவ்வாண்டு மேலும் 50 நீர் நிலைகள் ரூ.24.50 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, மழைநீர் சேகரிப்பின் மூலம் நிலத்தடி நீர்வளத்தை மேம்படுத்தி அதன் தரத்தை உயர்த்திட பேரூராட்சிகளில் உள்ள நீர் நிலைகளை புனரமைக்கும் பணி பல்வேறு திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டன. 2019–2020ஆம் நிதியாண்டில் மேலும் 50 நீர் நிலைகளை ரூ.24.50 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

25. 9 பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்களில் பல்வேறு வசதிகளுடன் கூடிய பேருந்து நிலைய மேம்பாட்டு பணிகள் ரூ.9.35 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மீஞ்சூர், ஊத்துக்கோட்டை, செங்கம், நம்பியூர், வெள்ளலூர், கிணத்துக்கடவு, பேராவூரணி, திட்டச்சேரி மற்றும் சோழவந்தான் ஆகிய 9 பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்களில் பேருந்து நிறுத்துமிடம், நடைமேடைகள், குடிநீர் வசதி, கழிவறை வசதி மற்றும் பாலூட்டும் அறை ஆகிய பல்வேறு வசதிகளுடன் கூடிய பேருந்து நிலைய மேம்பாட்டுபணிகள் ரூ.9.35 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

26. 18 பேரூராட்சிகளில் ரூ.19.50 கோடி மதிப்பீட்டில் சந்தை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொண்டாமுத்தூர், வெள்ளலூர், பூலுவப்பட்டி, காரமடை, பொ.மல்லாபுரம், கம்பைநல்லூர், வேடசந்தூர், சென்னிமலை, கருமாண்டிசெல்லிபாளையம், சோழவந்தான், சேந்தமங்கலம், வீரகனூர், நங்கவள்ளி, மேச்சேரி, தேவதானபட்டி, போளூர், கயத்தாறு

மற்றும் காஞ்சிகோயில் ஆகிய 18 பேரூராட்சிகளில் ரூ.19.50 கோடி மதிப்பீட்டில் சந்தை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

27. 21 பேரூராட்சிகளில் ரூ.13.70 கோடி செலவில் மரபு சார்ந்த கழிவுகளை உயிரி அகழ்வு முறையில் நிலத்தை மீட்டெடுத்தல் பணி மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 21 பேரூராட்சிகளில் தீர்வு செய்யப்படாமல் இருந்த பழைய குப்பை கழிவுகள் ரூ.13.70 கோடி மதிப்பீட்டில் உயிரி அகழ்வு முறையில் முழுமையாக அகற்றப்பட்டு நிலங்கள் வளமீட்புப் பூங்காக்களாக மேம்படுத்தப்படும்.

28. திடக்கழிவு மேலாண்மை பணியினை மேம்படுத்தி கழிவு இல்லா நிலையினை (Zero waste) உருவாக்குவதற்கு புதிய முயற்சியாக 5 மெட்ரிக் டன்னிற்கு அதிகமாக திடக்கழிவு சேகரம் செய்யும் இயந்திரங்கள் 10 பேரூராட்சிகளில் ரூ.4.50 கோடி செலவில் நிறுவப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திடக்கழிவு மேலாண்மை பணியினை மேலும் மேம்படுத்தும் விதமாக கழிவு இல்லா நிலையினை (Zero waste) உருவாக்குவதற்கு புதிய முயற்சியாக 5 மெட்ரிக் டன்னிற்கு அதிகமாக திடக்கழிவு சேகரம் செய்யும் இயந்திரங்கள் உத்திரமேரூர், சங்ககிரி, பரமத்தி வேலூர், மதுக்கரை, கோத்தகிரி, வடலூர், பொன்னம்பட்டி, வேளாங்கண்ணி, உத்தமபாளையம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 10 பேரூராட்சிகளில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

29. வெப்பச் சிதைவு முறையில் 10 பேரூராட்சிகளில் திடக்கழிவின் அதிகமான மக்க வைக்க இயலாத மற்றும் மறுசுழற்சிக்குள்ளாக்க இயலாத நெகிழிக் கழிவுகளை அகற்ற ரூ.1.50 கோடி செலவில் 10 பைராலிசிஸ் மையங்கள் உருவாக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கருங்குழி, செங்கம், பாப்பாரப்பட்டி, ஜலகண்டாபுரம், இருகூர், மணச்சநல்லூர், அலங்காநல்லூர், ஆண்டிப்பட்டி, திருப்பத்தூர் மற்றும் கல்லிடைக்குறிச்சி ஆகிய 10 பேரூராட்சிகளில் மக்கவைக்க இயலாத மற்றும் மறு சுழற்சிக்குள்ளாக்க இயலாத நெகிழிக் கழிவுகள், பைகள், துணிகள் மற்றும் இதர எளிதில் தீப்பற்றக் கூடிய கழிவுகளை அகற்ற 10 பைராலிசிஸ் மையங்கள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

30. 5 பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் ஆதாரங்கள் மூலம் செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டத்தில் பழுதடைந்த பணிகள் ரூ.26.17 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பாலக்கோடு, சிவகிரி, செஞ்சி, தாத்தையங்கார்பேட்டை மற்றும் சின்னாளப்பட்டி ஆகிய 5 பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் ஆதாரங்கள் மூலம் செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டத்தில் பழுதடைந்த பணிகள் ரூ.26.17 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

31. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியத்தைச் சார்ந்த 134 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 76,000 மக்கள் பயன்பெறும்

வகையில் ரூ.98 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியத்தைச் சார்ந்த 134 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 76,000 மக்கள் பயன் பெறும் வகையில் விரிவான திட்ட மதிப்பீடு இறுதி செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு ரூ.98 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

32. திருப்பூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் 10 ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 165 ஊரகக் குடியிருப்புகளுக்கு, 60,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.71 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருப்பூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஈட்டி வீரம்பாளையம், கணக்கம்பாளையம், காளிபாளையம், பெருமாநல்லூர், பொங்குமாளையம், பட்டம்பாளையம், தொரவலூர், சொக்கனூர், மேற்குப்பதி மற்றும் வள்ளிபுரம் ஆகிய 10 ஊராட்சிப் பகுதிகளிலுள்ள 165 ஊரகக் குடியிருப்புகளுக்கு, 60,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.71 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

33. தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம், திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் ஒன்றியங்களை சார்ந்த 124 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருவிடைமருதூர், வேப்பத்தூர் பேரூராட்சிகளை சார்ந்த 2 குடியிருப்புகளிலுள்ள

98,000 மக்கள் பயன்பெறும் வகையில், புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் ஒன்றியங்களைச் சார்ந்த 124 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருவிடைமருதூர், வேப்பத்தூர் பேரூராட்சிகளைச் சார்ந்த 2 குடியிருப்புகளிலுள்ள 98,000 மக்கள் பயன்பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

34. தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் மற்றும் அம்மாப்பேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 479 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 2,08,000 மக்கள் பயன்பெறும் வகையில், புதியகூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் மற்றும் அம்மாப்பேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 479 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 2,08,000 மக்கள் பயன்பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

35. திருச்சி மாவட்டம் லால்குடி மற்றும் புல்லம்பாடி ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த 192 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 1,50,000 மக்கள் பயன்பெறும் வகையில், புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, திருச்சி மாவட்டம், லால்குடி மற்றும் புல்லம்பாடி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 192 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 1,50,000 மக்கள் பயன்பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

36. திருநெல்வேலி மாவட்டம் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 15 ஊரக குடியிருப்புகளிலுள்ள 14,000 மக்கள் பயன்பெறும் வகையில், புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 15 ஊரக குடியிருப்புகளிலுள்ள 14,000 மக்கள் பயன்பெறும் வகையில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

37. ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 297 ஊரக குடியிருப்புகளிலுள்ள 70,000 மக்கள் பயன்பெறும் வகையில், புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 297 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 70,000 மக்கள் பயன்பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

38. ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 86 ஊரக குடியிருப்புகளிலுள்ள 25,000 மக்கள் பயன்பெறும்

வகையில், புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 86 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 25,000 மக்கள் பயன்பெறும் வகையில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

39. தற்போதுள்ள குடிநீர் தர உறுதி ஆய்வுக் கூடத்தை தேசிய சான்றுரைக்கப் பெற்ற நவீன குடிநீர் பரிசோதனை நிலையமாக மேம்படுத்தி சென்னை குடிநீர் வாரியத்தின் நீர் தர உத்தரவாத பிரிவின் கீழ், கீழ்பாக்கத்தில் ரூ.5.56 கோடி செலவில் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை குடிநீர் வாரியத்தின் தற்போதைய தர உறுதி ஆய்வுக் கூடத்தை, நவீன குடிநீர் பரிசோதனை நிலையமாக, இயக்குதல் மற்றும் சிறந்த முறையில் பொது மக்களின் நம்பகத் தன்மைக்கு ஏற்றவாறு மேம்படுத்தும் பொருட்டு, தேசிய சான்றுரைக்க பெற்ற (NABL Certified) புதிய ஆய்வுக்கூடம் மற்றும் தானியங்கி ஆய்வுக்கூட நுண்கருவிகள் கொண்ட நவீன குடிநீர் பரிசோதனை நிலையத்தினை, சென்னை குடிநீர் வாரியத்தின் நீர் தர உத்தரவாத பிரிவின் கீழ், கீழ்பாக்கத்தில் ரூ.5.56 கோடி செலவில் அமைக்கப்படும்.

40. சென்னை குடிநீர் வாரியத்தின் காலியாகவுள்ள நிலங்களில் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்து, குடிநீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் பகிர்மானத்தில் பசுமை ஆற்றலை பயன்படுத்தவும், மின் செலவை குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை குடிநீர் வாரியத்தின் கீழ், இயங்கி வரும் கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், நீர் பகிர்மான நிலையங்கள், கழிவு நீரகற்றும் நிலையங்கள் ஆகியவற்றால் வாரியத்திற்கு சுமார் ரூ.500 கோடி வரை வருடத்திற்கு ஏற்படும் மின் செலவை குறைக்கவும், வாரியத்தின் குடிநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் பகிர்மானத்தில் பசுமை ஆற்றலை பயன்படுத்தவும், சென்னை குடிநீர் வாரியத்தின் காலியாகவுள்ள நிலங்களில் உற்பத்தி சேவை நிறுவனங்களின் மூலம் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்து புதுப்பிக்கதக்க ஆற்றல் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

41. விரிவாக்கப்பட்ட சென்னை நகரின் புதிதாக இணைந்த பகுதி மக்களுக்கான குறைந்த செலவிலான கழிவு நீர் அகற்றும் சேவை வழங்கிட ரூ.15 கோடியில் 50 கழிவுநீர் அகற்றும் லாரிகள் வாங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கழிவுநீர் அகற்றும் சேவையை பொதுமக்களுக்கு குறைந்த செலவில் வழங்கிட, வாரியத்தின் கழிவுநீர் ஊர்திகள் மூலம் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் சேகரித்து, அருகிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல ரூ.15 கோடியில் 50 கழிவுநீர் அகற்றும் லாரிகள் வாங்கப்படும்.

42. சென்னை குடிநீர் வாரியத்தில் ரூ.5.99 கோடி செலவில் புவிசார் தகவல் தொழில்நுட்பம் (GIS) கொண்டு குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டமைப்புகளை தொகுத்து மேம்பட்ட மேலாண்மை மற்றும் பராமரிப்பு செய்யும் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,

குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் தொடர்பான பராமரிப்பு பணிகளின் தகவல்களை உடனடியாக பெறவும் மற்றும் எதிர்காலத் தேவைக்கான அடிப்படை வசதிகளை உருவாக்கவும், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுதல் கட்டமைப்புகளின் இருப்பிடத்தை புவிசார்குறிச்செல் வளர்ச்சிக்கான இடம் சார்ந்த தரவுதளம் மூலம் புவிசார் தகவல்கள் உருவாக்கி, அதன் மூலம் பயனுள்ள தகவல்களை கண்காணிக்கவும், நிருவகிக்கவும், குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் புவிசார் தகவல் தொழில்நுட்பம் (GIS) கொண்டு, குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டமைப்புகளை தொகுத்து, மேம்பட்ட மேலாண்மை மற்றும் பராமரிப்பு செய்யும் திட்டம் ரூ.5.99 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

43. கோயம்பேடு மற்றும் கொடுங்கையூரில் உள்ள தலா 45 MLD திறன் கொண்ட எதிர் சவ்வூடு பரவல் தொழில்நுட்பத்திலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் பொருட்டு, கூடுதலாக இரண்டு 15 MLD திறன் கொண்ட TTRO நிலையங்களை ரூ.120 கோடி செலவில் அமைத்து தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் வழங்குவதற்கு, கோயம்பேடு மற்றும் கொடுங்கையூரில் அமையவுள்ள தலா 45 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட மூன்றாம் நிலை எதிர் சவ்வூடு பரவல் (TTRO Plant) நிலையங்களில், தொழிற்சாலைகளின் கூடுதல் நீர் தேவையினை கருத்தில் கொண்டு, கூடுதலாக இரண்டு 15 MLD திறன் கொண்ட TTRO நிலையங்கள் ரூ.120 கோடி செலவில் அமைத்து அந்நிலையங்களின் உற்பத்தி திறனை மேம்படுத்தி தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் வழங்கப்படும்.

44. சென்னை குடிநீர் வாரியத்தில் கழிவுநீர் அகற்று பணியாளர்களுக்கான மறுவாழ்வு மற்றும் மாற்றுத்திறன் பயிற்சி மற்றும் அவர்களது குழந்தைகளின் தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு மையம் ரூ.25 இலட்சத்தில் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்தில் கழிவுநீர் அகற்றல் சேவையில் இரவு பகல் பாராது மிக கடினமான பணி செய்து வரும் வாரியம் மற்றும் தனியாரை சேர்ந்த பலநூறு பணியாளர்களுக்கு மறுவாழ்வு, மாற்றுத்திறன் பயிற்சி வழங்குதல் மற்றும் அவர்களது குழந்தைகளின் தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு மையம் அமைக்கும் பணிகள் ரூ.25 இலட்சத்தில் மேற்கொள்ளப்படும்.

45. சென்னை குடிநீர் வாரியத்தின் நீர் பகிர்மான மற்றும் விநியோகக் குழாய் கட்டமைப்புகளின் நீர் கசிவு கண்டறிதல் மற்றும் கணக்கிடப்படாத நீர் குறைப்பதற்கான ஆய்வுப் பணி செய்யும் திட்டம் ரூ.5.31 கோடியில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் விரிவாக்கத்திற்கு முன்பு இருந்த 176 சதுர கி.மீ பரப்பளவில் உள்ள பகுதிகளில் குடிநீர் மேம்பாட்டு பணிகளான குடிநீர் கசிவு கண்டுபிடித்தல், குடிநீர் அளவுமானிகள் பொருத்தி குடிநீர் விநியோகத்தை முறைப்படுத்துதல், பழுது பட்ட பழமையான குடிநீர் விநியோக குழாய்களை மாற்றுதல் தொடர்பான பணிகளுக்காக விரிவான ஆய்வுப் பணி செய்யும் திட்டம் ரூ.5.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

❖ ❖ ❖

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

மானியக் கோரிக்கை எண். 42

1. ஊரகப் பகுதிகளில் 117 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 300 கி.மீ. நீளத்திற்கு பேவர் பிளாக் சாலைகள் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரகப் பகுதி குடியிருப்புகளில் உள்ள குறுகலான தெருக்கள் மற்றும் சந்துகளில் 2019–2020ஆம் நிதியாண்டில் 117 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 300 கி.மீ. நீளத்திற்கு பேவர் பிளாக் சாலைகள் அமைக்கப்படும்.

2. ஊரகப் பகுதிகளில் 94 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 300 கி.மீ. நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்படும்.

ஊரகப் பகுதி குடியிருப்புகளில் உள்ள தெருக்கள் மற்றும் பாதைகளை சிமெண்ட் கான்கிரீட் பாதைகளாக தரம் உயர்த்தும் பொருட்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில் 94 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 300 கி.மீ. நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்படும்.

3. ஊரகப் பகுதிகளில் 390 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,000 கி.மீ. நீளத்திற்கு ஓரடுக்கு கப்பிச் சாலைகள் அமைக்கப்படும்.

ஊரகப் பகுதிகள் மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள குக்கிராமங்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர்

குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் வசதி ஏற்படுத்திடும் வண்ணம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில், 2,000 கி.மீ. நீளத்திற்கு ஓரடுக்கு கப்பிச் சாலைகள் 390 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

4. ஊரகப் பகுதிகளில் 146 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 700 குறு பாலங்கள் 250 சிறு பாலங்கள் மற்றும் 100 தரைப் பாலங்கள் கட்டப்படும்.

ஊரகப் பகுதிகளில் போக்குவரத்தினை மேம்படுத்திடவும் மற்றும் நீர்நிலைகளை கடந்திட ஏதுவாகவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில் 146 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 700 குறு பாலங்கள், 250 சிறு பாலங்கள் மற்றும் 100 தரைப் பாலங்கள் கட்டப்படும்.

5. ஊராட்சி ஒன்றிய பள்ளி வளாகங்களுக்கு 144 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 250 கி.மீ. நீளத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரகப் பகுதிகளில் உள்ள ஊரட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி வளாகங்களுக்கு 2019–2020ஆம் நிதியாண்டில், 250 கி.மீ. நீளத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் வெள்ளத் தடுப்புச் சுவர் 144 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

6. ஊரகப் பகுதிகளில் 118 கோடியே 31 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 1,303 அங்கன்வாடி மையங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரகப் பகுதிகளில் சமூக நலத்துறையுடன் ஒருங்கிணைந்து, 2019–2020ஆம் நிதியாண்டில் 1,303 அங்கன்வாடி மையங்கள் 118 கோடியே 31 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

7. ஊரகப் பகுதிகளில் 86 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 500 தனி நபர் விவசாய கிணறுகளும், 500 சமுதாய குடிநீர் கிணறுகளும் அமைக்கப்படும்.

நிலத்தடி நீர்மட்டத்தில் பாதுகாப்பான வட்டாரம் என மத்திய நிலத்தடி நீர்வள அமைப்பினால் அறிவிக்கப்பட்ட ஊரகப் பகுதிகளில், தனிநபர் விவசாய நிலங்களில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி விவசாய விளைநிலங்களின் பரப்பினை அதிகரிக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில் 500 தனி நபர் விவசாய கிணறுகளும், 500 சமுதாய குடிநீர் கிணறுகளும் 86 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8. ஊரகப் பகுதிகளில் 59 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 300 புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

மிகவும் பழுடைந்த நிலையில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டடங்களுக்குப் பதிலாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,

2019–2020ஆம் நிதியாண்டில், 300 புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள் 59 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

9. ஊரகப் பகுதிகளில் 149 கோடியே 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 10,500 ஆடு, மாடு மற்றும் கோழி கொட்டகைகள் அமைக்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் வசிக்கும் சிறு, குறு விவசாயிகள் தங்களது கால்நடைகளை பாதுகாப்புடன் வளர்ப்பதற்கு ஏதுவாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில் 10,500 ஆடு, மாடு மற்றும் கோழி கொட்டகைகள் 149 கோடியே 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

10. ஊரகப் பகுதிகளில் ஆரம்ப மற்றும் நடுநிலை பள்ளிகளில் கூடுதலாக 1,000 கழிப்பறைகள் 47 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

ஊரகப் பகுதிகளில் உள்ள ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கூடுதல் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்திடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020 ஆம் நிதியாண்டில் மாணவிகளுக்கு 600 கழிப்பறைகள் மற்றும் மாணவர்களுக்கு 400 கழிப்பறைகள் என மொத்தம் 1,000 கழிப்பறைகள் 47 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

11. மூன்று மாவட்டங்களில் 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மூன்று மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகங்கள் 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

12. ஊராட்சி ஒன்றியங்களுக்காக 15 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில், 15 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

13. ஊரகச் சாலைகளுக்கு புவிசார் குறியீடுகள் ஏற்படுத்த 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாட்டில் 1 இலட்சத்து 49 ஆயிரம் கி.மீ. நீள ஊரகச் சாலைகள் உள்ளன. இந்த ஊரகச் சாலைகள் மற்றும் இச்சாலைகளால் இணைக்கப்படும் முக்கிய பயன்பாட்டு சேவைகள் அனைத்திற்கும் புவிசார் குறியீடுகள் (Geotagging) ஏற்படுத்திட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

14. ஊரகப் பகுதிகளில் உள்ள சிறுபாசன ஏரிகள், குளங்கள் மற்றும் ஊரணிகளுக்கு புவிசார் குறியீடுகள் ஏற்படுத்த 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் ஏறக்குறைய 21,609 சிறுபாசன ஏரிகள், 48,738 குளங்கள் மற்றும் ஊரணிகள்

உள்ளன. இந்த சிறுபாசன ஏரிகள், குளங்கள், மற்றும் ஊரணிகளை தேவையின் அடிப்படையில் மேம்படுத்தவும், சிறந்த நீர் வள மேலாண்மைக்காகவும், புவிசார் குறியீடுகள் (Geotagging) ஏற்படுத்திட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

15. ஊரகப் பகுதிகளில் நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் தானியங்கி முறையில் தரமான குடிநீர் விநியோகம் செய்ய ஒருங்கிணைந்த அணுகுமுறையினை, சோதனை முறையில் செயல்படுத்திட 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரகப் பகுதிகளில் வழங்கப்படும் குடிநீரின் அளவு, குடிநீரின் தரம் போன்றவற்றை இணைய வழியில் கண்காணித்திட ஏதுவாக நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் தானியங்கி முறையில் தரமான குடிநீர் விநியோகம் செய்ய ஒருங்கிணைந்த அணுகுமுறையினை சோதனை முறையில் 5 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் இவ்வாண்டு செயல்படுத்திட, 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

16. கிராம ஊராட்சிகளால் வசூலிக்கப்படும் வரி மற்றும் இதர வரியில்லா வருவாயினங்களை 2019–2020ஆம் ஆண்டு முதல் இணையவழி மூலம் செலுத்திட வழிவகை செய்யப்படும்.

ஊரகப் பகுதிகளில் வரி வருவாய் இனங்களான வீட்டுவரி, சொத்துவரி மற்றும் தொழில்வரி ஆகியனவும் மற்றும் இதர வரியில்லா வருவாய் இனங்களும் தற்போது ஊராட்சி செயலர்கள் மூலம் வசூலிக்கப்பட்டு ஊராட்சிக் கணக்குகளில் செலுத்தப்படுகிறது. இம்முறையினை எளிமைப்படுத்தும் விதமாக, மாண்புமிகு இதய

தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இவ்வாண்டு முதல் ஊரகப் பகுதிகளிலுள்ள மக்கள் அனைத்து வரிகள் மற்றும் கட்டணங்களை இணையதளம் வழியாக செலுத்திட வழிவகை செய்யப்படும்.

17. நகர்ப்புரங்களுக்கு அருகில் உள்ள 300 கிராம ஊராட்சிகள் மற்றும் பெரிய கிராம ஊராட்சிகளில் திடக்கழிவுகளை மேலாண்மை செய்யும் பொருட்டு, 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறிய அளவிலான உரம் தயாரிக்கும் மையங்கள் அமைக்கப்படும்.

திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் தமிழ் நாட்டிலுள்ள 12,524 கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகர்ப்புரங்களுக்கு அருகில் உள்ள கிராம ஊராட்சிகள் மற்றும் பெரிய கிராம ஊராட்சிகளில் திடக்கழிவுகளைத் திறம்பட கையாள்வதற்கும், தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்தவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, முதற்கட்டமாக நகர்ப்புரங்களுக்கு அருகில் உள்ள 300 கிராம ஊராட்சிகள் மற்றும் பெரிய கிராம ஊராட்சிகளில் உள்ள திடக்கழிவுகளை மேலாண்மை செய்யும் பொருட்டு சிறிய அளவிலான உரம் தயாரிக்கும் மையங்கள் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

18. தூய்மையான சுற்றுச்சூழலை பேணுவதற்கும், ஊரக மக்களிடையே பாதுகாப்பான சுகாதார பழக்கவழக்கத்தினை ஊக்குவிக்கவும், ஊரகப் பகுதிகளுக்கான விரிவான சுகாதார கொள்கை உருவாக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரகப் பகுதிகளில் தூய்மையான சுற்றுச்சூழலை பேணுவதற்கும், ஊரக மக்களிடையே பாதுகாப்பான சுகாதார பழக்கவழக்கத்தினை

ஊக்குவிக்கவும், சுகாதாரம், திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மையில் தெளிவான வழிமுறைகளுடன் ஊரகப் பகுதிகளுக்கான விரிவான சுகாதார கொள்கை உருவாக்கப்படும்.

19. ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மறு சீரமைக்கப்பட்டு 2019–2020ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

ஊரகப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி/ நடுநிலைப் பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான புதிய வகுப்பறைகள், சமையலறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறைகள் மற்றும் தேவைப்படும் இடங்களில் பழுதுபார்த்தல்/ புதுப்பித்தல் பணிகளை ஏதுவாக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மறு சீரமைக்கப்பட்டு, 2019–2020ஆம் நிதியாண்டில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

20. ஊரகப் பகுதிகளில் 5 மலகசடு சுத்திகரிப்பு நிலையங்கள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வீடுகள் மற்றும் பிற நிறுவனங்களில் இருந்து வெளியேற்றப்படும் மலக்கசடு மற்றும் கழிப்பறைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் ஆகியவற்றை விஞ்ஞான முறையில் சுத்திகரித்து, பாதுகாப்பான முறையில் அகற்றிட ஏதுவாக, 2019–2020ஆம் நிதியாண்டில், அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட நகர்ப்புரங்களுக்கு அருகில் உள்ள கிராம ஊராட்சிகளில், முன்மாதிரியாக 5 எண்ணிக்கையிலான மலக்கசடு சுத்திகரிப்பு நிலையங்கள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

21. தமிழ்நாட்டிலுள்ள கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் பெண் ஊராட்சி செயலர்களுக்கு மகப்பேறு கால விடுப்பினை அரசு பெண் ஊழியர்களுக்கு உள்ளது போன்று 180 நாட்களிலிருந்து 270 நாட்களாக உயர்த்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாட்டிலுள்ள கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் பெண் ஊராட்சி செயலர்களுக்கு மகப்பேறு கால விடுப்பினை அரசு பெண் ஊழியர்களுக்கு உள்ளது போன்று 180 நாட்களிலிருந்து 270 நாட்களாக உயர்த்தப்படும்.

22. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், செயல்படும் 17,900 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு 50,000 ரூபாய் முதல் 75,000 ரூபாய் வரை மொத்தம் 89 கோடியே 50 இலட்சம் ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், சுய உதவிக் குழுக்கள் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், குழு உறுப்பினர்களின் வருமானத்தைப் பெருக்கிடவும் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில், 17,900 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 50,000 ரூபாய் முதல் 75,000 ரூபாய் வரை மொத்தம் 89 கோடியே 50 இலட்சம் ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.

23. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 7,000 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு 15,000 ரூபாய் வீதம் ஆதார நிதியாக 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் அமைக்கப்படும் புதிய சுய உதவிக் குழுக்களின் பொதுநிதியை மேம்படுத்தவும், உள்கடன் வழங்குதலை அதிகரிக்கப்படுத்தவும், அதிக அளவிலான வங்கிக் கடன் இணைப்பு பெறவும் ஆதார நிதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில், 7,000 புதிய சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 15,000 ரூபாய் வீதம் மொத்தம் 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஆதார நிதியாக வழங்கப்படும்.

24. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கத்தின் கீழ், வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வறுமையைக் குறைத்திட ஏதுவாக 31 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக 65 வட்டாரங்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களை விரிவுபடுத்தி செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், கிராமப்புற மகளிரின் வருமானத்தை உயர்த்திடும் பொருட்டு 2016–2017ஆம் ஆண்டு முதல் வாழ்வாதார நடவடிக்கைகள் 51 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில் பல்வேறு வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் 31 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக 65 வட்டாரங்களில் விரிவுபடுத்தி செயல்படுத்தப்படும்.

25. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், மகளிர் விவசாயிகளின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக 1,000 உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் 60 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய வாழ்வாதார உத்தியானது, சிறு மற்றும் குறு விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக பெருக்கச் செய்வதாகும். மேற்கண்ட நோக்கத்தை நிறைவேற்றிட, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில் வேளாண்மை மற்றும் கால்நடைத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர் விவசாயிகளை உள்ளடக்கி தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 1,000 உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் 60 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

26. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், இரண்டு இலட்சம் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் ஊட்டச்சத்தினை மேம்படுத்திட “ஊட்டச்சத்து தோட்டம்” அமைப்பதற்கு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே சமச்சீரான ஊட்டச்சத்தினை உறுதி செய்யவும், இரத்த சோகை குறைபாட்டினை சரிசெய்யவும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வீட்டின் பின்புறத்தில் கீரை, முருங்கை, பப்பாளி, கறிவேப்பிலை, கொய்யா மற்றும் சப்போட்டா போன்ற சத்து மிகுந்த பலன் தரும் “ஊட்டச்சத்து தோட்டம்” அமைக்கப்படவுள்ளது. இதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில் 2 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெறும் விதமான “ஊட்டச்சத்து தோட்டம்” அமைக்க 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

27. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 40 இயற்கைப் பண்ணையத் தொகுப்புகள் உருவாக்கப்படும்.

இயற்கைப் பண்ணையம் என்பது இயற்கை வழியில் கிடைக்கக்கூடிய உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு கொல்லிகளை கொண்டு பயிர் சாகுபடி செய்யும் முறையாகும். இயற்கைப் பண்ணைய உணவுப் பொருட்களுக்கு மக்களிடம் வரவேற்பு அதிகமாகி வருவதால் சந்தையில் அதிக விலையும் கிடைக்கிறது.

எனவே, மக்களின் தேவையை பூர்த்தி செய்யவும், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்து வருமானம் பெருகவும் இயற்கைப் பண்ணையத்தை ஊக்குவிக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 4,000 மகளிர் விவசாயிகளை உள்ளடக்கிய 40 இயற்கைப் பண்ணையத் தொகுப்புகள் உருவாக்கப்படும்.

28. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ், செயல்படும் 10,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வீதம் ஆதார நிதியாக மொத்தம் 10 கோடி ரூபாய் வழங்கப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் நகர்ப்புர ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அத்தகைய குழுக்களின் செயல்பாட்டை வலுப்படுத்தவும், வாழ்வாதார மேம்பாட்டிற்கு வங்கிக்கடன் பெறுவதை அதிகப்படுத்தவும் ஆதார நிதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில் 10,000 சுய உதவிக் குழுக்கழுக்கு, குழு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வீதம் மொத்தம் 10 கோடி ரூபாய் ஆதார நிதியாக வழங்கப்படும்.

29. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ், 10 முன்மாதிரி நகர வாழ்வாதார மையங்கள், மையம் ஒன்றிற்கு 10 இலட்சம் ரூபாய் வீதம், ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ், அமைக்கப்படும் நகர வாழ்வாதார மையங்கள் மக்களின் அத்தியாவசிய தேவைகளான பொதுப் பயன்பாட்டுச் சேவைகளை தரமாகவும், முறையாகவும் வழங்கும் ஆதார மையங்களாக விளங்குகின்றன. மேலும், நகர்ப்புர ஏழைகளின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் அதிகமான வருமானம் ஈட்டிடவும் வழிவகை செய்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் நிதியாண்டில், 10 முன்மாதிரி நகர வாழ்வாதார மையங்கள், மையம் ஒன்றிற்கு 10 இலட்சம் ரூபாய் வீதம் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

30. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ், 1,000 தெருவோர வியாபாரிகளுக்கான ஒத்த தொழிலார்வக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் 20 கோடி ரூபாய் குழு கடனுதவி பெறவும், 5,000 நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிகள் மூலம் 25 கோடி ரூபாய் தனிநபர் கடன் வழங்கிடவும் வழிவகை செய்யப்படும்.

நகர்ப்புர தெருவோர வியாபாரிகள் தங்களது தினசரி வணிகத் தேவையினை பூர்த்தி செய்து கொள்ள அங்கீகரிக்கப்படாத

அமைப்புகளிடமிருந்து அதிக வட்டிக்கு கடன் பெறுவதால் நலிவடைகின்றனர். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நகர்ப்புர தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திட, 2019–2020ஆம் நிதியாண்டில் 7,500 நகர்ப்புர தெருவோர வியாபாரிகளைக் கொண்ட 1,000 ஒத்த தொழிலார்வக் குழுக்கள் (Common Interest Group) அமைக்கப்பட்டு, வங்கிகள் மூலம் 20 கோடி ரூபாய் குழு கடனுதவி பெறவும், 5,000 நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிகள் மூலம் 25 கோடி ரூபாய் தனிநபர் கடன் வழங்கிடவும் வழிவகை செய்யப்படும்.

31. சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வதாரத் திட்டத்தின் கீழ், 48 செயற்கை பவளப் பாறைகள் 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். மேலும், 20 மீன் வலை பின்னும் கூடங்கள் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித்தரப்படும்.

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மீன் வளங்களை மேம்படுத்தும் பொருட்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கடலுக்கடியில் 48 செயற்கை பவளப் பாறைகள் 19 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மீனவ மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு 20 மீன் வலை பின்னும் கூடங்கள் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டித் தரப்படும்.

32. வியாபார மேம்பாட்டு முகவர்களாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் 28,000 ஏழை, எளிய

பயனாளிகளுக்கு சுய உதவிக் குழுக்கள் மூலம் 60 கோடி ரூபாய் வாழ்வாதார மேம்பாட்டுக் கடன் வழங்கப்படும். மேலும், 2,000 மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு 10,000 பயனாளிகளுக்கு 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வங்கி கடன் வழங்கவும், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும் வழிவகை செய்யப்படும்.

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வதாரத் திட்டம் செயல்படுத்தப்படும் தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் வசிக்கும் கடலோரப் பகுதி மக்களுக்கு புதிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்திடும் நோக்கில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 127 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளின் வியாபார மேம்பாட்டு முகவர்களாக மாற்றப்பட்டு, இதன் மூலம் 28,000 ஏழை எளிய பயனாளிகளுக்கு சுய உதவிக் குழுக்கள் மூலம் 60 கோடி ரூபாய் வாழ்வாதார மேம்பாட்டுக் கடன் வழங்கப்படும். மேலும், 2,000 மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, 10,000 பயனாளிகளுக்கு 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வங்கிக்கடன் வழங்கவும், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும் வழிவகை செய்யப்படும்.

❖ ❖ ❖

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

மீன்வளம்

மானியக் கோரிக்கை எண். 7

1. நாகப்பட்டினம் மாவட்டம் செருதூர், இராமநாதபுரம் மாவட்டம் ஆற்றங்கரை மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் கிராமங்களில் 8 கோடி ரூபாய் செலவில் முகத்துவாரம் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டம் செருதூர் கிராமத்தில், வெள்ளையாற்றின் முகத்துவாரம் மற்றும் இணைப்பு கால்வாயை ஆழப்படுத்தவும், இராமநாதபுரம் மாவட்டம் ஆற்றங்கரை கிராமத்தில் வைகையாற்றின் முகத்துவாரத்தை ஆழப்படுத்தவும், கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள மண் திட்டுகளை ஆழப்படுத்திடவும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 8 கோடி ரூபாய் செலவில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் மீனவர்கள் சிரமமின்றி எளிதாக கடலுக்குள் சென்று மீன்பிடித்து வர இயலும். இதனால் மீனவர்களின் வாழ்க்கைத்தரமும் உயரும்.

2. இராமநாதபுரம் மாவட்டத்தில் மூன்று இடங்களில் புதிய மீன் இறங்கு தளங்கள் 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம் முள்ளிமுனை, தொண்டி, களிமண்குண்டு ஆகிய மீனவ கிராமங்களில் மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும், அதிக விலை பெறுவதற்கும் ஏதுவாக மீன் ஏலக்கூடம், வலைபின்னும்

கூடம் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மீன் இறங்குதளங்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இதன் மூலம் இந்த மூன்று கிராமங்களைச் சேர்ந்த சுமார் 5,800 மீனவர்கள் பயனடைவர். இதனால் மீனவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும்.

3. கன்னியாகுமரி மாவட்டம் புத்தன்துறை கிராமத்தில் 5 கோடி ரூபாய் செலவில் மீன்பிடி இறங்கு தளம் அமைக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், புத்தன்துறை மீனவ கிராமத்திலுள்ள குடியிருப்புகள் மற்றும் கடற்கரைப் பகுதிகள் கடலரிப்பினால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. புத்தன்துறை மீனவ கிராமத்தை கடலரிப்பிலிருந்து பாதுகாக்கும் பொருட்டும், மீனவர்கள் தங்கள் படகுகளை கடற்கரையில் பாதுகாப்பாக நிறுத்திட வசதியாகவும், மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களை சுகாதாரமாக கையாளுவதற்கு ஏதுவாகவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 5 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மீன் இறங்குதளம் அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 5000 மீனவ மக்கள் பயனடைவர்.

4. தமிழ்நாட்டிலுள்ள நான்கு மீன்பிடித் துறைமுகங்களில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கு முன் மீன் பதனப்படுத்தும் மையங்கள் மற்றும் மீன் ஏலம் விடும் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர், கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல், சின்னமுட்டம் மற்றும் நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள

மீன்பிடித் துறைமுகங்களில் ஏற்றுமதிக்கு உகந்த மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கு முன் மீன் பதனப்படுத்தும் மையங்கள் மற்றும் ஏலம் விடும் வசதிகள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

5. மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் ஆகிய இடங்களில் மீன்வளத்துறை அலுவலகக் கட்டடங்கள் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

மீன்வளத்துறையின் திட்டங்களை சிறந்த முறையில் செயல்படுத்திட ஏதுவாகவும், மீனவர்கள் எளிதாக அணுகும் வகையிலும், மதுரையில் ஒருங்கிணைந்த மீன்வளத்துறை வளாகம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலக வளாகமும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2 கோடி ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்படும்.

6. இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் மீனவ கிராமத்தில் கடலரிப்பினை தடுத்திட 1 கோடியே 87 இலட்சம் ரூபாய் செலவில் கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் மீனவ கிராமம் பருவநிலை மாற்றம், கடல் சீற்றம் மற்றும் கடலரிப்பினால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பாம்பன் கிராமத்தினை கடலரிப்பிலிருந்து பாதுகாக்கும் பொருட்டும், மீனவர்களின் வீடுகள் மற்றும் உடைமைகளை பாதுகாத்திடவும், அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்திடவும், மாண்புமிகு இதய

தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 1 கோடியே 87 இலட்சம் ரூபாய் செலவில் கடலரிப்பு தடுப்புச் சுவர் 252 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் சுமார் 1,500 மீனவ குடும்பங்கள் பயன்பெறும்.

7. கன்னியாகுமரி மாவட்டம் தேங்காப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தின் அருகில் இரையுமன்துறை பகுதியில் 1 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் அணுகுசாலை அமைக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டினம் மீன்பிடித் துறைமுக பகுதியில், இரையுமன்துறை கிராமத்தில் துறைமுக அலைதடுப்பு சுவரிலிருந்து படகு அணையும் தளம் வரை போதுமான சாலை வசதிகள் அமைத்து, மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களை சந்தைகளுக்கு கொண்டு செல்ல ஏதுவாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மீனவர்களின் நலன் கருதி 1 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் இரையுமன் துறை பகுதியில் அணுகு சாலை அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் தேங்காப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் அருகிலுள்ள சந்தைகள் மற்றும் இதர நகரங்களுடனான போக்குவரத்து தொடர்பு வசதிகள் மேம்படும்.

8. மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தில் மீன்பிடிப்பிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தொடர் குளிர் காப்பு வசதிகள் மற்றும் ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்புகள் 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மூக்கையூரில், நவீன வசதிகளுடன் கூடிய மீன்பிடித் துறைமுகம் அரசால் அமைக்கப் பட்டுள்ளது. அதிகரித்து வரும் மீன்பிடிப்பை கருத்தில்கொண்டு, தமிழ்நாட்டின் அனைத்து பெரிய மீன்பிடித் துறைமுகங்களிலும் ஏற்றுமதி தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 20 கோடி ரூபாய் செலவில் மீன்பிடிப்பிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தொடர் குளிர் காப்பு வசதிகள் மற்றும் ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

9. நாகப்பட்டினம் மாவட்டம் பழையாறு மீன்பிடித் துறைமுகம் மற்றும் நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் சூரிய ஒளியினால் இயங்கும் மீன் உலர் களம் மற்றும் மீன் உலர் தளம் 3 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் சுகாதாரமான முறையில் உலர் மீன்கள் தயார் செய்யும் தொழிலினை மேற்கொள்ளவும், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவப் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், சூரிய ஒளியினால் இயங்கும் நவீன மீன் உலர் களம் ஒன்றும், பழையாறு மற்றும் நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகங்களில் மீன் உலர்த்தும் தளங்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 3 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். இதனால் இப்பகுதியில் உள்ள மீனவ மகளிர் உயர்தரமான உலர்மீன் தயாரிப்பதின் மூலம் நல்ல வருவாய் ஈட்டிட இயலும்.

10. பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடித் திறனை அதிகரித்திட உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் 12 கோடியே 48 இலட்சம் ரூபாய் மானியத்தில் வழங்கப்படும்.

பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்கள் அண்மைக்கடல் தாண்டி சென்று விரைவாக மீன்பிடித்து வரவும், அவர்களின் மீன்பிடித் திறன் மற்றும் வருவாயினை அதிகரித்திடவும், உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் மானியத்துடன் வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2019–2020ஆம் ஆண்டு 2,600 பாரம்பரிய மீனவர்களுக்கு இயந்திரத்தின் விலையில் 40 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக அலகு ஒன்றுக்கு 48,000 ரூபாய் வீதம் புதிய உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் 12 கோடியே 48 இலட்சம் ரூபாய் மானியத்தில் வழங்கப்படும்.

11. பாரம்பரிய படகுகளுக்கு மாற்றாக கண்ணாடி நாரிழைப் படகுகள், இயந்திரங்கள் மற்றும் வலைகள் 200 மீனவர்களுக்கு 3 கோடியே 40 இலட்சம் ரூபாய் மானியத்தில் வழங்கப்படும்.

கட்டுமரம் மற்றும் மரத்திலான சிறிய படகுகளைப் பயன்படுத்தும் பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடிப்பு திறன் மற்றும் வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு, பாரம்பரிய படகுகளுக்கு மாற்றாக நீண்ட காலம் உழைக்கும் 10 மீட்டருக்குட்பட்ட கண்ணாடி நாரிழைப் படகுகள், இயந்திரம், வலைகள் மற்றும் குளிர்காப்புப் பெட்டிகளுடன் கூடிய அலகுகள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 200 மீனவ பயனாளிகளுக்கு 3 கோடியே 40 இலட்சம் ரூபாய் மானியத்தில் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ், அலகு ஒன்றுக்கு40 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக 1 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படும். இதன் மூலம் மீனவ கிராமங்களின் பொருளாதார நிலை பெருமளவில் மேம்படும்.

12. அண்மைக் கடலோர மீன்வளத்தை அதிகரித்திட திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களின் 30 இடங்களில் 10 கோடி ரூபாய் செலவில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கப்படும்.

28.01.2017 அன்று ஏற்பட்ட எண்ணெய் கசிவினால் திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட கடற்கரைப் பகுதிகளின் நீர் சூழலியல் மற்றும் அண்மைக் கடல் மீன்வளம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. இதனால் பாரம்பரிய மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டது. அண்மைக் கடல் பகுதியில் மீன் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேற்கண்ட மூன்று மாவட்டங்களின் அண்மைக் கடல் பகுதியில் 30 இடங்களில் செயற்கை மீன் உறைவிடங்கள் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இத்திட்டம் எண்ணெய் கசிவிற்கு காரணமான கப்பல் நிறுவனங்களின் காப்புறுதித் தொகையிலிருந்து செயல்படுத்தப்படும்.

13. காஞ்சிபுரம் மாவட்டம் மணிமங்கலம் மற்றும் விருதுநகர் மாவட்டம் பிளவக்கல்லில் உள்ள அரசு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகள் 4 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்.

வண்ண மீன்வளர்ப்பினை ஊக்கப்படுத்தி, தொழில் முனைவோருக்கு வண்ண மீன்வளர்ப்பில் செயல்முறைப் பயிற்சிகள் வழங்கிட ஏதுவாக, காஞ்சிபுரம் மாவட்டம் மணிமங்கலத்தில் உள்ள அரசு மீன் பண்ணை புனரமைக்கப்படும். மேலும், விருதுநகர் மாவட்டம் பிளவக்கல் அணையில் உள்ள அரசு மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணையும்

புனரமைக்கப்பட்டு கூடுதலாக மீன் விரலிகள் வளர்த்தெடுக்கும் வசதிகள் ஏற்படுத்தப்படும். இத்திட்டம், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 4 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

14. தஞ்சாவூர், கடலூர், ஈரோடு, கன்னியாகுமரி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் ஆறு இடங்களில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு சேவை மையங்கள் (Aqua One Centre) நிறுவப்படும்.

தஞ்சாவூர், கடலூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் மீன்வளர்ப்போர் பயன்பெறும் வகையில் மூன்று நீர்வாழ் உயிரின வளர்ப்பு சேவை மையங்கள் மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் வாயிலாகவும், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் மூலம் தஞ்சாவூர், பவானிசாகர் மற்றும் பறக்கை ஆகிய இடங்களில் மூன்று நீர்வாழ் உயிரின வளர்ப்பு சேவை மையங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். இம்மையங்கள், மீன் வளர்ப்போருக்கு சிறந்த மீன் பண்ணை பராமரிப்பு, நீர்த்தரம் மற்றும் நோய் மேலாண்மை மற்றும் மீன்வளர்ப்பு தொடர்பான தொழில் நுட்ப ஆலோசனைகளையும் வழங்கும்.

15. பண்ணைக் குட்டைகளில் மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் வளர்ப்பினை ஊக்குவித்திட மீன் வளர்ப்போருக்கு 87.2 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப்படும்.

சிறிய மற்றும் நடுத்தர மீன் வளர்ப்போர் பண்ணை குட்டைகளில் வேகமாக வளரும் மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் வளர்ப்பினை

மேற்கொள்ள மானியம் வழங்கப்படும். இதன் மூலம் தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன்வளர்ப்புப் பகுதிகளை விரிவாக்கிடவும், மீன் வளர்ப்போரின் வருவாயினை பெருக்கிடவும் இயலும். திலேப்பியா வளர்ப்புப் பண்ணை குட்டைகள் அமைத்திடவும், மீன் வளர்ப்பிற்கான இடுபொருட்களை வழங்கிடவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இத்திட்டம் 87.2 இலட்சம் ரூபாய் செலவில் 200 மீன்வளர்ப்போர் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் 20 ஹெக்டேர் பரப்பளவு உள்ள பண்ணை குட்டைகளில் திலேப்பியா மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்படும்.

16. விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் மீன்குஞ்சு மற்றும் மீன் உற்பத்தியை பெருக்கிட 95 இலட்சம் ரூபாய் செலவில் மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகள் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் மீன்குஞ்சு மற்றும் மீன் உற்பத்தியினை அதிகரித்திட மீன் வளர்ப்போருக்கு நாற்றாங்கால்கள் உள்ளடக்கிய மீன்வளர்ப்பு குளங்கள், தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம்–2இன் மூலம் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், 19 மீன்குஞ்சு மற்றும் வளர்ப்புப் பண்ணைகள் கீழ்வெள்ளாறு, காவிரி டெல்டா ஆகிய 2 உபவடி நிலப்பகுதிகளில் மொத்தம் 10 ஹெக்டேர் பரப்பளவில், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஒரு மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு பண்ணைக்கு 5 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 19 பண்ணைகள் 95 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

17. தருமபுரி மாவட்டம் சின்னாறு மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் தட்டாமனைப்பட்டி மீன் பண்ணைகளில் 55 இலட்சம் ரூபாய்

செலவில் தீவிர மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

அரசு மீன் பண்ணைகளில் காற்றுபுகுத்தி மற்றும் நன்மை தரும் நுண்ணுயிரிகளைப் பயன்படுத்துவதன் மூலம் மீன்குஞ்சுகளின் பிழைப்புத் திறனை மேம்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க இயலும். தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 30 இலட்சம் ரூபாய் செலவில் தருமபுரி மாவட்டம் சின்னாறு அரசு மீன்பண்ணை மற்றும் 25 இலட்சம் ரூபாய் செலவில் புதுக்கோட்டை மாவட்டம் தட்டாமனைப்பட்டி அரசு மீன்பண்ணையில் தீவிர மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் வசதிகள் ஏற்படுத்தப்படும். இத் திட்டத்தின் மூலம் கூடுதலாக 70 இலட்சம் மீன்குஞ்சுகள் வளர்த்தெடுக்கப்படும்.

18. உள்நாட்டு மீன் உற்பத்தியினை பெருக்கிட 28 இலட்சம் ரூபாய் செலவில் நாட்டின கெண்டை மீன்கள் மற்றும் நன்னீர் இறால் குஞ்சுகள் உள்நாட்டு நீர்நிலைகளில் இருப்பு செய்யப்படும்.

தமிழ்நாட்டின் நீர் நிலைகளில் நாட்டின கெண்டை மீன் இனங்களை பாதுகாத்திடும் வகையில் கல்பாசு கெண்டை மேட்டூர் அரசு மீன் பண்ணையிலும், காவேரி கெண்டை மணிமுத்தாறு அரசு மீன் பண்ணையிலும் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு முறையே காவிரி மற்றும் தாமிரபரணி ஆறுகளில் இருப்பு செய்யப்படும். தமிழ்நாட்டின் பெரும்பாலான நீர்நிலைகளில் நன்னீர் இறால் இனம் அருகி வருவதால், அதனை பாதுகாத்திட தேர்வு செய்யப்பட்ட சிறிய நீர்த்தேக்கங்களில் நன்னீர் இறால் குஞ்சுகள் இருப்பு செய்யப்படும். இத்திட்டம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 28 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

19. நன்னீரில் முத்துச் சிப்பி வளர்க்கும் திட்டம் 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

நன்னீரில் முத்துச் சிப்பி வளர்க்கும் தொழிலானது சமீப காலங்களில் முக்கியத்துவம் பெற்று வருகிறது. நன்னீர் முத்து வளர்ப்பு மிகவும் பயனீட்டக்கூடிய, இலாபகரமான மற்றும் நவீன தொழில்நுட்பமாக விளங்குவதால், விழுப்புரம் மாவட்டத்தில் 10 விவசாயிகளை கொண்ட நன்னீர் முத்து வளர்ப்போர் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்களுக்கு நன்னீர் முத்து வளர்ப்பு குறித்த தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டு நன்னீர் முத்து வளர்ப்பு மேற்கொள்வதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 50 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் தமிழகம் முழுவதும் நன்னீர் முத்து வளர்ப்புத் திட்டம் பரவலாக்கிட வழிவகை ஏற்படும்.

20. கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு85 இலட்சம் ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படும்.

இந்திய விவசாயிகளின் திறன் மேம்பாட்டுக் கழகம் மூலமாக 3,000 மீனவர்களுக்கு திறன் அங்கீகாரச் சான்றிதழ்கள் (Recognition of Prior Learning) வழங்கப்படும். 200 மீனவ இளைஞர்களுக்கு மாற்று வாழ்வாதாரமாக, உயிர்ப்பாதுகாப்பு மற்றும் மீட்புப் பயிற்சி வழங்கப்படும். மேலும், 200 மீனவ மகளிருக்கு மாற்று வாழ்வாதாரத் தொழிலாக ஆளி மற்றும் சிப்பி வளர்ப்பு தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்படும். இத்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 85 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். இதன் மூலம் மீனவ இளைஞர்கள் மற்றும் மீனவ மகளிர்

மாற்றுத் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதோடு, அவர்களின் வருவாய் மற்றும் வாழ்க்கைத்தரமும் பெருமளவில் உயரும்.

21. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக கட்டுப்பாட்டிலுள்ள அமராவதி மற்றும் திருமூர்த்தி நீர்த்தேக்கங்களில் 20 இலட்சம் ரூபாய் செலவில் உள்நாட்டு மீன் இறங்குதள வசதிகள் அமைக்கப்படும்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக கட்டுப்பாட்டில் உள்ள அமராவதி மற்றும் திருமூர்த்தி நீர்த்தேக்கங்களில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள பங்கு மீனவர்கள், தாங்கள் பிடிக்கும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும் அவற்றிற்கு நல்ல விலையினைப் பெற்றிடும் வகையிலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 20 இலட்சம் ரூபாய் செலவில் வலைபின்னும் கூடம், மீன் ஏலக்கூடம், கழிவறை ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் அடங்கிய உள்நாட்டு மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படும்.

22. சென்னையில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மூலம் 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு நவீன கடல் மீன் உணவகம் மற்றும் இரண்டு நவீன மீன் விற்பனை நிலையங்கள் நிறுவப்படும்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், நவீன மீன் விற்பனை நிலையம் மற்றும் நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் மூலம் மீன் மற்றும் மீன் உணவு பொருட்களை தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் விற்பனை செய்து வருகிறது. மீன்வளர்ச்சிக் கழகத்தின் மீன் விற்பனையை பெருக்குவதற்கும், பொது மக்களுக்கு புரதச்சத்து மிக்க தரமான மீன் மற்றும் மீன் உணவு பொருட்கள் நியாயமான விலையில் பரவலாக கிடைக்கும் நோக்கத்திலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னையில் ஒரு நவீன மீன் உணவகம் மற்றும் இரண்டு நவீன மீன் விற்பனை நிலையங்கள் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

23. பொது மக்களுக்கு மீன் உணவின் பயன்கள் மற்றும் அதன் பல்வேறு வகைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக 50 இலட்சம் ரூபாய் செலவில் சென்னையில் மீன் உணவு திருவிழா நடத்தப்படும்.

மீன் உணவு, மிகுந்த புரதச்சத்து மிக்க, எளிதாக கிடைக்கக் கூடிய உணவாகும். மீன் உணவுகளின் பல்வேறு வகைகள் மற்றும் அதன் நற்பயன்களை பிரபலப்படுத்துவதற்காகவும், மீன் உண்ணும் பழக்கத்தினை பொதுமக்களிடையே ஊக்குவிப்பதற்கும், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 50 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் இணைந்து நடப்பு நிதியாண்டில் மீன் உணவு திருவிழா ஒன்று சென்னையில் நடத்தப்படும். இதனால் மீன் உணவின் பயன்கள் குறித்த விழிப்புணர்வு பொது மக்களிடையே ஏற்படும்.

24. இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தில் 10 இலட்சம் ரூபாய் செலவில் புதிய டீசல் விற்பனை நிலையம் அமைக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூரில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய மீன்பிடித் துறைமுகம் கட்டப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 200க்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் நாட்டுப்படகுகளுக்கு மானிய விலையிலான டீசல் வழங்கிட ஏதுவாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் ஆணையின்படி 10 இலட்சம் ரூபாய் செலவில் டீசல் எரியெண்ணெய் விற்பனை நிலையம் ஒன்று தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் அமைக்கப்படும்.

25. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான உக்கடம் மொத்த மீன் விற்பனை நிலையம் மற்றும் சென்னையில் உள்ள மைய சமையல் கூடத்தில் மீன் கழிவு மேலாண்மை வசதிகள் 20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், சென்னையில் ஒரு மைய சமையல் கூடத்தையும், கோயம்புத்தூர் உக்கடத்தில் ஒரு மொத்த மீன் விற்பனை நிலையத்தையும் நிறுவி செயல்படுத்தி வருகிறது. இவற்றில் இருந்து பெறப்படும் மீன் கழிவுகளில் இருந்து மீன் உரம் மற்றும் உபபொருட்கள் தயாரிப்பதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, உயர் தொழில்நுட்ப உதவியுடன் மீன் கழிவு மேலாண்மை வசதிகள் 20 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் மேற்கண்ட இடங்களில் திடக்கழிவு மேலாண்மை மேம்படும்.

26. நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் தருவைக் குளத்தில் பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மூலம் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

தொடர் குளிர்காப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக, நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் தருவைக்குளம் மீன் இறங்குதளத்தில் 30 டன் உற்பத்தித் திறன் கொண்ட பனிக்கட்டி நிலையங்கள் அமைக்கப்படும். மேலும், மேற்கண்ட இடங்களில் மீனவர்கள் தங்கள் மீன்பிடித் தொழிலுக்கு

தேவையான இடுபொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களை வாங்கிச் செல்வதற்கு ஏதுவாக கூட்டுறவு அங்காடிகள் அமைக்கப்படும். இத்திட்டம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மூலம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

27. பாக் வளைகுடா பகுதியில் கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள மீனவ மகளிருக்கு 50 இலட்சம் ரூபாய் சிறுவணிகக் கடன் வழங்கப்படும்.

இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள மீனவ மகளிருக்கு இடுபொருட்கள் மற்றும் கடற்பாசி வளர்ப்பு மிதவைகள் கொள்முதல் செய்வதற்கு குறைந்த வட்டியில், எளிய தவணையில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1,000 மீனவமகளிருக்கு தலா 5,000 ரூபாய் வீதம் சிறுவணிகக் கடன் வழங்கப்படும். இதன் மூலம் மாநிலத்தின் கடற்பாசி உற்பத்தி அதிகரிப்பதோடு, பாக் வளைகுடா மீனவ மகளிர் கடற்பாசி வளர்ப்பின் மூலம் அதிக வருவாய் பெறுவர். இதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரமும் மேம்படும்.

28. இயற்கை இடர்பாடுகளின் போது சேதமடையும் மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்களை மீள உருவாக்கும் பொருட்டு அவை காப்புறுதி திட்டத்தின் கீழ், கொண்டு வரப்படும்.

இயற்கை இடர்பாடுகளின் போது சேதமடையும் படகுகள் மற்றும் உபகரணங்களால் மீனவர்களின் வாழ்வதாரம்

பெருமளவில் பாதிக்கப்படுகிறது. மீன்பிடி படகுகளை உரிய தொகைக்கு காப்புறுதி செய்வதன் மூலம் சேதமடையும் பொழுது அவற்றிற்கான காப்பீட்டுத் தொகை மூலம் மீள உருவாக்கிட இயலும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழகத்தில் இயங்கும் பாரம்பரிய மற்றும் இயந்திரம் பொருத்திய நாட்டுப்படகுகள் அனைத்தையும் காப்புறுதி செய்வதற்கும், சேதம் ஏற்படும் நிகழ்வுகளில் உரிய காப்பீட்டுத் தொகை குறித்த காலத்தில் மீனவர்களுக்கு கிடைப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நிறுவனமாக தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் செயல்படும்.

29. தமிழக மீனவ சமுதாயத்தின் சமூக பொருளாதார நிலை குறித்து விரிவான ஆய்வுகள் 50 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

தமிழகத்தில் வாழும் மீனவ சமுதாயத்தின் முந்தைய மற்றும் தற்போதைய சமூக பொருளாதார நிலை, கடற்பகுதிகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள், மீன் பிடிப்பு முறைகள், மீன் பிடி இடங்களைப் பற்றிய விவரங்கள், மீன்பிடிக் கலன் மற்றும் உபகரணங்கள், சந்தைப்படுத்தும் வசதிகள், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மூலம் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றம், மீனவர்களுக்கான கல்வி மற்றும் சுகாதார வசதிகள் குறித்த ஒரு விரிவான ஆய்வு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 50 இலட்சம் ரூபாய் செலவில் மீன்வளத்துறை மேற்கொள்ளும். இந்த ஆய்வின் மூலம் தமிழக மீனவ சமுதாயத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்திட அரசிற்கு பேருதவியாக இருக்கும்.

30. தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கு உகந்த பகுதிகளை தேர்வு செய்வற்கான ஆய்வுப் பணிகள் 1 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

தமிழக மீனவர்கள் கடலோர பகுதிகளில் மீன்பிடித் தொழிலை மேம்படுத்தும் விதமாக, சுகாதாரமான முறையில் மீன்களை கையாளவும், உலகத்தரத்திலான மதிப்பு கூட்டப்பட்ட மீன் பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கு தேவையான பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்திடவும், தமிழகத்தின் கடலோர பகுதிகளில் நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கு உகந்த இடங்களை தேர்வு செய்து, பிரத்தியேக கடலோர மீன் வளர்ப்பு மண்டலங்கள் அமைப்பதற்கு தேவையான ஆய்வுகள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

31. கடல் மற்றும் உள்நாட்டு மீன்பிடி புள்ளிவிவர தகவல்கள் சேகரிக்கும் திட்டம், 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

கடல் மற்றும் உள்நாட்டு மீன்பிடி புள்ளிவிவர தகவல்களை சேகரித்தல்,நிலைத்த வளங்குன்றா மீன்வளம் தொடர்பான கொள்கை முடிவுகளுக்கும் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கான திட்டங்களை வகுப்பதற்கும் அத்தியாவசியமாகிறது. இத்திட்டத்தின் கீழ், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் மீன்துறை ஆய்வாளர், மீன்துறை சார் ஆய்வாளர் மற்றும் புள்ளிவிவரக் கணக்கெடுப்பாளர்களைக் கொண்டு கடல் மற்றும் உள்நாட்டு மீன்பிடிப்பு புள்ளி விவரங்கள் சேகரித்து தொகுக்கப்படும்.

32. திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு ஏரியின் மீன் உற்பத்தியினை அதிகரித்திட பல்வேறு இன மீன்குஞ்சுகள் 60 இலட்சம் ரூபாய் செலவில் இருப்பு செய்யப்படும்.

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு ஏரியில் உள்ள மீன்வள ஆதாரங்களை அதிகரித்திடவும், மீன் பிடிப்பினை அதிகரித்து, மீன் உற்பத்தித் திறனை பெருக்கிடவும், இதன் மூலம் மீனவர்களின் வருவாயினை உயர்த்திடவும், துறைக்குச் சொந்தமான இடத்தில் மீன்குஞ்சு வளர்ப்பு குளங்கள் அமைத்து பல்வேறு இன மீன் மற்றும் இறால் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு நவீன தொழில்நுட்பத்துடன் வளர்க்கப்பட்டு, பழவேற்காடு ஏரியில் இருப்பு செய்யப்படும். இத்திட்டம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 60 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தால் பழவேற்காடு பகுதியில் வசிக்கும் சுமார் 7,500 மீனவ குடும்பங்கள் பயன்பெறும்.

33. தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு பல்வேறு உதவித் திட்டங்களை துரிதமாக வழங்கிட நவீன நுண்ணறி அடையாள அட்டைகள் மற்றும் இணையதள சேவைகள் 50 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு மீனவர் நல வாரியமானது மீனவர், மீன்பிடிப்பு சார்ந்த தொழிலினை மேற்கொள்ளும் அனைத்து தொழிலாளர்களின் சமூகப்பாதுகாப்பு மற்றும் நலத்தினை உறுதி செய்திட 2007ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 4.65 இலட்சம் மீனவர் / மீனவ மகளிர் மற்றும் மீன்பிடி சார்ந்த தொழிலினை மேற்கொள்ளும் வாரிய உறுப்பினர்கள் அனைவருக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 50 இலட்சம் ரூபாய் செலவில் நவீன நுண்ணறி அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் இணையதள சேவையினை கொண்டு நேரடி வங்கி பரிவர்த்தனை மூலமாக வழங்கப்படும்.

34. அரசு எரிஎண்ணெய் நிலையங்களை நவீனப்படுத்தி மின்னணு அட்டை மூலம் மீனவ பயனாளிகளுக்கு எரிஎண்ணெய் மானியத்தினை நேரடி பணப்பரிமாற்றம் (DBT) மூலம் வழங்கும் திட்டம், 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய் மற்றும் மானியத்துடன் கூடிய மண்ணெண்ணெயினை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மூலம் மீன்வளத்துறையால் வழங்கப்படுகிறது. எரியெண்ணெய் மானியம் அனைத்து பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக சென்றடையும் பொருட்டு, மின்னணு அட்டைகள் வழங்கப்பட்டு, நேரடி பணப்பரிமாற்ற முறையில் எரியெண்ணெய் மானியம் வழங்கும் திட்டம் 50 இலட்சம் ரூபாய் செலவில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி செயல்படுத்தப்படும்.

35. காவிரி டெல்டா பகுதியில் மீன் வளர்ப்பு விவசாயிகளுக்கான ‘நீர்வாழ் உயிரின வளர்ப்பு சேவை மையம்’ 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

காவிரி டெல்டா பகுதியில் குறிப்பாக தஞ்சை மற்றும் திருவாரூர் மாவட்டங்களிலுள்ள மீன் வளர்ப்பு விவசாயிகளுக்கான தொழில்நுட்பத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், ‘நீர்வாழ் உயிரின வளர்ப்பு சேவை மையம்’ மாண்புமிகு இதய தெய்வம்

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். இந்த சேவை மையம் மீன் வளர்ப்பில் ஏற்படும் நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளிக்க ஆலோசனை வழங்கும். மீன் வளர்ப்பு விவசாயிகள், மீன் வளர்ப்பு ஆலோசனைகளை தங்கள் அலைபேசியில் பெறும் வகையில் 'மீன் வளர்ப்பு செயலி' மற்றும் இணையதளம் உருவாக்கப்படும். இச்சேவை மையம் மூலம் 1,000 ஏக்கர் அளவிலான மீன் பண்ணைகள் பயன்பெறும்.

36. ஈரோடு மாவட்டத்தில் உள்நாட்டு மீன் வளர்ப்போருக்காக ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு மற்றும் விவசாய மாதிரி அமைப்புகள் 1 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு மற்றும் காய்கறி உற்பத்தி, விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்க வழிவகுக்கும். இத்தொழில்நுட்பம் மூலம் காய்கறி வளர்ப்பில் விவசாயிகள் செயற்கை உரங்களை பயன்படுத்த தேவையில்லை. மேலும், பண்ணை குட்டையில் இருக்கும் மீன் கழிவுகள் செடிகளுக்கு உரமாகிறது. ஈரோடு மாவட்டத்தில், உள்நாட்டு மீன் வளர்ப்போருக்காக ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு மற்றும் விவசாய மாதிரி அமைப்புகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம், அளிக்கப்படும் செயல்விளக்கப் பயிற்சிகளின் மூலம் 1,000 பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்போர் அதிக வருமானம் பெற்று பயன்பெறுவர்.

37. கன்னியாகுமரி மாவட்டத்தில் 1 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் அயிரை மீன் குஞ்சு பொரிப்பகம் ஒன்று அமைக்கப்படும்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளிலுள்ள ஆறுகளில் காணப்படும் 'அயிரை' மீன்குஞ்சு பொரிப்பகம் அமைக்கப்படும். இம் மீன் பலவிதமான சிறந்த தாது உப்புக்களும் அதிக மருத்துவ குணாதிசயங்களும் கொண்ட மீனாகும். இந்த மீனின் தேவை அதிகமாகிக் கொண்டே வருவதால், இதனை வளர்ப்புக் குளங்களில் உற்பத்தி செய்வதற்கு உதவிடும் வகையில் ஒரு பொரிப்பகம் தமிழகத்தில் முதன்முறையாக கன்னியாகுமரி மாவட்டத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

38. தமிழகத்தின் பாக் வளைகுடா கடலோரப் பகுதி மீனவ மக்களுக்கு மாற்றுத் தொழிலாக விளங்கும் கடற்பாசி வளர்ப்பில் புதிய தொழில்நுட்பம் 2 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் அறிமுகப் படுத்தப்படும்.

பாக் வளைகுடா கடலோரப் பகுதியில் கப்பாபைக்கஸ் (Kappaphycus) மற்றும் கஞ்சிபாசிகளின் (Gracilaria) வளர்திறனை திசு வளர்ப்பின் மூலம் மேம்படுத்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். வளர்திறன் மேம்படுத்தப்பட்ட கபாபைக்கஸ் மற்றும் கஞ்சிபாசி கடலோர மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது குறித்த செயல்கள் கணக்கெடுப்புகளின் மூலம் அறியப்படும். இத்திட்டத்தின் மூலம் பெறப்படும் தரவுகள் கடல்பாசி ஆதாரங்களை மேலாண்மை செய்வதற்கும் மற்றும் அவை குறித்த திட்ட அறிக்கைகள்

தயார் செய்ய பயன்படும். இத்திட்டம், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும்.

39. ஆயிரங்கால் தூண்டிலில் பயன்படுத்த மீன் பதனக் கழிவுகளிலிருந்து செயற்கை இரைகள் 45 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

தற்போது ஆயிரங்கால் தூண்டிலில் உணவுக்குப் பயன்படும் சிறுமீன்கள் தூண்டில் இரைகளாகப் பயன்படுத்தப் படுகின்றன. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், மீன்பதனக் கழிவுகளிலிருந்து ஆயிரங்கால் தூண்டில்களில் பயன்படுத்தக்கூடிய செயற்கை இரைகளை உருவாக்கும் தொழில்நுட்பம் கண்டறியப்படும். இத்திட்டம், 45 இலட்சம் ரூபாய் செலவில் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி செயல்படுத்தப்படும். இச்செயற்கை மீன் இரைகளை உருவாக்குவதன் மூலம் சிறுமீன்களை தூண்டில் இரையாகப் பயன்படுத்துவதைக் குறைக்க வழி வகை செய்யப்படுவதோடு மீன்பதனக் கழிவுகளையும் முறையாகப் பயன்படுத்தும் நிலை உருவாகும்.

40. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக நாகப்பட்டினம் வளாகத்தில் நீர்வாழ் உயிரின நல ஆய்வுக்கூடம் 53 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் மீன் மற்றும் இறால் வளர்ப்பில் நோய் ஏற்படுவதால் பண்ணையாளர்களுக்கு அதிக பொருட்சேதம் ஏற்படுவதோடு உற்பத்தியும் குறைகிறது. எனவே, பண்ணைகளில் ஏற்படும் நோய்களை முன்கூட்டியே

கண்டறிந்து தடுப்பதற்காக தமிழ்நாட்டில் இறால் மற்றும் மீன் வளர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நீர்வாழ் உயிரின நல ஆய்வுக்கூடம் 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இவ்வாய்வகத்தின் மூலம் நாகப்பட்டினம் மற்றும் அதை சுற்றியுள்ள மாவட்டங்களில், மீன் மற்றும் இறால் பண்ணையாளர்கள் பெரிதும் பயனடைவர்.

41. நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகளில் முதலாம் மற்றும் இரண்டாம் தளங்கள் 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு கிராமத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இக்கல்லூரி மாணவர்களின் விடுதித் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு சுமார் 300 மாணாக்கர்கள் தங்கி கல்வி பயிலும் வசதியுடைய மாணவர் மற்றும் மாணவியர் விடுதி கட்டடங்களின் முதல் மற்றும் இரண்டாம் தளங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

42. நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கூடுதல் கட்டமைப்பாக நிர்வாக மற்றும் கல்வி கட்டடத்தில் இரண்டாம் தளம் 4 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு கிராமத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இக்கல்லூரியானது, மீன்வள இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகளை வழங்கி வருகிறது. இக்கல்லூரியின் ஏழு துறைகள் மற்றும் ஆராய்ச்சி கூடங்களின் இடத்தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, நிருவாக மற்றும் கல்விக் கட்டடத்தின் இரண்டாம் தளம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 4 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். இக்கூடுதல் வசதியின் காரணமாக இக்கல்லூரியின் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க சேவைக்கான கட்டமைப்பு வசதிகள் மேம்படும்.

❖ ❖ ❖

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

மானியக் கோரிக்கை எண். 35

1. பவானிசாகரிலுள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திற்கு கூடுதல் கட்டமைப்பு வசதிகள் அளித்தல்.

தமிழ்நாடு அமைச்சுப்பணி மற்றும் நீதித்துறை அமைச்சுப் பணியைச் சேர்ந்த பணியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில், ஒவ்வோர் அணியிலும் கூடுதல் பணியாளர்கள் பயிற்சி பெறும் பொருட்டு, புதிய வகுப்பறைகள் மற்றும் விடுதிக் கட்டடம் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள், ரூ.10 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

2. அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு கூடுதல் கட்டமைப்பு வசதிகள் அளித்தல்.

அரசுப் பணியாளர்களுக்கு பொது மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளித்து வருகின்ற சென்னை, அண்ணா மேலாண்மை நிலையத்தில் கூடுதல் தளம் கட்டுதல் மற்றும் வகுப்பறைகளை நவீன வகுப்பறைகளாக (smart class-rooms) மேம்படுத்துதல் ஆகிய பணிகள், ரூ.5 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

3. அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு.

மாநிலம் முழுவதிலுமுள்ள அரசுப் பணியாளர்களுக்கு, தற்போதைய தேவைகளுக்கேற்ப, பல்வேறு புதிய

தலைப்புகளில் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏதுவாக, அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் மானியத் தொகை ரூ.86.70 இலட்சம் என்பது, நடப்பு நிதியாண்டிலிருந்து ரூ.2 கோடி என உயர்த்தி வழங்கப்படும்.

4. போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்கள் துவங்குதல்.

பொருளாதார ரீதியாக நலிவுற்ற மாணவ, மாணவியர்கள், Staff Selection Commission, Railway Recruitment Board, Institute of Banking Personnel Selection (IBPS) மற்றும் Tamil Nadu Public Service Commission போன்ற முகமைகள் நடத்தும் வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்கு, முறையான பயிற்சி அளிக்க, சென்னையில் மற்றுமொரு பயிற்சி மையத்துடன், கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் என மொத்தம் 4 புதிய பயிற்சி மையங்கள், இவ்வாண்டு முதல் துவங்கப்படும். இப்பயிற்சி மையங்கள் துவங்க, 2019 – 2020ஆம் ஆண்டில் ரூ.4.44 கோடியும், அதன் பின்னர், தொடரும் செலவினமாக ரூ.3.51 கோடியும் ஆண்டுதோறும் வழங்கப்படும்.

5. பயிற்சி நிகழ்ச்சிகளை வலைதளத்தில் ஒளிபரப்புதல்.

அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையத்தில் அளிக்கப்பட்டு வருகின்ற பயிற்சிகளை, தொலைதூரத்தில், கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களும் பார்த்து பயன் பெறும் வகையில், சில தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளை வலைதளத்தில் நேரடியாக ஒளிபரப்புவதற்காக (Web-casting) 2019–2020ஆம் ஆண்டில் ரூ.33 இலட்சமும், அதன் பின்னர், தொடரும் செலவினமாக ரூ.15 இலட்சமும் ஆண்டுதோறும் வழங்கப்படும்.

6. புற்று நோய் சிகிச்சைக்கென சிறப்பு விடுப்பு.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட அரசுப் பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு, தற்போது அனுமதிக்கப்பட்ட விடுப்புகளுடன், கீமோதெரபி (Chemo-therapy) மற்றும் ரேடியோதெரபி (Radio-therapy) சிகிச்சை பெறும் ஒவ்வொரு முறையும், அவர்களுக்கு முழு ஊதியத்துடன் 10 நாட்கள் சிறப்பு விடுப்பு வழங்கப்படும்.

❖ ❖ ❖

சட்டத் துறை

மானியக் கோரிக்கை எண். 33

1. அரசு சட்டக்கல்லூரிகளில் அதிவேக இணைய வசதியுடன் கூடிய கம்பியில்லா மின் மண்டலம் நிறுவுதல்.

பட்டறைப்பெரும்புதூர் மற்றும் புதுப்பாக்கம் வளாகங்களில் இயங்கி வரும் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரிகளில், அதிவேக இணைய வசதியுடன் கூடிய கம்பியில்லா மின்மண்டலம் (Wifi - Zone) ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

2. அரசு சட்டக் கல்லூரிகளில் முதுகலை சட்டப்படிப்பு (எல்.எல்.எம்.,) துவக்குதல்.

புதுப்பாக்கம் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, தருமபுரி மற்றும் விழுப்புரம் அரசு சட்டக்கல்லூரிகளில் முதுகலை சட்டப்படிப்பு (எல்.எல்.எம்.,) துவக்கப்படும்.

❖ ❖ ❖

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

நீதி நிருவாகம்

மானியக் கோரிக்கை எண். 3

சிறைச்சாலைகள்

மானியக் கோரிக்கை எண். 24

நீதி நிருவாகம்

1. திருப்பூர் மாவட்டம், திருப்பூரில் ஒரு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைத்தல்.

Constitution of an Additional District Munsif Court at Tiruppur in Tiruppur District.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருப்பூர் மாவட்டம், திருப்பூரில் ரூ.58.55 இலட்சம் செலவில் ஒரு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கப்படும்.

2. திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறியில் ஒரு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைத்தல்.

Constitution of an Additional District Munsif Court at Musiri in Tiruchirappalli District.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறியில் ரூ.61.15 இலட்சம் செலவில் ஒரு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கப்படும்.

3. விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் ஒரு கூடுதல் சார்பு நீதிமன்றம் அமைத்தல்.

Constitution of an Additional Sub Court at Kallakurichi in Villupuram District.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் ரூ.90.49 இலட்சம் செலவில் ஒரு கூடுதல் சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

4. திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் கூடுதல் மாவட்ட நீதிபதிக்கான குடியிருப்புகள் கட்டுதல்.

Construction of quarters for the Additional District Judge at Arani in Tiruvannamalai District.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் கூடுதல் மாவட்ட நீதிபதிக்கான குடியிருப்பு ரூ.97.56 இலட்சம் செலவில் கட்டப்படும்.

5. கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைத்தல்.

Constitution of an Additional District Court at Kuzhithurai in Kanniyakumari District.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் ரூ.1.08 கோடி செலவில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படும்.

6. தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டத்தில் கூடுதலாக ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.

Constitution of one more Judicial Magistrate Court at Srivaikuntam in Thoothukudi District.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டத்தில் ரூ.1.09 கோடி செலவில் கூடுதலாக ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்

7. திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல்.

Constitution of a Sub Court at Nanguneri in Tirunelveli District.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் ரூ.1.21 கோடி செலவில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

8. தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல்.

Constitution of a Sub Court at Pappireddipatti in Dharmapuri District.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் ரூ.1.28 கோடி செலவில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்

9. நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் மற்றும் குமாரப்பாளையம் வட்டங்களில் தலா ஒரு நீதிமன்றம் வீதம் இரண்டு குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் அமைத்தல்.

Constitution of two Judicial Magistrate Courts one each at Sendamangalam and Kumarapalayam Taluks in Namakkal District.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் மற்றும் குமாரப்பாளையம் வட்டங்களில் தலா ஒரு நீதிமன்றம் வீதம் இரண்டு குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் ரூ.1.83 கோடி செலவில் அமைக்கப்படும்.

10. கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் நிரந்தர மக்கள் நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஆகியோருக்கான குடியிருப்புகள் கட்டுதல்.

Construction of quarters for the Chairman, Permanent Lok Adalat and the Secretary, District Legal Services Authority at Krishnagiri in Krishnagiri District.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் நிரந்தர மக்கள் நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஆகியோருக்கான குடியிருப்புகள் ரூ.212.61 இலட்சம் செலவில் கட்டப்படும்.

11. நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் மற்றும் குமாரப்பாளையம் வட்டங்களில் தலா ஒரு நீதிமன்றம் வீதம் இரண்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் அமைத்தல்.

Constitution of two District Munsif Courts one each at Sendamanglam and Kumarapalayam taluks in Nammakkal District.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் மற்றும் குமாரப்பாளையம் வட்டங்களில் தலா ஒரு நீதிமன்றம் வீதம் இரண்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ரூ.2.18 கோடி செலவில் அமைக்கப்படும்.

12. ஐந்து புதிய மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் அமைத்தல்.

Constitution of Five new District Munsif — Cum - Judicial Magistrate Courts

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தருமபுரி மாவட்டம் காரிமங்கலம், விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி, சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி, காஞ்சிபுரம் மாவட்டம் பல்லாவரம், திருவள்ளூர் மாவட்டம் மதுரவாயல் ஆகிய இடங்களில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் தலா ரூ.75 இலட்சம் வீதம் ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சிறைத்துறை

1. மதிப்பூதிய அடிப்படையில் ஆற்றுப்படுத்துநர்கள் பணியிடங்கள் பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புதியதாக தோற்றுவித்தல்.

Creation of new posts of Counselors on Honorarium basis to Special Prisons for Women and Borstal School, Pudukkotai.

பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளில் பெண் சிறைவாசிகள் மற்றும் இளஞ்சிறார்களின் மனநலனைப் பேணுவதற்காக, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொடர் செலவினமாக ரூ.10.80 இலட்சம் செலவில் 6 ஆற்றுப்படுத்துநர்கள் (Counsellors) பணியிடங்கள் மதிப்பூதிய அடிப்படையில் புதியதாக தோற்றுவிக்கப்படும்.

2. 9 மத்திய சிறைகளுக்கு பறக்கும் வசதியுடன் கூடிய வண்ண புகைப்படக் கருவி கொள்முதல் செய்தல்.

Purchase of Drones with colour cameras for 9 Central Prisons.

9 மத்திய சிறைகளிலும் பாதுகாப்பினை மேம்படுத்திடவும், தடை செய்யப்பட்ட பொருட்களை கண்டறியவும், சிறைவாசிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொடரா செலவினமாக ரூ.21.85 இலட்சம் செலவில் பறக்கும் வசதியுடன் கூடிய வண்ண புகைப்படக் கருவிகள் (Drones with colour cameras) கொள்முதல் செய்யப்படும்.

3. மதுரை மற்றும் கோவை பெண்கள் தனிச் சிறைகளில் உதவி மருத்துவ அலுவலர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவித்தல்.

Creation of the new post of Civil Assistant Surgeons to Special Prisons for Women, Madurai and Coimbatore.

மதுரை மற்றும் கோவை பெண்கள் தனிச் சிறைகளில் பெண் சிறைவாசிகள் மற்றும் குழந்தைகளின் உடல் நலனைப் பேணுவதற்கு, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொடர் செலவினமாக ரூ.27.83 இலட்சம் செலவில் 2 உதவி மருத்துவ அலுவலர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்படும்.

4. மதுரை மற்றும் கோவை பெண்கள் தனிச்சிறைகளில் மனஇயல் நிபுணர் பணியிடங்கள் தோற்றுவித்தல்.

Creation of one post of Psychologist in Special Prisons for Women, Madurai and Coimbatore.

மதுரை மற்றும் கோவை பெண்கள் தனிச் சிறைகளில் பெண் சிறைவாசிகள் மற்றும் குழந்தைகளின் மன நலனை மேம்படுத்துவதை கருத்திற் கொண்டு, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொடர் செலவினமாக ரூ.27.83 இலட்சம் செலவில் 2 மனஇயல் நிபுணர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்படும்.

5. புழல் மத்திய சிறை வளாகத்தில் சென்னை சரக சிறைத்துறைத் துணைத் தலைவருக்கான நிருவாக அலுவலகம் அமைத்தல்.

Construction of administrative office for

Chennai Range Deputy Inspector General of Prisons in Central Prison, Puzhal.

அனைத்து சரக சிறைத்துறைத் துணைத் தலைவர் அலுவலகங்களும் மத்திய சிறை வளாகங்களில் செயல்பட்டு வருகின்றன. அதே போன்று, சென்னை சரக சிறைத்துறைத் துணைத் தலைவர் அலுவலகத்தையும் நிருவாக நலன் கருதி, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொடரா செலவினமாக ரூ.62 இலட்சம் செலவில் புழல் மத்திய சிறை வளாகத்தில் அமைக்கப்படும்.

6. 54 கிளைச்சிறைகள், 4 பார்ஸ்டல் பள்ளி, 2 தனிக் கிளைச்சிறைகள், 1 திறந்த வெளிச்சிறை மற்றும் 1 பெண்கள் கிளைச்சிறை ஆகிய 62 சிறைகளுக்கு மின்னாக்கிகள் வழங்குதல்.

Provision of 62 Generators for 54 Sub Jails, 4 Borstal School, 2 Special Sub Jail, 1 Open Air Prison and 1 Sub Jail (Women).

மின்னாக்கி (Generator) வசதி இல்லாத கிளைச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளி, தனிக் கிளைச்சிறைகள், பெண்கள் தனிச் சிறை மற்றும் திறந்த வெளிச்சிறை ஆகியவற்றில் மின் தடை ஏற்படும் நேரங்களில் பாதுகாப்பில் தொய்வு ஏற்படாமல் பணியாற்றிட, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.58.66 இலட்சம் செலவில் (தொடர் செலவினம் ரூ.5.96 இலட்சம், தொடரா செலவினம் ரூ.52.70 இலட்சம்) 62 மின்னாக்கிகள் வழங்குதல்.

7. அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில்

பணியாளர்களுக்கு பாதுகாப்புப் பெட்டக வசதியுடன் கூடிய உணவருந்தும் அறை அமைத்தல்.

Construction of dining room Pigeon hole rack with locker box for the usage of prison staff in respect of all Central Prisons, Special Prisons for Women and Borstal School, Pudukkottai.

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி ஆகிய சிறைகளில் பணிபுரியும் பணியாளர்கள் தங்களது உடைமைகளை சிறைக்கு உள்ளே எடுத்துச் செல்ல இயலாத நிலையில், அவற்றினை பாதுகாக்கவும், உணவருந்துவதற்காகவும், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பாதுகாப்புப் பெட்டக வசதியுடன் கூடிய உணவருந்தும் அறை தொடரா செலவினமாக ரூ.259 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

8. திண்டிவனம் கிளைச்சிறையை புதிய நீதிமன்ற வளாகம் அமைந்துள்ள இடத்திற்கு மாற்றுதல் .

Shifting of existing Sub Jail, Tindivanam to the new Court Complex.

திண்டிவனம் கிளைச்சிறை ஏற்கனவே நீதிமன்றங்கள் மற்றும் கருவூலம் இருந்த இடத்தில் செயல்பட்டது. தற்போது நீதிமன்றங்கள் மற்றும் கருவூலம் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால், நிருவாக நலனை கருத்திற் கொண்டு, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திண்டிவனம் கிளைச் சிறையையும் தொடரா

செலவினமாக ரூ.650 இலட்சம் செலவில் புதிய நீதிமன்ற வளாகத்திற்கு மாற்றப்படும்.

9. அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், புழல் மற்றும் திருச்சி ஆகியவற்றில் சுகாதார கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

Improving sanitation facilities in all Central Prisons and Special Prisons for Women, Puzhal and Trichy.

மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் ஆணையிட்டவாறு அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள், புழல் மற்றும் திருச்சி ஆகியவற்றில் உடையாத கழிவறைத் தொட்டி, குழாய்களுடன் கூடிய நவீன கழிப்பறைகள் (வெஸ்டர்ன்–டாய்லெட் வகை) அமைத்தல் மற்றும் கழிவு நீர்க் கால்வாய்களை புதுப்பிக்க இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொடரா செலவினமாக ரூ.1,241 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

❖ ❖ ❖

தொழில் துறை

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

மானியக் கோரிக்கை எண். 27

1. புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலர்களுக்கு ரூபாய் 26 இலட்சம் மதிப்பில் கையடக்கக் கணினி வழங்குதல்.

கனிம நிருவாகத்தினைக் கணினி மூலம் நிருவகித்து மேம்படுத்திடவும் கள ஆய்வு மேற்கொள்ளவும் மற்றும் சட்ட விரோத குவாரிகளை கட்டுக்குள் கொண்டு வரவும் 32 மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலர்கள், புவித்தொழில்நுட்ப மையத்தில் பணிபுரியும் 2 அலுவலர்கள், 3 பறக்கும் படை அலுவலர்கள் மற்றும் தலைமையகத்திலுள்ள கனிம ஆய்வுப் பிரிவிலுள்ள 2 அலுவலர்கள் ஆக மொத்தம் 39 அலுவலர்களுக்கு இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 26 இலட்சம் மதிப்பீட்டில் 39 கையடக்கக் கணினிகள் வழங்கிட இந்நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2. ஆளில்லா சிறிய ரக விமானம் மூலம் சுரங்கங்களை கண்காணித்தல்.

விதிமுறைகளுக்கு புறம்பாக எடுக்கப்படும் கனிமங்களின் கனபரிமாணத்தை துல்லியமான முறையில் அளவீடு செய்ய ஆளில்லா சிறிய ரக விமானம் மூலம் சுரங்கங்கள் மற்றும் குவாரிகள் கண்காணிக்கப்படும். இதன்மூலம் சட்டவிரோத குவாரிகள் கட்டுப்படுத்தப்பட்டு அரசிற்கு ஏற்படும் வருவாய் இழப்பு தடுக்கப்படும். அண்ணா பல்கலைக்கழக சென்னை தொழில்நுட்ப

நிறுவனத்துடன் (MIT) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் இந்நிதியாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

3. செயற்கைக்கோள் மூலம் சுரங்கங்களை கண்காணிக்கும் அமைப்பினை சிறுகனிமங்களுக்கும் அறிமுகம் செய்தல்.

பெருங்கனிமச் சுரங்கங்கள் அமைந்துள்ள குத்தகை பரப்பின் எல்லைகளிலிருந்து 500 மீட்டர் சுற்றளவிற்குள் நடைபெறும் சட்டவிரோத சுரங்கப்பணிகளை செயற்கைக்கோள் மூலம் அகமதாபாத்திலுள்ள பாஸ்கராச்சாரியா புவி மற்றும் விண்வெளி ஆய்வு நிறுவனம் (BISAG) கண்காணித்து வருவதுடன் நடைபெறும் விதிமீறல் குறித்து பெறப்படும் சமிக்ஞைகள் கள ஆய்வின் மூலம் உறுதி செய்யப்படுகிறது. இத்திட்டம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி சிறுகனிம குவாரிகளுக்கும் இந்நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்படும்.

4. குவாரி தொழிலாளர்களை தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டுவருதல்.

கனிம வளம் மிகுந்த தமிழ்நாட்டில் 503 பெருங்கனிம குத்தகைகளும் மற்றும் 3,306 சிறுகனிம குத்தகைகளும் நடைமுறையில் உள்ளன. இதில் பெருங்கனிம சுரங்கங்கள் மற்றும் சிறுகனிம குவாரிகளில் பணிபுரிந்து வரும் சுமார் 34,500 தொழிலாளர்களின் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு மேற்படி தொழிலாளர்களை தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து சம்பந்தப்பட்ட வாரிய காப்பீட்டு திட்டம் மற்றும் மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா என்ற காப்பீட்டு திட்டத்தின் கீழ் கொண்டுவர

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இந்நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் இணை இயக்குநர் மண்டல அலுவலகத்திற்கு ரூபாய் 2 கோடி திட்ட மதிப்பில் புதிய கட்டடங்கள் கட்டுதல்.

கனிம நிருவாக நலன் கருதி நான்கு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், சேலம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிதியாண்டில் சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் ரூபாய் 2 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும்.

6. கனிம ஆய்வு பணியினை திறம்பட மேற்கொள்ள ஒரு கூடுதல் இயக்குநர் பணியிடத்தினை பதவி நிலை உயர்வின் மூலம் உருவாக்குதல்

கனிம வளமிக்க இடங்களை கண்டறிந்து, கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் (மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்) திருத்த சட்டம், 2015–ன்படி, ஆய்வு மேற்கொண்டு தற்போதுள்ள விதிகளின்படி பொது ஏலத்திற்கு கொண்டு வந்து அரசுக்கு கனிம வருவாய் அதிகரிக்கச் செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணியினை திறம்பட மேற்கொள்ள மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஒரு கூடுதல் இயக்குநர் பணியிடம் ஒரு இணை இயக்குநர் பதவியை ஒருநிலை உயர்த்துவதன் மூலமாக உருவாக்கப்படும். ❖

உயர்கல்வித் துறை

மானியக் கோரிக்கை எண். 20

1. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் தொடங்குதல்.

(Introduction of New courses in Government Arts and Science Colleges)

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்க மாணாக்கர்கள் அதிக ஆர்வம் காட்டுவதால், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பில் புதியதாக 81 பாடப்பிரிவுகள் 2019–2020ஆம் ஆண்டு தொடங்கப்படும்.

2. தருமபுரி மாவட்டம், பாலக்கோடு மற்றும் நாமக்கல் மாவட்டம், மோகனூர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் நிருவாகம் மற்றும் கல்விசார் வகுப்பறை கட்டடங்கள் கட்டுதல்.

(Construction of Administrative and Academic Block in Government Polytechnic Colleges at Palacode, Dharmapuri District and Mohanur, Namakkal District)

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு மற்றும் நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு தொழில்நுட்பக் கல்வியை சிறப்பான முறையில் வழங்கும் பொருட்டும், அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தால் வரையறை செய்யப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவு செய்யும்

பொருட்டும், ஆய்வகங்கள், நூலகம், பயிற்சி பட்டறை உட்பட நிருவாக மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.37.07 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. சென்னை, மாநிலக் கல்லூரியிலுள்ள மகளிர் விடுதியினை புதுப்பித்தல், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் கூடுதலாக புதிய மகளிர் விடுதி கட்டடம் கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.

(Renovation and repair works for the existing Ladies Hostel and construction of a new additional hostel building for Ladies Hostel, Presidency College, Chennai)

இந்தியாவில் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட மூன்று மாகாணக் கல்லூரிகளில் சென்னை, மாநிலக் கல்லூரியும் அடங்கும். அவ்வகையிலான பாரம்பரியமிக்க கல்லூரியில் பயிலும் மாணவிகள் பயன்பெறும் வகையில் தற்போதுள்ள மகளிர் விடுதியில் பராமரிப்புப் பணிகள் மேற்கொண்டு புதுப்பிக்கப்படும். மேலும், அக்கல்லூரி மாணவிகளுக்காக கூடுதலாக புதிய மகளிர் விடுதி கட்டடம் கட்டப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.9.90 கோடி ஆகும்.

4. தரவு வளங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் துல்லியமான தகவல்களை உரிய காலத்தில் வழங்கி மிகச்சரியான முடிவுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, பாரதியார் பல்கலைக்கழகத்தில் நிறுவன வள திட்டமிடலை நடைமுறைப்படுத்துதல்.

(Implementation of Enterprise Resource Planning (ERP) in Bharathiar University to integrate the data sources in a seamless way and provide unified access for timely information and decision making)

பாரதியார் பல்கலைக்கழகத்திற்கான நிறுவன வள திட்டமிடுதலை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தரவு

மூலங்களை இடைவெளியற்ற வகையில் ஒருங்கிணைத்து, அதிநவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பத்துடன் துல்லியமான மற்றும் உரிய நேரத்தில் பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கான தகவல்களை ஒருங்கிணைப்பதால், நிருவாகம், நிதி, பாடத்திட்டம் மற்றும் தேர்வுகள் போன்ற பல்கலைக்கழக செயல்பாட்டு பிரிவுகளின் தகவல் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். இத்திட்டம் ரூ. 1.15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

5. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் வழிகாட்டுதல்களின்படி இணையவழி கல்வித்திட்டத்தின் கீழ் பாடங்கள் நடத்துதல்.

(Conduct of courses / programmes under online education programme in accordance with the University Grants Commission guidelines)

தமிழ்நாடு அரசால் 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழக அளவில் திறந்தநிலை மற்றும் தொலைநிலைக் கல்விமுறையினை ஒருங்கிணைத்து அதன் தரத்தினை உறுதிப்படுத்துவதுமே இப்பல்கலைக்கழகத்தின் முதன்மையான நோக்கமாகும். இணையவழி கல்வித் திட்டத்தின் கீழ், பாடங்கள் நடத்தும் இத்திட்டம், பல்கலைக்கழக மாணாக்கர்களுக்கு கல்வி உதவி சேவைகளை பாடத்திட்ட அட்டவணையின்படி ஒளித் தோற்ற விரிவுரைகள் உள்ளிட்ட முறையில் பாடங்களின் வடிவமைப்பு மற்றும் வளர்ச்சி முறைகளை தொகுத்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் வழிகாட்டுதல்களின்படி ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

6. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்களை 91 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நிறுவுதல்.

(Establishment of Learner Support Centers and Examination Centers of Tamil Nadu Open University at 91 Government Arts and Science Colleges)

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் துவங்கப்பட்டதிலிருந்து மிகக்குறைந்த செலவில் சமூகத்திற்கு தேவையான படிப்புகளை தொலைநிலைக் கல்வி மற்றும் திறந்தநிலைக் கல்வி மூலம் வழங்கி வருகின்றது. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நெறிமுறைகளின்படி, கிராமப்புறம் மற்றும் ஏழ்மை நிலையிலுள்ள மக்கள், குறிப்பாக மாணவிகளுக்கு உயர்கல்வி வாய்ப்பினை குறைந்த செலவில், உயர்ந்த தரத்தில் வழங்கும் பொருட்டு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்கள் நிறுவப்படும். இம்மையமானது ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

7. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 100 பட்டயப்படிப்பு மாணாக்கர்களின் திறனை உலகளாவிய அளவில் மேம்படுத்தும் வகையில் அயல்நாட்டு தொழில்நுட்ப பயிற்சித்திட்டத்தினை நடைமுறைப் படுத்துதல்.

(Foreign Technical Training Programme for 100 Diploma Students of Government Polytechnic Colleges to enhance the exposure of International Knowledge)

அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் திறன் மேம்படும் வகையில் வெளிநாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் குறுகிய கால பயிற்சி பெற அவர்களை அனுப்பி வைக்கும் திட்டத்தை போல, அரசு பலவகை தொழில்நுட்பக்

கல்லூரிகளில் பயிலும் 100 பட்டயப்படிப்பு மாணாக்கர்களின் திறனை உலகளாவிய அளவில் மேம்படுத்தும் வகையில், அயல்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்படுவர். இத்திட்டம் ரூ 1.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

8. பொறியியல் பட்டதாரி மாணாக்கர்களின் தொழில்நுட்பத் திறன், வேலைவாய்ப்பு பெறுதலுக்கான திறன் ஆகியவற்றை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பினை உருவாக்க வழிவகை செய்யவும் கலந்தாய்வு கூட்டங்கள் நடத்துதல்.

(Interaction meet on Enhancing Technical Skills, Employability Skills & Placement Opportunities for Engineering Graduates)

கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களில் உள்ள பொறியியல் பட்டதாரி மாணாக்கர்களின் தொழில்நுட்பத் திறன் மற்றும் வேலைவாய்ப்பு பெறுதலுக்கான திறன் ஆகியவற்றை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பினை உருவாக்க வழிவகை செய்யவும், ஒரு மண்டலத்திற்கு ரூ.20 இலட்சம் வீதம் ரூ.1 கோடி செலவில் கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்படும்.

9. தேசிய தரமதிப்பீடு மற்றும் தகுதிக் குழுவின் தரமதிப்பீட்டு சான்று பெற ஏதுவாக, தேவைப்படும் 18 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு நிதி உதவி அளித்தல்.

(Financial assistance to 18 needy Government Arts and Science Colleges to obtain accreditation from NAAC)

உயர்கல்வி நிறுவனங்கள் தரமதிப்பீட்டின் அடிப்படையிலேயே பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு, ரூசா (Rashtriya Uchchattar

Shiksha Abhiyan) மற்றும் அறிவியல் தொழில்நுட்பத் துறை (DST) போன்ற அமைப்புகளிடமிருந்து நிதி உதவி பெற இயலுமென்பதால், தரமதிப்பீடு தொடர்புடைய ஆய்வு மற்றும் இதர கட்டணங்களை செலுத்திட, தேவையுள்ள 18 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ரூ.63 இலட்சம் நிதி உதவி வழங்கப்படும்.

10. கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் 'மின் ஆளுமைத் திட்டத்தை' நடைமுறைப்படுத்துதல்.

(E-Governance initiatives in Directorate of Collegiate Education)

தமிழ்நாட்டிலுள்ள 1500–க்கும் மேற்பட்ட கல்லூரிகளின் மனிதவளம் மற்றும் நிதி மேலாண்மையை சிறப்புற நிருவகிக்க திறன்மிகு செயலமைப்பு அவசியமென்பதால், அத்தகு சிறந்த நிருவாகத்தை அளித்திட ஏதுவாக கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் 'மின் ஆளுமைத் திட்டம்' அறிமுகப்படுத்தப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.1 கோடி ஆகும்.

11. அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் அடைகாப்பு மையம் நிறுவுதல்.

(Establishment of Incubation centre in Annamalai University)

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் அடைகாப்பு மையம் நிறுவுவதன் மூலம், தொழில் துவங்க முனைபவர்கள் தங்களது கருத்துக்களை தொழில்நுட்பமாக மாற்றுவதற்கு அனைத்து உதவிகளையும் பெறலாம். இந்த மையத்தில் தொழில் துவங்க முனைபவர்களுக்கு அலுவலக இடம், ஆய்வுக்கூட வசதிகள்,

அதிவேக இணைய தொடர்பு, ஆசிரியர்களின் வழிகாட்டுதல், ஆரம்பகால நிதி உதவி பெறும் வசதி, சட்ட ஆலோசனை, காப்புரிமை பெறுதல் போன்ற அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்து தரப்படும். இந்த வசதிகளைப் பயன்படுத்தி, அதிகபட்சமாக மூன்றாண்டுகளுக்குள் தொழில் முனைபவர்கள் தங்களது கருத்துக்களை ஒரு நிறுவனமாக உருவாக்குவதோடு, குறிப்பாக கிராமப்புற பட்டதாரி இளைஞர்கள், மகளிர், ஆராய்ச்சி மாணவர்கள், தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு தொழிலதிபராகும் வாய்ப்பும், தொடங்கப்படும் தொழில்களில் பலருக்கு வேலை வாய்ப்பும், இம்மையத்தின் மூலம் உருவாகும். இம்மையமானது ரூ.2.34 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

❖ ❖ ❖

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

மானியக் கோரிக்கை எண். 45

1. 2,167 சத்துணவு மையங்களில் உள்ள பழுதுகள் (Minor Repairs) ரூபாய் 2.16 கோடி செலவில் சீர் செய்யப்படும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ், 43,283 சத்துணவு மையங்கள் வாயிலாக 49 இலட்சம் பயனாளிகளுக்கு சுவைமிக்க சூடான 13 வகையான கலவை சாதங்கள் வாரம் 5 முட்டைகளுடன் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் உணவுப்பொருட்களை சுகாதார முறையில் பராமரிக்கவும், அன்றாடம் சத்துணவினை பாதுகாப்பான முறையில் சமைப்பதற்கும் வைப்பறையுடன் கூடிய சமையலறைகள், மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வெவ்வேறு அளவுகோலின்படி கட்டப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முதற்கட்டமாக, சத்துணவு மையங்கள் கட்டப்பட்டு 10 ஆண்டுகள் முடிவடைந்த 2,167 மையங்கள், ரூபாய் 2.16 கோடி செலவினத்தில் பழுது பார்க்கப்படும்.

2. மூன்றாம் பாலினர்களுக்கென தனியாக செயலி (Mobile App) ரூபாய் 10 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

மூன்றாம் பாலினர்கள் தானாக முன்வந்து தங்களை பதிவு செய்து கொண்டு அரசின் நலத் திட்டங்களை அறிந்து கொள்ளவும், அவர்களது கல்வித் தகுதி, பயிற்சி மற்றும் பிற தகுதிகளின்

அடிப்படையில் ஏற்ற ஒரு வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ளவோ அல்லது சுயதொழில் மேற்கொள்ளவோ உதவும் வகையில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மூன்றாம் பாலினர்களுக்கென ஒரு தனி கைபேசி செயலி (Mobile App) ரூபாய் 10 இலட்சம் செலவினத்தில் உருவாக்கப்படும்.

இச்செயலி மூலம் அனைத்து மூன்றாம் பாலினர்களுடைய வயது, முகவரி, கல்வித் தகுதி, பிற பயிற்சி பெற்ற விவரம் போன்ற விவரங்களின் பதிவு முழுமையாக மேற்கொள்ளப்படும்.

3. மூன்றாம் பாலினர்களில் சிறந்த முன்மாதிரியாக திகழும் ஒருவருக்கு "மாநில விருது" ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும்.

மூன்றாம் பாலினர்களின் பிரச்சனைகளை தீர்வு காண்பதற்காகவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அரசு பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. அதன் மூலம் மூன்றாம் பாலினர்கள் இச்சமூகத்தில் அவர்கள் சந்திக்கும் எதிர்ப்புகளை மீறி, தங்களுடைய தனித் திறமைகளை கொண்டு பல்வேறு துறைகளில் முன்னேறியுள்ளனர்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இவ்வாறு பல்வேறு துறைகளில் சாதனை படைத்த மூன்றாம் பாலினரை சிறப்பிக்கும் வகையிலும், இதர மூன்றாம் பாலினர்களுக்கு முன்மாதிரியாக திகழும் வகையிலும் மூன்றாம் பாலினருக்கான "மாநில விருது" ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும்.

விருது பெறும் சாதனையாளருக்கு ரூ.1 இலட்சத்திற்கான காசோலை மற்றும் சான்று ஆகியவை வழங்கப்படும்.

4. மாண்டிசோரி முறையிலான எல்.கே.ஜி. மற்றும் யு.கே.ஜி. வகுப்புகள் தொடங்கப்பட்ட 1,350 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய மேசை நாற்காலிகள் ரூபாய் 1.22 கோடி செலவிலும், 220 அங்கன்வாடி மையங்களுக்கு ரூபாய் 22 இலட்சம் செலவிலும் மின்வசதிகள் மேம்படுத்தப்படும்.

அரசு அங்கன்வாடி மையங்கள் தரத்தினை மேலும் மேம்படுத்தும் பொருட்டும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அங்கன்வாடி மையங்களுக்கு அனுப்புவதை ஊக்குவிக்கும் வகையிலும், 2,381 அங்கன்வாடி மையங்களில் பள்ளி கல்வித்துறையுடன் இணைந்து ஏற்கனவே மாண்டிசோரி முறையிலான எல்.கே.ஜி. மற்றும் யு.கே.ஜி. வகுப்புகள் தொடங்கப்பட்டு, சுமார் 61 ஆயிரம் குழந்தைகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த வகுப்புகள் தொடங்கப்பட்ட அங்கன்வாடி மையங்களில், வட்ட வடிவலான மேசை மற்றும் நாற்காலிகள் 1,031 அங்கன்வாடி மையங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தற்போது மீதமுள்ள 1,350 அங்கன்வாடி மையங்களுக்கு வட்ட வடிவலான மேசை மற்றும் நாற்காலிகள் சுமார் ரூபாய் 1.22 கோடி செலவிலும், 220 அங்கன்வாடி மையங்களுக்கு தேவையான மின்வசதிகள் ரூ.22 இலட்சம் செலவிலும் மேம்படுத்தப்படும்.

5. 1,137 அங்கன்வாடி மையங்களுக்கு ரூபாய் 1.14 கோடி செலவில் தேவையான குடிநீர் வசதி செய்து தரப்படும்.

தமிழ்நாட்டில் மொத்தம் 54,439 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 46,922 அங்கன்வாடி மையங்கள் சொந்த கட்டிடங்களிலும் மற்றவை அரசு மற்றும் இதர கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு மையங்களில் தற்போது உள்ள தண்ணீர் வசதி ரூபாய் 1.14 கோடி செலவில் 1,137 அங்கன்வாடி மையங்களில் மேம்படுத்தப்படும்.

6. 1,282 அங்கன்வாடி மையங்களுக்கு ரூபாய் 1.54 கோடி செலவில் குழந்தை நேய கழிப்பிட (Baby Friendly Toilet) வசதி செய்து தரப்படும்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், செயல்படும் அங்கன்வாடி மையங்களுக்கு வருகை தரும் 2 வயது முதல் 5 வயது வரையிலான குழந்தைகளின் சுகாதாரத்தை பேணும் வகையில், அங்கன்வாடி மையங்களில் குழந்தை நேய கழிப்பிட (Baby Friendly Toilet) வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2019–2020ஆம் ஆண்டில் 1,282 அங்கன்வாடி மையங்களில் குழந்தை நேய கழிப்பிடம் அமைப்பதற்கு, ரூபாய் 1.54 கோடி செலவிடப்படும்.

7. ஒருங்கிணைந்த குழந்தைவளர்ச்சி திட்டத்தின் கீழ், 31 மாவட்ட திட்ட அலுவலங்களுக்கு புதிய எல்.சி.டி. புரொஜக்டர் மற்றும் இதர உபகரணங்கள் ரூபாய் 21 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஊட்டச்சத்து, தாய்–சேய் பராமரிப்பு, முன்பருவக் கல்வி போன்றவை குறித்து மக்களிடையே தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்துவது முக்கிய பணியாகும். இதுகுறித்து இத்திட்டத்தின் கீழ், பணியாற்றும் கள பணியாளர்களுக்கும் பயிற்சிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு

வருகிறது. இப்பணிகளை சிறப்பாக செய்வதற்கு உதவியாக 31 மாவட்ட திட்ட அலுவலகங்களுக்கும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.21 இலட்சம் செலவில் எல்.சி.டி, புரோஜக்டர் மற்றும் இதர உபகரணங்கள் இந்த நிதியாண்டில் வழங்கப்படும்.

8. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு இணை உணவாக வழங்கப்படும் ஊட்டச்சத்து மாவு பயன்பாடு குறித்து ரூபாய் 1 கோடி செலவில் உலகத் தரம் வாய்ந்த ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் கள ஆய்வு செய்து விரிவான அறிக்கை தயாரிக்கப்படும்.

அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்த 6 மாதம் முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகள்,11 வயது முதல் 14 வயதுடைய பள்ளி செல்லாத வளரிளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் என சுமார் 32 இலட்சம் நபர்களுக்கு இணை உணவாக சத்துமாவு வீட்டிற்கு எடுத்து சென்று உண்ணும் வகையில் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இவ்வாறு வீட்டிற்கு எடுத்து சென்று உண்ணும் வகையில் வழங்கப்படும் சத்துமாவை பயனாளிகள் குடும்பத்தில் பயன்படுத்துவது குறித்து மாதிரி கள ஆய்வு, ரூபாய் 1 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

9. சென்னை, கெல்லீஸில் இயங்கி வரும் சமூகப் பாதுகாப்புத் துறை ஆணையர் அலுவலகத்தில் புதிய இரண்டாம் தள கட்டிடம் மற்றும் கூடுதல் வசதிகள் ரூபாய் 1 கோடி செலவில் கட்டப்படும்.

சென்னை கெல்லீஸில் இயங்கி வரும் சமூகப் பாதுகாப்பு ஆணையரக அலுவலக கட்டடத்தில் தற்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன:–

★ சமூகப் பாதுகாப்பு ஆணையரகம்

★ மாநில குழந்தை பாதுகாப்பு சங்க அலுவலகம்

★ மாநில தத்து வள ஆதார அமைப்பு அலுவலகம்

★ கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வு பிரிவு

மேலும், முதன்மை நன்னடத்தை அலுவலர் மற்றும் வடமண்டல நன்னடத்தை அலுவலர்களுக்கான அலுவலக அறையும் மேற்படி கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

இச்சூழ்நிலையில் மேற்கூறிய அனைத்து அலுவலகங்களுக்கும் சமூகப் பாதுகாப்பு ஆணையர் அலுவலக கட்டடத்தில் இயங்குவதற்கு போதிய இட வசதி இல்லை. எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை கெல்லீஸில் இயங்கி வரும் சமூகப் பாதுகாப்புத் துறை ஆணையர் அலுவலகத்திற்கு தேவையான வசதிகளுடன் இணைப்பு கட்டடத்தில் இண்டாம் தளம் கட்டுவதற்கு, ரூ.1 கோடி வழங்கப்படும்.

10. இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ் கையாளப்படும் குழந்தைகள் குறித்த குழந்தை தகவல் அமைப்பு (Child Information System) என்ற புதிய மென்பொருள் ரூபாய் 65 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

குழந்தை பாதுகாப்புச் சேவைகள் திட்டம், இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தை அமல்படுத்த உதவுவதோடு,

சிரமமான சூழ்நிலையிலுள்ள குழந்தைகளுக்கு பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட சூழலை உருவாக்குவதற்காகவும் அமைக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இச்சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட இல்லங்களில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பு, வளர்ச்சியை கண்காணிப்பது மற்றும் மறுவாழ்வு குறித்த விவரங்களை, குழந்தைகளை கையாளும் அனைத்து தரப்பு அலுவலர்கள் மற்றும் அமைப்புகள் அறிவதற்கு, குழந்தைகள் குறித்த தரவுகளை (Data) இணையத்தின் மூலம் மட்டுமே ஒருங்கிணைக்க முடியும் என்பதால், குழந்தை தகவல் அமைப்பு (Child Information System) என்ற மென்பொருள் உருவாக்குவது அவசிமாகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இம்மென்பொருள் ரூபாய் 65 இலட்சம் செலவில், தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) உதவியுடன் உருவாக்கப்படும்.

11. தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் தட்டப்பாறை அரசு குழந்தைகள் இல்லங்களில் பல்நோக்கு கூடங்கள் (Multipurpose Hall). செங்கல்பட்டு, ஆத்தூர் அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்தில் தொழிற் பயிற்சி மையம் (Training Centre), ஆகியவை ரூபாய் 1.30 கோடி செலவில் கட்டப்படும்.

அரசு குழந்தைகள் இல்லங்களில் மிகவும் பின்தங்கிய வறுமையான குடும்பத்தை சார்ந்த மற்றும் பல்வேறு சமூக சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட / பாதிக்கப்படும் நிலையில் உள்ள குழந்தைகள் தங்கவைத்து பராமரிக்கப் படுகின்றனர்.

இவர்களின் நலன் சார்ந்த வளர்ச்சிக்கான நிகழ்ச்சிகளை நடத்த, தூத்துக்குடி மாவட்டம், தட்டப்பாறை அரசு குழந்தைகள் இல்லத்தில் பல்நோக்கு கூடம் (Multipurpose Hall) ஒன்றும்,

தஞ்சாவூர் அரசு குழந்தைகள் இல்லத்தில் பல்நோக்கு கூடம் ஒன்றும், செங்கல்பட்டு ஆத்தூரில் உள்ள அரசு பிற்காப்பு நிறுவனத்தில் மாணவர்களுக்கு தொழிற்பயிற்சிகள் நடத்துவதற்கு பயிற்சி மையக் கட்டடம் (Training Center) ஒன்றும், கட்டப்பட வேண்டியுள்ளது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இவை அனைத்தும் மொத்தம் ரூபாய் 1.30 கோடி செலவில் கட்டப்படும்.

12. இராயபுரம், அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் உள்ள புதிய வரவேற்புப் பிரிவு கட்டடத்தில் அலுவலக கட்டடம் மற்றும் மருத்துவ சிகிச்சை அறை ஆகியவை ரூபாய் 1.10 கோடி செலவில் கட்டப்படும்.

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ், சென்னை இராயபுரம், அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படும் சிறுவர்களின் குறுகிய கால பராமரிப்பிற்காக, ஒரு வரவேற்பு இல்லம் செயல்பட்டு வருகிறது.

இவ்வரவேற்புப் பிரிவில் சிறார்கள் அதிகபட்சமாக 4 மாத காலம் வரை தங்க வைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அறை, ஆற்றுப்படுத்துதல் அறை, பொழுதுபோக்கு அறை / செயல்பாட்டு அறை ஆகிய வசதிகளை ஏற்படுத்த ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள வரவேற்புப் பிரிவு கட்டடத்தில் முதல் தளம் மற்றும் அலுவலக அறை கட்டப்பட வேண்டி உள்ளது. எனவே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை, இராயபுரம், அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் உள்ள வரவேற்பு பிரிவில் குழந்தைகள் பயன்பெறும் வகையில், முதல் தளம் மற்றும் கூடுதல் கட்டடங்கள் ரூபாய் 1.10 கோடி செலவில் கட்டப்படும். ❖

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

மானியக் கோரிக்கை எண். 52

1. 14 வயதிற்கு மேற்பட்ட 920 மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகளுக்காக ரூ.2.55 கோடி செலவில் கூடுதலாக தொழிற்பயிற்சியுடன் கூடிய 23 பராமரிப்பு இல்லங்கள் தொடங்குதல்.

தமிழ்நாட்டில் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்காக தொழிற்பயிற்சியுடன் கூடிய 38 இல்லங்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசு நிதியுதவியுடன் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு இல்லத்திலும் அதிகபட்சமாக 40 மனவளர்ச்சி குன்றியோர் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வில்லங்களில், இல்லவாசிகளுக்கு உணவு, உறைவிடம், மருத்துவம் மற்றும் மறுவாழ்வு பணிகள் வழங்கப்படுகின்றன.

மாவட்டங்களில் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு இல்லங்கள் தேவையிருப்பதால், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம், அரசின் நிதியுதவியுடன் தொழிற்பயிற்சியுடன் கூடிய இல்லங்கள் அமைப்பது அவசியமாகும்.

எனவே, 920 மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகள் பயனடையும் வகையில் 23 மாவட்டங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசின் நிதி உதவியுடன் கூடுதலாக ரூ.2.55 கோடி செலவில் தொழிற்பயிற்சியுடன் கூடிய இல்லங்கள் அமைக்கப்படும்.

2. மனநலம் பாதிக்கப்பட்ட 1,100 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2.68 கோடி செலவில் கூடுதலாக 22 பராமரிப்பு இல்லங்கள் தொடங்குதல்.

தமிழ்நாட்டில் மனநலம் பாதிக்கப் பட்டோருக்கான இல்லங்கள் 31 மாவட்டங்களில் அரசு நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு இல்லத்திலும் அதிகபட்சமாக 50 மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வில்லங்களில், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உறைவிடம், மருத்துவம் மற்றும் மறுவாழ்வு பணிகள் அளிக்கப்படுகின்றன.

மாவட்டங்களில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான பராமரிப்பு இல்லங்களின் தேவை அதிகமாக இருப்பதால், கூடுதலாக மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்கள் அமைப்பது அவசியமாகும்.

எனவே, நடப்பு நிதியாண்டில் 1,100 மனநலம் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பயனளிக்கும் வகையில் கூடுதலாக 22 மாவட்டங்களில் மனநலம் பாதிக்கப் பட்டோருக்கான இல்லங்கள் ரூ.2.68 கோடி செலவில் அரசு நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் அமைக்கப்படும்.

3. திருநெல்வேலி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்திற்கென ரூ.1 கோடி செலவில் ஒரு புதிய கட்டடம் கட்டும் திட்டம்.

தமிழக அரசு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலமாக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல

அலுவலகத்தால் சிறப்புப்பள்ளிகள், மறுவாழ்வு இல்லங்கள், அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகக் கட்டடம் மிகவும் பழுதான நிலையில் உள்ளது. மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைகளில் மாற்றுத்திறனாளிக்கான தேசிய அடையாள அட்டை வழங்க மருத்துவ முகாம் நடைபெறுகிறது. இம்முகாமில் கலந்து கொள்ளவும் மாற்றுத் திறனாளிகள் நலத்திட்டங்கள் பற்றி அறிந்து கொள்ளவும் அவ்வப்போது மாற்றுத் திறனாளிகள் வருகை புரிகின்றனர். எனவே, நடப்பு நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகள் எளிதில் இவ்வலுவலகத்தை அணுகும் வகையில் தடையற்ற சூழலில் திருநெல்வேலி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்திற்கு ஒரு புதிய கட்டடம் ரூ. 1 கோடி செலவில் கட்டப்படும்.

4. செவித்திறன் பாதிக்கப்பட்ட 660 மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான 33 ஆரம்ப நிலை பயிற்சி மையங்களுக்கு ரூ.75 இலட்சம் செலவில் கற்பித்தல், கற்றல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்.

செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி சிறார்களின் நலனுக்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களுக்கு புதியதாக கற்பித்தல், கற்றல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்க வேண்டியது அவசியமாகிறது.

செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி சிறார்களின் நலனுக்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் 33 ஆரம்ப நிலை பயிற்சி மையங்களுக்கு கற்பித்தல்,

கற்றல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் இந்த நிதியாண்டில் ரூ.75 இலட்சம் செலவில் வழங்கப்படும். இதன் மூலம் 660 செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி சிறார்கள் பயன் பெறுவர்.

5. 266 மாற்றுத்திறனாளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் 10 அரசு சிறப்புப் பள்ளி விடுதிகளுக்கு ரூ.15 இலட்சம் செலவில் சலவை இயந்திரங்கள் வழங்குதல்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ், செயல்படும் 22 சிறப்புப் பள்ளிகளில் முதற்கட்டமாக 12 சிறப்புப் பள்ளிகளுக்கு (பார்வைத்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள் 4, செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள் 6, கடும் கை, கால் பாதிக்கப் பட்டோருக்கான சிறப்புப் பள்ளி 1 மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கான ஒரு மையம்) தலா ஒரு விசை சலவை இயந்திரம் (Power Laundary) வீதம் வழங்கப்பட்டது. இச்சிறப்புப் பள்ளிகளில் தற்போது இவைகள் பயன்பாட்டில் உள்ளன. இதன் மூலம் 850–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயன் பெற்று வருகின்றனர்.

தற்போது எஞ்சிய 10 சிறப்புப் பள்ளிகளில் (பார்வைத்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள் 6 மற்றும் செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள் 4) உள்ள விடுதிகளில் தங்கி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களின் நலன் கருதி ரூ.15 இலட்சம் செலவில் 3 சிறப்புப் பள்ளிகளுக்கு விசை சலவை இயந்திரங்களும், 7 சிறப்புப் பள்ளிகளுக்கு சலவை இயந்திரங்களும் வழங்கப்படும். இதன் மூலம் 266 மாற்றுத்திறனாளி மாணவர்கள் பயன்பெறுவர்.

6. மூளைமுடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட 500 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ரூ.15 இலட்சம் செலவில் சிறப்பு நாற்காலிகள் (Corner Seat) வழங்கும் திட்டம்.

அரசு மாற்றுத்திறனாளிகளின் தேவைகளுக்கேற்ப பல்வேறு உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் போது, இக்குழந்தைகள் அன்றாட பயிற்சிகளில் ஈடுபடுவதில் உள்ள சிரமங்களைப் போக்கி அவர்கள் சரியாகவும், வசதியாகவும் அமர்ந்து கொள்ள ஏதுவாகவும், அதேசமயம் அவர்களின் முதுகுப்பகுதியை நேராக, கால்களை சரியான அமர்வு நிலையில் வைத்துக் கொள்ளவும், சிறப்பு (Corner Seat) நாற்காலிகள் பயன்படுத்தப்படுகின்றன. இச்சிறப்பு நாற்காலி இக்குழந்தைகளின் பயிற்சி மற்றும் சரியான வளர்ச்சிக்கு உதவுகின்றது.

முதற்கட்டமாக ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட 500 மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் இந்த நிதியாண்டில் ரூ.15 இலட்சம் செலவில் இந்த சிறப்பு நாற்காலிகள் (Corner Seat) வழங்கப்படும்.

7. செவித்திறன் குறையுடையோருடன் தகவல் பரிமாற்றம் மேற்கொள்ள தொண்டு நிறுவனங்கள் மூலம் 100 ஆசிரியர்களுக்கு ரூ.10 இலட்சம் செலவில் சைகை மொழி பெயர்ப்பாளர் பயிற்சி வழங்கும் திட்டம்.

செவித்திறன் குறையுடையோர் சமுதாயத்தில் முழுமையாக பங்கேற்கும் வகையிலும் அவர்களுடன் தகவல் பரிமாற்றம் செய்யும்போது அவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில்

சைகைமொழியில் தகவலை தெரிவிக்கவும், அவர்களிடமிருந்து கருத்து மற்றும் எண்ணங்களை அறிந்துகொள்ளவும் சைகை மொழிபெயர்ப்பாளரின் பணி அனைத்து இடங்களிலும் தேவைப்படுகிறது.

தற்போது இத்தகைய சைகை மொழிபெயர்ப்பாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதால் இப்பணியினை மேற்கொள்ள தகுதியானவர்களை உருவாக்குவது அவசியம் ஆகும்.

எனவே, தற்போது அரசு பணியில் இருக்கும் சிறப்பாசிரியர்கள் மற்றும் இதர ஆசிரியர்களுக்கு (100 நபர்களுக்கு) தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் இப்பயிற்சியினை வழங்குவதற்கு ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் செவித்திறன் குறையுடையோர் ஏராளமானவர்கள் பயன் பெறுவார்கள்.

❖ ❖ ❖

தொழில் துறை

பெருந்தொழில்

மானியக் கோரிக்கை எண். 27

1. கடலூர் சிப்காட் தொழில் பூங்காவில் நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் ஆலை அமைக்க ரூபாய் 1.75 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

கடலூர் மாவட்டத்தில் சிப்காட் தொழில் வளாகத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மற்றும் வருங்காலங்களில் நிறுவப்படும் தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக, சிப்காட் நிறுவனத்தால், கடலூர் மாவட்டத்தில் நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் ஆலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தினை சிப்காட் மற்றும் தமிழ்நாடு கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (Tamil Nadu Infrastructure Fund Management Corporation) இணைந்து ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் (Special Purpose Vehicle) மூலமாக செயல்படுத்தும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் (M/s. Tamil Nadu Water Investment Company Ltd.) மூலமாக இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய். 1.75 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

2. சிப்காட் தொழில் பூங்காக்களில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களின் பங்களிப்புடன் தொழில் பூங்காக்களில்

உள்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல்

சிப்காட் தொழில் பூங்காக்களில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்கள் ஏற்கனவே அங்கு அமையப்பெற்றுள்ள உள்கட்டமைப்பு வசதிகளை தங்களது பங்களிப்புடன் மேம்படுத்த முன்வந்துள்ளதை அங்கீகரிக்கும் வகையில், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சிப்காட் நிறுவனம் ஒவ்வொரு வருடமும் ரூபாய் 10 கோடி தொகையினை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக ஒதுக்கீடு செய்யும். தொழிற்சாலைகள் / தொழில் கூட்டமைப்பின் சமபங்களிப்பான ரூபாய் 10 கோடியையும் சேர்த்து ஆக மொத்தம் ரூபாய் 20 கோடி நிதியைக் கொண்டு முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் தெரிவு செய்யப்பட்டு உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

3. **சிப்காட் தொழில் பூங்காக்களை இயற்கை எழில்மிகு தொழில் பூங்காக்களாக** (Eco Industrial Parks) **மேம்படுத்த ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்**

நிலையான, நீடித்த தொழில் வளர்ச்சியை அடையும் பொருட்டு, ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சிப்காட் தொழில் பூங்காக்களான சிறுசேரி, இருங்காட்டுகோட்டை, திருப்பெரும்பதூர், ஒரகடம், வல்லம்– வடகால், தூத்துக்குடி மற்றும் ஒசூர் தொழில் பூங்காக்களை சுற்றுச்சூழலுடன் இயைந்த இயற்கை எழில்மிகு தொழில் பூங்காக்களாக மேம்படுத்தும் திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், நீர் நிலைகள் பாதுகாப்பு, பூங்காவின் காற்றுத்தர மேம்பாடு, தண்ணீர் பாதுகாப்பிற்கு தேவையான தீர்வு, திடக்கழிவு மேலாண்மை, புதுப்பிக்கக்கூடிய ஆற்றல், மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு, தொழிலாளர்களுக்கான

குடியிருப்பு, வர்த்தக மற்றும் சமூக உள்கட்டமைப்பு வசதிகள் போன்றவை மேம்படுத்தப்படும். மேலும், சிப்காட் நிறுவனத்தின் மற்ற தொழில் பூங்காக்களின் உள்கட்டமைப்பு வசதிகளான கழிவு நீர் சுத்திகரிப்பு, நீர் நிலைகள், சாலைகள், வடிகால் அமைப்பு போன்ற வசதிகளை மேம்படுத்த இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின், நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒருங்கிணைந்த மேம்பாட்டு பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை சுமார் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

4. சிப்காட் தொழில் பூங்காக்களில் 2 இலட்சத்து 32 ஆயிரம் மரக்கன்றுகள் ரூபாய் 9.65 கோடி திட்ட மதிப்பீட்டில் நடுதல்

சிப்காட் தொழில் பூங்காக்களில் பசுமை சூழலை மேம்படுத்துவதற்காக, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுமார் 2,32,000 மரக்கன்றுகள் ரூபாய் 9.65 கோடி திட்ட மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனத்தால் நடப்படும்.

இதற்காக நடப்பாண்டில் வனத்துறை மூலம் இளங்கன்றுகள் வளர்ப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு, அடுத்த ஆண்டில், வளர்ந்த மரக்கன்றுகள் சிப்காட் தொழிற் பூங்காக்களில் அமைந்துள்ள சாலைகளின் இரபுறமும் மற்றும் திறந்தவெளி நிலப்பரப்பிலும் நடப்படும். நடப்பட்ட மரக்கன்றுகள் சிப்காட் தொழிற் பூங்காக்களில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களுடன் இணைந்து சிப்காட் நிறுவனத்தால் பராமரிக்கப்படும்.

5. சிப்காட் நிறுவனத்திற்கான இணையவழி ஒருங்கிணைந்த மென்பொருள் சேவை ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் உருவாக்குதல்

தொழில் முனைவோர்கள் தொழில் தொடர்பான அனைத்து சேவைகளையும் அவர்களது இருப்பிடத்திலேயே பெறும் வகையில்,

பயனாளிகள் எளிமையாகப் பயன்படுத்தும் விதத்தில் சிப்காட் நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளின் சேவைகளை கணினிமயமாக்கி மேம்படுத்தவும், இணைய வழி ஒருங்கிணைந்த மென்பொருள் சேவைத் திட்டமொன்று (Enterprise Resource Planning) இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 1.50 கோடி திட்ட மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனத்தில் உருவாக்கப்படும்.

6. சென்னை டைடல் பார்க்கில் – தொழில் முனைவோர் துவக்கி மையம் ரூபாய் 4.65 கோடி முதலீட்டில் ஏற்படுத்துதல் (TIDEL Start-up Hub)

வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறை சார்ந்த துவக்கத் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க டைடல் பார்க் 36 தொழில் முனைவோர் துவக்கி மையம் ஒன்று டைடல் பார்க் தரமணி வளாகத்தில் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முதற்கட்டமாக சுமார் 3,000 சதுர அடியில் ரூபாய் 4.65 கோடி முதலீட்டில் அமைக்கப்படும்.

7. செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 550 கிலோவாட் திறன் கொண்ட மின் மோட்டார் ரூபாய் 37 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்தல்

செய்யாறு, செங்கல்வராயன் மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில் கரும்பு அரைவை பகுதியில் 550 கிலோவாட் திறன் கொண்ட ஏசி மின் மோட்டார் மூலம் இயக்கப்படுகிறது. அரைவை பருவத்தில் அவசர தேவைக்காக மூன்று ஆலைகளுக்கும் பொதுவாக ஒரு மின் மோட்டார் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின்

நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 37 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்படும்.

8. சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் வடிப்பாலையில் கழிவுப் பாகு தொட்டியின் தகடுகள் ரூபாய் 49.75 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பித்தல்

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் வடிப்பாலையில் 6,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கழிவுப்பாகு தொட்டியில் கழிவுப்பாகினை சேமித்து வைக்க ஏதுவாக இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 49.75 இலட்சம் மதிப்பீட்டில் தகடுகள் புதுப்பிக்கப்பட்டு ஆலையின் திறன் மேம்படுத்தப்படும்.

9. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் வடிப்பாலை உயிர்வாயு செறிகலன் மேற்கூரை ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பித்தல்

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் வடிப்பாலையில் உள்ள உயிர்வாயு செறிகலனில் பழுதடைந்துள்ள மேற்கூரை இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு ஆலையின் திறன் மேம்படுத்தப்படும்.

10. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் உப்பு உற்பத்தியை மேம்படுத்த ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வு மேற்கொள்ளுதல்

தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் உப்பு உற்பத்தியை மேம்படுத்தும் பொருட்டு குஜராத் மாநிலம் பாவ் நகரில் அமைந்துள்ள மத்திய உப்பு

மற்றும் கடல் சார் இரசாயன ஆராய்ச்சி மையத்தின் (Central Salt and Marine Chemicals Research Institute-CSMCRI) மூலம் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

11. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் உப்பு விற்பனையை மேம்படுத்த ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வு மேற்கொள்ளுதல்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் தனது செறிவூட்டப்பட்ட உப்பின் விற்பனையை மேம்படுத்தவும், சிறந்ததொரு வணிக பெயரில் தனது உப்பு வகைகளை வெளிச் சந்தையில் அறிமுகப்படுத்தி நிலைப்படுத்தவும் சிறந்த வல்லுனர்களைக் கொண்டு இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

❖ ❖ ❖

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

சுற்றுச்சூழல்

மானியக் கோரிக்கை எண். 15

1. தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றத் தகவல் பரப்பு சேவைகள்.

தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றத்திற்கான செயல்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு "காலநிலை மாற்ற தகவல் பரப்பு சேவைகளை" வழங்க அதாவது காலநிலை மாற்றம் குறித்த தகவல்களை சேகரித்தல், பரப்புதல் ஆகிய காலநிலை மாற்றத் தகவல்களை மேற்படி திட்டத்தின் கீழ் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, காலநிலை மாற்ற தகவல் பரப்பு சேவைகளை, மாநில அரசின் சுற்றுச்சூழல் துறையினுடைய தமிழ் நாடு காலநிலை மாற்றப் பிரிவின் மூலம் துவக்கத்தில் மூன்று ஆண்டுகளுக்கு ரூபாய் 27 இலட்சம் செலவில் வழங்கப்படும். மேலும் நடப்பு 2019–2020ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூபாய் 8 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

2. தமிழ்நாட்டில் உள்ள கடற்கரைப் பகுதி, கழிமுகங்கள் மற்றும் ஏரிகளில் நுண்ணிய பிளாஸ்டிக் பொருட்களின் தாக்கம் குறித்து மதிப்பீடு செய்தல்.

பிளாஸ்டிக் பொருட்கள் நீர் வாழ் உயிரினங்களுக்கு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். நுண் பிளாஸ்டிக் பொருட்கள் கடல்வாழ்விடங்களின் நிலைபாட்டை மாற்றக்கூடிய தன்மை கொண்டதாகும்.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 81.20 இலட்சம் செலவில் நுண்பிளாஸ்டிக் பொருட்களின் நிலை குறித்த மதிப்பீடும், ஆய்வுகளும், மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ளப்படும். நடப்பு ஆண்டு 2019–2020இல் ரூபாய் 25.40 இலட்சத்தில் இத்திட்டம் செல்படுத்தப்படும்.

தமிழ் நாட்டில் உள்ள தேர்வு செய்யப்பட்ட கடற்கரைப்பகுதி, கழிமுகங்கள் மற்றும் ஏரிகளில் நுண்பிளாஸ்டிக் பொருட்களின் நிலை குறித்த அடிப்படை தகவல்கள், தாக்கங்களுக்குரிய தீர்வு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளுக்கு வாய்ப்பாக இத்திட்டம் அமையும்.

3. காலநிலை தகவமைப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், அண்ணா பல்கலைக் கழகத்தில் “காலநிலை ஸ்டுடியோ” ஒன்றினை ஏற்படுத்துதல்.

அரசு அலுவலர்கள், விஞ்ஞானிகள், இளம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கிராமப்புற பங்குதாரர்கள் ஆகியோருக்கு காலநிலை மாற்றம் குறித்த அறிவினை பயிற்றுவிப்பதன் மூலம் காலநிலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கான திறனை வளர்த்தல், அறிவாற்றல் மேலாண்மை ஆகியவற்றை மேம்படுத்தும் விதமாக, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அண்ணா பல்கலைக் கழகத்தில் காலநிலை தகவமைப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், அதாவது “காலநிலை ஸ்டுடியோ” ஒன்று ஏற்படுத்தப்படும்.

4. தேசிய பசுமைப்படை சூழல் மன்ற மாணவ, மாணவியர்களுக்கு சூழல் போட்டிகள் நடத்தி, சூழல் சுற்றுலா அழைத்துச் செல்ல மாவட்டத்திற்கு ரூபாய் 2 இலட்சம் செலவில் 32 மாவட்டங்களில் நடத்துதல்.

சூழல் சிந்தனையை மாணவர்களிடையே வலிமையடையச் செய்யவும் மற்றும் பள்ளி மாணாக்கர்களிடையே சூழல் முக்கியத்துவத்தினை பரப்பும் விதமாகவும், தேசிய பசுமைப்படை சூழல் மன்ற மாணாக்கர்களுக்கு வினாடி வினா, பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி ஆகிய மூன்று இனங்களில், எட்டாம் வகுப்பு வரை மற்றும் எட்டாம் வகுப்பிற்கு மேல் என இரண்டு பிரிவுகளாக சூழல் போட்டிகள் அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் கடந்த ஆண்டுகளில் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்கள் மட்டுமல்லாது வெற்றி பெற்ற மாணவ மற்றும் மாணவியர்ளுக்கு தனித்தனியாக சூழல் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மாவட்டத்திற்கு 2 இலட்சம் ரூபாய் வீதம், 32 மாவட்டங்களுக்கு மொத்தம்ரூபாய் 64 இலட்சம் கடந்த ஆண்டு விடுவிக்கப்பட்டது. திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, இதய தெய்வம்

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இத்திட்டம் மாவட்டத்திற்கு ரூபாய் 2 இலட்சம் வீதம் 32 மாவட்டங்களில் ரூபாய் 64 இலட்சம் செலவில் 2019–2020ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5. வாகன விழிப்புணர்வு பிரச்சாரம் மூலம், 32 மாவட்டங்களில், மாவட்டம் ஒன்றுக்கு ரூபாய் 2 இலட்சம் செலவில் பிளாஸ்டிக் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல்.

மனித சமுதாயத்திற்கும் சூழல் அமைப்புக்கும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதால், பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து பொதுமக்கள் மற்றும் மாணாக்கர்களிடையே மீண்டும் மீண்டும் எடுத்துரைப்பது மிகவும் அவசியமானதாகும்.

2013–2014ஆம் ஆண்டு முதல் 2018–2019 வரை, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் மற்றும் அரசு சாரா அமைப்புகளைக் கொண்டு நாட்டுப்பாடல், நாடகம், தெரு நாடகம், வில்லுப்பாட்டு, பாரம்பரிய நடனம் ஆகியவைகளுடன் வாகனங்கள் மூலமாக விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட விழிப்புணர்வுப் பிரச்சாரம் பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளதால், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாவட்டத்தில் 20 இடங்களில் வாகனங்கள் மூலமாக கலைக்குழுக்களின் பங்களிப்புடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சாரா நிறுவனங்கள் மூலம் மாவட்டம் ஒன்றுக்கு ரூபாய் 2 இலட்சம் செலவில், 32 மாவட்டங்களிலும் மொத்தம் ரூபாய் 64 இலட்சம் செலவில் 2019–2020ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்படும்.

6. ஈரோடு மாவட்டம் பவானி வட்டத்தில் அமைந்துள்ள ஓடத்துரை ஏரியினை சூழல் மறுகொணர்வு செய்தல்.

ஈரோடு மாவட்டம், பவானி வட்டத்தில் உள்ள ஓடத்துரை ஏரியின் மூலம் 45.84 மில்லியன் கனஅடி நீர் கொள்ளளவுடன் 3 கழுங்குகள் மூலம் 172.64 ஏக்கர் விளை நிலங்களுக்கு நீர்பாசன வசதி செய்யப்பட்டு வருகிறது. இந்த ஏரியானது, வருடம் முழுவதும் தண்ணீர் இருக்கும் ஏரியாகவும், வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவ மழைக்காலங்களில் இந்த ஏரி தண்ணீர் பெறும் வசதி உள்ளது.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்த ஏரியினை நடப்பு 2019–2020ஆம் நிதியாண்டில் சூழல் மறுகொணர்வு செய்து மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர சூழல் மறுகொணர்வு பணிகள் ரூபாய் 320 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

7. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின், அரியலூர் மாவட்ட புதிய அலுவலகக் கட்டடம் சுமார் ரூ.3 கோடி செலவில் கட்டுதல்.

அரியலூரில் இயங்கி வரும் மாவட்ட வாரிய அலுவலகம் தற்போது வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகம் அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் அமைந்துள்ள 650 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கவும், கண்காணிக்கவும் இயங்கி வருகிறது.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2019–2020ஆம் நிதி ஆண்டில் அரியலூர் மாவட்டத்தில் வாரியத்திற்கு புதிய அலுவலக கட்டடம் ரூபாய் 3 கோடி செலவில் கட்டப்படும்.

8. நீர், காற்று, நிலம் மாசு குறித்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறும்படங்கள் ரூபாய் 50 இலட்சம் செலவில் தயாரித்தல்.

உலக சுற்றுச்சூழல் தினம், விநாயக சதுர்த்தி விழா, தீபாவளி, மற்றும் போகிப்பண்டிகை தினங்களில் வாரியத்தால் ஆண்டுதோறும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது.

இதனை விரிவுபடுத்தும் வகையில், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு குறும்படங்களை, சுற்றுச்சூழல் மன்றங்கள் மற்றும் திரையரங்குகளில் திரையிட ஏதுவாக 2019–2020ஆம் நிதி ஆண்டில் நீர், காற்று மற்றும் நிலம் மாசு குறித்த விழிப்புணர்வு குறும்படங்கள் ரூபாய் 50 இலட்சம் செலவில் தயாரிக்கப்படும்.

9. வாரியத்தின் சுற்றுச்சூழல் பயிற்சி மையம் மூலம் அனைத்து பயனாளிகளுக்கும் காற்று மாசு மற்றும் அதன் விளைவுகள்

குறித்த பயிற்சி வகுப்புகள் ரூபாய் 50 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

காற்று மாசு மிகப்பெரிய சுற்றுச்சூழல் சவால்களில் ஒன்றாகும்.

காற்று மாசு மற்றும் அதன் விளைவுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2019–2020ஆம் நிதி ஆண்டில் வாரியத்தின் சுற்றுச்சூழல் பயிற்சி மையம் மூலம் அனைத்து பயனாளிகளுக்கும் ரூபாய் 50 இலட்சம் செலவில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

10. சென்னையில் உள்ள வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தை சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம், 1986–ன் கீழ், தரசான்றிதழ் பெறுவதற்காக சுமார் ரூ.1.5 கோடி செலவில் தேவையான ஆய்வக உபகரணங்கள் வாங்கப்படும்.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னையில் உள்ள வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தின் தரத்தினை உயர்த்தி 1986ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகளின்படி, தரச்சான்றிதழ் பெறுவதற்காக 2019–2020ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 1.5 கோடி செலவில் ஆய்வக உபகரணங்கள் வாங்கப்படும்.

11. பவுண்டரி தொழிலகங்களுக்கு அரசாணை (நிலை) எண். 127, சுற்றுப்புறம் மற்றும் வனத் (சு.சூ.3) துறை, நாள்: 08.05.1998–லிருந்து விலக்கு அளிக்க, வாரியம் மூலம் ஒரு வல்லுநர் குழு அமைத்து, ஆய்வு செய்து நடவடிக்கை எடுத்தல்.

பவுண்டரி தொழிலகங்கள் அரசாணை (நிலை) எண்.127, சுற்றுப்புறம் மற்றும் வனத் (சு.சூ.3) துறை, நாள்: 08.05.1998–ன்

படி சில குறிப்பிட்ட ஆறுகளிலிருந்து 5 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் அமைக்க தமிழக அரசு தடைவிதித்துள்ளது. தற்போது பவுண்டரி தொழிலகங்கள் உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் மற்றும் காற்று மாசு தடுப்பு சாதனங்களில் நவீன தொழிற் நுட்பங்களை புகுத்தியுள்ளதால் காற்று மற்றும் நீர்நிலைகளில் மாசு ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2019–2020ஆம் நிதி ஆண்டில் ஒரு வல்லுனர் குழுவினை ஏற்படுத்தி பவுண்டரி தொழிலகங்களை ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

12. காற்றின் தன்மையை கண்காணிக்கும் திறனை அதிகரிக்க 8 மாவட்டங்களில் புதியதாக காற்று தர கண்காணிப்பு மையங்களை ரூபாய் 1.4 கோடி செலவில் ஏற்படுத்துதல்.

வாரியம் 24 மாவட்டங்களில் 28 தேசிய காற்று கண்காணிப்பு நிலையங்களையும், 9 தொடர் காற்று கண்காணிப்பு நிலையங்களையும் நிறுவி உள்ளது.

அனைத்துமாவட்டங்களிலும்காற்றின்தரத்தைகண்காணிக்கும் விதமாக, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மீதமுள்ள 8 மாவட்டங்களில் தலா மூன்று காற்று தர கண்காணிப்பு மையங்களை 2019–2020ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 1.4 கோடி செலவில் நிறுவப்படும்.

13. ஆறுகளில் நீரின் தன்மையை கண்காணிக்கும் பொருட்டு வாரியத்தில் நீர் தர மேலாண்மை பிரிவினை ரூபாய் 50 இலட்சம் செலவில் உருவாக்குதல்.

மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம், நாட்டில் 351 ஆறுகள் மாசடைந்துள்ளதாகவும், அவற்றுள் தமிழகத்தில் 6 ஆறுகள் மாசடைந்துள்ளதாகவும் அறிவித்துள்ளது.

பல்வேறு துறைகளின் உதவியுடன் மாசினை குறைப்பதற்கான செயல்திட்ட அறிக்கையினை தமிழக அரசு தயாரித்து மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு சமர்ப்பித்துள்ளது.

மேற்படி செயல்திட்ட அறிக்கையினை பல்வேறு துறைகள் நடைமுறைப்படுத்தி வருகின்றனவா என்பதை கண்காணிப்பதற்கு இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வாரியத்தில் நீர் தர மேலாண்மை பிரிவு ஒன்று 2019–2020ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 50 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

14. பள்ளி மாணவர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை அறிந்து கொள்ளும் வகையில் 300 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூபாய் 1.5 கோடி செலவில் திரவ படிக காட்சிபடுத்தும் கருவி (LCD Projector)வழங்குதல்.

பள்ளி மாணவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, மற்றும் இதர சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை அறிந்து கொள்ளும் வகையில் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2019–2020ஆம் நிதி ஆண்டில் 300 அரசு மேல்நிலை பள்ளிகளுக்கு ரூபாய் 1.5 கோடி செலவில் திரவ படிக காட்சிபடுத்தும் கருவி வழங்கப்படும்.

❖ ❖ ❖

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

மானியக் கோரிக்கை எண். 13

1. டெல்டா மற்றும் பிற மாவட்டங்களில் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு நேரடி நெல் கொள்முதல் நிலைய வாடகை கட்டிடங்களுக்கு பதிலாக 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கீரீட் தளத்துடன் கூடிய 25 நேரடி நெல் கொள்முதல் நிலைய சொந்தக் கட்டிடங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் வாடகையில் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை தவிர்க்கும் வகையில் அடிப்படை வசதிகளுடன் கூடிய நிரந்தர கட்டடம் கட்டித்தர ஒவ்வொரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கும் 100 மெ.டன் கொள்ளளவு நெல்லினை சேமிக்கும் வகையில், நெல் உலர்களம், நெல்தூற்றும் இயந்திரம், ஈரப்பதமானி மற்றும் மின்னணு தராசு போன்ற வசதிகளுடன் கூடிய நிரந்தர கட்டடம் கட்ட அரசால் அறிவிக்கப்பட்டு படிப்படியாக திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் 25 எண்ணிக்கையிலான சிமெண்ட் கான்கீரிட் தளத்துடன் (RCC Roof) கூடிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

2. டெல்டா மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் பயன்பாட்டிற்காக 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 100 எண்ணிக்கையிலான நெல் உலர்த்தும் களங்கள் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, டெல்டா மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் நலன் கருதி அவர்களால் பயிரிடப்படும் நெல் மற்றும் பருப்பு வகைகளை உலர வைத்து கொள்முதல் செய்தவற்கு வசதியாக 100 நெல் கொள்முதல் நிலையங்களில் 4,000 சதுரடி பரப்பளவில் தலா ரூபாய் 13 இலட்சம் வீதம் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெல் உலர்களம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் அமைக்கப்படும்.

3. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் இயந்திர கையாளுமை மற்றும் மூட்டை தைத்தல் போன்ற பணிகள் மின்தடையால் ஏற்படும் பாதிப்பினை தவிர்க்க 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின் ஆக்கிகள் நிறுவப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பொது விநியோகத்திட்டத்திற்கான நகர்வுகள் அதாவது பொருட்களை லாரியில் ஏற்றுதல் மற்றும் இறக்குதல், அட்டியிடுதல் மூட்டை தைத்தல் போன்ற பணிகள் மனித உழைப்பினைக் கொண்டு தொழிலாளர்களால் கையாளப்படுகின்றன, மனித ஆற்றலினால் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்த்திடவும், தொழிலாளர்கள் பற்றாக்குறையை கருத்தில் கொண்டும் தற்பொழுது கிடங்கு பகுதிகளில் மின்தடை ஏற்படும்

தருணங்களில் இயந்திர கையாளுமை மற்றும் தைத்தல் போன்ற பணிகள் பாதிப்படைவதை தவிர்க்கும் பொருட்டு 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின் ஆக்கிகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் நிறுவப்படும்.

4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு சொந்தமான நிலத்தில் ஆக்கிரமிப்புகள் உருவாகாமல் தடுக்கும் வகையில் நில எல்லையில் 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாப்பு சுற்றுச் சுவர்கள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கு வளாகங்களின் நில பாதுகாப்பினை கருத்தில் கொண்டும், ஆக்கிரமிப்புகளை தடுக்கும் நோக்கத்துடனும் முன்னுரிமை அடிப்படையில் நில ஆக்கிரமிப்பு பிரச்சனைக்குள்ளான கிடங்கு வளாகங்களில் மனையின் பரப்பளவு எல்லையில் 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாப்பு சுற்றுச்சுவர் **(Compound Wall)** நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பயன்பாட்டில் இருந்து வரும் கிடங்குகளில் பழைய கடப்பாகல் தரை அமைப்பினை மாற்றி 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன அமைப்பிலான சிமெண்ட் கான்கிரீட் தரை அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பயன்பாட்டில் உள்ள பழமையான கிடங்குகளில் கடப்பாகல் தரை அமைப்புகள் முற்றிலுமாக சேதமடைந்து மேடு பள்ளமாக இருப்பதால் தரையில் உள்ள தானியங்களை சுத்தம்

செய்யவும், தானிய பைகளை அட்டியிடவும் சிரமமாக உள்ளதாலும், தானிய இழப்பு ஏற்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு கிடங்குகளின் சேதமடைந்த கடப்பாகல் தரை அமைப்புகளை முற்றிலுமாக அகற்றிவிட்டு 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன அமைப்பிலான சிமெண்ட் கான்கிரீட் தரை நபார்டு நிதியுதவியுடன் அமைக்கப்படும்.

6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான 13 நவீன அரிசி ஆலைகளில் 25 ஆண்டுகள் பழமையான, பழுதடைந்த மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் பயன்பாட்டில் உள்ளன. அவை சிமெண்ட் கான்கிரிட் தளத்துடன் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளாக 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாற்றியமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அரிசி ஆலைகளில் புழுங்கல் அரிசி அரவை செய்திடவும் மற்ற தேவைகளுக்கும் தண்ணீர் மிக அவசியமானதாகும். அதை சேமித்து வைக்கும் தற்போது உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் சுமார் 25 முதல் 35 வருடங்கள் வரை பழமைவாய்ந்து, பழுதாகி இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அரவை செய்யும் பணி பாதிப்பிற்குள்ளாகிறது. எனவே, 13 ஆலைகளில் உள்ள பழைய மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை அகற்றி புதியதாக 1,00,000 லிட்டர் நீர்கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் மாற்றியமைக்கப்படும்.

7. திறந்தவெளி சேமிப்பு மையங்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், கிடங்குகள் ஆகியவற்றில் சேமிக்கப்படும் உணவு தானியங்களின் ஈரப்பதத்தினை ஆய்வு செய்வதற்கு

200 எண்ணிக்கையிலான ஈரப்பதமானிகள் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திறந்தவெளி சேமிப்பு மையங்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், கிடங்குகள் ஆகியவற்றில் சேமிக்கப்படும் உணவு தானியங்களின் ஈரப்பதத்தினை ஆய்வு செய்வதற்கு 200 எண்ணிக்கையிலான ஈரப்பதமானிகள் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

8. கிடங்குகளில் உணவு தானியப் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அட்டிகளில் மாலை நேரப் பூச்சிகள் தாக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு 600 எண்ணிக்கையிலான புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் உணவு தானிய பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அட்டிகளில் உள்ள உணவு தானியங்களை சேதப்படுத்தும் பூச்சிகள், அட்டிகளில் இருந்து மாலை நேரம் வெளி வருவதனை புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகளில் உள்ள விளக்கு அதனை ஈர்ப்பதால் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இயலும். மேலும், பூச்சிக்கொல்லி மருந்து கொள்முதல் செய்வதனை குறைத்து புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் மூலம் பூச்சிகளை கட்டுக்குள் கொண்டு வருவது அவசியமாகிறது. எனவே 600 எண்ணிக்கையிலான புற ஊதாக் கதிர் விளக்கு பொறிகள் 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

9. கிடங்குகள், திறந்த வெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உணவு தானியங்களை பாதுகாப்பாக சேமிப்பதற்கும் மற்றும் காற்றோட்டமான வசதி அமைந்திட 20,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச் செருகு கட்டைகள் (Poly Pallet) 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சொந்த கிடங்குகள் மற்றும் வாடகை கிடங்குகள், திறந்தவெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் சேமிக்கப்படும் உணவு தானியங்களை தரைக்கும், உணவு தானிய அட்டிகளுக்கும் இடையே மூட்டை இடைச் செருகு கட்டைகள் (Poly Pallet) ஈரகாப்பு மரக்கூளங்களாக (Dunnage) பயன்படுத்தும் போது சிறந்த காற்றோட்ட வசதிக்கும், உணவு தானிய பொருட்கள் தரம் குறையாமல் சேமிப்பதற்கும் வழிவகை செய்கிறது. எனவே, 20,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச் செருகு கட்டைகள் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

10. உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையில் உள்ள சென்னை மாநகர துணை ஆணையாளர், உதவி ஆணையாளர், மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகங்களுக்கு 1.86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 340 எண்ணிக்கையிலான மேசைக்கணினிகள் (Desktop) வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாட்டில் பொது விநியோகத்திட்டம்

முழு கணினிமயாக்கப்பட்டு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் அன்றாடம் குடும்ப அட்டைகளில் ஏற்படும் முகவரி மாற்றம், குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், நீக்கல், குடும்ப அட்டை இரத்து உள்ளிட்ட அனைத்து மாற்றங்களையும் இணைய வழி (Online) மூலம் மேம்படுத்துவதற்கும், அத்தியாவசியப் பண்டங்களின் ஒதுக்கீடு, நகர்வு / நுகர்வு விவரங்களை இணைய வழி மூலம் தொடர் கண்காணிப்பில் கொண்டு வருவதற்கும் ஏதுவாக உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையில் உள்ள சென்னை மாநகர துணை ஆணையாளர், உதவி ஆணையாளர், மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகங்களுக்கு 1.86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 340 எண்ணிக்கையிலான மேசைக்கணினிகள் (Desktop) அரசு நிதியில் வழங்கப்படும்.

11. பொது விநியோகத்திட்ட செயல்பாடுகளை கண்காணிக்க உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையில் பணிபுரியும் 128 களப்பணியாளர்களுக்கு 6 இலட்சத்து 14 ஆயிரத்து 400 ரூபாய் மதிப்பீட்டில் குறிப்பிட்ட பயனாளர் குழுமம் – செறிவட்டை (CUG-SIM CARD) வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பொது விநியோகத்திட்ட செயல்பாடுகளை கண்காணிக்கும் விதமாக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கண்காணிப்பாளர் நிலையில் பணிபுரியும் 49 பணியாளர்கள் மற்றும் தணிக்கை ஆய்வாளர் நிலையில் உள்ள 79 பணியாளர்கள், ஆக மொத்தம் 128 களப்பணியாளர்களுக்கு ரூ.400/– கட்டண வீதத்தில் குறிப்பிட்ட பயனாளர் குழுமம் – செறிவட்டை (CUG-SIM CARD) ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 6,14,400/– மதிப்பீட்டில் அரசு நிதியில் வழங்கப்படும்.

12. முதியோர் ஓய்வூதிய திட்ட (OAP) மற்றும் அன்னப்பூர்ணா திட்டப் (ANP) பயனாளிகளுக்கு 48.51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4,30,465 மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாட்டில் தற்போது 4,21,165 முதியோர் ஓய்வூதிய திட்டப் (OAP) பயனாளிகளும் மற்றும் 9,300 அன்னப்பூர்ணா திட்டப் (ANP) பயனாளிகளும் ஆக மொத்தம் 4,30,465 பயனாளிகள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், முறையே தலா 5 கிலோ மற்றும் 10 கிலோ அரிசி பெற்று பயன் அடைந்து வருகின்றனர். அவர்களுக்கு மற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கியது போல மின்னணு குடும்ப அட்டைகள் ரூபாய் 48.51 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நிதியில் வழங்கப்படும்.

13. தமிழ்நாட்டில் இளம் நுகர்வோர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு தகவல்களை கொண்டு சென்றிட 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நுகர்வோருக்கான விழிப்புணர்வு மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாட்டில் பள்ளி / கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து நுகர்வோர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பான கண்காட்சி கருத்தரங்கம் மற்றும் பல்வேறு போட்டிகள் நடத்தி பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிட நுகர்வோர் நல நிதியிலிருந்து ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் நுகர்வோர் விழிப்புணர்வு மேம்படுத்தப்படும்.

14. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் 60 சேமிப்பு கிடங்குகளிலும், பணியாற்றும் பணியாளர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின்னணு விரல் ரேகை (Bio-metric) முறையிலான வருகைப்பதிவேடு திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் அனைத்து சேமிப்பு கிடங்குகளிலும் பணியாற்றும் ஊழியர்களின் வருகையினை கண்காணிக்க மின்னணு விரல் ரேகை (Bio-metric) வருகைப் பதிவேடு திட்டத்தை 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன நிதியில் செயல்படுத்தப்படும்.

15. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் 60 சேமிப்பு கிடங்குகளிலும், சேமித்து வைக்கப்படும் சரக்குகளை பாதுகாத்திட, 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மறைகாணிகள் (CCTV) நிறுவப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களை பாதுகாக்கும் பொருட்டு மறைகாணிகள் (CCTV) 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன நிதியில் நிறுவப்படும்.

16. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் 60 சேமிப்பு கிடங்குகள், மண்டல அலுவலகங்கள் மற்றும் அனைத்து ஊழியர்களின் குடியிருப்புகளில் மின்சாரம் சேமிக்கும் பொருட்டு குழாய் வடிவ விளக்குகளை 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒளிர்விமுனை (LED) விளக்குகளாக மாற்றியமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் மண்டல அலுவலகங்கள் மற்றும் சேமிப்பு கிடங்குகளிலும் இதனை சார்ந்த ஊழியர்கள் குடியிருப்புகளிலும் மின்சாரத்தினை சேமிக்கும் பொருட்டு தற்போது பயன்பாட்டில் உள்ள குழாய் வடிவ ஒளிரும் விளக்குகள் அனைத்தையும் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒளிர்விமுனை (LED) விளக்குகளாக தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன நிதியில் மாற்றியமைக்கப்படும்.

❖ ❖ ❖

கைத்தறி, கைத்திறன் துணிநூல் துறை

மானியக் கோரிக்கை எண். 17

1. தருமபுரி லூம்வேர்ல்டு விற்பனை நிலையத்தினை நவீனப்படுத்துதல்.

வாடிக்கையாளர்களை கவரும் வண்ணம் பட்டுப் பிரிவு, பருத்திப் பிரிவு மற்றும் அறிஞர் அண்ணா பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஆகிய மூன்று பிரிவுகளை உள்ளடக்கிய தர்மபுரி லூம்வேர்ல்டு விற்பனை நிலையத்தை, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்படும்.

2. காஞ்சிபுரத்தில் வடிவமைப்பு மையம் அமைத்தல்.

பாரம்பரிய வடிவமைப்புகளுடன் தொன்மை மாறாமல் புதிய வடிவமைப்புகளை காஞ்சிபுரம் பட்டுப் புடவைகளில் அறிமுகப்படுத்த, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, காஞ்சிபுரத்தில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் வடிவமைப்பு மையம் (Design Studio) நிறுவப்படும்.

3. சிறந்த வடிவமைப்புகளை உருவாக்கும் நெசவாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையினை உயர்த்தி வழங்குதல்.

பருத்தி மற்றும் பட்டு இரகங்களில் நவீன வடிவமைப்புகளை உருவாக்கும் நெசவாளர்களுக்கு முதல், இரண்டு மற்றும்

மூன்றாம் பரிசாக முறையே ரூபாய் 5,000, ரூபாய் 3,000 மற்றும் ரூபாய் 2,000 வழங்கப்பட்டு வருவதை முறையே ரூபாய் 10,000, ரூபாய் 6,000 மற்றும் ரூபாய் 4,000 ஆக உயர்த்தி வழங்க, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 8 இலட்சம் நிதி வழங்கப்படும்.

4. மாற்றுத்திறனாளிகளுக்கான மின்காந்த அசைவுடன் கூடிய கைத்தறியினை உருவாக்குதல்.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாற்றுத்திறனாளிகள் வெவ்வேறு விதமான அமைப்புகளுடைய துணிகளை நெய்வதற்கேற்ற மின் காந்த அசைவுடன் கூடிய கைத்தறி, ரூபாய் 5 இலட்சத்து 56 ஆயிரம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

5. கோ–ஆப்டெக்ஸ் விளம்பரப் பலகைகளை நிறுவுதல்.

கோ–ஆப்டெக்ஸ் இரகங்களை மக்களிடையே நன்றாக விளம்பரப்படுத்த, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 5 முக்கிய இடங்களில் ரூபாய் 35 இலட்சம் மதிப்பில் ஒளி உமிழும் இரு முனைய (LED) விளம்பரப் பலகைகள் நிறுவப்படும்.

6. கோ–ஆப்டெக்ஸின் 5 விற்பனை நிலையங்களை நவீன மயமாக்குதல்.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கோ–ஆப்டெக்ஸின் 5 விற்பனை நிலையங்களை ரூபாய் 150 இலட்சம் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்படும்.

7. கோ–ஆப்டெக்ஸ் புதிய ஆடை இரகங்களை அறிமுகம் செய்தல்.

வாடிக்கையாளர்களை கவரும் வண்ணம் பெண்களுக்கான பட்டு லினன் சேலை இரகங்களையும், ஆண்களுக்கான குர்த்தா ஆயத்த ஆடை இரகங்களையும், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 15 இலட்சம் மதிப்பில் அறிமுகப்படுத்தப்படும்.

❖ ❖ ❖

காலநடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

காலநடை பராமரிப்பு

மானியக் கோரிக்கை எண். 6

1. கறவை மாட்டுப் பண்ணையத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்திட பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்துக் குச்சிகள் ஒன்றுக்கு ரூ.1,200 மதிப்பில் 50,000 எண்ணிக்கையில் வழங்கி, செயற்கைமுறை கருவூட்டல் பணி மேற்கொள்ள ரூ.4.50 கோடி செலவிடப்படும்.

பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடனும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்திடவும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ரூ.4.50 கோடி மதிப்பில் 50,000 பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்துக் குச்சிகள் கொள்முதல் செய்யப்பட்டு, 75 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இந்த வசதியைப் பயன்படுத்துவதால், 17,500 முதல் 20,000 உயர் மரபின கிடேரி கன்றுகளை உற்பத்தி செய்ய இயலும்.

2. தமிழகத்தின் பாரம்பரிய உள்நாட்டு இனங்களான பர்கூர், காங்கேயம், புலிக்குளம், உம்பளாச்சேரி மற்றும் சிவப்பு சிந்தி ஆகியவற்றைப் பாதுகாத்து அதிநவீன கருமாற்றுத் தொழில்நுட்பம் மூலமாக 169 கன்றுகளை உருவாக்குவதற்காக ரூ.4.54 கோடி செலவிடப்படும்.

நமது பாரம்பரிய உள்நாட்டு இனங்களான பர்கூர், காங்கேயம், புலிக்குளம் மற்றும் உம்பளாச்சேரி ஆகியவற்றைப் பாதுகாத்திட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.4.54 கோடி நிதி ஒதுக்கீட்டில், உயரிய இனப்பெருக்கத் தொழில்நுட்பமான கருமாற்றுத் தொழில்நுட்பம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் பெறப்படும் காளைக் கன்றுகள் உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் பயன்படுத்தப்படும்.

3. ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசிப்பணி 66 இலட்சம் செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு ரூ.2.50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

நச்சுயிரி கிருமிகளால் ஏற்படும் ஆட்டுக்கொல்லி நோய், ஆடுகள் வளர்க்கும் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானத்தை பாதிக்கும் ஒரு முக்கியமான நோயாகும். மாநிலத்தில் உள்ள சிறிய அசைபோடும் பிராணிகளுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.2.50 கோடி செலவில் ஆட்டுக் கொல்லி நோய் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

4. மாநிலத்தில் உள்ள கால்நடைகளுக்கு ரூ.1.63 கோடி செலவில் கன்றுவீச்சுநோய் (Brucellosis கடுங்கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

கன்றுவீச்சு நோயானது விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு பரவும் ஒரு முக்கியமான நோயாகும். இந்நோய், அனைத்து கால்நடைகளையும் தாக்கக்கூடியது. இந்நோய் தாக்கத்தினை கடுங்கண்காணிப்பு மூலம் கண்டறிந்து, தடுப்பூசிப்பணி மேற்கொள்ள வேண்டும். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.1.63 கோடி நிதி ஒதுக்கீட்டில், மாநிலம் முழுவதும் உள்ள கால்நடைகளில் இரத்த மாதிரிகளை சேகரித்து, நோய் கண்டறியும் கடுங்கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்படும்.

5. விவசாயிகளின் 33,000 ஏக்கர் நிலத்தில் ரூ.5.66 கோடி செலவில் கோ(எப்எஸ்) 29, கம்பு நேப்பியர், சோளம் மற்றும் காராமணி போன்ற பசுந்தீவனப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும்.

தீவன உற்பத்தியை பெருக்கும் நோக்கத்தில், 50,000 விவசாயிகளின் 5,000 ஏக்கர் நிலத்தில் இறவை பாசனத்தின் மூலம் பல்வகைப் பயிர்களான கோ(எப்எஸ்) 29, கம்பு நேப்பியர், சோளம், வேலிமசால், தட்டைப் பயிறு சாகுபடி செய்யப்படும். 1.12 இலட்சம் விவசாயிகளின் 28,000 ஏக்கர் மானாவாரி நிலத்தில் சோளம் மற்றும் காராமணி ஆகியவை சாகுபடி செய்யப்படும். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.5.66 கோடி செலவில் இத்திட்டம் 1.62 இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.

6. தரமான பசுந்தீவன கோ(எப்எஸ்) 29 விதைகள் 43.80 மெ.டன் அளவில் உற்பத்தி செய்யும் பொருட்டு ரூ.70 இலட்சம் செலவில் ஈச்சங்கோட்டை, நடுவூர், செட்டிநாடு மற்றும் படப்பை ஆகிய துறையின் நான்கு கால்நடை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும்.

பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் விவசாயிகளுக்குத் தேவையான தரமான பசுந்தீவன விதைகளை வழங்கிட, உயரிய விதை உற்பத்தி முறைகளை கடைபிடிப்பதன் மூலம் செயல்படுத்தலாம். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி உயரின கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை, மாவட்ட கால்நடைப் பண்ணை, நடுவூர், செட்டிநாடு மற்றும் தீவனப் பண்ணை, படப்பை ஆகிய பண்ணைகளில் இத்திட்டம் ரூ.70 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

7. பசுந்தீவன உற்பத்தியை அதிகரிப்பதற்கு விதைகள், உரம் மற்றும் எரு அடங்கிய நான்கு கிலோ கிராம் விதைத் தொகுப்பு ரூ.5.41 கோடி செலவில் 90,000 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும்.

அதிக விளைச்சல் தரக்கூடிய தானிய வகை பசுந்தீவனம் மற்றும் பயறு வகை பசுந்தீவன விதைத் தொகுப்பு 90,000 விவசாயிகளுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.5.41 கோடி செலவில் 9,000 எக்டேர் பரப்பளவில் பயிரிடுவதற்காக வழங்கப்படும்.

8. இனப்பெருக்க உள்ளீடுகளான திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்துக் குச்சிகள் ஆகியவற்றை விநியோகிக்கும் வலையமைப்பினை வலுப்படுத்துவதற்காக வாகனம் ஒன்றிற்கு ரூ.15 இலட்சம் வீதம் 10 போக்குவரத்து வாகனங்கள் ரூ.1.50 கோடி செலவில் வழங்கப்படும்.

செயற்கைமுறை கருவூட்டல் பணி தொய்வின்றி நடைபெற தேவையான இடுபொருட்கள் வழங்குவதற்காக அரியலூர், கரூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், நாகப்பட்டினம், நாமக்கல், தேனி, திருப்பூர், திருவள்ளூர் மற்றும் திருவாரூர் ஆகிய 10 மாவட்ட கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகளுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.1.50 கோடி செலவில் 10 போக்குவரத்து வாகனங்கள் வழங்கப்படும்.

9. சேலம் மேச்சேரி செம்மறியாடுகளின் மரபணுவினை உயர்த்த, 1,027 தரம் உயர்த்தப்பட்ட கிடாக்குட்டிகள் சேலம், திருப்பூர், கரூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு ரூ.5.25 கோடி செலவில் வழங்கப்படும்.

சேலம், திருப்பூர், கரூர் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் இயற்கை முறை இனவிருத்தி மூலம் மேச்சேரி செம்மறியாடுகளின் மரபணு முன்னேற்றத்திற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.5.25 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம், 1,027 தரம் உயர்த்தப்பட்ட மேச்சேரி இன கிடாக்குட்டிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

10. வரையறை செய்யப்படாத செம்மறியாடுகளின் மரபியல் தரத்தை செயற்கை முறை கருவூட்டல் மூலம் மேம்படுத்துவதற்காக, சேலம் மாவட்டத்தில் மேச்சேரி செம்மறியாட்டின் திரவ விந்து உற்பத்தி நிலையம் ரூ.2.23 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

செம்மறியாடுகளின் இறைச்சி உற்பத்தித் திறன்னு பண்புகளை மேம்படுத்திட, அதிக மரபியல் தரம் கொண்ட மேச்சேரி செம்மறியாடுகளின் கிடாக்களிலிருந்து விந்து சேகரித்து அதனை வரையறை செய்யப்படாத செம்மறியாடுகளில் பயன்படுத்தி அதன் தரத்தினை உயர்த்துவதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சேலம் மாவட்டத்தில், ரூ.2.23 கோடி செலவில் ஒரு திரவ விந்து உற்பத்தி நிலையம் நிறுவப்படும். இத்திட்டம் சேலம், திருப்பூர், கரூர், நாமக்கல், ஈரோடு மற்றும் தருமபுரி மாவட்டங்களில் 46,080 செம்மறியாடுகளில் செயற்கைமுறை கருவூட்டல் மூலம் செயல்படுத்தப்படும்.

11. அனைத்து மாவட்டங்களில் உள்ள 3,000 பயனாளிகளுக்கு ரூ.20,000 மதிப்பீட்டில் தானியங்கி புல்நறுக்கும் கருவிகள் 75 விழுக்காடு மானியத்தில் ரூ.6 கோடி செலவில் விநியோகிக்கப்படும்.

புல் நறுக்கும் கருவிகள் மூலம் தீவனப் பயிர்களை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி பயன்படுத்துவதனால் கால்நடைகளின்

செரிமானத் தன்மை அதிகரிப்பதுடன், தீவனம் வீணாவதும் தடுக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி 3,000 தீவன புல்நறுக்கும் கருவிகள் 75 விழுக்காடு மானியத்தில் ரூ.6 கோடி செலவில் வழங்கப்படும்.

12. தரமான நாட்டின கோழிகள் வழங்குவதற்காகநாட்டுக் கோழி இனப்பெருக்கப் பண்ணையுடன் இணைந்த குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன அலகு ரூ.48.81 கோடி செலவில் சேலம், ஒருங்கிணைந்த கால்நடைப் பூங்காவில் நிறுவப்படும்.

புழக்கடையில் இயற்கை முறையில் அசில் கோழிகளை வளர்க்க பெண்களை ஊக்குவித்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் நோக்கத்துடன், ஒரு நாட்டுக் கோழி (அசில்) இனவிருத்தி பண்ணையுடன் இணைந்த குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.48.81 கோடி செலவில் சேலம் ஒருங்கிணைந்த கால்நடைப் பூங்காவில் நிறுவப்படும். இதன்மூலம் ஆண்டொன்றிற்கு 20 இலட்சம் நல்ல தரமான அசில் இன நாட்டுக் கோழி குஞ்சுகள் மற்றும் 2,000 மெ. டன் தரமான தீவனம் உற்பத்தி செய்யப்படும்.

13. விழுப்புரம் மாவட்டத்தில் கறிக்கோழிப் பண்ணைகள் அமைப்பதை ஊக்குவிக்கும் நோக்குடன் ஒரு பயனாளிக்கு ரூ.1.125 இலட்சம் வீதம் ரூ.2.25 கோடி செலவில் 200 பயனாளிகளுக்கு கறிக்கோழிக் குஞ்சுகள் வழங்கப்படும்.

விழுப்புரம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில், கறிக்கோழி வளர்ப்பினை ஊக்குவிக்கும் நோக்குடன் மாண்புமிகு புரட்சித்தலைவி

அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.2.25 கோடி செலவில் 200 பயனாளிகளுக்கு தலா 600 கறிக்கோழிக் குஞ்சுகள் மற்றும் பிற உள்ளீடுகளான கொட்டகை, தேவையான உபகரணங்கள், தீவனம் போன்றவை வழங்கப்படும்.

14. கால்நடை நோய் புலனாய்வு பிரிவு ஒன்றிற்கு ரூ.1 கோடி மதிப்பில், நாமக்கல் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் ரூ.2 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

கால்நடைகளின் நோய் கண்காணிப்பு, நோய் முன்னறிவிப்பு மற்றும் நோய்க்கிளர்ச்சி நேரங்களில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நாமக்கல் மற்றும் திருவாரூர் மாவட்டங்களிலுள்ள கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகளுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.2 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

15. கால்நடைகளுக்காக 1,658 கால்நடை நிலையங்களில் தலா ரூ.25,000 மதிப்பில், ரூ.4.15 கோடி செலவில் தண்ணீர் தொட்டிகள் கட்டப்படும்.

கால்நடைகளுக்கு வறட்சி காலங்களிலும் தடையின்றி குடிநீர் அளித்திட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1,658 கால்நடை நிலையங்களில் ரூ.4.15 கோடி செலவில் தண்ணீர் தொட்டிகள் கட்டப்படும்.

16. இராமநாதபுரம், அரியலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தலா ஒரு பிரிவு வீதம், ஒன்றுக்கு ரூ.1 கோடி செலவில் புதியதாக

மூன்று கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் ரூ.3 கோடி மொத்த செலவில் தோற்றுவிக்கப்படும்.

இராமநாதபுரம், அரியலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒவ்வொன்றிற்கும் ஒரு கோடி ரூபாய் வீதம் மூன்று கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.3 கோடி செலவில் புதிய–தாக தோற்றுவிக்கப்படும்.

17. கஜா புயலினால் பாதிக்கப்பட்ட திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள பண்ணைகளின் கட்டடங்கள் ரூ.9.50 கோடி செலவில் புனரமைக்கப்படும்.

கஜா புயலினால் பாதிப்படைந்த கால்நடை பண்ணை, கொற்கை, அயலின கால்நடை பெருக்குப்பண்ணை, ஈச்சங்கோட்டை மற்றும் மாவட்ட கால்நடை பண்ணைகளான புதுக்கோட்டை மற்றும் செட்டிநாடு ஆகிய பண்ணைகளின் கட்டடங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.9.50 கோடி செலவில் புனரமைக்கப்படும்.

18. அறுவை சிகிச்சைக்கூட உபகரணங்கள் ரூ.10 இலட்சம் மதிப்பில் மாவட்டத்திற்கு ஒரு கால்நடை நிலையம் வீதம் 32 மாவட்டங்களுக்கு ரூ.3.20 கோடி செலவில் வழங்கப்படும்.

நவீன அறுவை சிகிச்சைக் கூடங்களில், தேவையான கருவிகள், அவசர உயிர்காக்கும் கருவிகள், கால்நடைகளைத் தொடர்ந்து கண்காணிக்கும் கருவிகள், ஆய்வுக் கருவிகள் மற்றும் அறுவை சிகிச்சைக்கு தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் 32 கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.3.20 கோடி செலவில் வழங்கப்படும்.

19. திருப்பூர் மாவட்ட கால்நடை பன்முக மருத்துவமனைக்கு ரூ.2.60 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

திருப்பூர் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் கால்நடை வளர்ப்போர் பயன்பெறும் விதமாக அறுவை சிகிச்சைக்கூடம், அலுவலக அறைகள், நிருவாகக் கட்டடம், பொருட்கள் வைப்பறை மற்றும் ஆய்வுக் கூடம் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய கட்டடம், திருப்பூர் கால்நடை பன்முக மருத்துவமனைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.2.60 கோடி செலவில் கட்டப்படும்.

20. தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் ரூ.2 கோடி செலவில் கட்டப்படும்.

களப்பணி திட்டங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள், முகாம் பணிகள், மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் விநியோகம், கால்நடை நோய் ஆய்வுப் பணிகள் அனைத்தையும் செவ்வனே மேற்கொள்ள மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தஞ்சாவூரில் ரூ.2 கோடி செலவில் புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகம் கட்டப்படும்.

21. கடந்த ஆண்டில் தமிழகத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்ட விலையில்லா அசில் இனக்கோழிகள் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் அனைத்து பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

புழக்கடை கோழி வளர்ப்பானது ஏழை மக்களின் ஊட்டச்சத்து தேவையை பூர்த்தி செய்வதோடு பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும் அவர்களது வருமானத்தை பெருக்கிடவும் வழிவகை செய்வதால், பேரூராட்சிகளில் வசிக்கும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மகளிரும் பயனடையும் வகையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கடந்த ஆண்டில் தமிழகத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்ட விலையில்லா அசில் இனக்கோழிகள் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் அனைத்து பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

22. ஊரக கால்நடை பண்ணையாளர்களின் மேம்பாட்டிற்காக, நவீன நோயறி சாதனங்கள் மற்றும் சிகிச்சை வசதிகளோடு நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் மண்டல பண்ணை விலங்கின சிறப்பு மருத்துவமனை ஏற்படுத்தப்படும்.

ஊரக கால்நடை நலனுக்கு தீர்வு காணும் பொருட்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், நோய்களை துரிதமாக கண்டறிவதற்கென நவீன நோயறி சாதனங்களுடன், 24 மணி நேர அவசர சிகிச்சை வசதிகளோடு கூடிய, மண்டல பண்ணை விலங்கின சிறப்பு மருத்துவமனை ரூ.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் நாமக்கல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களின் கால்நடை பண்ணையாளர்கள் பயனடைவார்கள்.

23. பாலினம் பிரிக்கப்பட்ட விந்தணுக்களைக் கொண்டு இனப்பெருக்க நுட்பங்களை செயல்படுத்துவதன் மூலம்

திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ரூ.2.09 கோடி நிதி ஒதுக்கீட்டில் கறவை மாடுகளில் இனப்பெருக்கம் மற்றும் உற்பத்தி திறன் மேம்படுத்தப்படும்.

கறவை மாடுகளில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் மலட்டுத்தன்மை பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கறவை மாடுகளில் சினைத்தருண ஒருங்கிணைப்பு மற்றும் கூடுதல் கருமுட்டை உற்பத்தி நுட்பங்களுடன் பாலினம் பிரிக்கப்பட்ட விந்தணுக்களைக் கொண்டு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படும். இதன்மூலம் தமிழ்நாட்டின் திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள கறவை மாடுகளின் இனப்பெருக்கம் மற்றும் உற்பத்தி திறன் ரூ.2.09 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்படும்.

24. உணவு பாதுகாப்பிற்கென நாட்டின கோழி வளர்க்கும் 200 பண்ணையாளர்களுக்கு குஞ்சு பொரிப்பு மேலாண்மை, கோழி இறைச்சி பதனம் மற்றும் மதிப்பூட்டல் ஆகியவற்றில் கோழியின தொழில்முனைவு திறன் மேம்பாட்டுப் பயிற்சி ரூ.87 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

உணவு பாதுகாப்பிற்கென, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் கால்நடைப் பராமரிப்புத் துறையும் இணைந்து மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நாட்டின கோழி வளர்க்கும் 200 பண்ணையாளர்களுக்கு கோழியின தொழில்முனைவு திறன் மேம்பாட்டுப் பயிற்சி ரூ.87 இலட்சம் செலவில் அளிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் தமிழக அரசின் ஊரக புழக்கடை கோழி

வளர்ப்பு திட்ட பயனாளிகளுக்கு, குஞ்சு பொரிப்பு பிரிவு மற்றும் இறைச்சி பதனம் மற்றும் மதிப்பூட்டல் பிரிவு ஆகியவற்றை அமைக்க உதவி செய்வதுடன், சந்தைப்படுத்தவும் வழிவகை செய்யப்படும்.

25. கன்னி ஆடு, கொடி ஆடு மற்றும் சேலம் கருப்பு ஆகிய நாட்டின வெள்ளாடுகளின் மரபுத் திறனை உயர்த்தி கால்நடை பண்ணையாளர்களின் வருவாயை இரட்டிப்பாக்கும் நோக்குடன் ரூ.1.49 கோடி செலவில் 1,000 வெள்ளாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள நாட்டின வெள்ளாடுகள் குறைந்த மரபுத் திறன் உடையனவாக இருப்பதால், அவற்றின் மரபுத் திறனை துரிதமாக உயர்த்துவதற்காக தரமான விந்தணு குச்சிகளைப் பயன்படுத்தி 1,000 வெள்ளாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யும் பொருட்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள உறைவிந்தணு வங்கி ரூ.1.49 கோடி செலவில் மேம்படுத்தப்படும். இதன்படி, கன்னி ஆடு, கொடி ஆடு மற்றும் சேலம் கருப்பு ஆகிய நாட்டின வெள்ளாடுகளின் மரபுத் திறன் உயர்த்தப்படுவதுடன், வெள்ளாடு வளர்ப்பில் ஈடுபடும் ஊரக கால்நடை பண்ணையாளர்களின் வருவாய் இரட்டிப்பாக்கப்படும்.

26. செவ்வாடு, இராமநாதபுரம் வெள்ளை மற்றும் கச்சைகட்டி கருப்பு ஆகிய தென் தமிழக நாட்டின செம்மறியாடுகளின் மரபு திறனைப் பாதுகாக்கும் பொருட்டு சிறு அசையூண் விலங்கின ஆராய்ச்சி மையம் ரூ.80 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள நாட்டின செம்மறியாடுகள் அதிக நோய் எதிர்ப்பு திறனும் அதிக குட்டி ஈனும் திறனும் கொண்டுள்ளதால் செவ்வாடு, இராமநாதபுரம் வெள்ளை மற்றும் கச்சைகட்டி கருப்பு

ஆகிய மூன்று நாட்டின செம்மறியாடுகளைப் பாதுகாக்கும் பொருட்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் சிறு அசையூண் விலங்கின ஆராய்ச்சி மையம் ரூ.80 இலட்சம் செலவில் நிறுவப்படும். இதன்மூலம், மரபுத் திறன் உயர்ந்த நாட்டின செம்மறியாடுகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் உள்ள கால்நடை பண்ணையாளர்களுக்கு வழங்கப்படும்.

27. கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் துறைகளில் துவக்கநிலை நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோர்களை உருவாக்கும் பொருட்டு மாதவரம் பால்பண்ணையில் உள்ள கால்நடை அறிவியல் தொடக்க நிலை தொழில் உருவாக்க அமைப்பானது ரூ.75 இலட்சம் செலவில் கூடுதல் கட்டட வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

கால்நடை மருத்துவம், விலங்கின அறிவியல் மற்றும் அதன் சார்பு துறைகளில் துவக்கநிலை நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர்களை உருவாக்கும் பணியினை மேற்கொள்வதற்காக நிறுவன விதி–8ன் கீழ் மாதவரம் பால்பண்ணை வளாகத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தினால் நிறுவப்பட்ட கால்நடை அறிவியல் தொடக்கநிலை தொழில் உருவாக்க அமைப்பானது அதிக அளவில் துவக்கநிலை நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோர்களை உருவாக்கும் பொருட்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.75 இலட்சம் செலவில் கூடுதல் கட்டட வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

28. நச்சுயிரி நோய்களுக்கான தடுப்பூசிகள் தயாரிப்பதற்காக மாதவரம் பால்பண்ணையில் உள்ள நச்சுயிரி தடுப்பூசி ஆராய்ச்சி ஆய்வகம் ரூ.75 இலட்சம் செலவில் கூடுதல் கட்டட வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

கால்நடை மருத்துவத்தில் முக்கியத்துவம் பெற்ற பல்வேறு நச்சுயிரி நோய்களுக்கான தடுப்பூசிகள் தயாரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் மாதவரம் பால்பண்ணையில் அமைந்துள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் நச்சுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி ஆய்வகம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.75 இலட்சம் செலவில் கூடுதல் கட்டட வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

❖ ❖ ❖

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

மானியக் கோரிக்கை எண். 19

1) சென்னையில் உள்ள மன நல காப்பகத்தில் (Institute of Mental Health) மன நல சிகிச்சை தரம் உயர்த்துவதற்காக ஒரு ஒப்புயர்வு மையம் (Centre of Excellence) 25.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

சென்னையில் 1,800 படுக்கை வசதிகளுடன் செயல்படும் மன நல காப்பகம், மன நலம் தொடர்பாக அனைத்து சிகிச்சைகளையும் அளித்து வருகிறது. இம்மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு உயர்தர மன நல சேவைகள் வழங்க, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னையில் உள்ள மன நல காப்பகத்தில் (Institute of Mental Health) ஓர் ஒப்புயர்வு மையம் (Centre of Excellence) 25.41 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

2) தமிழ்நாடு அவசர கால ஊர்தி சேவை திட்டத்திற்கு கூடுதலாக 121 அவசர சிகிச்சை ஊர்திகள் 26.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

தமிழ்நாடு அவசரகால ஊர்தி சேவை திட்டத்தில் தற்போது 942 அவசர சிகிச்சை ஊர்திகள் செயல்படுகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு அவசர கால ஊர்தி சேவை திட்டத்திற்கு கூடுதலாக 121 அவசர சிகிச்சை ஊர்திகள் 26.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

3) சுகாதாரத் துறையின் புதிய முயற்சியாக ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளை ஒரு மருத்துவமனையில் இருந்து வேறு உயர் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அழைத்துச் செல்வதற்காக 120 சிறப்பு வாகனங்கள் (Inter Facility Transfer Vehicles) ரூ.19.2 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுகாதாரத் துறையின் புதிய முயற்சியாக ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளை ஒரு மருத்துவமனையிலிருந்து வேறு உயர் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அழைத்துச் செல்வதற்காக 120 சிறப்பு வாகனங்கள் (Inter Facility Transfer Vehicles) 19.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

4) மதுரை மாநகரில் 20 கோடி ரூபாய் செலவில், உலகத் தரம் வாய்ந்த மருந்துகள் ஆய்வுக்கூடம் நிறுவப்படும்.

தற்போது மருந்து கட்டுப்பாட்டுத் துறையில், மருந்து மாதிரிகளை பகுப்பாய்வு செய்ய, சென்னையில் மட்டும் ஒரு மருந்துகள் ஆய்வுக் கூடம் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை மாநகரில் மத்திய அரசுடன் இணைந்து, 20 கோடி ரூபாய் செலவில், உலகத் தரம் வாய்ந்த, ஆண்டிற்கு 5,000 மருந்து மாதிரிகளை பகுப்பாய்வு செய்யும் திறன் கொண்ட மேலும் ஒரு மருந்துகள் ஆய்வுக்கூடம் நிறுவப்படும்.

5) தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவைத் திட்டத்தினை மேலும் வலுப்படுத்த, அரசு மருத்துவமனைகளிலேயே முதன் முறையாக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு ஒரு நடமாடும் சி.டி. ஸ்கேன் கருவி (Portable C.T. Scan) 7 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவைத் திட்டத்தின் கீழ் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை ஆஸ்திரேலியா நாட்டின் விக்டோரியா மாகாணத்தில் உள்ள ஆல்பெர்டு ஹெல்த் மருத்துவமனையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு அவசர மருத்துவச் சேவைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக கடந்த ஆண்டில் விபத்தின் மூலம் ஏற்படும் இறப்புகள் 8.3%இல் இருந்து 2.7%ஆக குறைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இச்சேவையை மேலும் வலுப்படுத்த அரசு மருத்துவமனைகளிலேயே முதன்முறையாக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு ஒரு நடமாடும் சி.டி. ஸ்கேன் கருவி (Portable C.T. Scan) 7 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

6) கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு எம்.ஆர்.ஐ (MRI) ஸ்கேன் கருவி நிறுவப்படும்.

தற்போது 27 அரசு மருத்துவமனைகளில் 28 எம்.ஆர்.ஐ. ஸ்கேன்கள் செயல்படுகின்றன. மேலும் 4 அரசு மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன்கள் நிறுவப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பாண்டில் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு எம்.ஆர்.ஐ (MRI) ஸ்கேன் கருவி நிறுவப்படும்.

7) சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 128 கூறு (Slice) சி.டி ஸ்கேன் கருவி வழங்கப்படும்.

தற்போது சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஓமந்தூரார் தமிழ்நாடு பன்னோக்கு

உயர்சிறப்பு மருத்துவமனை மற்றும் சென்னை ஸ்டான்லி மருத்துவவனை ஆகிய மூன்று அரசு மருத்துவமனைகளில் 128 கூறு (Slice) சி.டி. ஸ்கேன் கருவிகள் உள்ளன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பாண்டில், இந்த வசதியினை மேலும் விரிவுபடுத்தும் பொருட்டு, சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 128 கூறு (Slice) சி.டி ஸ்கேன் கருவி வழங்கப்படும்.

8) தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவை (TAEI) திட்டத்தின் கீழ், 23 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனை மற்றும் சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை ஆகிய 25 மருத்துவமனைகளில் உள்ள அவசர சிகிச்சை மையங்களில் துரித ஆய்வுக் கூடம் (Point of Care Testing - POCT) அமைப்பதற்கு, தேவையான கருவிகள் மற்றும் இதர வசதிகள் 2.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவை (TAEI) திட்டத்தின் கீழ், 23 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனை மற்றும் சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை ஆகிய 25 மருத்துவமனைகளில் உள்ள அவசர சிகிச்சை மையங்களில் துரித ஆய்வுக் கூடம் (Point of Care Testing - POCT) அமைப்பதற்கு தேவையான கருவிகள் மற்றும் இதர வசதிகள் 2.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

9) சென்னை எழும்பூர் மகளிர் மருத்துவமனைக்கு புற்றுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை சேவைகளை வலுப்படுத்த

2.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் CT Simulator கருவி வழங்கப்படும். மேலும் திருவாரூர் மாவட்டம் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு 1 கோடி ரூபாய் செலவில் டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை எழும்பூர் மகளிர் மருத்துவமனைக்கு புற்றுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை சேவைகளை வலுப்படுத்த 2.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் CT Simulator கருவி வழங்கப்படும். மேலும் திருவாரூர் மாவட்டம் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு 1 கோடி ரூபாய் செலவில் டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி வழங்கப்படும்.

10) **தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் முதன்முறையாக, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவை உலகத் தரத்திற்கு உயர்த்தும் வகையில் எக்மோ (ECMO) சிகிச்சை வசதி 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் முதன்முறையாக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவை உலகத் தரத்திற்கு உயர்த்தும் வகையில் எக்மோ (ECMO) சிகிச்சை வசதி 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

11) **அனைத்து மாவட்டம், வட்டம் மற்றும் வட்டம் சாரா அரசு மருத்துவமனைகளுக்கு தங்கு தடையில்லா மின்சாரம் வழங்க தேவைக்கேற்ப ஜெனரேட்டர் மற்றும் இன்வெர்ட்டர் கருவிகள் 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகத்தின் கீழ் உள்ள அனைத்து அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளுக்கு தங்குதடையில்லா மின்சாரம் வழங்க தேவைக்கேற்ப ஜெனரேட்டர் மற்றும் இன்வெர்ட்டர் கருவிகள் 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

12) அரசு பள்ளிகளில் செயல்படும் பெற்றோர்–ஆசிரியர் கழகம் போலவே அரசு மருத்துவமனைகளிலும், 'மருத்துவமனை மேம்பாட்டுக் குழு' (Hospital Development Committee) அமைக்கப்படும். மருத்துவமனைக்கும் அப்பகுதி மக்களுக்கும் இடையே நல்லுறவை உருவாக்கி மக்கள் நல்வாழ்வுத் துறையின் திட்டங்கள் மக்களிடையே முழுமையாக சென்றடையவும், நோயாளிகளின் குறைகளை கேட்டறிந்து விரைவில் தீர்வு காணவும், மருத்துவமனையின் மேம்பாடு குறித்த ஆலோசனைகளைப் பெறவும் இக்குழு ஒரு இணைப்பு பாலமாக செயல்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு பள்ளிகளில் செயல்படும் பெற்றோர் – ஆசிரியர் கழகம் போலவே, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவமனை மேம்பாட்டுக் குழு (Hospital Development Committee) அமைக்கப்படும். மருத்துவமனைக்கும் அப்பகுதி மக்களுக்கும் இடையே நல்லுறவை உருவாக்கி மக்கள் நல்வாழ்வுத் துறையின் திட்டங்கள் மக்களிடையே முழுமையாக சென்றடையவும்,

நோயாளிகளின் குறைகளை கேட்டறிந்து விரைவில் தீர்வு காணவும், மருத்துவமனையின் மேம்பாடு குறித்த ஆலோசனைகளைப் பெறவும் இக்குழு ஒரு இணைப்பு பாலமாக செயல்படும். நோயாளிகளுக்கும் மருத்துவர்களுக்கும் இடையே நல்லுறவை வளர்க்கும் பொருட்டு மருத்துவமனை மேம்பாட்டுக் குழு ஒவ்வொரு மருத்துவமனைகளிலும் ஏற்படுத்தப்படும்.

13) அரசு மருத்துவமனைகளை அங்கு பணிபுரியும் அலுவலர்கள் வளாகங்களை சுத்தமாகவும், பசுமையாகவும் பேணிக் காப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, சிறப்பாக பராமரிக்கப்படும் அரசு மருத்துவமனைகளுக்கு தூய்மை மற்றும் பசுமை விருதுகள் (Clean and Green Campus Awards) ஆண்டுதோறும் வழங்கப்படும்.

தேசிய தரச்சான்று பெறுவதில், தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் நமது நாட்டிலேயே முன்னணி வகிக்கின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் மருத்துவமனை சூழலை மேம்படுத்துவதற்கான பல்வேறு வெற்றிகரமான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மருத்துவமனை வளாகங்களை அங்கு பணிபுரியும் அலுவலர்கள் சுத்தமாகவும், பசுமையாகவும் பேணிக் காப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, சிறப்பாக பராமரிக்கப்படும் அரசு மருத்துவமனைகளுக்கு தூய்மை மற்றும் பசுமை விருதுகள் (Clean and Green Campus Awards) ஆண்டுதோறும் வழங்கப்படும்.

14) அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் தங்கள் மருத்துவமனையின் செயல்பாடுகள், சாதனைகள் மற்றும் சிறப்புகளை வெளிப்படுத்த வாய்ப்பளிக்கும் நோக்கில்

ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நாள் ‘மருத்துவமனை தினமாக’ (Hospital Day) கொண்டாடப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் தங்கள் மருத்துவமனையின் செயல்பாடுகள், சாதனைகள் மற்றும் சிறப்புகளை வெளிப்படுத்த வாய்ப்பளிக்கும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நாள் ‘மருத்துவமனை தினமாக’ (Hospital Day) கொண்டாடப்படும்.

15) மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அச்சமின்றி பணியாற்றி மக்களுக்கு முழுமையாக தமது சேவைகளை அளிக்கும் வகையில் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்தோடு, அனைத்து முக்கிய அரசு மருத்துவமனைகளிலும், காவல்துறையின் உதவியை காலதாமதமின்றி பெற்றிட, உடனடி உதவி தொலைபேசி (Hot Line) இணைப்பு அமைக்கப்படும்.

நமது நாட்டின் பிற மாநிலங்களில் அண்மையில் நடைபெற்ற மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு எதிரான சம்பவங்களை கவனத்தில் கொண்டு இதுபோன்ற நிகழ்வுகள் நம் மாநிலத்தில் நடைபெறாமல் தடுக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அச்சமின்றி பணியாற்றி மக்களுக்கு முழுமையாக தமது சேவைகளை அளிக்கும் வகையில் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்தோடு, அனைத்து முக்கிய அரசு மருத்துவமனைகளிலும், காவல்துறையின் உதவியை காலதாமதமின்றி பெற்றிட, உடனடி உதவி தொலைபேசி (Hot Line) இணைப்பு அமைக்கப்படும்.

16) அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் நோயாளர்கள் தொடர்பான குறைகளை நேரடியாக தெரிவித்து உடனுக்குடன் சரி செய்யும் வகையில், தினந்தோறும் மாலை 3 மணி முதல் 4 மணி வரை, அந்தந்த மருத்துவனையின் பொறுப்பு மருத்துவ அலுவலர்களை சந்திக்க, பிரத்தியேக ஏற்பாடு செய்யப்படும். இதுமட்டுமன்றி, அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் குறை தீர்ப்பு / ஆலோசனை பெட்டிகள் வைக்கப்படுவதோடு, 24 மணி நேர 104 உதவி மையத்திற்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் உடனுக்குடன் நோயாளிகள் தம் குறைகளை தெரிவித்து, தீர்வு பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் நோயாளர்கள், உடனிருப்போர் மற்றும் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து உடனுக்குடன் சரி செய்யும் வகையில், தினந்தோறும் மாலை 3 மணி முதல் 4 மணி வரை உள்ளிருப்பு மருத்துவ அலுவலர் (Resident Medical Officer), மருத்துவமனை கண்காணிப்பாளர் (Medical Superintendent), தலைமை மருத்துவ அலுவலர் (Chief Medical Officer) பொதுமக்களை சந்திக்க, பிரத்தியேக ஏற்பாடு செய்யப்படும். இதுமட்டுமன்றி, அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் குறை தீர்ப்பு / ஆலோசனை பெட்டிகள் வைக்கப்படுவதோடு, 24 மணி நேர 104 உதவி மையத்திற்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் உடனுக்குடன் நோயாளிகள் தம் குறைகளை தெரிவித்து, தீர்வு பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.

17) சென்னை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் செயல்படுத்தப்பட்டு வரும் குழந்தைகள் பராமரிப்பு மையம் (Creche) அங்கு பணிபுரியும் பெற்றோரிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதை தொடர்ந்து, மாநிலம் முழுவதும் உள்ள

பிற மருத்துவமனைகளுக்கு தேவைக்கேற்ப படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

சென்னை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் செயல்படுத்தப்பட்டு வரும் குழந்தைகள் பராமரிப்பு மையம் (Creche) அங்கு பணிபுரியும் பெற்றோரிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதை தொடர்ந்து, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநிலம் முழுவதும் உள்ள பிற மருத்துவமனைகளுக்கு தேவைக்கேற்ப படிப்படியாக விரிவுபடுத்தப்படும். முதல் கட்டமாக இச்சேவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தொடங்கப்படும்.

18) அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதலாக 200 டயாலிசிஸ் கருவிகள் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

அரசு மருத்துவமனைகளுக்கு வரும் ஏழை, எளிய மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்பதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதலாக 200 டயாலிசிஸ் கருவிகள் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

19) நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 6 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஒசூர் அரசு வட்ட மருத்துவமனையில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 11 தாய் சேய் நல மையங்களுக்கு 14.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனக் கருவிகள் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கன்னியாகுமரி, ஐ.ஆர்.ட்டி பெருந்துறை, கோயம்புத்தூர் மற்றும் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், செய்யாறு, கள்ளக்குறிச்சி, காரைக்குடி, பொள்ளாச்சி, பெரம்பலூர், கோவில்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் மற்றும் ஓசூர் அரசு வட்ட மருத்துவமனையிலும் **120** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **11** தாய் சேய் நல மையங்கள் கட்டடப்பட்டு வருகின்றன. இந்த **11** தாய் சேய் நல மையங்களுக்கும் **14.5** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனக் கருவிகள் வழங்கப்படும்.

20) அரசு மருத்துவமனைகளில் சி.டி.ஸ்கேன் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், விபத்து மற்றும் அவசர மருத்துவ சிகிச்சைகளை விரைந்து வழங்கும் பொருட்டு அதிக எண்ணிக்கையில் ஸ்கேன்கள் நடைபெறும் 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக சி.டி.ஸ்கேன் கருவிகள் வழங்கப்படும்.

அரசு மருத்துவமனைகளில் சி.டி.ஸ்கேன் பயன்படுத்துவோரிள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், விபத்து மற்றும் அவசர மருத்துவ சிகிச்சைகளை விரைந்து வழங்கும் பொருட்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அதிக எண்ணிக்கையில் ஸ்கேன்கள் நடைபெறும் செங்கல்பட்டு, தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய **6** அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு **14** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக சி.டி ஸ்கேன் கருவிகள் வழங்கப்படும்.

21) வளரிளம் பெண்களிடையே இரத்த சோகையை தடுப்பதற்காக, நெல்லிக்காய் பொடி, கறிவேப்பிலைப் பொடி, முருங்கைக் கீரைப் பொடி மற்றும் தேன் அடங்கிய அம்மா இயற்கை நலப் பெட்டகம் (Amma Natural Wellness Kit) 1.75 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

தற்போது கருவுற்ற தாய்மார்களுக்கு 11 வகையான மருந்துகள் அடங்கிய அம்மா மகப்பேறு சஞ்சீவி பெட்டகம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வளரிளம் பெண்களிடம் காணப்படும் இரத்த சோகையை தடுப்பதற்காக, நெல்லிக்காய் பொடி, கறிவேப்பிலைப் பொடி, முருங்கைக் கீரைப் பொடி மற்றும் தேன் அடங்கிய அம்மா இயற்கை நலப் பெட்டகம் (Amma Natural Wellness Kit) 1.75 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

22) குணமடைந்த மன நோயாளிகளுக்கு வீட்டு சூழல் புனர்வாழ்வு வசதிகளை வழங்கும் பொருட்டு தொண்டு நிறுவனங்கள் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் 'மீண்டும் இனிய இல்லம்' (Home Again) என்ற திட்டம் 1.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, குணமடைந்த மன நோயாளிகளுக்கு வீட்டு சூழல் புனர்வாழ்வு வசதிகளை வழங்கும் பொருட்டு, தொண்டு நிறுவனங்கள் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் 'மீண்டும் இனிய இல்லம்' (Home Again) என்ற திட்டம் 1.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

23) தமிழகத்தில் புதிய முயற்சியாக பச்சிளம் குழந்தை வளர்ப்பு பற்றி தாய்மார்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக சென்னையில்

கட்டணமில்லா ஒருங்கிணைந்த ஆலோசனை உதவி மையம் (Mothering Help Line) 1.31 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழகத்தில் புதிய முயற்சியாக பச்சிளம் குழந்தை வளர்ப்பு பற்றி தாய்மார்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக சென்னையில் கட்டணமில்லா ஒருங்கிணைந்த ஆலோசனை உதவி மையம் (Mothering Help Line) 1.31 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

24) இராமநாதபுரம், திருவாரூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள 19 ஆரம்ப சுகாதார நிலையங்களில் புறநோயாளிகள் பிரிவு கட்டடங்கள் 13.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மேலசிறுபோது, மேலகிடாரம், நரிப்பையூர், உச்சிநத்தம், ஆப்பனூர், வாலிநோக்கம், சிக்கல், பெருநாழி, கீழத்தூவல், திருவரங்கம், தேரிருவேலி, பாம்பூர், வெங்கிட்டான்குறிச்சி, பார்த்திபனூர், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள குளிக்கரை, ஆதிச்சபுரம், சித்தமல்லி, களப்பால் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள முடுக்கன்குளம் ஆகிய 19 ஆரம்ப சுகாதார நிலையங்களில் புறநோயாளிகள் பிரிவு கட்டடங்கள் 13.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

25) உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் சிகிச்சை முறையை மேம்படுத்துவதற்காக 47 வட்டாரங்களில் நோயாளிகள் ஆதரவுக் குழு (Patients Support Group) ஏற்படுத்தப்படும். இக்குழு நோயாளிகளை பரிசோதித்து உயர்

இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய்க்கான மருந்துகளை வழங்கும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் சிகிச்சை முறையை மேம்படுத்துவதற்காக 47 வட்டாரங்களில் நோயாளிகள் ஆதரவுக் குழு (Patients Support Group) ஏற்படுத்தப்படும். நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய்க்கான மருந்துகள் வழங்கப்படும்.

26) நாற்பத்தி ஒன்பது இந்தியமுறை மருத்துவப் பிரிவுகளுக்கு 12.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள், கருவிகள் மற்றும் மருந்துகள் வழங்கப்படும்.

இந்தியமுறை மருத்துவத்திற்கு தமிழக அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நாற்பத்தி ஒன்பது இந்தியமுறை மருத்துவப் பிரிவுகளுக்கு 12.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள், கருவிகள் மற்றும் மருந்துகள் வழங்கப்படும்.

27) நோய்களை வருமுன் தடுக்கும் பொருட்டு (Preventive Health Care) **100 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபயிற்சி பகுதி, யோகா பயிற்சி பகுதி, உடற்பயிற்சி மற்றும் அக்குபிரஷர்** (Accu Pressure) **வசதிகளுடன் கூடிய நலவாழ்வு மையங்கள் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நோய்களை வருமுன் தடுக்கும் பொருட்டு

(Preventive Health Care) 100 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபயிற்சி பகுதி, யோகா பயிற்சி பகுதி, உடற்பயிற்சி மற்றும் அக்குபிரஷர் (Accu Pressure) வசதிகளுடன் கூடிய நலவாழ்வு மையங்கள் ஏற்படுத்தப்படும்.

28) சென்னை பெருநகர மாநகராட்சியில் உள்ள செனாய் நகர் மற்றும் புளியந்தோப்பு சமுதாய சுகாதார மையங்களில் முறையே 8.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகப்பேறு நிலையமும், 1.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடமும் கட்டித்தரப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை பெருநகர மாநகராட்சியில் உள்ள செனாய் நகர் மற்றும் புளியந்தோப்பு சமுதாய சுகாதார மையங்களில் முறையே 8.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகப்பேறு நிலையமும், 1.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடமும் கட்டித்தரப்படும்.

29) தமிழகத்தில், 9.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காசநோய் தாக்கம் குறித்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்.

2023ஆம் ஆண்டிற்குள் காசநோயை முற்றிலும் ஒழிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேசிய காசநோய் ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து காசநோய் தாக்கம் குறித்த கணக்கெடுப்பு 9.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

30) உணவு மற்றும் உணவுப் பொருட்களின் தரத்தை கண்டறிய விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் கூடுதலாக புதிய மூன்று உணவுப் பகுப்பாய்வுக் கூடங்கள் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

உணவு மற்றும் உணவுப் பொருட்களின் தரத்தை பரிசோதனை செய்ய, தமிழ்நாட்டில் தற்போது ஆறு உணவு பகுப்பாய்வகங்கள் உள்ளன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, உணவு மற்றும் உணவுப் பொருட்களின் தரத்தை கண்டறிய விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் கூடுதலாக புதிய மூன்று உணவுப் பகுப்பாய்வுக் கூடங்கள் 9 கோடி ரூபாய் மதிப்பிட்டில் அமைக்கப்படும்.

31) இரத்த சோகை இல்லாத தமிழகத்தை உருவாக்கும் பொருட்டு 65 இலட்சம் மகளிருக்கு 8.7 கோடி ரூபாய் செலவில் இரும்பு மற்றும் ஃபோலிக் அமிலச்சத்து மாத்திரைகளும், குடற்புழு நீக்க மாத்திரைகளும் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இரத்த சோகை இல்லாத தமிழகத்தை உருவாக்கும் பொருட்டு 20 வயதிலிருந்து 30 வயதுக்குட்பட்ட 65 இலட்சம் மகளிருக்கு 8.7 கோடி ரூபாய் செலவில் இரும்பு மற்றும் ஃபோலிக் அமிலச்சத்து மாத்திரைகளும், குடற்புழு நீக்க மாத்திரைகளும் வழங்கப்படும்.

32) மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் திருச்சிராப்பள்ளி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் 8.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன மருத்துவ கருவிகளுடன் அவசர சிகிச்சை துறை (Emergency Department) வலுப்படுத்தப்படும்.

சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி அவசர சிகிச்சை வழங்குவதில் அவசரகால சிகிச்சை பிரிவுகள்

சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் திருச்சிராப்பள்ளி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவைத் திட்டத்தின் கீழ் (TAEI) 8.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன மருத்துவ கருவிகளுடன் அவசர சிகிச்சை துறை (Emergency Department) வலுப்படுத்தப்படும்.

33) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு இரத்த வங்கிகளுக்கும் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன தானியங்கி கருவிகள் (Automated Elisa Reader) **மற்றும் நுகர்பொருட்கள் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பாதுகாப்பான இரத்தம் வழங்கப்படுவதை உறுதி செய்ய தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு இரத்த வங்கிகளுக்கும் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன தானியங்கி கருவிகள் (Automated Elisa Reader) மற்றும் நுகர்பொருட்கள் வழங்கப்படும்.

34) சென்னை பெருநகர மாநகராட்சியில் உள்ள 102 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 7.6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இ.சி.ஜி, செமி –ஆட்டோ அனலைசர், செல் கவுன்ட்டர் போன்ற கருவிகள் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை பெருநகர மாநகராட்சியில் செயல்படும்

102 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 7.6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இ.சி.ஜி, செமி ஆட்டோ அனலைசர், செல் கவுன்ட்டர் போன்ற கருவிகள் வழங்கப்படும்.

35) சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியில் 7.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாணவர்களுக்கு கூடுதல் விடுதிக் கட்டடம் கட்டப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு 7.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் விடுதிக் கட்டடம் கட்டப்படும்.

36) காசநோயை கண்டறியும் நவீன பரிசோதனை வசதிகள் (Nucleic Acid Test) 17.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 385 வரையறுக்கப்பட்ட நுண்ணோக்கி மையங்களில் (Designated Microscopic Centres) ஏற்படுத்தப்படும்.

2023ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் காசநோயை முற்றிலுமாக ஒழித்து காசநோய் இல்லா தமிழகம் என்ற நிலையை அடைய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, காசநோயை கண்டறியும் நவீன பரிசோதனை வசதிகள் (Nucleic Acid Test) 17.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 385 வரையறுக்கப்பட்ட நுண்ணோக்கி மையங்களில் (Designated Microscopic Centres) ஏற்படுத்தப்படும்.

37) பவானி, ராசிபுரம், குமாரபாளையம், பாபநாசம், கோலார்பட்டி, தொண்டாமுத்தூர், போடிநாயக்கனூர், ஆரணி அரசு மருத்துவமனைகளுக்கும், மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை

மருத்துவமனைக்கும் 13.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஈரோடு மாவட்டம், பவானி அரசு மருத்துவமனை, நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் மற்றும் குமாரபாளையம் அரசு மருத்துவமனைகள், தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் அரசு மருத்துவமனை, கோயம்புத்தூர் மாவட்டம், கோலார்பட்டி மற்றும் தொண்டாமுத்தூர் அரசு மருத்துவமனைகள், தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனை, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி அரசு மருத்துவமனை மற்றும் மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கும் ஆகிய ஒன்பது மருத்துவமனைகளுக்கு 13.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

38) குழந்தை பிறந்தவுடன் காது கேளாமையை கண்டறிய 34 ஆரம்ப நிலை இடையீட்டு மையங்களுக்கு (DEIC) 5.4 கோடி ரூபாய் செலவில் 34 ஆட்டோ அகொஸ்டிக் எமிஷன் (OAE) கருவிகளும், 34 செவித்திறன் கண்டறியும் ஆடியோமெட்ரிக் கருவிகளும் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, குழந்தை பிறந்தவுடன் காது கேளாமையை கண்டறிய 34 ஆரம்ப நிலை இடையீட்டு மையங்களுக்கு (DEIC) 5.4 கோடி ரூபாய் செலவில் 34 ஆட்டோ அகொஸ்டிக் எமிஷன் (Oto Acoustic Emission - OAE) கருவிகளும், 34 செவித்திறன் கண்டறியும் ஆடியோமெட்ரிக் (Audiometry) கருவிகளும் வழங்கப்படும்.

39) நான்கு சீமாங்க் நிலையங்கள் மற்றும் 5 தாய் சேய் நல பிரிவுகளில் கூடுதலாக 51 மகப்பேறு மருத்துவர்கள், 16 மயக்கவியல் மருத்துவர்கள், 12 குழந்தை நல மருத்துவர்கள், 180 செவிலியர்கள் மற்றும் 54 பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் 5.02 கோடி ரூபாய் செலவில் பணியமர்த்தப்படுவார்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, செங்கல்பட்டு, திருவண்ணாமலை, தேனி விழுப்புரம் ஆகிய 4 மருத்துவக்கல்லூரிகளில் உள்ள சீமாங்க் நிலையங்களுக்கும், நீலகிரி, திண்டுக்கல், திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட தலைமை மருத்துவமனைகள், மயிலாடுதுறை அரசு மருத்துவமனை ஆகிய 5 மருத்துவமனைகளில் உள்ள தாய் சேய் நல பிரிவுகளுக்கும் கூடுதலாக 51 மகப்பேறு மருத்துவர்கள், 16 மயக்கவியல் மருத்துவர்கள், 12 குழந்தை நல மருத்துவர்கள், 180 செவிலியர்கள் மற்றும் 54 பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களும் 5.02 கோடி ரூபாய் செலவில் பணியமர்த்தப்படுவார்கள்.

40) துணை செவிலியர்கள் மற்றும் செவிலியர்களுக்கு ஏழு மாவட்டங்களில் உள்ள 13 வட்டாரங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 புதிய குடியிருப்புகள் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம், செந்துரை மற்றும் திருமானூர் வட்டாரங்கள், ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டாரம், விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் மற்றும் கள்ளக்குறிச்சி வட்டாரங்கள், இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி, மண்டபம் மற்றும் திருப்புல்லானி வட்டாரங்கள் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டாரம், திருவாரூர்

மாவட்டம், கொரடச்சேரி மற்றும் கோட்டூர் வட்டாரங்கள் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டாரம் ஆகிய 13 வட்டாரங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை செவிலியர்கள் மற்றும் செவிலியர்களுக்கு 24 புதிய குடியிருப்புகள் கட்டப்படும்.

41) கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் காசநோய் பாதிப்புக்கு உள்ளாகும் அபாய நிலையில் உள்ளோரை (Vulnerable People) கண்டறியும் பணி 4.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநிலத்தில் காசநோயை ஒழிக்கும் பொருட்டு, புதிய நோயாளிகள் மற்றும் சிகிச்சையிலிருந்து விடுபட்டவர்களை கண்டறிய, கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தேசிய காசநோய் ஆராய்ச்சி நிலையத்தால் தமிழ்நாட்டில் காசநோய் பாதிப்புக்கு உள்ளாகும் அபாய நிலையில் உள்ளோரை (Vulnerable People) கண்டறியும் பணி 4.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

42) தமிழகத்தில் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய் தடுப்பூசித் திட்டமும், மூளை காய்ச்சல் (AES) கண்காணிப்பு மற்றும் சிகிச்சைத் திட்டமும் 6.43 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

தமிழகத்தில் தற்போது ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசித் திட்டம் 13 மாவட்டங்களில் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய் தடுப்பூசித் திட்டம் சென்னை,

திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக் குழந்தைகளுக்கு 1.92 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும். மேலும், மூளை காய்ச்சல் (AES) கண்காணிப்பு மற்றும் சிகிச்சைத் திட்டம் 4.51 கோடி ரூபாய் செலவில் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும்.

43) 108 ஆம்புலன்ஸ் திட்டத்தில் பச்சிளம் குழந்தைகளுக்கான 14 அவசர சிகிச்சை ஊர்திகள் 4.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

108 ஆம்புலன்ஸ் திட்டத்தில் தற்போது 65 பச்சிளம் குழந்தைகளுக்கான அவசர சிகிச்சை ஊர்திகள் உள்ளன. இந்த சேவையை வலுப்படுத்தும் பொருட்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 108 ஆம்புலன்ஸ் திட்டத்தில் பச்சிளம் குழந்தைகளுக்கான 14 அவசர சிகிச்சை ஊர்திகள் 4.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

44) பதினான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள எலும்பியல் பிரிவுகளுக்கு 20 சி–ஆர்ம் (C.Arm) எலும்பு மூட்டு அறுவை சிசிக்சை கருவிகள் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, செங்கல்பட்டு, தருமபுரி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர்,

தேனி, திருவண்ணாமலை, தூத்துக்குடி ஆகிய 14 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள எலும்பியல் பிரிவுகளுக்கு 20 சி–ஆர்ம் (C.Arm) எலும்பு மூட்டு அறுவை சிசிக்சை கருவிகள் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

45) பதிமூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு பிரிவு கட்டடங்கள் 3.4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பெருநாழி, திருவரங்கம், தேரிருவேலி, பாம்பூர், வெங்கிட்டான்குறிச்சி, புதுமடம், வேலனூர், ரெகுநாதபுரம், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள குளிக்கரை, கண்கொடுத்தவனிதம், களப்பால் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கண்டமங்கலம், மலைக்கொத்தலம் ஆகிய 13 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு பிரிவு கட்டடங்கள் 3.4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

46) 3.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பென்னாகரம், தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் குளித்தலை அரசு மருத்துவமனையிலும் அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையங்கள் ஏற்படுத்தப்படும்.

ஆதரவற்று சுற்றித் திரியும் மனநோயாளிகளை மீட்டு அவர்களுக்கு மருத்துவ சேவை அளிப்பதை விரிவுபடுத்தும் விதமாக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பென்னாகரம், தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் குளித்தலை அரசு மருத்துவமனையிலும் அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையங்கள் 3.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

47) மதுரை அரசு மருந்தாக்கியல் கல்லூரிக்கு 2.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் கட்டப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில் செயல்படும் மருந்தாக்கியல் கல்லூரிக்கு 2.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் கட்டப்படும்.

48) தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவைத் திட்டத்தின் (TAEI) கீழ் 40 அரசு மருத்துவமனைகளில் உள்ள அவசர சிகிச்சை பிரிவுகளுக்கு 128 செவிலியர்கள், 68 அறுவை சிகிச்சை உதவியாளர்கள், 68 நுண்கதிர் படப்பிடிப்பாளர்கள் மற்றும் 272 பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் 2.87 கோடி ரூபாய் செலவில் பணியமர்த்தப்படுவார்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவைத் திட்டத்தின் கீழ் (TAEI) சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை, சென்னை கீழ்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை, ஈரோடு ஐ.ஆர்.டி. பெருந்துறை மருத்துவ கல்லூரி மருத்துவமனை, புதுக்கோட்டை மருத்துவ கல்லூரி மருத்துவமனை, சிவகங்கை மருத்துவ கல்லூரி மருத்துவமனை, தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தூத்துக்குடி மருத்துவ கல்லூரி மருத்துவமனை ஆகிய 9 மருத்துவக் கல்லூரி மருத்துமனைகள், சென்னை ஒமந்தூரார் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, கோயம்புத்தூர் மாவட்டம்—பொள்ளாச்சி, தருமபுரி மாவட்டம்—பென்னாகரம், விழுப்புரம் மாவட்டம்—கள்ளக்குறிச்சி, கரூர்

மாவட்டம்—குளித்தலை, மதுரை மாவட்டம்—உசிலம்பட்டி, நீலகிரி மாவட்டம்—உதகமண்டலம், சேலம் மாவட்டம்—மேட்டூர் அணை, சிவகங்கை மாவட்டம்—காரைக்குடி, தஞ்சாவூர் மாவட்டம்—கும்பகோணம், தேனி மாவட்டம்—பெரியகுளம், திருவண்ணாமலை மாவட்டம்—செய்யாறு, திருவாரூர் மாவட்டம்—மன்னார்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்—மணப்பாறை, திருப்பூர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், ஈரோடு, மற்றும் விருதுநகர் ஆகிய 19 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், அரியலூர் மாவட்டம்—ஜெயம்கொண்டம், தருமபுரி மாவட்டம்—அரூர், திண்டுக்கல் மாவட்டம்—கொடைக்கானல் மற்றும் பழனி, நாகப்பட்டினம் மாவட்டம்—மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டம்—விராலிமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்—துறையூர், திருவள்ளூர் மாவட்டம்—திருத்தணி, விருதுநகர் மாவட்டம்—அருப்புக்கோட்டை, சிவகாசி மற்றும் ராஜபாளையம் ஆகிய 11 அரசு வட்ட மருத்துவமனைகள் என 40 அரசு மருத்துவ நிலையங்களில் உள்ள அவசர சிகிச்சை பிரிவுகளுக்கு 128 செவிலியர்கள், 68 அறுவை சிகிச்சை உதவியாளர்கள், 68 நுண்கதிர் படப்பிடிப்பாளர்கள் மற்றும் 272 பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் 2.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியமர்த்தப்படுவார்கள்.

49) 2.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் முதியோர்களுக்கான இயன்முறை சேவை, மருத்துவக் கருவிகள் மற்றும் உரிய பயிற்சி அளிக்கப்படும்.

தமிழ்நாட்டில் அனைத்து வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தேசிய முதியோர் சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேசிய

சுகாதாரத் திட்டத்தின் கீழ் முதியோர்களுக்கான இயன்முறை சேவை, மருத்துவக் கருவிகள் மற்றும் உரிய பயிற்சி அளிக்கப்படும்.

50) பதினாறு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் வலி மற்றும் நோய் தணிப்பு சிகிச்சை மையங்கள் (Pain and Palliative Care Units) 2.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

வலி நிவாரணம் மற்றும் நோய் தணிப்பு சிகிச்சை வசதி தற்போது 8 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 2 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ளது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பாண்டில் சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, தமிழ்நாடு அரசு பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, கோயம்புத்தூர், தருமபுரி, செங்கல்பட்டு, சேலம், சிவகங்கை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம் மற்றும் ஐ.ஆர்.டி. பெருந்துறை ஆகிய 16 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் வலி மற்றும் நோய் தணிப்பு சிகிச்சை மையங்கள் (Pain and Palliative Care Units) 2.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

51) 2.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மன நல காப்பகத்தில் (Institute of Mental Health) புனர்வாழ்வு மையம் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மனநலம் பாதிக்கப்பட்டு நீண்ட காலமாக சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் வகையில்

சென்னை மன நல காப்பகத்தில் (Institute of Mental Health) 2.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனர்வாழ்வு மையம் அமைக்கப்படும்.

52) தாய்மார்களுக்கு கர்ப்பகாலத்தில் ஏற்படும் நீரிழிவு நோயை (Gestational Diabetes Mellitus) கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்கான சிறப்பு திட்டம் 2.4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வலுபடுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கர்ப்பகாலத்தில் ஏற்படும் நீரிழிவு நோயினால் (Gestational Diabetes Mellitus) தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தடுக்கும் பொருட்டு தாய்மார்களுக்கு கர்ப்பகாலத்தில் ஏற்படும் நீரிழிவு நோயை கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் 2.4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வலுபடுத்தப்படும்.

53) மலைப் பிரதேசங்களில் உள்ள வால்பாறை மற்றும் கொடைக்கானல் அரசு மருத்துவமனைகள் மற்றும் உதகமண்டலம் மாவட்ட தலைமை மருத்துவமனை ஆகியவற்றில் பிராணவாயு உற்பத்தி செய்யும் கருவி (Oxygen Generation Plant) 2.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மலைப் பிரதேசங்களில் உள்ள வால்பாறை மற்றும் கொடைக்கானல் அரசு மருத்துவமனைகள் மற்றும் உதகமண்டலம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை ஆகியவற்றில் பிராணவாயு (Oxygen Generation Plant) உற்பத்தி செய்யும் கருவி 2.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

54) திருவாரூர், இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள 12 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் 2.9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவாரூர் மாவட்டம், அத்திக்கடை, சித்தமல்லி, திருமக்கோட்டை, பெரும்பனையூர், களப்பால், குளிக்கரை, ஆதிச்சபுரம், இராமநாதபுரம் மாவட்டம், பாம்பூர், பார்த்திபனூர், வெங்கிட்டான்குறிச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், மீமிசல் ஆகிய 11 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் 2.55 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம் சூசைபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலருக்கான குடியிருப்பு கட்டடம் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

55) அரசு மருத்துவமனைகளுக்கு ஹெப்படைடிஸ் (மஞ்சள் காமாலை) B&C வைரஸ் வகைகளை கண்டறியும் ஆய்வக கருவிகள் மற்றும் சிகிச்சைக்கான மருந்துகள் 2 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மாநிலத்தில் ஹெப்படைடிஸ் (மஞ்சள் காமாலை) வைரஸ் கட்டுப்பாடு திட்டத்தை வலுப்படுத்த, அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகள் மற்றும் ஹெப்படைடிஸ் B & C வைரஸ் வகைகளை கண்டறியும் ஆய்வகக் கருவிகள் 2 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

56) இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் மற்றும் திருவாரூர் மாவட்டம் ஆதிச்சாபுரம் ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார

நிலையங்களில் தாய்மை துணை செவிலியர்களுக்கு ஊரக சுகாதார பயிற்சி நிலையங்கள் (Rural Health Training Centres) 2 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 12 ஊரக சுகாதார பயிற்சி நிலையங்கள் செயல்படுகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2 கோடி ரூபாய் செலவில் இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் மற்றும் திருவாரூர் மாவட்டம் ஆதிச்சாபுரம் ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தாய்மை துணை செவிலியர்களுக்கு ஊரக சுகாதார பயிற்சி நிலையங்கள் (Rural Health Training Centres) ஏற்படுத்தப்படும்.

57) மருந்துப் பகுப்பாய்வு அறிக்கைகளை விரைவாக வழங்க ஏதுவாக மருந்து கட்டுப்பாட்டுத் துறையின் கீழ் சென்னையில் இயங்கி வரும் மருந்துகள் பகுப்பாய்வுக் கூடத்திற்கு, உலகத் தரம் வாய்ந்த அதிநவீன கருவிகள் 2 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

மருந்து கட்டுப்பாட்டுத் துறையின் கீழ் சென்னையில் மருந்துகள் பகுப்பாய்வுக் கூடம் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருந்துப் பகுப்பாய்வு அறிக்கைகளை விரைவாக வழங்க ஏதுவாக மருந்து கட்டுப்பாட்டுத் துறையின் கீழ் சென்னையில் இயங்கி வரும் மருந்துகள் பகுப்பாய்வுக் கூடத்திற்கு, உலகத் தரம் வாய்ந்த அதிநவீன கருவிகள் 2 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

58) யோகா மற்றும் இயற்கை முறை சிகிச்சைக்காக சென்னை அரசு யோகா மற்றும் இயற்கை முறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், 25 படுக்கைகள் கொண்ட கட்டணப்

பிரிவு 2 கோடி ரூபாய் டாம்ப்கால் தொகுப்பு நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, யோகா மற்றும் இயற்கை முறை சிகிச்சைக்காக சென்னை அரசு யோகா மற்றும் இயற்கை முறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், 25 படுக்கைகள் கொண்ட கட்டணப் பிரிவு 2 கோடி ரூபாய் டாம்ப்கால் தொகுப்பு நிதியில் செயல்படுத்தப்படும்.

59) தமிழகத்தில் 10 மாநகராட்சிகளில் 2,324 மகளிர் நலவாழ்வு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, சுகாதாரம் சார்ந்த நடவடிக்கைகளில் சமுதாய ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கான பயிற்சியினை அளித்து, அப்பணிகளை செயல்படுத்த 1.86 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழகத்தில் 10 மாநகராட்சிகளில் 2,324 மகளிர் நல வாழ்வு குழுக்களை ஏற்படுத்தப்பட்டு சுகாதாரம் சார்ந்த நடவடிக்கைகளில் சமுதாய ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கான பயிற்சியினை அளித்து அப்பணிகளை செயல்படுத்த 1.86 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

60) அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிசுக்களுக்கு ஏற்படும் பிறவி குறைபாடுகளை (Congenital Anomaly) கர்ப்ப காலத்தில் ஸ்கேன் மூலம் பரிசோதனை செய்வதற்கு 1.7 கோடி ரூபாய் செலவில் வசதிகள் செய்யப்படும்.

தமிழ்நாட்டில் குழந்தைகள் இறப்பு விகிதம் வெகுவாக குறைந்துள்ள நிலையில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறப்பு

விகிதத்தை குறைக்க கவனம் செலுத்தப்படுகிறது. இதற்காக 28 அரசு மருத்துவ நிலையங்களில் குழந்தைகள் அவசர சிகிச்சை மற்றும் நிலைப்படுத்துதல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், சிசுக்களுக்கு ஏற்படும் பிறவி குறைபாடுகளை (Congenital Anomaly) கர்ப்பகாலத்தில் கண்டறிய மருத்துவர்களுக்கு 1.7 கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு, ஸ்கேன் மூலம் பரிசோதனை செய்வதற்கு வசதிகள் செய்யப்படும்.

61) திருச்சிராப்பள்ளி கி.ஆ.பெ. விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரியில் கூடுதலாக 150 இருக்கைகள் கொண்ட புதிய தேர்வுக் கூடம் 1.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருச்சிராப்பள்ளி கி.ஆ.பெ. விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரியில் கூடுதலாக 150 இருக்கைகள் கொண்ட புதிய தேர்வுக் கூடம் 1.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

62) 1.52 கோடி ரூபாய் செலவில், 7 மாநகராட்சிகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் மக்களின் நோய்களை கண்டறியும் பொருட்டு அவர்களின் வீட்டிற்கே சென்று உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், புற்றுநோய், காசநோய், தொழுநோய் ஆகியவற்றை கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1.52 கோடி ரூபாய் செலவில் திண்டுக்கல், ஈரோடு,

மதுரை, சேலம், திருச்சி, திருப்பூர், தூத்துக்குடி மாநகராட்சிகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் மக்களின் நோய்களை கண்டறியும் பொருட்டு அவர்களின் வீட்டிற்கே சென்று உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், புற்றுநோய், காசநோய், தொழுநோய் ஆகியவற்றை கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

63) தேர்ந்தெடுக்கப்பட்ட 100 துணை சுகாதார நிலையங்களில் தானியங்கி ஆய்வக வசதிகள் (Kiosk) 1.5 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட 100 துணை சுகாதார நிலையங்களில் தானியங்கி ஆய்வக வசதிகள் (Kiosk) 1.5 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

64) நுரையீரல் நோய்களுக்கான மருத்துவ திட்டத்தினை வலுப்படுத்த 9 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 1.35 கோடி ரூபாய் செலவில் மருந்துகள் மற்றும் ஸ்பைரோமெட்ரி, பைபேப் வெண்டிலேட்டர் (BIPAP), **ஆக்ஸிஜன் கான்சன்ட்ரேட்டர் ஆகிய கருவிகள் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரியலூர், கடலூர், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், திருவள்ளூர் மற்றும் விருதுநகர் ஆகிய 9 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் நுரையீரல் நோய்களுக்கான மருத்துவ திட்டத்தினை வலுப்படுத்த 1.35 கோடி ரூபாய் செலவில் மருந்துகள் மற்றும் ஸ்பைரோமெட்ரி, பைபேப் வெண்டிலேட்டர் (BIPAP), ஆக்ஸிஜன் கான்சன்ட்ரேட்டர் ஆகிய கருவிகள் வழங்கப்படும்.

65) குறை மாத பிரசவத்தில் பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படும் விழித்திரை குறைபாட்டினை தடுப்பதற்காக முன்கூட்டியே விழித்திரையை பரிசோதிக்கும் ரெட்கேம் (Retcam) கருவி 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் கடலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையிலுள்ள பச்சிளம் குழந்தை மையங்களுக்கு, 1.26 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, **1.26** கோடி ரூபாய் செலவில் குறை மாத பிரசவத்தில் பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படும் விழித்திரை குறைபாட்டினை தடுப்பதற்காக முன்கூட்டியே விழித்திரையை பரிசோதிக்கும் ரெட்கேம் (Retcam) கருவி சேலம், மதுரை, திருநெல்வேலி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், ஆகிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் கடலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையிலுள்ள பச்சிளம் குழந்தை மையங்களுக்கு வழங்கப்படும்.

66) இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதலாக செமி–ஆட்டோ அனலைசர், ஸ்கேன், மல்டி பாரா மானிட்டர் மற்றும் மருத்துவ கருவிகள் 1.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பொது சுகாதார சேவைப் பணிகள் மேலும் சிறப்பாக செயல்பட உதவும் வகையில் கூடுதலாக செமி–ஆட்டோ அனலைசர், ஸ்கேன், மல்டி பாரா மானிட்டர் மற்றும் மருத்துவ கருவிகள் **1.03** கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

67) தேசிய பரவு நோயியல் நிறுவனம் (National Institute of Epidemiology) 1 கோடி ரூபாய் செலவில் தேசிய புற்றுநோய், நீரிழிவு, இரத்த நாள நோய்கள் மற்றும் பக்கவாத நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு தொழில்நுட்ப உதவி வழங்குவதுடன் மதிப்பாய்வும் மேற்கொள்ளும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேசிய பரவு நோயியல் நிறுவனம் (National Institute of Epidemiology) 1 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தேசிய புற்றுநோய், நீரிழிவு, இரத்த நாள நோய்கள் மற்றும் பக்கவாத நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு தொழில்நுட்ப உதவி வழங்குவதுடன் மதிப்பாய்வும் மேற்கொள்ளும்.

68) சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் சென்னை தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஆகிய இடங்களில் தசை இறுக்க வியாதியால் (Spastic) பாதிக்கப்பட்டு சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கு தண்டுவட உறை பேக்ளோஃபன் குழாய் கருவி (Intrathecal Baclofen Pump) பொருத்தும் வசதிகள் 1 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் சென்னை தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை ஆகிய இரண்டு மருத்துவமனைகளில் தசை இறுக்க வியாதியால் (Spastic) பாதிக்கப்பட்டு சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கு தண்டுவட உறை பேக்ளோஃபன் குழாய் கருவி (Intrathecal Baclofen Pump) பொருத்தும் வசதிகள் 1 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

69) அனைத்து கல்வி நிறுவனங்களையும் ஆரோக்கியமான உணவு வளாகமாக மாற்றும் பொருட்டு கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் ஆரோக்கியமான உணவு / பாதுகாப்பான உணவு / செறிவூட்டப்பட்ட உணவு முறைகள் குறித்து 'Eat Right' திட்டத்தின் கீழ் 90 இலட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து கல்வி நிறுவனங்களையும் ஆரோக்கியமான உணவு வளாகமாக மாற்றும் பொருட்டு 500 தொழில்நுட்ப கல்லூரிகள், 1,350 கல்லூரிகள் மற்றும் பள்ளிகள், 54,439 அங்கன்வாடி மையங்களில் ஆரோக்கியமான உணவு / பாதுகாப்பான உணவு / செறிவூட்டப்பட்ட உணவு முறைகள் குறித்து 'Eat Right' திட்டத்தின் கீழ் 90 இலட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வும் தேவையான பயிற்சியும் வழங்கப்படும்.

70) புற்றுநோய் மற்றும் நாள்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு வர இயலாத நோயாளிகளுக்கு, அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று மருத்துவ சேவை அளிக்கும் திட்டம் 287 வட்டாரங்களில் 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புற்றுநோய் மற்றும் நாள்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு வர இயலாத நோயாளிகளுக்கு, அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று மருத்துவ சேவை அளிக்கும் திட்டம் 287 வட்டாரங்களில் 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்படும்.

71) 82 இலட்சம் ரூபாய் செலவில் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இரண்டு மாவட்டங்களில், பள்ளி குழந்தைகளுக்கு சுகாதாரம் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதற்காக, ஒவ்வொரு பள்ளியிலும் இரண்டு ஆசிரியர்களுக்கு பயிற்றுனர் பயிற்சி அளிக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 82 இலட்சம் ரூபாய் செலவில் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இரண்டு மாவட்டங்களில், பள்ளி குழந்தைகளுக்கு சுகாதாரம் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதற்காக, ஒவ்வொரு பள்ளியிலும் இரண்டு ஆசிரியர்களுக்கு பயிற்றுனர் பயிற்சி அளிக்கப்படும்.

72) தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவைத் திட்டத்தினை மேலும் வலுப்படுத்தும் விதமாக 1.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள குழந்தைகள் அவசர சிகிச்சை மற்றும் நலப்படுத்துதல் பிரிவுகளுக்கு (PREM) கூடுதல் கருவிகளும், 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு நடமாடும் செயற்கை சுவாசக் கருவிகளும் (Transport Ventilator) வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவைத் திட்டத்தினை வலுப்படுத்த, சேலம், செங்கல்பட்டு, விழுப்புரம், தருமபுரி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர், கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகள் அவசர சிகிச்சை மற்றும் நலப்படுத்துதல் பிரிவுகளுக்கு (Paediatric Resuscitation

and Emergency Management – PREM) **78** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கருவிகளும், சென்னை ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருவாரூர், கரூர், தேனி, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகிய **11** அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு **96** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடமாடும் செயற்கை சுவாசக் கருவிகளும் (Transport Ventilator) வழங்கப்படும்.

73) மருந்துகளை இருப்பு வைத்து சரிபார்க்கும் பார் கோடிங் முறை (Supply Chain Management) தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்தால் அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருந்துகளை இருப்பு வைத்து சரிபார்க்கும் பார் கோடிங் முறை (Supply Chain Management) தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்தால் அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் **64** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

74) பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள வளசரவாக்கம், பெருங்குடி, திருவொற்றியூர், புழல் ஆகிய 4 நகர்புற சமுதாய சுகாதார மையங்களில் 61 இலட்சம் ரூபாய் செலவில் மகப்பேறு மருத்துவர்கள், பொது மருத்துவர்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவர்கள் கூடுதலாக பணியமர்த்தப்படுவார்கள்.

தேசிய நகர்புற நலவாழ்வு குழுமத்தின் கீழ், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், புதிய நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்புற சமுதாய நல மையங்கள் ஏற்படுத்தப்படுவதோடு,

ஏற்கெனவே உள்ள சுகாதார மையங்கள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள வளசரவாக்கம், பெருங்குடி, திருவொற்றியூர், புழல் ஆகிய 4 நகர்புற சமுதாய சுகாதார மையங்களில் 61 இலட்சம் ரூபாய் செலவில் மகப்பேறு மருத்துவர்கள், பொது மருத்துவர்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவர்கள் கூடுதலாக பணியமர்த்தப்படுவார்கள்.

75) 6 அரசு இந்தியமுறை மருத்துவக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

இந்தியமுறை மருத்துவத்தை வலுப்படுத்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை மற்றும் பாளையங்கோட்டை, அரசு யோகா மற்றும் இயற்கை முறை மருத்துவக் கல்லூரி, சென்னை, அரசு யுனானி மருத்துவக் கல்லூரி, சென்னை, அரசு ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி, கோட்டார், நாகர்கோவில் மற்றும் அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம் ஆகிய 6 அரசு இந்தியமுறை மருத்துவக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

76) முதியோர்களிடையே காணப்படும் மறதி நோயை கண்டறிந்து சிகிச்சை அளிக்க, 10 அவசர சிகிச்சை மற்றும் மீட்பு பராமரிப்பு மையங்களில் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பகல் நேர பராமரிப்பு மையம் (Day Care Centers for Management of Dementia) ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, முதியோர்களிடையே காணப்படும் மறதி நோயை கண்டறிந்து சிகிச்சை அளிக்க, 10 அவசர சிகிச்சை மற்றும் மீட்பு பராமரிப்பு மையங்களில் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பகல் நேர பராமரிப்பு மையம் (Day Care Centers for Management of Dementia) ஏற்படுத்தப்படும்.

77) மூன்றாம் பாலினத்தவர்களுக்கான பன்னோக்கு சிகிச்சை சிறப்பு பிரிவு (Multi Speciality Clinic for Transgenders) 3 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 60 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

தற்போது மூன்றாம் பாலினத்தவர்களுக்கான பன்னோக்கு சிகிச்சை சிறப்புப் பிரிவு (Multi Speciality Clinic for Transgenders) சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை ஆகிய இரண்டு இடங்களில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கான பன்னோக்கு சிகிச்சை சிறப்புப் பிரிவு 60 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

78) கடலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எலும்பு மூட்டு நுண்துளை அறுவை சிகிச்சை மையம் (Arthoscopy Centre) அமைக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கடலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில்

56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எலும்பு மூட்டு நுண்துளை அறுவை சிகிச்சை மையம் (Arthoscopy Centre) அமைக்கப்படும்.

79) கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய 4 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள 4 சிறப்பு பிரிவுகளில் 8 டி.என்.பி முதுநிலை மருத்துவ பட்டயப் படிப்பு இடங்கள் (DNB Seats) 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவர்களின் தேவையை பூர்த்தி செய்ய, தேசிய உயர்நிலை பட்டப்படிப்பு திட்டம் (DNB Programme) செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய 4 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள 4 சிறப்பு பிரிவுகளில் 8 டி.என்.பி முதுநிலை மருத்துவ பட்டயப் படிப்பு இடங்கள் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

80) தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் அரசு மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவுக்கு 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவக் கருவிகள் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் அரசு மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவுக்கு 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவக் கருவிகள் வழங்கப்படும்.

81) மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 64 நடமாடும் மருத்துவ குழுக்கள் மூலம் தொழில்சார் சுகாதார சேவைகள் வழங்கப்படும்.

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சுகாதார சேவை வழங்கும் பொருட்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 64 நடமாடும் மருத்துவ குழுக்கள் மூலம் தொழில்சார் சுகாதார சேவைகள் வழங்கப்படும்.

82) இராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை அரசு மருத்துவமனையிலும், சேலம் மாவட்டம் வாழப்பாடி அரசு மருத்துவமனையிலும் 1.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பிரேத பரிசோதனைக் கூடங்கள் நிறுவப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை அரசு மருத்துவமனையிலும், சேலம் மாவட்டம் வாழப்பாடி அரசு மருத்துவமனையிலும் 1.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பிரேத பரிசோதனைக் கூடங்கள் நிறுவப்படும்.

83) மணப்பாறை, காரைக்குடி, உசிலம்பட்டி மற்றும் மேட்டூர் அணை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையிலும் 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தாய்ப்பால் வங்கிகள் (Milk Bank) ஏற்படுத்தப்படும்.

தாய்ப்பால் கொடுக்க முடியாத தாய்மார்களின் குழந்தைகள், பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகள், நலிவுற்ற குழந்தைகள்,

பேறுகாலத்தின்போது இறந்த தாய்மார்களின் குழந்தைகளின் நலனுக்காக 21 அரசு மருத்துவமனைகளில் தாய்ப்பால் வங்கி ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பாண்டில் மணப்பாறை, காரைக்குடி, உசிலம்பட்டி மற்றும் மேட்டூர் அணை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையிலும் 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தாய்ப்பால் வங்கிகள் (Milk Bank) ஏற்படுத்தப்படும்.

84) பச்சிளம் குழந்தைகளிடம் பிறவி இருதய குறைபாடுகளை கண்டறிய 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை மையங்களுக்கு 55 மென்பொருள் பொருத்திய நவீன பல்ஸ் ஆக்சி மீட்டர் கருவிகள் வழங்கப்படும் மற்றும் பிறந்த குழந்தைகளின் வளர்சிதைமாற்ற நோய்களை கண்டறியும் திட்டம் காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 40 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பச்சிளம் குழந்தைகளிடம் பிறவி இருதய குறைபாடுகளை கண்டறிய பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை மையங்களுக்கு 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 55 மென்பொருள் பொருத்திய நவீன பல்ஸ் ஆக்சி மீட்டர் கருவிகள் வழங்கப்படும் மற்றும் பிறந்த குழந்தைகளின் வளர்சிதைமாற்ற நோய்களை கண்டறியும் திட்டம் (Newborn Screening for Metabolic Disorders) தற்போது வேலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டம் நடப்பாண்டில் காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 40 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

85) பதினைந்து அரசு மருத்துவமனைகளுக்கு 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல் சிகிச்சைக்கான கருவிகள் (Dental Chair) வழங்கப்படும்.

பற்களை பாதிக்கும் நோய்களை குணப்படுத்த வட்ட மருத்துவமனைகள் மற்றும் சமுதாய சுகாதார நிலையங்களில் பல் மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பொள்ளாச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, வால்பாறை, பெரியநாயக்கன்பாளையம், குறிஞ்சிப்பாடி, சேனன்விளை, கறம்பக்குடி, சுப்பிரமணியபுரம், அய்யம்பேட்டை, போடிநாயக்கனூர், துவரங்குறிச்சி, சேரன்மாதேவி, கூடங்குளம், ஆயகுடி, வளவனூர் மற்றும் மரக்காணம் ஆகிய 15 அரசு மருத்துவமனைகளுக்கு பல் சிகிச்சைக்கான கருவிகள் (Dental Chair) 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

86) தேசிய மருத்துவ உத்தரவாத தர திட்டம், காயகல்ப் தூய்மைக்கான விருது திட்டம் மற்றும் லக்ஷ்யா விருது வழங்கும் திட்டங்களில் அரசு மருத்துவமனைகள் பங்கேற்கும் பணியினை மேற்கொள்ள 31 தர மேலாளர்கள் (Quality Managers) 37 இலட்சம் ரூபாய் செலவில் பணியமர்த்தப்படுவார்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேசிய மருத்துவ உத்தரவாத தர திட்டம், காயகல்ப் தூய்மைக்கான விருது திட்டம் மற்றும் லக்ஷ்யா விருது வழங்கும் திட்டங்களில் அரசு மருத்துவமனைகள் பங்கேற்கும் பணியினை மேற்கொள்ள 31 தர மேலாளர்கள் (Quality Managers) 37 இலட்சம் ரூபாய் செலவில் பணியமர்த்தப்படுவார்கள்.

87) இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் கர்ப்பிணித் தாய்மார்களின் நலன் காக்க 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மகப்பேறு வகைப்பாடு அமைப்பு (Obstetric Triaging System) 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுவதோடு, பிரசவத்திற்குப் பின் இரத்தக் கசிவு காரணமாக ஏற்படும் இறப்புகளைத் தடுக்க 3 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் Thrombo-elastrograph கருவிகளும் வழங்கப்படும். மேலும், மகளிர் நலன் காக்க கர்ப்பப்பைவாய் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய, அனைத்து அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கையடக்க தெர்மோகோயாகுலேட்டர் (Thermocoagulator) கருவிகள் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் கர்ப்பிணித் தாய்மார்களின் நலன் காக்க 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மகப்பேறு வகைப்பாடு அமைப்பு (Obstetric Triaging System) 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுவதோடு, பிரசவத்திற்குப் பின் இரத்தக் கசிவு காரணமாக ஏற்படும் இறப்புகளைத் தடுக்க சென்னை அரசு கஸ்தூரிபா காந்தி மகளிர் மருத்துவமனை, தஞ்சாவூர் அரசு இராசா மிராசுதார் மருத்துவமனை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைகளுக்கு 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் Thrombo-elastrograph கருவிகளும் வழங்கப்படும். மேலும், மகளிர் நலன் காக்க கர்ப்பப்பைவாய் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய, அனைத்து அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கையடக்க தெர்மோகோயாகுலேட்டர் (Thermocoagulator) கருவிகள் வழங்கப்படும்.

88) கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டம், தடிக்காரன்கோணம் ஆகிய வட்டாரங்களில் உள்ள மலைவாழ் பகுதி மக்களின் நலனுக்காக 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடமாடும் சித்தா மருத்துவக் குழு அமைக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், தடிக்காரன்கோணம் ஆகிய வட்டாரங்களில் வசிக்கும் மலைவாழ் பகுதி மக்களின் நலனுக்காக 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடமாடும் சித்தா மருத்துவக் குழு அமைக்கப்படும்.

89) தமிழ்நாட்டில் உள்ள 54,439 அங்கன்வாடி மைய பணியாளர்களுக்கு 32 இலட்சம் ரூபாய் செலவில் FoSTaC திட்டத்தின் கீழ், சிறப்பு உணவுப் பாதுகாப்புப் பயிற்சி மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் உள்ள 54,439 அங்கன்வாடி மைய பணியாளர்களுக்கு 32 இலட்சம் ரூபாய் செலவில் FoSTaC திட்டத்தின் கீழ், சிறப்பு உணவுப் பாதுகாப்புப் பயிற்சி மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

90) உணவுப் பாதுகாப்பு அலுவலர்களுக்கு, ஆய்வு செய்யும் இடத்திலேயே கலப்படத்தைக் கண்டறிய ‘விரைவுப் பகுப்பாய்வுப் பெட்டகம்’ (Rapid Testing Kit) 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, உணவுப் பாதுகாப்பு அலுவலர்களுக்கு, பால், எண்ணெய், மாமிசம், குடி தண்ணீர், இதர உணவுப் பொருட்களில், ஆய்வு செய்யும் இடத்திலேயே கலப்படத்தை கண்டறிய, 'விரைவுப் பகுப்பாய்வுப் பெட்டகம்' (Rapid Testing Kit) 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

91) விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள காது கேளாதோர்களுக்கான வால் நரம்பு உள்வைப்பு மையத்திற்கு (Cochlear Implantation Centre) நவீன நுண்ணோக்கி கருவி (Microscope) 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கி வலுப்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள காது கேளாதோர்களுக்கான வால் நரம்பு உள்வைப்பு மையத்திற்கு (Cochlear Implantation Centre) நவீன நுண்ணோக்கி கருவி (Microscope) 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கி வலுப்படுத்தப்படும்.

92) சேலம் மாவட்டம், மேட்டூர் அணை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைகளில் காது மூக்கு தொண்டை புறநோயாளிகள் பிரிவு 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேலம் மாவட்டம், மேட்டூர் அணை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைகளில் காது மூக்கு

தொண்டை நவீன உயர் சிகிச்சை புறநோயாளிகள் பிரிவு 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

93) 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையங்களுக்கு 17.6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆக்ஸிஜன் கலப்பான் (Oxygen Blender) வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையங்களுக்கு 17.6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆக்ஸிஜன் கலப்பான் (Oxygen Blender) வழங்கப்படும்.

94) சென்னை எழும்பூர் மகளிர் மருத்துவமனையில், இருதயக் கோளாறு உள்ள கர்ப்பிணித் தாய்மார்களின் கர்ப்பத்தை கண்காணித்து சிகிச்சை அளித்திட இருதய நோய்க்கான பதிவேடு 25 இலட்சம் ரூபாய் செலவிலும், சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்தவமனையில் ஹீமோகுளோபினோபதி மற்றும் ஹீமோபிலியா பாதிப்பு உள்ள குழந்தைகளின் விவரங்கள் அடங்கிய பதிவேடு 10 இலட்சம் ரூபாய் செலவிலும் பராமரிக்கப்படும். ஒருங்கிணைந்த புற்றுநோய் பதிவுக்காக இணையதள அறிவிக்கை அமைப்பு 17 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இருதயக் கோளாறு உள்ள கர்ப்பிணித் தாய்மார்களின் சிகிச்சை தரத்தை மேம்படுத்த, சென்னை எழும்பூர் மகளிர் மருத்துவமனையில் கர்ப்பத்தை கண்காணித்து சிகிச்சை அளித்திட இருதய நோய்க்கான பதிவேடு 25 இலட்சம்

ரூபாய் செலவிலும், சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் ஹீமோகுளோபினோபதி மற்றும் ஹீமோபிலியா பாதிப்பு உள்ள குழந்தைகளின் விவரங்கள் அடங்கிய பதிவேடு 10 இலட்சம் ரூபாய் செலவிலும் பராமரிக்கப்படும். மேலும், மாநில அளவிலான ஒருங்கிணைந்த புற்றுநோய் பதிவுக்காக இணையதள அறிவிக்கை அமைப்பு (Web based notification system for Integrated Cancer Registry) 17 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

95) உணவுக் கலப்படத்தைக் கண்டறிய அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும், DART திட்டத்தின் கீழ் விரைவுப் பரிசோதனைகள், 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, உணவுக் கலப்படத்தைக் கண்டறிய அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும், DART (Detection of Adulteration with Rapid Tests) திட்டத்தின் கீழ், விரைவுப் பரிசோதனைகள் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

96) அரசு மற்றும் தனியார் மருத்துவ அலுவலர்கள் வழங்கும் இறப்பு சான்றிதழில் இறப்புக்கான சரியான காரணத்தை குறிப்பிட, மென்பொருள் (e-Mor) பயன்படுத்த உரிய பயிற்சி அளிக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மற்றும் தனியார் மருத்துவ அலுவலர்கள் வழங்கும் இறப்பு சான்றிதழில் இறப்புக்கான சரியான காரணத்தை குறிப்பிட, மென்பொருள் (e-Mor) பயன்படுத்த உரிய பயிற்சி அளிக்கப்படும்.

97) பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு வழங்கப்படும் சுகாதார சான்றுகள் எளிமைப்படுத்தப்பட்டு, இணையதளம் மூலமாக வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு வழங்கப்படும் சுகாதார சான்றுகள் எளிமைப்படுத்தப்பட்டு, இணையதளம் மூலமாக வழங்கப்படும்.

98) முறைசாரா அமைப்புகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் மீனவ சமுதாய மக்களுக்கு ஏற்படும் மன அழுத்ததிற்கு சிகிச்சை அளிக்க, சென்னை மன நல காப்பகத்தில் (Institute of Mental Health) தொழில் சார்ந்த மன நல புறநோயாளி பிரிவு ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முறைசாரா அமைப்புகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் மீனவ சமுதாய மக்களுக்கு ஏற்படும் மன அழுத்ததிற்கு சிகிச்சை அளிக்க, சென்னை மன நல காப்பகத்தில் (Institute of Mental Health) தொழில் சார்ந்த மன நல புறநோயாளி பிரிவு ஏற்படுத்தப்படும்.

99) தமிழ்நாட்டில் பாலின மாற்று அறுவை சிகிச்சை தொடர்பாக வல்லுனர்களுடன் கலந்தாலோசித்து வழிமுறைகள் வெளியிடப்படும். இவர்களின் சுகாதாரத் தேவைகள், தேசிய சிறார் நலத் திட்டம் மற்றும் தேசிய வளரிளம் பருவத்தினர் பாதுகாப்புத் திட்டத்துடன் இணைக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, தமிழ்நாட்டில் பாலின மாற்று அறுவை சிகிச்சை தொடர்பாக வல்லுனர்களுடன் கலந்தாலோசித்து வழிமுறைகள் வெளியிடப்படும். இவர்களின் சுகாதாரத் தேவைகள், தேசிய சிறார் நலத் திட்டம் மற்றும் தேசிய வளரிளம் பருவத்தினர் பாதுகாப்புத் திட்டத்துடன் இணைக்கப்படும்.

100) இந்திய மருத்துவ ஆய்வுக் கழக உதவியுடன் செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி பணிகள் (Artificial Intelligence Research) தொடங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்திய மருத்துவ ஆய்வுக் கழக உதவியுடன் செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி பணிகள் **(Artificial Intelligence Research)** அரசு மருத்துவக் கல்லூரிகளில் தொடங்கப்படும்.

101) இந்திய உணவுப் பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையத்தின்படி, உணவகங்கள் மற்றும் உணவு விடுதிகளுக்கு, 'சுகாதார மதிப்பீடு' (Hygiene Rating) திட்டத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்திய உணவுப் பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையத்தின்படி, உணவகங்கள் மற்றும் உணவு விடுதிகளுக்கு, 'சுகாதார மதிப்பீடு' (Hygiene Rating) திட்டத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

102) அலோபதி மற்றும் ஹோமியோபதி மருந்துகள் தயாரிப்பு உரிமங்கள் இணையதளம் வாயிலாக வழங்கப்படும்.

தற்போது சில்லரை மற்றும் மொத்த மருந்துகள் விற்பனைக்கான உரிமங்கள் இணையதளம் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இதனைத் தொடர்ந்து, மத்திய அரசுடன் இணைந்து வழங்கும் மருந்து தயாரிப்பு உரிமங்கள் நீங்கலாக பிற அலோபதி மற்றும் ஹோமியோபதி மருந்துகள் தயாரிப்பு உரிமங்கள் இணையதளம் மூலமாக வழங்கப்படும்.

103) தன்னார்வ குருதி கொடையாளிகளை அதிகரிக்கும் வகையில், மாநில அளவிலான தன்னார்வ குருதி கொடையாளிகள் பதிவேடு பராமரிக்கப்படும். அரசு மருத்துவமனைகளில் இரத்த வகை அடையாள அட்டை வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தன்னார்வ குருதி கொடையாளிகளை அதிகரிக்கும் வகையில், மாநில அளவிலான தன்னார்வ குருதி கொடையாளிகள் பதிவேடு பராமரிக்கப்படும். மேலும், அரசு மருத்துவமனைகளில் உள்ள இரத்த வங்கிகளில் பதிந்து கொள்ளும் தன்னார்வ குருதி கொடையாளர்களுக்கு கட்டணமில்லாமல் குருதி வகை கண்டறியப்பட்டு இரத்த வகை அடையாள அட்டை வழங்கப்படும்.

104) கிராமப் பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தி சிகிச்சை அளிக்கும் மருத்துவக் குழு வாகனங்கள் மற்றும் பள்ளி சிறார் நலத் திட்டத்தில் செயல்படும் நடமாடும் மருத்துவக் குழு வாகனங்கள் ஆகியவற்றின் செயல்பாட்டை மேலாண்மை செய்ய, ஒரு மைய கண்காணிப்புப் பிரிவு (Central Monitoring Wing) தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து இயக்குனரகத்தில் நிறுவப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 396 நடமாடும் மருத்துவக் குழு வாகனங்களும், பள்ளி சிறார் நலத் திட்டத்தின் கீழ் இயங்கும் 805 நடமாடும் மருத்துவக் குழு வாகனங்களும் சரியாக பயணத்

திட்டத்தின்படி முறையான மருத்துவச் சேவை மக்களுக்கு சென்றடைவதினை உறுதி செய்யும் பொருட்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஊர்திகளில் பொருத்தப்பட்டுள்ள தடங்காட்டி (GPS) மூலம் கண்காணிக்க ஒரு மைய கண்காணிப்பு பிரிவு (Central Monitoring Wing) தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து இயக்குனரகத்தில் நிறுவப்படும்.

105) தற்போதைய கால சூழலுக்கு ஏற்றவாறு அண்மையில் செவிலியருக்கான சீருடையை மாற்றி அமைத்துள்ள இந்த அரசின் நடவடிக்கை செவிலியர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ள நிலையில், தற்போது செவிலிய மாணவ மாணவியர்களுக்கான சீருடையும் மாற்றி அமைக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, செவிலியருக்கான சீருடைகள் தற்போதைய கால சூழலுக்கு ஏற்றவாறு அண்மையில் மாற்றப்பட்டுள்ளது. இது செவிலியர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ள நிலையில், தற்போது செவிலிய மாணவ, மாணவியர்களுக்கான சீருடையும் மாற்றி அமைக்கப்படும்.

106) அரசு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் திறனை மேம்படுத்தும் வகையில், அவசர சிகிச்சை, லேப்பராஸ் கோப்பி, எண்டோஸ்கோப்பி போன்ற சிகிச்சை முறைகளிலும் மருத்துவமனை மேலாண்மை முறைகளிலும், தொடர் திறன் மேம்பாட்டு பயிற்சி (Skill Development Programme) தொடங்கப்படும்.

மருத்துவச் சேவைகளை சிறப்பாக வழங்குவதற்கு, மக்கள் நல்வாழ்வுத் துறையின் மனித வள ஆற்றலை மேம்படுத்துவது இன்றியமையாததாகும். இதனை கருத்தில் கொண்டு, மாண்புமிகு

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் திறனை மேம்படுத்தும் வகையில், அவசர சிகிச்சை, லேப்பராஸ்கோப்பி (Laproscopy), எண்டோஸ்கோப்பி (Endoscopy) போன்ற சிகிச்சை முறைகளிலும் மருத்துவமனை மேலாண்மை முறைகளிலும், தொடர் திறன் மேம்பாட்டு பயிற்சி (Skill Development Programme) தொடங்கப்படும்.

107) இரவும் பகலும் பணிபுரிவதால் ஏற்படும் மன அழுத்தத்தை குறைக்கும் நோக்கத்தோடு, மக்கள் நல்வாழ்வுத் துறையில் பணிபுரியும் பல்வேறு பணியாளர்களுக்கு மன அழுத்தக் குறைப்புப் பயிற்சித் திட்டம் (Stress Management Programme) செயல்படுத்தப்படும். மேலும் பணியாளர்களின் பணிச் சூழலை மேம்படுத்தி, அவர்களின் செயல்திறன் மேலும் உயர வழிவகுக்கும் வகையில், மருத்துவமனைகளின் அலுவல் இடங்கள் (Work Stations / Duty Rooms) செம்மைப்படுத்தப்படும்.

மருத்துவப் பணி மிக முக்கிய அத்தியாவசிய சேவைப் பணி என்பதால், மக்கள் நல்வாழ்வுத் துறையில் பணியாற்றக் கூடிய பணியாளர்கள் வருடம் முழுவதும் 24 மணி நேரமும் பணியாற்ற வேண்டிய தேவை உள்ளது. அப்பணியை இரவும் பகலும் மேற்கொள்வதால் ஏற்படும் மன அழுத்தத்தை குறைக்கும் நோக்கத்தோடு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மக்கள் நல்வாழ்வுத் துறையில் பணிபுரியும் பல்வேறு பணியாளர்களுக்கு மன அழுத்தக் குறைப்புப் பயிற்சித் திட்டம் (Stress Management Programme) செயல்படுத்தப்படும் மேலும் பணியாளர்களின் பணிச் சூழலை மேம்படுத்தி, அவர்களின் செயல்திறன் மேலும் உயர வழிவகுக்கும் வகையில்,

மருத்துவமனைகளில் அலுவல் இடங்கள் (Work Stations / Duty Rooms) செம்மைப்படுத்தப்படும்.

108) மக்கள் நல்வாழ்வுத் துறையில் பணியாற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் அவரவர் விருப்பப் பங்களிப்பில் ஒரு தொகுப்பு நிதி (Corpus Fund) உருவாக்கப்பட்டு, பணியாளர்கள் பணிக்காலத்தில் எதிர்பாராத வகையில் உயிரிழந்தால், இத்தொகுப்பு நிதியிலிருந்து அவர்கள் குடும்பத்திற்கு அவரவர் பங்களிப்பின் அடிப்படையில் நிதியுதவி வழங்கப்படும்.

மக்கள் நல்வாழ்வுத் துறையில் பல்வேறு நிலைகளில் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மக்கள் நல்வாழ்வுத் துறையில் பணியாற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் அவரவர் விருப்பப் பங்களிப்பில் ஒரு தொகுப்பு நிதி (Corpus Fund) உருவாக்கப்பட்டு, பணியாளர்கள் பணிக்காலத்தில் எதிர்பாராத வகையில் உயிரிழந்தால், இத்தொகுப்பு நிதியிலிருந்து அவர்கள் குடும்பத்திற்கு அவரவர் பங்களிப்பின் அடிப்படையில் நிதியுதவி வழங்கப்படும்.

❖ ❖ ❖

வேளாண்மைத் துறை

மானியக் கோரிக்கை எண். 5

1. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பாண்டில் பயறு வகை பயிர்கள் உற்பத்தியை அதிகரிக்க, 11 ஆயிரம் செயல் விளக்கத் திடல்கள் 8 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

பயறு வகை பயிர்களின் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, துவரை, உளுந்து மற்றும் பச்சை பயறு பயிர்களில் 11,000 எக்டர் பரப்பளவில் தொகுப்பு செயல் விளக்க திடல்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், உயர் இரக விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்டக் கலவை, டை அம்மோனியம் பாஸ்பேட் 2 சதவீத கரைசல் இலைவழி தெளிப்பு, ஜிப்சம், பூசாஹைடிரோஜெல், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பயறு அதிசயம், களைக்கொல்லிகள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் முதலிய இடுபொருட்கள் 8 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் விநியோகிக்கப்படும்.

2. மண் பரிசோதனை, பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள் மற்றும் உயிர் உர உற்பத்தி மையத்திற்கு, நடப்பாண்டில் 5 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டடங்கள் கட்டி புனரமைக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள மண்பரிசோதனை நிலையங்களுக்கும், தேனி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள பூச்சிக்கொல்லி ஆய்வகங்களுக்கும், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள உயிர்

உர உற்பத்தி மையத்திற்கும் புதிதாக கட்டடங்கள் கட்டப்படும். கோயம்புத்தூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள பூச்சி கொல்லி ஆய்வகங்கள், திருவாரூர் மற்றும் தென்காசியில் உள்ள உயிர் உர உற்பத்தி மையங்களில் மறு சீரமைப்பு பணி மேற்கொள்ளப்படும். இப்பணிகளுக்காக 5 கோடியே 12 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. மக்காச்சோளப் பயிரில் படைப்புழு தாக்குதலை எதிர்கொள்ளும் வகையில் உயிரி கட்டுப்பாட்டு ஆய்வகங்களை மேம்படுத்தவும், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செயல்விளக்கத் திடல்கள் அமைக்கவும், நடப்பாண்டில் 6 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மக்காச்சோளப் பயிரில் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்துவதற்காக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன்,மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, காஞ்சிபுரம், விழுப்புரம், தருமபுரி, சேலம், ஈரோடு, கோவை, நாமக்கல், தஞ்சாவூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள உயிரியல் உற்பத்தி மையங்களில் 5 கோடி ரூபாய் செலவில் புதிய தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்தி அதிக உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதோடு, ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 3,000 ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்படும்.

4. நடப்பாண்டில் 50 சதவீத மானிய விலையில் 15 ஆயிரம் தார்பாய்கள் ஒரு கோடியே 95 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

அறுவடைக்கு பின் நிகழும் மழை மற்றும் வெயிலினால், விளைபொருட்களின் தரம் வெகுவாக பாதிக்கப்படுகிறது.

வேளாண் விளைபொருட்களை காயவைப்பதற்கு தார்பாய்கள் நன்கு பயன்படுவதோடு, நகரும் உலர்களமாகவும் பயன்படுவதால், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, **2019–2020** ஆம் ஆண்டில் **50** சதவீத மானியத்தில் **15,000** தார்பாய்கள் ஒரு கோடியே **95** இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

5. ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் எண்ணெய்ப் பனை விவசாயிகளுக்கு உரிய நிதிஆதரவு அளிக்கப்படும்.

சந்தை விலையின் ஏற்ற இறக்கத்தினால் எண்ணெய்ப் பனை விவசாயிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை கருத்தில் கொண்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எண்ணெய்ப் பனை பழக்குலைகளுக்கான விலை வித்தியாசத் தொகையான ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி எண்ணெய்ப் பனை விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

6. நடப்பாண்டில் முழு கிராம தொகுப்பு அடிப்படையில், 2,000 கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி முறையும், 2,000 கிராமங்களில் தீவிர பயறு வகை சாகுபடி முறையும் பரவலாக்கப்படும்.

குறைந்த நீரில் நெல் உற்பத்தித் திறனை உயர்த்துவதில், திருந்திய நெல் சாகுபடி முறையும் (System of Rice Intensifcation), பயறு வகைப்பயிர்களில் உற்பத்தியைப் பெருக்குவதில், தீவிர பயறு வகை சாகுபடி (System of Pulses Intensifcation) முறையும் முக்கியத்துவம் வகிக்கின்றன. எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இவ்விரு தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில்,

முழு கிராம தொகுப்பு அடிப்படையில் மொத்தம் 4,000 கிராமங்களில் இத்தொழில் நுட்பங்கள் பரவலாக்கப்படும்.

7. நகர்ப்புற வீடுகள் மற்றும் காலி இடங்களில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புற தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நகர்ப்புறங்களில் தோட்டக்கலை சாகுபடியை ஊக்குவிக்கவும், தரமான காய்கறிகள் மூலம் இளம் தலைமுறையினருக்கான ஊட்டச்சத்தினை உறுதி செய்வதற்கும், நகர்ப்புறங்களில் வீடுகள் மற்றும் காலி இடங்களில் நிழல்வலை மற்றும் பசுமைக்குடில் போன்ற நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புற தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.

8. நடப்பாண்டில் 28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவான தேனீ வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

பயிர்களில் மகரந்தச் சேர்க்கையை அதிகப்படுத்தி, உற்பத்தியை உயர்த்துவதில் தேனீக்கள் முக்கிய காரணியாக விளங்குகின்றன. தேனீ வளர்ப்பதினால் கிடைக்கும் தேன், தேன் மெழுகு, ராயல் ஜெல்லி ஆகியவைகள் விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானத்தை ஈட்டித் தருகின்றன. எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தேனீ வளர்ப்பதின் மூலம் உற்பத்தியை உயர்த்தவும், விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கவும் வழிவகை செய்ய, நடப்பாண்டில் 28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விவசாயிகளுக்குத் தேனீ வளர்ப்பு குறித்த பயிற்சி அளித்து, தேனீ காலனிகளும்,

வளர்ப்புப் பெட்டிகளும், தேன் பிழியும் கருவிகளும் வழங்கப்பட்டு விரிவான தேனீ வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

9. மூன்று கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் “டான்ஹோடா'' விற்பனை மையங்கள் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்படும்.

அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் விளையும் பழங்கள், காய்கறிகள், பூக்கள், நறுமணப் பொருட்கள், மலைப் பயிர்கள் போன்றவையும், பதப்படுத்தப்பட்ட பொருட்களான ஜாம், ஜெல்லி, ஊறுகாய் போன்ற பொருட்களும் பண்ணை விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. இதன் விற்பனையை அதிகரிக்கும் விதமாக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அனைத்து மாவட்டங்களிலும்3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ‘‘டான்ஹோடா'' விற்பனை மையங்கள் அமைக்கப்படும்.

10. தோட்டக்கலை குறித்து, மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் தோட்டக்கலைக் குழுக்கள் உருவாக்கப்படும்.

சத்தான காய்கறிகள் மற்றும் பழங்களை உற்பத்தி செய்வதிலும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும், தோட்டக்கலை முக்கியப் பங்கு வகிக்கிறது. தோட்டக்கலை குறித்து, மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் இதர நிறுவனங்களில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில், தோட்டக்கலைக் குழுக்கள் உருவாக்கப்படும். இக்குழுவில் சேரும் மாணவர்கள் கல்வி மற்றும் பிற வளாகங்களில் மரம் நடுதல், காய்கறி, மலர், மூலிகை

ஆகிய தோட்டங்களை அமைத்து, வளாகங்களை பசுமையாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுவார்கள்.

11. தோட்டக்கலைப் பண்ணைகளில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பதனிடும் தொழிற்கூடங்கள் ஏற்படுத்தப்படும்.

அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளைக் குறைக்கவும், விளைபொருட்களை மதிப்புக் கூட்டி ஜாம், ஜெல்லி, ஸ்குவாஷ், ஊறுகாய், உலர்ந்த பழங்கள் போன்ற உணவுப் பொருட்களாக பதப்படுத்தி விற்பதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கவும் நீலகிரி மாவட்டம், குன்னூரில் தற்போது ‘‘பழம் பதனிடும் நிலையம்’’ இயங்கி வருகிறது. இதே வகையில், சேலம், காஞ்சிபுரம், தேனி, கிருஷ்ணகிரி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள தோட்டக்கலைப் பண்ணைகளில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஐந்து பழம் பதனிடும் நிலையங்கள் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும். இதன் மூலம், இப்பகுதி விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை மதிப்புக் கூட்டி கூடுதல் வருவாய் பெற வழிவகை செய்யப்படும்.

12. அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் நெட் மீட்டருடன் கூடிய சூரிய ஒளித் தகடுகள் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

தமிழ்நாட்டில் 61 தோட்டக்கலைப் பண்ணைகளும், 19 பூங்காக்களும் உள்ளன. இவை நவீனமயமாக்கப்படுவதால், மின்கட்டணம் உயர்ந்து வருகிறது. எனவே, இப்பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் மின் செலவினை குறைத்துப் பண்ணைகள் தன்னிறைவு அடையும் வகையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சூரியசக்தியினைப் பயன்படுத்தி, மின்சாரம் உற்பத்தி செய்ய 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் “நெட் மீட்டருடன்” கூடிய சூரிய ஒளித் தகடுகளை படிப்படியாக பூங்காக்களில் நிறுவி மின் செலவுகளைக் குறைப்பது மட்டுமல்லாமல், அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் மூலம் கூடுதல் வருமானம் பெற வழிவகை செய்யப்படும்.

13. இரண்டு கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10 இடங்களில் வாசனைப் பொருட்கள் தயாரிப்பதற்கான செயல்விளக்க மையங்கள் அமைக்கப்படும்.

விளைபொருட்களை மதிப்புக் கூட்டி விற்பதன் மூலம் விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும். எனவே, விவசாயிகளின் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்வது பற்றி தெரிந்து கொள்ளும் வகையில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பாண்டில் மிளகாய், மல்லிகை, யூகலிப்டஸ், மஞ்சள் மற்றும் எலுமிச்சைப்புல் போன்ற பயிர்களிலிருந்து வாசனைப்பொருட்கள் தயாரிக்க 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10 இடங்களில் செயல்விளக்க மையங்கள் அமைக்கப்படும்.

14. மலையடிவார அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் சுற்றுலாவிற்கான வசதிகள் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

தோட்டக்கலை சுற்றுச் சூழல் சுற்றுலா என்பது சுற்றுச் சூழலையும், அப்பகுதியின் கலாச்சாரத்தையும் பாதிக்காத வண்ணம் சுற்றுலாவை மேம்படுத்துவதேயாகும். இதற்காக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மக்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டும் இடங்களான மலையடிவாரத்தின் கீழ் அமைந்திருக்கும்

அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், தோட்டக்கலை சுற்றுச் சூழல் சுற்றுலா தலமாக மாற்றப்படும். இதற்காக, சேலம் மாவட்டம்– கருமந்துறை, நீலகிரி மாவட்டம் – கல்லாறு மற்றும் தேவாலா, திண்டுக்கல் மாவட்டம் – கொடைக்கானல் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் – குற்றாலம் ஆகிய மலையடிவார அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் சுற்றுச்சூழல் சுற்றுலாவிற்கான வசதிகள் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

15. பதினைந்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரமான சாக்லேட் தயாரிப்புக் கூடங்கள் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தோட்டக்கலைத் துறையின் மூலம் தரமான, தூய்மையான, கலப்படமற்ற சாக்லேட்டுகள் தயாரிக்கும் தயாரிப்புக் கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இக்கூடங்களில் விவசாயிகளிடமிருந்து தரமான ‘‘கோகோ’’ விதைகளை நேரடியாகக் கொள்முதல் செய்து, அதில் கலப்படமில்லாமல் சாக்லேட் தயார் செய்து, குறைந்த விலையில் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட உள்ளது. முதற்கட்டமாக, ஒருங்கிணைந்த சாக்லேட் தயாரிப்புக் கூடம் சென்னை மாதவரத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. இதனைத் தொடர்ந்து, கோயம்புத்தூர், தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் புதிதாக தரமான சாக்லேட் தயாரிப்புக் கூடங்கள் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

16. இயற்கைச் சூழலை பாதுகாத்திட 5 இலட்சம் விதைப் பந்துகள் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும்.

பசுமைப் போர்வை மூலம் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதிலும், புவி வெப்பமயமாதலை குறைப்பதிலும் முக்கியப் பங்காற்றும்

மரங்களின் இனப்பெருக்கம் விதைகள் மூலமே நடைபெறுகிறது. விதைப்பந்து என்பது மரவிதைகளை உள்ளடக்கிய களிமண், மாட்டுச் சாணம், தொழு உரம் கலந்த கலவையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பந்து ஆகும். இவை விதைகள் முளைப்பதற்கான சரியான சூழல் வரும் வரை தன்னுள் இருக்கும் விதைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவுகிறது. எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இவ்விதைப்பந்துகள் அனைத்து அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலும் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும். இதில் 10 வகையான மரங்களின் விதைகளைக் கொண்டு 5 இலட்சம் விதைப்பந்துகள் தயாரிக்க 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

17. நடப்பாண்டில் நுண்ணீர்ப் பாசனத் திட்டத்திற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து, புள்ளி விவரக் கணக்கெடுக்க ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

நீர்ப் பற்றாக்குறையுள்ள தமிழ்நாட்டில் பாசன நீரைத் திறம்பட உபயோகித்து சாகுபடி பரப்பை உயர்த்த நுண்ணீர்ப் பாசனம் ஊக்குவிக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் 700 கோடி ரூபாய்க்கும் மேல் மானியம் வழங்கி, இந்திய அளவில் நுண்ணீர்ப் பாசனம் அமைப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் பாசனம் செய்யப்படும் 17 இலட்சம் எக்டர் பரப்பில், இதுவரை4 இலட்சம் எக்டர் பரப்பே நுண்ணீர்ப் பாசனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பாண்டில் இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்திட உதவிடும் வகையில், நுண்ணீர்ப் பாசனம் அமைக்க சாத்தியக் கூறுகளைஆய்வு செய்து, புள்ளி விவரக் கணக்கெடுக்க ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

18. மண்டல அளவில் 5 கோடி ரூபாய் செலவில் விவசாயத் தொழில்நுட்பக் கண்காட்சிகள் நடத்தப்படும்.

விவசாயிகளின் நலனுக்காகவும், வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும், நமது அரசு வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல், வேளாண் விற்பனை ஆகிய துறைகள் மூலம் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அனைத்து விவசாயிகளுக்கும்பொதுமக்களுக்கும்திட்டப்பலன்கள்சென்றடைய மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பொது மக்கள், விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்கள் பயன்பெறும் வகையில், அனைத்து துறைகளும் இணைந்து மண்டல அளவில் 5 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் விவசாயத் தொழில்நுட்பக் கண்காட்சிகள் நடத்தப்படும். இக்கண்காட்சிகள் பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்களை இணைக்கும் ஒரு பாலமாக விளங்கும்.

19. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையில் 10 இலட்சம் ரூபாய் செலவில் அலங்காரப் பிரிவு உருவாக்கப்படும்.

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, விவசாயிகள் பயன்பெறும் வகையில், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், தனது தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அலுவலர்களைக் கொண்டு, அழகான நில எழில் அமைப்புடன் கூடிய 19 பூங்காக்களை உருவாக்கி பராமரித்து வருகிறது. மாநகரங்களில் வசிக்கும் மக்கள் தங்கள் வீட்டையும், வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளையும், பசுமையுடனும் பல்வேறு விதமான நில எழில் அமைப்புடனும் அமைக்க ஆர்வமாக உள்ளனர். இவர்களுக்கு உதவிடும் வகையில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி

முகமையில் அலங்காரப் பிரிவு (Landscape Wing) 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

20. நான்கு மாவட்டங்களில் புதிய தோட்டக்கலை தகவல் மற்றும் பயிற்சி மையங்கள் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

தோட்டக்கலை வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில், தகவல், செயல்விளக்க மற்றும் அனைத்துத் தோட்டக்கலை தொடர்பான தகவல்களையும் விவசாயிகளிடம் பகிர்ந்து, விவசாயிகள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நான்கு மாவட்டங்களில் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தோட்டக்கலை தகவல் மற்றும் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

21. நடப்பாண்டில் 5 கோடி ரூபாய் மானியத்தில் விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்களுக்கு சூரிய கூடார உலர்த்திகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

தேங்காய், மிளகாய், முருங்கை இலை, மூலிகை இலைகள், எள், மக்காசோளம், நிலக்கடலை, கிராம்பு, பூண்டு, வாழைப்பழம், தக்காளி, அன்னாசி, நெல்லிக்காய் போன்ற வேளாண் விளை பொருட்களை சூரிய சக்தியினைக் கொண்டு விஞ்ஞான முறையில் சூரிய கூடார உலர்த்திகள் மூலம் உலர வைப்பதால், விளை பொருட்களை விரைவில் உலரவைக்க முடியும் என்பதோடு, பணியாட்கள் செலவும் குறைகிறது. மேலும், விளை பொருட்கள் மதிப்புக் கூட்டப்பட்டு, சந்தையில் அதிக விலையில் விற்கவும், அதிக இலாபம் பெற்று விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயரவும் உதவுகிறது. எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்

ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு 2019–2020ஆம் நிதியாண்டில் 400 சதுர அடி முதல் 1,000 சதுர அடி வரையில் சூரிய கூடார உலர்த்திகள் 5 கோடி ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு அமைத்துத் தரப்படும்.

22. நடப்பாண்டில் ஏழு வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையங்கள் 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, வேளாண்மை இயந்திரமயமாக்கல், அறுவடை பின்செய்நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை, வேளாண்மையில் சூரியசக்தியின் பயன்பாடு போன்ற பல்வேறு வேளாண் பொறியியல் துறை தொடர்பான தொழில்நுட்பங்களை பயிற்சி மற்றும் செயல்விளக்கங்கள் மூலம், விவசாயிகளிடம் பிரபலப்படுத்துவதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வருவாய் கோட்ட அளவில் 7 வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையங்கள் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

23. திருச்சியில் அமைந்துள்ள வேளாண்மைப்பொறியியல் பயிற்சி மையம் நடப்பாண்டில் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நவீனப்படுத்தப்படும்.

வேளாண்மைப் பொறியியல் துறையின் அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் தொழில்நுட்பங்கள் தொடர்பாக பயிற்சி அளிப்பதற்காக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருச்சியில் அமைந்துள்ள வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையம் 2019–2020ஆம் நிதியாண்டில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

24. நவீன வசதிகளுடன் கூடிய அக்மார்க் ஆய்வகம் விருதுநகர் மாவட்டத்தில் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

நுகர்வோருக்கு கலப்படமில்லாத, சுத்தமான உணவுப் பொருட்கள் வழங்குவதை “அக்மார்க் ஆய்வகங்கள்'' உறுதி செய்கின்றன. பயறு வகைகள், சமையல் எண்ணெய், நறுமணப் பயிர்கள் ஆகியவற்றின் விற்பனை மையமாக விளங்கும் விருதுநகர் மாவட்டத்தில் அக்மார்க் ஆய்வகம் அமைப்பதால், அங்கு பெறப்படும் விற்பனைப் பொருட்களுக்கு அக்மார்க் முத்திரை வழங்க வசதிகளும், அதன்மூலம் நுகர்வோருக்குத் தரமான பொருட்கள் கிடைப்பதும் உறுதி செய்யப்படும். எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நவீன வசதிகளுடன் கூடிய அக்மார்க் ஆய்வகம் ஒன்று விருதுநகர் மாவட்டத்தில் 60 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

25. விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

விவசாயிகளின் விளைபொருட்களை நல்ல விலைக்கு விற்பதற்கும், பொருளீட்டுக் கடன் பெறவும், குறைந்தபட்ச ஆதரவு விலை பெறுவதை உறுதி செய்யவும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தமிழ்நாடு முழுவதும் இயங்கி வருகின்றன. உணவு தானியப் பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், மிளகாய், பருத்தி ஆகியவை அதிகம் பயிரிடப்படும் விழுப்புரம் மாவட்டம் மேல்சித்தாமூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 63 வருவாய் கிராமங்களில் உள்ள விவசாயிகளும், கடலூர் மாவட்டம் வேப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 53 வருவாய் கிராமங்களில் உள்ள விவசாயிகளும் பயன்பெறும் வகையில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் ஆணைப்படி, இரண்டு புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் 5 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

26. நடப்பாண்டில் திருப்பூர் மாவட்டத்தில் புதிதாக வேளாண் அறிவியல் நிலையம் ஒரு கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள கிராமப்புற இளைஞர்கள், பண்ணை மகளிர், சுய உதவிக்குழுக்களுக்கு பல்வேறு வேளாண் தொழில்நுட்பங்கள் பற்றி பயிற்சியும், செயல் விளக்கமும் நடத்தி, அவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்துவதற்காக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2019–2020ஆம் ஆண்டில் திருப்பூர் மாவட்டத்தில் புதிதாக வேளாண் அறிவியல் நிலையம் (Krishi Vigyan Kendra), ஒரு கோடியே 58 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

27. ஒன்பது கூட்டுறவு மற்றும் ஒரு பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ஹைட்ராலிக் டிப்ளர்கள் நடப்பாண்டில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்யப்படும் கரும்பினை விரைவாக கரும்பு ஆலைகளில் இறக்குவதற்காக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒன்பது கூட்டுறவு மற்றும் ஒரு பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ஹைட்ராலிக் சுழல் கவிழ்ப்பான்கள் (Hydraulic Rotating Tipplers) 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும். இதனால், அறுவடைக் காலங்களில் ஆலைகளில் கரும்பினை விரைந்து இறக்க முடியும் என்பதோடு, ஆலைகளில் போக்குவரத்து நெரிசலையும் தவிர்க்க முடியும்.

❖

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

செய்தி மற்றும் விளம்பரம்

மானியக் கோரிக்கை எண். 28

1. கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள காந்தி மண்டபம் ரூ.30.52 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள காந்தி மண்டபம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் எழிலுற புதுப்பித்து மேம்படுத்தப்படும். மேலும் 52 ஆயிரம் மதிப்பீட்டில் தேவையான புதிய மரத்தளவாடங்கள் வழங்கப்படும்.

2. கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் ரூ.10.52 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள காமராஜர் நினைவகம் ரூ.10 இலட்சம் செலவில் அழகுற புதுப்பித்து மேம்படுத்தப்படும். மேலும் ரூ.52 ஆயிரம் மதிப்பீட்டில் தேவையான புதிய மரத்தளவாடங்கள் வழங்கப்படும்.

3. தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் இல்லம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் அமைந்துள்ள மகாகவி

பாரதியார் இல்லம், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பழமை மாறாமல் அழகுற மேம்படுத்தப்படும்.

4. ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுசுவர் கட்டுதல் மற்றும் வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

5. கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் மணிமண்டபத்தில் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் தேவையான புத்தகங்கள் மற்றும் தளவாடங்களுடன் நூலகம் புதிதாக அமைக்கப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னையில் அமைந்துள்ள கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபத்தில் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் தேவையான புத்தகங்கள் மற்றும் தளவாடங்களுடன் புதிதாக நூலகம் அமைக்கப்படும்.

6. தூத்துக்குடி மாவட்டம், கயத்தாரில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபத்தில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் தேவையான புத்தகங்கள் மற்றும் தளவாடங்களுடன் நூலகம் புதிதாக அமைக்கப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் அமைந்துள்ள வீரபாண்டியக் கட்டபொம்மன் மணிமண்டபத்தில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில், புதிதாக புத்தகங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்கப்பட்டு, நூலகம் அமைக்கப்படும்.

7. புதுடெல்லியில் பணிபுரியும் தமிழகத்தை சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கு பத்திரியாளர் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், குடும்ப உதவி நிதி, பத்திரிகையாளர் நல நிதியம் உட்பட அனைத்து நலத்திட்டங்கள் விரிவுபடுத்தி வழங்கப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பத்திரிகைத் துறையில், 20 ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்து, 58 வயது நிறைவடைந்து ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் பத்திரிகையாளர் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், குடும்ப உதவி நிதி மற்றும் பத்திரிகையாளர் நல நிதியம் உட்பட அனைத்து சலுகைகளும் வரைமுறைப்படுத்தப்பட்ட அதே விதிகளைப் பின்பற்றி புதுடெல்லியில் பணியாற்றும் தமிழகத்தை சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வழங்கப்படும்.

8. தலைமைச் செயலக செய்தியாளர் அறையில் ரூ.52 ஆயிரம் மதிப்பீட்டில் இரண்டு சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள செய்தியாளர் அறையில், செய்தியாளர் தவிர்த்த ஏனையோர் வருகையை கண்காணித்து கட்டுப்படுத்தும் வகையில் ரூ.52 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக 2 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படும்.

9. தலைமைச் செயலக செய்தியாளர் அறைக்கு ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள செய்தியாளர் அறையில், குடிநீர் வசதி மேம்படுத்தும் வகையில், ரூபாய் 1 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் சுத்திகரிப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டு (RO Plant System) தூய்மையான குடிநீர் வழங்கப்படும்.

10. தலைமைச் செயலக செய்தியாளர் அறைக்கு ரூ.90 ஆயிரம் மதிப்பீட்டில் சுவரில் பொருத்தும் தொலைக்காட்சி பெட்டி வழங்கப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள செய்தியாளர் அறையில், செய்தியாளர்களின் பயன்பாட்டுக்கென ரூ.90 ஆயிரம் மதிப்பீட்டில் சுவரில் பொருத்தும் புதிய எல்.இ.டி. தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும்.

11. மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் வீடியோ ஒளிப்பதிவு கருவிகள் வழங்கப்படும்.

மாவட்டங்களில் நடைபெறும் அரசு விழாக்கள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளை உடனுக்குடன் வீடியோ பதிவு செய்து, ஊடகங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்திட ஏதுவாக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு முதன்முறையாக வீடியோ

ஒளிப்பதிவு கருவிகள் வழங்கப்படும். இதன் முதற்கட்டமாக இவ்வாண்டு, மதுரை, திருநெல்வேலி, திருச்சி, தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம், தேனி, வேலூர், கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களுக்கு ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் வீடியோ ஒளிப்பதிவு கருவிகள் மற்றும் அதனை சார்ந்த உபகரணங்கள் வழங்கப்படும்.

12. நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய 36 புகைப்படக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.1 கோடியே 1 இலட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

செய்தி மக்கள் தொடர்புத்துறையில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் புகைப்படக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் பழமையானதாகவும், அடிக்கடி பழுது ஏற்படுவதையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஏற்கனவே, புதிதாக கொள்முதல் செய்து வழங்கப்பட்ட இரண்டு மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய 30 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள், தலைமையிட புகைப்படப் பிரிவுக்கு – 5 மற்றும் தமிழரசு அலுவலகத்திற்கு – 1 என மொத்தம் 36 எண்ணிக்கையிலான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புகைப்படக்கருவிகள் மற்றும் உபகரணங்கள், ரூபாய் 1 கோடியே 1 இலட்சத்து 35 ஆயிரம் மதிப்பில் வழங்கப்படும்.

13. வீடியோ ஒளிநாடா பதிவுகளைப் பாதுகாக்க ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் எண்மிய மின்னணு ஆவண காப்பகம் (Digital Electronic Archive) உருவாக்கப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் விழாக்கள், முக்கிய பிரமுகர்களின் சந்திப்பு, அரசு வீடியோ செய்தி மலர், செய்தி

தொகுப்புகள் மற்றும் சட்டப்பேரவை நிகழ்ச்சிகள் ஆகியவை பதிவேற்றி வைக்கப்பட்டிருக்கும் வீடியோ ஒளிநாடாக்களை முறையாக ஆவணப்படுத்தி, பராமரித்துப் பாதுகாக்கும் நோக்குடன் மொத்தமுள்ள 7,700 எண்ணிக்கையிலான ஒளிநாடாக்களின் பதிவேற்றங்களைப் பாதுகாத்திட எண்மிய மின்னணு ஆவணக் காப்பகம் Digital Electronic Archive உருவாக்கப்படும்.

முதற்கட்டமாக, 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 4,000 வீடியோ ஒளிநாடாக்களின் பதிவேற்றங்களை பாதுகாக்கும் வகையில், தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்து எண்மியமாக்கும் (Digitalize) பணிகள் மேற்கொள்ளப்படும்.

14. அரசுப் பொருட்காட்சியின் விளம்பர பணிக்காக ரூ.85 ஆயிரம் மதிப்பீட்டில் கணினி மற்றும் மென்பொருள் கொள்முதல் செய்யப்படும்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக, மாவட்டங்களில் நடத்தப்படும் பொருட்காட்சிகளுக்கு மக்களை ஈர்க்கும் வண்ணம், அந்தந்த மாவட்டச் சிறப்புகளை உள்ளடக்கிய விளம்பரங்களை வடிவமைக்கவும் மற்றும் விளம்பரப் பணிகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.85 ஆயிரம் மதிப்பீட்டில் நவீன கணினி மற்றும் மென்பொருள் கொள்முதல் செய்யப்பட்டு விளம்பர பணிகள் மேற்கொள்ளப்படும்.

15. தமிழரசு அச்சகத்திற்கு ரூ.25 ஆயிரம் மதிப்பீட்டில் மின்னணு எடை பார்க்கும் இயந்திரம் (Hi–Tech Electronic Weighing Machine)வழங்கப்படும்.

தமிழரசு அச்சகத்தில் அச்சுத்தாள் சுற்றி வரும் காகித உருளைகள், அலுமினியத் தட்டுகள் முதலான, அச்சுப்பணி முடிந்து கழிவு செய்யப்படும் மீள்பயன்தரத்தக்க பொருட்களை, துல்லியமாக

எடையிட்டு வழங்கிட ஏதுவாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.25 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய மின்னணு எடை பார்க்கும் இயந்திரம் (Hi-Tech Electronic Weighing Machine) வழங்கப்படும்.

16. தமிழரசு அச்சகத்திற்கு ரூ.72 ஆயிரம் மதிப்பீட்டில் வருகைப் பதிவு இயந்திரம் (Bio-Metric Reader) மற்றும் கணினி வழங்கப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழரசு அச்சகத்தில் பணிபுரிந்து வரும் தொழில்நுட்ப பணியாளர்களின் வருகைப் பதிவுகளை பதிவு செய்வதற்கு ஏதுவாக, ரூ.72 ஆயிரம் மதிப்பீட்டில், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய Bio-Metric Reader கருவியும் மற்றும் அதனுடன் தொடர்புடைய கணினியும் வழங்கப்படும்.

17. தமிழரசு அச்சகத்தின் சுற்றுப்பகுதியை சீர்படுத்த ரூ.29 ஆயிரம் மதிப்பீட்டில் புல் வெட்டும் இயந்திரம் (Bush Cutter) வழங்கப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழரசு அச்சகம் மற்றும் அலுவலகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிக அளவில் வளருகின்ற புற்கள் மற்றும் செடிகொடிகளை அகற்றி, சுத்தம் செய்து அப்பகுதிகளை தொடர்ந்து அழகுடன் பராமரித்திட ஏதுவாக ரூ.29 ஆயிரம் மதிப்பீட்டில் புல் வெட்டும் இயந்திரம் (Bush Cutter) வழங்கப்படும்.

❖ ❖ ❖

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

மானியக் கோரிக்கை எண். 30

1. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம் மற்றும் 9 அலகுகளில் ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கென ரூபாய் 1 கோடி செலவில் கழிவறைகள் கட்டுதல்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம் மற்றும் அனைத்து 9 அலகுகளிலும், மாற்றுதிறன் உடைய பணியாளர்கள் உட்பட, அனைத்து பணியாளர்களும் பயன்படுத்தும் வகையில், சுகாதார நலன் கருதி, கூடுதலாக புதிய கழிவறைகள் (Toilet) கட்டுதல் அவசியமாகிறது. எனவே, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், அரசு மைய அச்சகம், அரசு எழுதுபொருள் அலுவலகம், அரசு கிளை அச்சகம்–சென்னை உயர்நீதிமன்ற வளாகம், அரசு கிளை அச்சகம்–சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகம், அரசு கிளை அச்சகங்கள்– சேலம், புதுக்கோட்டை, திருச்சி, மதுரை மற்றும் விருத்தாசலம் ஆகிய 10 அலகுகளிலும் புதிய கழிவறைகள் தலா ரூ.10 இலட்சம் மதிப்பில் மொத்தம் ரூ.1 கோடி செலவில் கட்டப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. சென்னை அரசு மைய அச்சகத்திற்கு அலுமினியம் ஏணி ரூபாய் 2 இலட்சம் செலவில் கொள்முதல் செய்தல்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு மைய அச்சகத்தின் மேற்கூரை சுமார்

34 அடி உயரம் கொண்டதால், இவ்வலகில் உள்ள மின்விளக்குகள் மற்றும் மின்விசிறிகள் பழுது ஏற்படும்போது அவற்றினை பழுது பார்த்திட ஏதுவாக, மடிக்கக்கூடிய அலுமினியம் ஏணி (Foldable Aluminium Ladder) ஒன்று ரூ.2.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. சென்னை அரசு மைய அச்சகத்தின் பிரதான நுழைவு வாயிலில் புதிய கொட்டாரம் (Shed) ரூபாய் 42 இலட்சம் செலவில் கட்டுதல்

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு மைய அச்சகத்தின் நுழைவு வாயில் கொட்டாரத்தின் தூண்கள் அனைத்தும் பழுதடைந்து, வலுவிழந்து தொழிலாளர்களுக்கு பாதுகாப்பற்ற நிலையில் இடிந்துவிழும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ளதால், சாய்வுதள கூரை அமைப்பு கொண்ட இரும்பு தாங்குதள அமைப்பு மற்றும் கான்கீரிட் தூண்களுடன் கூடிய புதிய கொட்டாரத்தை பொதுப்பணித்துறை மூலம் கட்டுவது இன்றியமையாததாகிறது.

எனவே தொழிலாளர்களின் பாதுகாப்பினை கருதி, அரசு மைய அச்சகத்தின் நுழைவு வாயிலில் புதிய கொட்டாரம் (Shed) ரூ.42 இலட்சம் செலவில் கட்டப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூ.42 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம் மற்றும் 9 அலகுகளிலும் 250 லிட்டர் திறனுள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (RO Water Plant) ரூபாய் 40.50 இலட்சம் செலவில் நிறுவுதல்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், அரசு மைய அச்சகம், அரசு எழுதுபொருள் அலுவலகம், அரசு கிளை அச்சகம்–சென்னை உயர்நீதிமன்ற வளாகம், அரசு கிளை அச்சகம்–சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகம், அரசு கிளை அச்சகங்கள்–சேலம், புதுக்கோட்டை, திருச்சி, மதுரை மற்றும் விருத்தாசலம் ஆகிய 10 அலகுகளிலும் 2015ஆம் ஆண்டு நிறுவப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் தொடர் பயன்பாட்டின் காரணமாக அடிக்கடி பழுதடைவதாலும், தற்போதுள்ள பணியாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும், பணியாளர்களின் நலன் கருதியும் அனைத்து அலகுகளிலும் கூடுதலாக குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (RO Water Plant) புதியதாக நிறுவுவது அவசியமாகிறது.

எனவே, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம் மற்றும் 9 அலகுகளிலும் தலா ஒன்று வீதம் 10 புதிய குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் (RO Water Plant) ரூ.40.50 இலட்சம் செலவில் நிறுவப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூ.40.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. சேலம் அரசு கிளை அச்சகத்திற்கு சிறிய மறுதோன்றி இயந்திரம் ரூபாய் 11 இலட்சம் செலவில் கொள்முதல் செய்தல்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சேலம் அரசு கிளை அச்சகத்தில் மாவட்ட அரசிதழ்கள் மற்றும் பட்டு வளர்ச்சி துறையின் மூலம் அச்சிடப்படும் பட்டு முட்டைத்தாட்கள் பணிகள் செயலாக்கம் செய்ய சிறிய மறுதோன்றி இயந்திரம் (Mini Offset Machine) ஒன்று ரூ.11 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூ.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்திற்கு தாள் கட்டும் இயந்திரம் ரூபாய் 70,000/– செலவில் கொள்முதல் செய்தல்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தின் பயன்பாட்டிற்காக தாள் கட்டும் இயந்திரம் (Paper Bundling Machine) ஒன்று ரூ.70,000/– செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூ.70,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. திருச்சி மற்றும் சேலம் அரசு கிளை அச்சகங்களுக்கு 2 தானியக்க காகிதம் துளையிடும் இயந்திரம் ரூபாய் 3.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்தல்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருச்சி மற்றும் சேலம் அரசு கிளை அச்சகங்களில் மேற்கொள்ளப்படும் பல்கலைக்கழக விடைத்தாட்களின் இடதுபுற ஓரத்தில் துளையிடும் பணிக்காக ஒரு இயந்திரத்தின் விலை ரூ.1.75 இலட்சம் மதிப்பில் 2 தானியக்க காகிதம் துளையிடும் இயந்திரங்கள் (Automatic Paper Punching Machine) ரூ.3.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூ.3.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

8. சென்னை அரசு மைய அச்சகம், புதுக்கோட்டை மற்றும் திருச்சி அரசு கிளை அச்சகங்களுக்கு, கையினால் எண்களிடும் இயந்திரங்கள் 35 எண்ணிக்கைகள் ரூபாய் 3.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்தல்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, சென்னை அரசு மைய அச்சகத்திற்கு 10 எண்ணிக்கைகள், புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்திற்கு 10 எண்ணிக்கைகள் மற்றும் திருச்சி அரசு கிளை அச்சகத்திற்கு 15 எண்ணிக்கைகள் வீதம், இயந்திரம் ஒன்றின் விலை ரூ.10,000/– மதிப்பில் கையினால் எண்களிடும் இயந்திரங்கள் மொத்தம் 35 எண்ணிக்கைகள் (Hand Numbering Machine) ரூ.3.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூ.3.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. புதுக்கோட்டை மற்றும் சேலம் அரசு கிளை அச்சகங்களுக்கு 12 எண்ணிக்கைகள் மின்னிலக்க எண்ணிடும் இயந்திரங்கள் ரூபாய் 60 இலட்சம் செலவில் கொள்முதல் செய்தல்

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, புதுக்கோட்டை மற்றும் சேலம் அரசு கிளை அச்சகங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு முறையே 8 எண்ணிக்கைகள் மற்றும் 4 எண்ணிக்கைகள் வீதம், இயந்திரம் ஒன்றின் விலை ரூ.5 இலட்சம் மதிப்பில் மொத்தம் 12 எண்ணிக்கைகள் மின்னிலக்க எண்ணிடும் இயந்திரங்கள் (Digital Numbering Machines) ரூ.60 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ ❖ ❖

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை

மானியக் கோரிக்கை எண். 41

இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

மானியக் கோரிக்கை எண். 51

1. தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களின் தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு பற்றிய இணைய தளம் உருவாக்குதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் உள்ள பெரிய மற்றும் சிறிய ஏரிகள் மற்றும் அணைகளின் நீர் இருப்பு, நீர்வரத்து, வெளியேற்றம் மற்றும் நிலத்தடி நீர் மட்டம் ஆகியவற்றை மதிப்பீடு செய்யவும் நிகழ் நேர கள தரவுகளை தடையில்லாமல் பெறுவதற்கும், செயற்கைகோள் குறிப்புகள் மற்றும் சரிபார்க்கப்பட்ட மாதிரிகள், தண்ணீர் கணக்காய்வு ஆகியவற்றின் மூலம் நீர் வள ஆதாரங்களின் நீர் இருப்பை கண்டறியவும், தினந்தோறும் உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் விநியோகத்தின் நிலவரம் குறித்த தரவுகளை பெறுவதற்கும், நிகழ் நேர மழையளவு, செயற்கைகோள் தகவல்கள் அடிப்படையில் வெள்ள பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை கண்டறியவும் அவ்வாறு முன்கூட்டியே கண்டறியப்பட்ட அபாயத்தை களப்பணியாளர் மற்றும் மக்களுக்கு உடனடியாக தெரிவித்து புயல் மற்றும் வெள்ள அபாயத்தின் போது தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களை பாதுகாப்பாக வெளியேற்றி நிவாரண முகாம்களில் தங்க வைப்பதற்கும் ஏதுவாக தமிழ்நாடு நீர் ஆதாரங்களின் தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு பற்றிய இணைய தளம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

2. வறட்சி மேலாண்மை குறித்து விவசாயிகள் மற்றும் களப் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துதல்

தமிழ்நாடு தீவிர வறட்சியால் தொடர்ந்து பாதிப்பிற்கு உள்ளாகிறது. பருவ நிலை மாற்றத்தின் விளைவாக ஏற்படும் குறைவான மழைபொழிவால் இந்நிலை மேலும் தீவிரமடைகிறது.

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்த சிக்கலான, நிச்சயமற்ற சூழ்நிலைகளில், விவசாயிகள் மற்றும் களப்பணியாளர்களுக்கு எதிர்வரும் அபாயத்தை எடுத்துரைப்பதோடு, மாற்று திட்டங்களை தெரிவிப்பதும் மிக அவசியமானதாகும் என்பதனை கருத்தில் கொண்டு வேளாண், தோட்டக்கலை, கால்நடை பராமரிப்புத் துறைகள், தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகத்தின் கிரிஷி விக்யான் கேந்திரா மற்றும் கால்நடை பல்கலைக் கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களின் உதவியுடன் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் மூலம் விவசாயிகள் மற்றும் களப் பணியாளர்களுக்கு ரூ. 32.00 இலட்சம் செலவில் திறன் மேம்பாடு பயிற்சிகள் வழங்கப்படும்.

3. இடி, மின்னல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட குறும்படங்கள் தயாரித்தல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இடி மின்னல் காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள் கடந்த சில வருடங்களில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்த காரணத்தால், 2017ஆம் ஆண்டு இடி மின்னலை ஒரு பேரிடராக அரசு அறிவித்தது.

இடி மின்னல் ஏற்படும் போது, அடிப்படையில் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை (Do's & Don'ts) குறித்த

விழிப்புணர்வு கற்றறிந்த பொது மக்களிடம் கூட இல்லாத நிலை உள்ளது. எனவே, இடி மின்னல் ஏற்படும் போது செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை (Do’s & Don’ts) குறித்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் ரூ. 10 இலட்சம் செலவில் குறும்படங்கள் தயாரிக்கப்படும். பெருவாரியான மக்களுக்கு சென்றடையும் வகையில் இந்த குறும்படங்கள் திரையரங்குகள், பொது இடங்கள் மற்றும் தொலைகாட்சியில் ஒளிபரப்பப்படும்.

4. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டத்தில் செருகளத்தூர் கிராமத்தில் மரப்பூங்கா அமைத்தல்

டெல்டா மாவட்டங்களில் ஒன்றான திருவாரூர் மாவட்டத்தில் 2 சதவீதம் மட்டுமே வனப்பகுதி உள்ளது. டெல்டா மாவட்டங்களில் அடிக்கடி ஏற்படும் இயற்கை சீற்றங்களால் பசுமைப் பரப்பு குறைந்து வருகின்றது. ஆதலால், இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், செருகளத்தூர் கிராமத்தில் மரப்பூங்கா சுமார் 40,000 பூர்வீக வன இனங்கள் மூலிகை செடிகள் உட்பட ரூ.5 கோடி செலவில் வனத்துறையின் மூலம் கஜா புயல் மறு கட்டமைப்பு, மறு வாழ்வு மற்றும் புனரமைப்பு திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் இந்த மரப்பூங்கா பூர்வீக இனங்களின் வனப்பரப்பினை அதிகப்படுத்தவும் ஆராய்ச்சி, பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலாவினை ஊக்குவிக்கவும் பயன்படும்.

5. மறுநில அளவைப் பணியாளர்களுக்கு நலத் திட்டங்கள்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன்,மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை கணினிமயமாக்கும் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நிதி உதவியுடன் தொடர்ச்சியான இயக்க குறிப்பு நிலையங்கள் (Continuously Operating

Reference Station) வழியாக வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி (Differential Global Positioning) மற்றும் மின்னணு நிலைக்கலன் கருவி (Electronic Total Station), ஆகியவற்றை பயன்படுத்தி கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களில் மறு நில அளவை பணிகளும் 7 நகராட்சிகளில் நகர நில அளவைப்பணிகளும் நடைபெற்று வருகின்றன. இப்பணியில் ஈடுபடும் பணியாளர்கள் கடுமையான வாழ்வியல் நெருக்கடிகளை எதிர்கொள்வதால், அவர்களுக்கு ஆயுள் காப்பீடு, ஊக்கத்தொகை, காலணிகள், உபகரணங்கள் எடுத்துச் செல்லும் பை, அளவை நாடா, தொப்பி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

6. சிட்டாக்களை மேம்படுத்த சிறப்புத் திட்டம்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தற்போது இணயவழித் தரவு தளத்தில் 100 விழுக்காடு நில உரிமை கொண்டு வரப்படாத நிலை உள்ளதால் நில உரிமை குறித்த தரவுகளை மேம்படுத்துவதற்காக ரூ.100 இலட்சம் செலவில் ஒரு மேம்பாட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதன்மூலம், நில உரிமையாளர்களிடம் இருந்து இணைய வழியில் விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்டு, உரிய பரிசீலனைக்குப் பின்னர், நிலஅளவைத் தரவுத்தளம் மேம்படுத்தப்படுவதுடன்இந்தவாய்ப்புக்களைபயன்படுத்திக்கொள்ள நில உரிமையாளர்களுக்கு செய்தித்தாள், தொலைக்காட்சி மற்றும் இதர ஊடகங்கள் மூலம் தெரிவிக்கப்படும்.

7. பழமையான புலப்படப் புத்தகங்களை ஸ்கேன் செய்தல் மற்றும் பாதுகாத்தல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, பின்குறிப்புப் பதிவுகளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் கையால் வரையப்பட்ட புலப்படச் சுவடிகளை ஸ்கேன் செய்யவும், பாதுகாக்கவும் தேவையான ஸ்கேனர்கள், தலைமைக் கணினிகள் மற்றும் இதர வன்பொருள்களை ரூ.25 இலட்சம் DILRMP தலைப்பின் கீழ் உள்ள தொகையைப் பயன்படுத்தி கொள்முதல் செய்து, சென்னை மத்திய நிலஅளவை அலுவலகத்தில் நிறுவப்படுவதுடன் இப்பணி, சென்னை மத்திய நிலஅளவை அலுவலகத்தில் தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டு ஓராண்டு காலத்திற்குள் முடிக்கப்படும்.

8. நகர நிலவரித்திட்ட அலுவலகங்களுக்கு கணினி மற்றும் துணைக்கருவிகள் வழங்குதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, நிலவரித் திட்டப்பணி 50 நகரங்களில் தற்போது முன்னேற்றத்தில் உள்ளது. இணைய வழியில் நகர நிலஅளவை ஆவணங்களை மேம்படுத்திட செயல் திட்டம் உருவாக்கப்பட்டு ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் 50 நகர நிலவரித்திட்ட வட்டாட்சியர்களுக்கு கணினி மற்றும் துணைக் கருவிகள் வழங்கப்படும்.

9. இணையவழி நில ஆவணங்களைப் பாதுகாக்க பேரிடர் மீட்பு வசதி

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வலைத்தள மென்பொருளைப் பயன்படுத்தி இணையவழி பட்டா மாறுதல் செய்யும் முறைக்கு பயன்படுத்தப்பட்டு வரும் கணினிமயமாக்கப்பட்ட நில ஆவணங்கள், சென்னை பெருங்குடியிலுள்ள மாநில தரவு மையத்திலிருந்து இணையவழியில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

இத்தரவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்திடும் வகையில் திருச்சியிலுள்ள தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையத்தில், ரூ.52.37 இலட்சம் செலவில் ‘‘பேரிடர் மீட்பு அமைப்பினை’’ நிறுவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

10. இணையவழி புவிசார் தகவல் மற்றும் பல்வகைப் பேரிடர்களின் அதீத தாக்கத்தினை முன்னதாக அறிந்து அவசர மீட்பு நடவடிக்கைகளை முறைப்படுத்தும் திட்டத்துடன் (TNSMART) ஒருங்கிணைக்கப்பட்ட வறட்சி மேலாண்மைக்கான முடிவு ஆதார அமைப்பினை (Decision Support System) உருவாக்குதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழக அரசு, பேரிடர் அபாய மேலாண்மையினை திறம்பட மேற்கொள்ள, மூன்றடுக்கு இணையவழி புவிசார் தகவல்கள் அடிப்படையில் செயல்படும் **’TNSMART’** எனும் முடிவு ஆதார அமைப்பினை செயல்படுத்தியது.

வறட்சி தொடர்பான அளவீடுகளை பன்முகப் பார்வையில் கண்காணிக்க, மழையளவு, சம்பா மற்றும் குறுவை பருவ காலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பல்வேறு பயிர்கள், அணைகளின் நீர் இருப்பு, நிலத்தடி நீர்மட்டம் போன்ற தரவுகள் இத்திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்திட மாவட்ட, வட்டார வாரியான தரவுகளை பெறுவதற்கு இணையவழி மற்றும் அலைபேசி செயலிகள் உருவாக்கப்படும். வறட்சியினை மேலாண்மை செய்யும் இந்த சிறந்த முயற்சி, வறட்சி தணிப்பு நடவடிக்கைகள் மற்றும் வருநிகழ்வு பயிர் திட்டங்கள் ஆகியவற்றை ஒரே சமயத்தில் மேற்கொள்வதற்கு வழி வகுக்கும்.

11. மரம் நடுதல் மற்றும் பலத்த காற்றினால் விழும் மரங்களை வெட்டி அகற்றிட முதல் நிலை மீட்பாளர்களாக மாணவர் சிறப்பு படையினை உருவாக்குதல்

புயல் காலங்களில் பலத்த காற்றின் காரணமாக அதிக எண்ணிக்கையிலான மரங்கள் வேரோடு சாய்ந்து மற்றும் முறிந்து விழுவதினால் மின் உட்கட்டமைப்புகள் பாதிப்புக்குள்ளாவதோடு மட்டுமல்லாமல் பெருமளவில் பொருட்சேதங்கள் ஏற்படுவதோடு சாலை போக்குவரத்தும் முற்றிலுமாக தடைபடுகிறது. மேலும், அதிக எண்ணிக்கையிலான நன்கு வளர்ந்த மரங்கள் விழுவதன் காரணமாக காற்றில் கார்பன்–டை–ஆக்ஸைடின் அளவு அதிகரிப்பதோடு சுற்றுச் சூழலும் பாதிக்கப்படுகிறது. மக்களின் உயிர்நாடியாக விளங்கும் சாலைகள் தடைபடுவதால், மீட்பு குழுக்கள், நிவாரணப் பொருட்கள் மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொண்டு செல்வதில் மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. இதனால் விழுந்த மரங்களை புயலுக்கு பின் போர்க்கால அடிப்படையில் அப்புறப்படுத்துவது மிக முக்கியமானதாகும்.

இதனை கருத்தில் கொண்டு, இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பேரிடர்களின் போது கீழே விழும் மரங்களை வெட்டி அகற்றிட மாநிலத்தில் உள்ள மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். மேலும், பேரிடர் அல்லாத காலங்களில் மாணவர்களை மரம் நடும் பணிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் மரம் வளர்ப்பினை அதிகப்படுத்தி காற்றில் உள்ள கார்பன் அளவினை கட்டுக்குள் கொண்டுவர இயலும்.

12. வறட்சியால் பாதிப்புக்குள்ளாகும் வட்டாரங்களில் ICAR - CRIDA மற்றும் ICAR-IWMI நிறுவனங்களுடன் இணைந்து நுண் நிலை ஆய்வு மேற்கொள்ளுதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன்,மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,

ICAR-IWMI திட்டமானது பேரிடர் மேலாண்மை தொடர்பான தரவுகளை தமிழக அரசுக்கு வாரந்தோறும் வழங்கும். சம்பா மற்றும் குறுவை பருவ காலங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களின் வட்டார வாரியான பயிர்களின் நிலைமை, வேளாண், தோட்டக்கலை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைகளால், வாரந்தோறும் CRIDA-விற்கு வழங்கப்பட்டு, பேரிடர் மேலாண்மை தொடர்பன தரவுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். வேளாண்மை மற்றும் தொடர்புடைய துறைகள், ICAR-CRIDA மற்றும் IWMI ஆகிய நிறுவனங்களின் தொழில் நுட்ப வழிகாட்டுதலுடன், நிகழ்நேர அடிப்படையிலான வருநிகழ்வு திட்டத்தினை உருவாக்கிட இத்தரவுகள் உதவி புரியும்.

வறட்சியால் பாதிப்பிற்குள்ளாகும் தன்மை, சாகுபடி பரப்பு மற்றும் சாகுபடி செய்யப்பட்ட பல்வேறு விதமான பயிர்களின் நிலை ஆகிய காரணிகளின் அடிப்படையில் மாவட்டங்கள் தேர்வு செய்யப்படும். சோதனை அடிப்படையில் கிருஷ்ணகிரி, சேலம், நாகப்பட்டிணம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் வாரந்தோறும் கண்காணிக்கப்படும்.

13. வலைதளம் வாயிலாக நிலமாற்றம், நில உரிமை மாற்றம், குத்தகை மற்றும் நில எடுப்பு உள்ளிட்ட அனைத்து நிலங்கள் தொடர்பான நடைமுறைகளை கணினிமயமாக்குதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நில நிருவாகத் துறையில், நில எடுப்பு, நிலமாற்றம், நில உரிமை மாற்றம், நிலக் குத்தகை ஆகிய இனங்கள் குறித்த நடைமுறைகளை கணினிமயமாக்கி மேம்படுத்தும் திட்டப்பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென ஒரு வலைதளம் உருவாக்கப்பட்டு இத்திட்டத்தினை தயார் செய்து செயல்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக,

வலைதளத்தில் நிலமாற்றம் தொடர்பான சிப்பம் (Land Transfer Module) உருவாக்கப்பட்டு மாதிரி சோதனை (Test Pilot) செயல்படுத்த தயார்நிலையில் உள்ளது. அதேநேரத்தில் நிலங்கள் தொடர்பான பிற சிப்பங்களும் (Modules) குறித்த காலத்திற்குள் உருவாக்கப்பட உள்ளன. இந்த இணையதளத்தில் மாநிலத்தின் நிலங்கள் தொடர்பான நடைமுறைகள் உருவாக்கப்பட உள்ளது. இந்த திட்டம், நிலங்கள் தொடர்பான செயல்முறைகளுக்கு துரித மற்றும் பயனளிக்கின்ற நடைமுறையாக இருக்கும்.

14. தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம்,1905–க்கு திருத்தச் சட்டம் வெளியிடுதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன்,மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905இல் அரசாங்க நிலங்களை பாதுகாக்கவும், ஆக்கிரமிப்புகள் கண்டறியப்படின் அவற்றை அகற்றவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு நிலங்களில் தற்போது ஏற்படும் ஆக்கிரமிப்பால் உண்டாகும் பிரச்சனைகளை மனதில் கொண்டு 114 வயதுடைய சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர அரசு முடிவு செய்து பொருத்தமான திருத்தங்களைப் பரிந்துரைக்க, ஒரு செயலர் நிலைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்திற்கான திருத்தங்கள் நடப்பு ஆண்டிலேயே இயற்றப்படவுள்ளது.

மேலும், இந்த திருத்தச்சட்டத்தில், அரசு நிலங்களில் சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்பவர்களுக்கு கடுமையான தண்டனை விதிகள் கொண்டுவரப்படவுள்ளன. மேலும், இந்த திருத்தச் சட்டத்தில் தற்போதுள்ள மேல்முறையீடு/ சீராய்வு முறைகளில் மாற்றம் செய்யப்பட்டு எளிய மற்றும் விரைந்து தீர்வு காணும் முறையில் வழிவகை செய்யப்படும்.

15. எங்கிருந்தும் இணையவழி பட்டா பெற விண்ணப்பிக்கும் வசதியை உருவாக்குதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2014ஆம் ஆண்டு முதல் வலைதள மென்பொருளை (தமிழ்நிலம்) பயன்படுத்தி இணையவழி பட்டா மாறுதல் சேவை இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பொது சேவை மையங்கள் வாயிலாக நில உரிமையாளர்களிடமிருந்து பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

தற்பொழுது, எங்கிருந்தும் இணையம் வழியாக பொதுமக்கள் பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்படும்.

16. நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் துறைக்கு வலைத்தளம் அமைத்தல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம்மற்றும் பல திட்டங்கள் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நில ஆவணங்கள் தொடர்பான இ–சேவை பயன்பாட்டினை பொதுமக்களுக்கு விரிவுபடுத்தும் பொருட்டு, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத்துறைக்கென தனியாக இணையதள வசதியை உருவாக்கி இத்துறைச்சார்ந்த பல்வேறு திட்டங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் அரசாணைகள் போன்ற விவரங்கள் பெற வழிவகை செய்யப்படும்.

17. கிராம வரைபடங்கள் பதிவிறக்கம் செய்ய மின் சேவை

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன்,மாண்புமிகுமுதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,

அனைத்து கிராம வரைபடங்களும் (16,721 எண்ணிக்கை) ஸ்கேன் செய்யப்பட்டுள்ளது. எனவே, (A1 தாள் ஒன்றுக்கு) ரூ.200/– என்ற குறைந்த கட்டணத்தில் ஸ்கேன் செய்யப்பட்ட கிராம வரைபடங்களை பொதுமக்கள் இ–சேவை மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

18. பத்திரப் பதிவிற்கு முன்னர் உட்பிரிவுகளை அங்கீகரித்தல்.

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி நிலம் தொடர்பான சொத்துகள் பத்திரப்பதிவு செய்யப்படுவதை தவிர்ப்பதற்காக, பத்திரப்பதிவிற்கு முன்னரே உட்பிரிவுகள் பரிசீலனை மற்றும் அங்கீகாரம் செய்யும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும். இந்நடைமுறையின் கீழ், தத்தமது நிலங்களை/ சொத்துக்களை விற்பனை செய்ய விரும்பும் நில உரிமையாளர்கள் வட்ட அலுவலகங்களுக்கு விண்ணப்பித்து தாம் விற்பனை செய்ய விரும்பும் நிலங்கள் / சொத்துக்கள் குறித்த புலப்படங்களின் சான்றளிக்கப்பட்ட நகலைப் பெற வேண்டும்.

அவ்விண்ணப்பங்கள் பெறப்பட்டதும், வட்ட அலுவலகங்களில் உள்ள நிலஅளவை பணியாளர்கள் உரிய விசாரணை மேற்கொண்டு தொடர்புடைய நிலப் பரிவர்த்தனைக்காக தற்காலிக உட்பிரிவு ஆவணங்களைத் தயார் செய்பவர் பட்டா மாறுதல் செய்யத்தக்க ஒப்புதல் அளிக்கப்பட்ட உட்பிரிவு ஆவணங்கள், இணைய வழியில் தொடர்புடைய சார்பதிவகம் மற்றும் நிலஉரிமையாளர் (விண்ணப்பதாரர்) ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படும். இதன் பின்னர், நிலஉரிமையாளர், தனது நிலப்பரிவர்த்தனையை சார்பதிவகத்தின் மூலம் மேற்கொள்ள முடியும். இதன் பின்னர் இணையவழியிலான பட்டா மாறுதல் விவரங்கள், மீண்டும் புலத்தணிக்கை ஏதுமின்றி தொடர்புடைய ஆவணங்களில் பதிவு செய்யப்படும்.

19. சமூக பாதுகாப்புத் திட்டத்திற்கான இணையவழி ஒருபக்கம் விண்ணப்பம் செயல்படுத்துதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன்,மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சமூக பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. நாளது தேதியில் 29.50 இலட்சம் பயனாளிகள் மாதந்தோறும் ரூ.1000/– ஒய்வூதியமாக பெற்று வருகின்றனர். 2019–2020ஆம் நிதியாண்டில் ரூ.4,060 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

தற்போதுள்ள நடைமுறையில், ஒய்வூதியம் கோரி மனுக்களை சமர்ப்பிக்க மனுதாரர்கள் வட்டாட்சியர் அலுவலகம், வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நேரில் செல்ல வேண்டிய நிலை உள்ளது. மேலும், அவர்கள் தங்களது மனுக்களின் நிலையை அறிந்து கொள்ள இயலாத நிலை உள்ளது.

வயதானோர்/ மாற்றுத் திறனாளிகளின் சிரமத்தினை போக்கும் வண்ணம், ‘‘இணையவழி ஒருபக்கம் விண்ணப்பம்’’ செயல்படுத்தப்பட உள்ளது. இம்முறையில், மனுதாரர்கள் தங்களது மனுக்களை அருகில் உள்ள இ–சேவை அல்லது பொது சேவை மையத்தில் பதிவு செய்யலாம். மேலும் தங்களது மனுக்களின் நிலையினை எவ்விடத்திலும், எந்நேரத்திலும் இணைய வழி மூலம் அறிந்து கொள்ளலாம். மனுதாரர்களின்மனு ஒப்புதல் அளிக்கப்பட்ட விவரம் உடன் குறுஞ்செய்தி மூலம் அவர்களுக்கு தெரிவிக்கப்படும்.

இம்முறை, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் 100 சதவிகிதம் கணக்கில் கொள்ளப்பட்டது என்பதை உறுதி செய்யும். மேலும், இம்முறையில், உயர் அலுவலர்கள் செம்மையாக ஆய்வு செய்ய இயலும் என்பதால் வெளிப்படையான ஆளுமை உறுதி செய்யப்படும்.

20. வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான தனி இணைய வழி மனு பரிசீலனை முகப்பு செயல்படுத்துதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழக அரசு, வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான மனு பரிசீலனை முகப்பு என்ற இணையவழித் திட்டத்தை ஏற்கெனவே செயல்படுத்தியுள்ளது. இம்முறையில் பொதுமக்கள் தங்களது மனுக்களை/ குறைகளை இந்தியாவில் எவ்விடத்திலிருந்தும் இணைய வழி மூலம் பதிவு செய்யலாம், மேலும், தங்களது மனுக்களின் நிலையினை இணைய வழி மூலம் அறிய இயலும், இம்முறையில், பொது மக்கள் தங்களது கோரிக்கையினை பதிவு செய்வதற்கு அவர்களது கைப்பேசி எண்ணிற்கு கடவு எண் அனுப்பப்படும். எனினும், வெளிநாடு வாழ் இந்தியர்கள் இம்முறையை பயன்படுத்திட இயலாத நிலை இருந்தது.

இந்த வசதியினை வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு நீட்டிக்கும் பொருட்டு, வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கென தனி இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. இம்முறையில், வெளிநாடு வாழ் இந்தியர்கள் தங்களது மனுக்களை/ குறைகளை சேவைக் கட்டணமின்றி பதிவு செய்ய ஏதுவாக அவர்களது மின்னஞ்சல் முகவரிக்கு கடவு எண் அனுப்பப்படும். வெளிநாடு வாழ் இந்தியர்கள் தங்களது கோரிக்கை குறித்த மனுக்களை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்புவதோடு, அதன் நிலையையும் தெரிந்து கொள்ள இயலும்.

21. 9,633 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழக அரசால் வழங்கப்படும் பல்வேறு சேவைகளை திறம்பட செயல்படுத்துவதற்கு கிராம நிருவாகத்தின்

பங்களிப்பு இன்றியமையாதது என்பதால், தமிழக அரசு கிராம நிருவாகத்தினை நவீனப்படுத்துவதற்கு அதிக முன்னுரிமை அளிக்கிறது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை தகவல் தொழில்நுட்பத்தின் உதவியோடு இணையத்தின் வாயிலாக பல்வேறு சான்றிதழ்களை மக்களுக்கு வழங்கி வருகின்றது. இதனை செம்மைப்படுத்தும் நோக்கில் கிராம நிருவாக அலுவலர்களுக்கு 2012ஆம் ஆண்டு முதல் மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றது. பல்வேறு கட்டங்களாக 9,614 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் 2012ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 7,787 மடிக்கணினிகள் தற்பொழுது வழக்கற்ற நிலையில் உள்ளதாலும், 1,846 புதிதாக பணியில் சேர்ந்துள்ள கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் வழங்க வேண்டியுள்ளதாலும் ரூ.23.97 கோடி செலவில் 9,633 கிராம நிருவாக அலுவலர்களுக்கு புதிதாக மடிக்கணினிகள் வழங்கப்படும்.

22. இந்திய அரசிற்கும், பிரிட்டிஷ் ஹைகமிஷனுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்ப ஒத்துழைப்பின் கீழ், பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் தணிப்பினை வலுப்படுத்த ஆய்வு

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்திய அரசிற்கும், பிரிட்டிஷ் ஹைகமிஷனுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்ப ஒத்துழைப்பின் கீழ், வேகமாக குறைந்து வரும் இயற்கை வாழ்விடங்களை கொண்ட பெரிய கடலோர மற்றும் நகர்புற மக்களைக் கொண்ட நகரங்களான சென்னை, கடலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகியவற்றில் பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் தணிப்பினை வலுப்படுத்த பிரிட்டிஷ் ஹைகமிஷனுடன் இணைந்து அவர்களது தொழில்நுட்ப உதவியுடன் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த ஆய்வின் பரிந்துரைகள் இதர கடலோர நகரங்களுக்கும் பொருந்தும்.

எளிதில் பாதிக்கப்படக்கூடிய சுற்றுச்சூழல் அமைப்புகளின் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு, உப்புநீர் ஊடுருவல் தடுப்பு, மழைநீர் சேகரிப்பு மற்றும் நீடித்த நிலையான நகரங்களுக்கான பொது பேரிடர் அபாயக் குறைப்பிற்கான நடைமுறைகளை கையாளுதல் தொடர்பாக தொழில்நுட்ப உதவி வழங்கி அதன் மூலம் பேரிடர் அபாயத்தை குறைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

❖ ❖ ❖

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

சுற்றுலா

மானியக் கோரிக்கை எண். 29

1. பள்ளி மாணாக்கர்களுக்கு சுற்றுலாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அளவிலான உள்ளூர் சுற்றுலாவை ஏற்பாடு செய்தல்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பள்ளி மாணாக்கர்களுக்கு சுற்றுலாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், அவர்களது சொந்த மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களை கண்டு மகிழ நடத்தப்பட்ட சுற்றுலா, அவர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றது. அதேபோல் இந்த ஆண்டும், பள்ளி மாணாக்கர்களுக்கு ஒரு நாள் சுற்றுலா சென்று வருவதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுற்றுலாத்துறை மூலம் மாவட்டம் ஒன்றிற்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் 32 மாவட்டங்களுக்கு மொத்தம் 64 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

2. 2019ஆம் ஆண்டு உலக சுற்றுலா தின விழாவினை சேலத்தில் (மாநில அளவில்) கொண்டாடுதல்.

ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா அமைப்பு, சுற்றுலா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 27ஆம் நாள், உலக சுற்றுலா தினமாக கொண்டாடி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாவட்டங்களிலும்

சுற்றுலாத்துறையால் உலக சுற்றுலா தினம் கொண்டாடப்படுகிறது. அப்போது, மாநில அளவில் ஏதேனும் ஒரு முக்கிய நகரத்திலும் இவ்விழா கொண்டாடப்படும். இவ்வாண்டு உலக சுற்றுலா தின விழா மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநில அளவில் சேலத்தில் கொண்டாட 25 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

3. சுற்றுலா அலுவலகக் கட்டடங்களை புனரமைத்தல்.

திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்கள் சொந்த கட்டடங்களில் சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகின்றன.இந்த கட்டடங்கள் புனரமைக்கப்பட வேண்டும்.எனவே,மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேற்காணும் அலுவலகங்களில் மொத்தம் 100 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

4. சிதம்பரம் சுற்றுலா அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.

“பூலோக கைலாசம்” என்று அழைக்கப்படும் கடலூர் மாவட்டம், சிதம்பரம் ஆன்மிக சுற்றுலாவிற்கு பெயர் பெற்ற நகரமாகும். சிதம்பரம் ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தில், முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சுற்றுலா அலுவலகம் இயங்கி வருகிறது. இக்கட்டடம் தற்போது சிதிலமடைந்த நிலையில் உள்ளது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சிதம்பரத்தில், புதிய சுற்றுலா அலுவலகம் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

5. படகு இல்லங்களை மேம்படுத்துதல்.

(அ) பைக்காரா படகு இல்லத்தில் மிதவை படகுதளம் அமைத்தல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் 8 படகு இல்லங்கள் இயங்கி வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் உள்ள பைக்காரா படகு இல்லத்தில், ஏரி நீரின் அளவு அவ்வப்போது மாறுபடுவதன் காரணமாக மிதவை படகு தளம் அமைக்கப்பட்டுள்ளது. அப்படகு இறங்கு தளமானது தற்போது சேதமடைந்துள்ளது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்த மிதவை படகுதளம் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

(ஆ) கொடைக்கானல் படகு இல்லம் (அலகு –II)–ல் மேம்பாட்டுப் பணிகள்

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இரண்டு படகு இல்லங்கள் இயங்கி வருகின்றன. கொடைக்கானல் படகு இல்லம் (அலகு–II)–ஐ தனியார் படகு இல்லத்திற்கு இணையாக மேம்படுத்தும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அலுவலகம், இறங்கு தளம் மற்றும் படகு இல்லத்தில் உள்ள படிகள் 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

6. ஓட்டல் தமிழ்நாடு, திருத்தணியில் கூடுதல் கழிவறைகள் கட்டுதல்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் திருத்தணியில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு, திருப்பதிக்கு செல்லும்

தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் நடத்தப்படும் “திருமலை–திருப்பதி” சுற்றுலாவில் அதிக சுற்றுலாப் பயணிகள் இளைப்பாறும் பொருட்டும் இந்த விடுதி செயல்பட்டு வருகிறது.

இங்கு தற்போதுள்ள கழிவறைகள் சுற்றுலாப் பயணிகளுக்கு போதுமானதாக இல்லாத காரணத்தினால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இரண்டு கூடுதல் கழிவறைகள் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படும்.

7. உதகமண்டலம், ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தில் தார்சாலை அமைத்தல்.

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள, உதகமண்டலம் ஓட்டல் தமிழ்நாட்டில், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 65 அறைகள் உள்ளன. இந்ததங்கும் விடுதி வளாகத்தில் உள்ள சாலையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கப்படும்.

8. உதகமண்டலம், இளைஞர் விடுதியில் மேம்பாட்டுப் பணிகள்

(அ) உதகமண்டலம், இளைஞர் விடுதியில் உள்ள 25 படுக்கை வசதிகள் கொண்ட பலர் தங்கும் துயில் கூட அறையினை 2 குடும்ப அறைகளாக மாற்றியமைத்தல்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உதகமண்டலத்தில் இளைஞர் விடுதி உள்ளது.

தற்போது சுற்றுலாப் பயணிகள் தனி அறைகளில் தங்குவதையே அதிகம் விரும்புகின்றனர். எனவே, பலர் தங்கும் துயில் கூட அறைகளின் தேவை மிகவும் குறைவாக உள்ளது. சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 25 படுக்கை வசதிகள் கொண்ட பலர் தங்கும் துயில் கூட அறைகள், 2 குடும்ப அறைகளாக 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாற்றியமைக்கப்படும்.

(ஆ) உணவகம் மற்றும் சமையலறை புனரமைத்தல்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உதகமண்டலத்தில் உள்ள இளைஞர் விடுதி கட்டடத்தில் இயங்கி வரும் உணவகம் மற்றும் சமையலறை புனரமைக்கப்பட வேண்டும். ஆகையால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உணவகம் மற்றும் சமையலறை புனரமைக்கப்படும்.

9. ஓட்டல் தமிழ்நாடு, கோயம்புத்தூரில் 14 அறைகளை புனரமைத்தல்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் கோயம்புத்தூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாட்டில், சுற்றுலாப் பயணிகளின் தங்கும் வசதியை மேம்படுத்த, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 14 அறைகள் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

10. ஓட்டல் தமிழ்நாடு, மதுரை (அலகு–1)–ல் 10 அறைகளை புனரமைத்தல்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு, மதுரை (அலகு–1)–ல் சுற்றுலாப் பயணிகளின் தங்கும் வசதியை மேம்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 10 அறைகள் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

11. ஓட்டல் தமிழ்நாடு, திருச்சியில் 10 அறைகள் புனரமைத்தல்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள திருச்சி, ஓட்டல் தமிழ்நாட்டில், சுற்றுலாப் பயணிகள் தங்கும் வசதியை மேம்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 10 அறைகள் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

12. ஓட்டல் தமிழ்நாடு, தஞ்சாவூரில் 12 அறைகளின் குளியல் அறைகளை புனரமைத்தல்.

தஞ்சாவூருக்கு ஆண்டு முழுவதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை புரிகின்றனர். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள, தஞ்சாவூர் ஓட்டல் தமிழ்நாடு பாரம்பரிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இங்கு சுற்றுலாப் பயணிகள் தங்கும் வசதியை மேம்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 12 அறைகளில் உள்ள குளியலறைகள் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

13. உதகமண்டலத்தில் உள்ள கூடுதல் படகு இல்லத்தில் இரண்டு உலர் கழிவறை வசதிகள் ஏற்படுத்துதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் இரண்டு படகு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுகாதாரமான கழிவறை வசதி ஏற்படுத்தி தரும் பொருட்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இரண்டு உலர் கழிவறைகள் (Bio-Toilet) 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

❖ ❖ ❖

வணிகவரி மற்றும் பதிவுத் துறை

வணிகவரிகள்

மானியக் கோரிக்கை எண். 10

முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு

மானியக் கோரிக்கை எண். 11

1. எட்டயபுரம் மற்றும் மணப்பாறையில் செயல்படும் மாநில வரி அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்.

வணிகவரித் துறை அலுவலகங்களுக்கு வருகை தரும் வணிகப் பெருமக்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கட்டுவது அரசின் நோக்கமாகும்.

அதனடிப்படையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எட்டயபுரம் மற்றும் மணப்பாறையில் செயல்படும் மாநில வரி அலுவலர்களின் அலுவலகங்களுக்கு ரூ.227.70 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

2. வணிகவரித் துறையில் செயல்படும் தடயவியல் ஆய்வகத்தை மேம்படுத்துதல்

வணிகவரித் துறையில், அமலாக்கப் பிரிவின் நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், வரி ஏய்ப்பு தொடர்பான தகவல்களை மீளப் பெறுவதற்கும், சென்னை கிரீம்ஸ் சாலையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தில் தடயவியல் ஆய்வகம் செயல்படுகிறது.

தகவல் தொழில்நுட்பம் நாளுக்கு நாள் முன்னேறி வருகின்ற சூழ்நிலையில், தற்போதுள்ள தடயவியல் ஆய்வகம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

3. சென்னை மற்றும் பிற நகரங்களில் செயல்படும் வணிக வரி பணியாளர் பயிற்சி மையங்களுக்கு 12 லேசர் திரையிடு பொறிகள் (Projectors) வாங்குதல்.

வணிகவரிப் பணியாளர் பயிற்சி மையங்களில், பணியாளர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சிகளை வழங்கிட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.28.72 இலட்சம் மதிப்பீட்டில் 12 புதிய லேசர் திரையிடு பொறிகள் வாங்கப்படும்.

4. வணிகவரி துறைக்கு 35 நகல் எடுக்கும் இயந்திரங்கள் வாங்குதல்.

மத்திய, மாநில அரசுகளுக்கு சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகள் வணிகவரி ஆணையர், இணை ஆணையர் அலுவலகங்கள் மற்றும் வணிகவரிப் பணியாளர் பயிற்சி மைய அலுவலகங்களில் நகலெடுக்க வேண்டியுள்ளது.

இதன் பொருட்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வணிகவரி துறைக்கு சிறப்பம்சங்கள் கொண்ட 35 புதிய நகலெடுக்கும் இயந்திரங்கள் ரூ.23.41 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

5. வணிகவரித்துறையின் சுற்றும் படையினருக்கு (Roving Squad) ஒளிரும் மேல் அங்கி, கைப்பட்டை, டார்ச் லைட், எச்சரிக்கை விளக்கு போன்றவற்றை வழங்குதல்.

வணிகவரித் துறையில் உள்ள சுற்றும் படையில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் ஒளிரும் மேல் அங்கி, கைப்பட்டை,

டார்ச் லைட், எச்சரிக்கை விளக்கு ஆகியவற்றை வழங்கிட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

6. வணிகவரித் துறையில் பணிபுரியும் அதிகாரிகளின் அலுவலகங்களுக்கு நாற்காலிகள் மற்றும் அலமாரிகள் வாங்குதல்.

வணிகவரி ஆணையர் அலுவலகத்தில், அலுவலர்கள் நல்ல சூழலில் பணிபுரிவதற்கு தகுந்த வசதியினை அளிக்கும் விதமாக கூடுதல் ஆணையர்கள் அறைகளுக்கு பார்வையாளர் இருக்கைகளும், துணை ஆணையர் (பொதுப்பணி), உதவி ஆணையர் (பொதுப்பணி) மற்றும் நிருவாக அலுவலர் அறைகளுக்கு 20 நாற்காலிகள் மற்றும் 17 அலமாரிகளும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.9.68 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

7. தகவல்களை சேமித்து வைக்க 30 எண்ணிக்கையிலான 4 TB சேமிப்பு வன்வட்டு (Storage Hard Disks) வாங்குதல்.

வணிகவரி ஆணையர், வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் மற்றும் அனைத்து இணை ஆணையர்கள் (வணிகவரி மற்றும் செயலாக்கம்) ஆகியோருக்கு முக்கிய ஆவணங்கள் மற்றும் தரவுகளை பாதுகாத்திடும் விதமாக 4 TB திறன் கொண்ட 30 சேமிப்பு வன்வட்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.2.87 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

8. தகவல்களை மீளப் பெற உதவும் மையத்திற்கு மின்னிலைப்படுத்தி (Stabilizer) வாங்குதல்.

சென்னை கிரீம்ஸ் சாலையில் செயல்படும் தகவல்களை மீளப் பெற உதவும் மையத்திற்கு முக்கிய ஆவணங்கள் மற்றும் தகவல்களை பாதுகாத்திடும் வண்ணம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.2.12 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மின்னிலைப்படுத்தி வாங்கப்படும்.

9. வணிகவரி ஆணையர் மற்றும் கோட்ட அலுவலகங்களுக்கு 22 சுழல் பிணைப்பு இயந்திரங்கள் (Spiral Binding Machines) வாங்குதல்

வணிகவரி ஆணையர் அலுவலகம் மற்றும் அனைத்து வணிகவரி மற்றும் செயலாக்கக் கோட்ட அலுவலகங்களில் தயாரிக்கப்படும் ஆவணங்களை ஒருங்கிணைக்க 22 சுழல் பிணைப்பு இயந்திரங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.1.68 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

10. மனுபத்ரா இணையதளத்திற்கு ஆண்டு சந்தா செலுத்துதல்.

வணிகவரித்துறையின் அனைத்து அலுவலர்களும் உயர்நீதிமன்ற / உச்சநீதிமன்ற தீர்ப்புகளை இணைய வழியில் உடனுக்குடன் அறிந்துகொள்ள ஏதுவாக, மனுபத்ரா இணையதள சேவையினை பெறுவதற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஆண்டு சந்தா ரூ.1.54 இலட்சம் செலுத்தப்படும்.

11. வணிகவரித் துறையின் உயர் அலுவலர்களுக்கு 4 வண்ண அச்சுப் பொறிகள் (Colour Printers) வாங்குதல்

வணிகவரி ஆணையர் அலுவலகம், இணை ஆணையர் (செயலாக்கம்–I) மற்றும் இணை ஆணையர் (அதிகவரிசெலுத்துவோர் பிரிவு) அலுவலகம் ஆகிய அலுவலகங்களின் பணி மேம்பாட்டிற்கு 4 வண்ண அச்சுப்பொறிகள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.0.95 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படும்.

12. சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவு ஒருங்கிணைந்த கட்டடத்தினை பலப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல்.

சென்னை கிரீம்ஸ் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவு ஒருங்கிணைந்த வணிகவரி கட்டடத்தில் வணிகவரி அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இக்கட்டடம் 35 ஆண்டுகள் பழமையான கட்டடம் என்பதால், அக்கட்டடத்தை பலப்படுத்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.5.84 கோடி மதிப்பீட்டில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

13. காரைக்குடியில் ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் கட்டுதல்.

பதிவுத் துறையின் அலுவலகங்களுக்கு ஆவணப் பதிவிற்காக வரும் பொதுமக்களின் தேவைக்கேற்ப கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவது இந்த அரசின் குறிக்கோளாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு காரைக்குடியில் செயல்படும் மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்), மாவட்டப் பதிவாளர் (தணிக்கை), இணை–1 மற்றும் இணை–2 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய அரசு கட்டடம் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.2.50 கோடி மதிப்பீட்டில், காரைக்குடியில் புதிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகம் கட்டப்படும்.

14. விருத்தாச்சலம் பதிவு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகம் கட்டுதல்.

விருத்தாச்சலத்தில் உள்ள மாவட்டப் பதிவாளர் மற்றும் எண்–1 இணை சார்பதிவாளர் ஆகிய அலுவலகங்களுக்கு ஆவணப் பதிவிற்காக வரும்பொதுமக்களின் வசதியைக் கருத்திற் கொண்டு இவ்வலுவலகங்களுக்கான புதிய கட்டடம் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.2.50 கோடி மதிப்பீட்டில், விருத்தாச்சலத்தில், புதிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகம் கட்டப்படும்.

15. பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு 7 புதிய நகல் எடுக்கும் இயந்திரங்கள் வாங்குதல்.

அரசுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் மாநிலம் முழுவதிலும் உள்ள பதிவுத் துறையின் அலுவலகங்களிலிருந்து பெறப்பட்டு, பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் நகலெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் பொருட்டு, பதிவுத் துறைத் தலைவர் அலுவலக பயன்பாட்டிற்கென மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 7 புதிய நகலெடுக்கும் இயந்திரங்கள் ரூ.11.55 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

16. பெரும் கடன் பத்திர ஆவணங்களுக்கான (Debenture Trust Deed) முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டண உச்சவரம்பு நிர்ணயித்தல்.

பெரும் கடன் பத்திர ஆவணங்களைப் பதிவு செய்யும் போது அரசின் வருவாயைப் பெருக்கிட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இத்தகைய ஆவணங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ஆகியவற்றின் உச்சவரம்பு முறையே ரூ.10 இலட்சம் மற்றும் ரூ.1 இலட்சம் என நிர்ணயிக்கப்படும்.

17. புதுப்பிக்கப்பட்ட முத்திரை மற்றும் பதிவுச் சட்டக் கையேடுகள் வெளியிடுதல்.

சரியான சட்ட நிலைப்பாடுகளைப் பொது மக்களும் பதிவுத் துறை அலுவலர்களும் அறிந்து கொள்ள ஏதுவாக முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டம் ஆகியவற்றுக்கான கையேடுகள் வெளியிடப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அரசால் வெளியிடப்பட்ட கையேடுகள் பதிப்பிக்கப்பட வேண்டியது அவசியமாகும். மேலும், அவற்றில் கூறப்பட்டுள்ள பல ஷரத்துக்களையும் திருத்தியமைக்க வேண்டும்.

எனவே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு அங்கீகாரத்துடன் புதுப்பிக்கப்பட்ட முத்திரை மற்றும் பதிவுச் சட்ட கையேடுகள் வெளியிடப்படும்.

18. பதிவுத் துறை அலுவலர்களுக்கு ஆதாருடன் இணைக்கப்பட்ட மின்னணு கையொப்ப (e-sign) வசதி வழங்குதல்.

பதிவுத் துறையில் வழங்கப்படும் வில்லங்க சான்றுகள், ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் மற்றும் இதர சான்றுகளை

துறையின் அலுவலர்களால் கையொப்பமிட்டு அத்தாட்சி செய்யப்பட வேண்டும். இவ்வாறு அத்தாட்சி செய்வதை நவீனமயமாக்கிட அரசு முடிவெடுத்துள்ளது.

எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பதிவுத் துறை அலுவலர்களுக்கு ஆதாருடன் இணைக்கப்பட்ட மின்னணு கையொப்ப வசதி வழங்கப்படும்.

19. காஞ்சிபுரத்தில் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) பணியிடம் உருவாக்குதல்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மதிப்பு நிர்ணயம் செய்யும் பொருட்டு அதிகளவில் ஆவணங்கள் நிலுவையாக உள்ளதால் பொதுமக்கள் பதிவு செய்த தங்களது ஆவணங்களை திரும்பப் பெறுவதை விரைவுபடுத்துவது அவசியமாகிறது. இதன் பொருட்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, காஞ்சிபுரத்தில் புதியதாக தனித்துணை ஆட்சியர் (முத்திரை) பணியிடம் உருவாக்கப்படும்.

❖ ❖ ❖

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

பால்வளம்

மானியக் கோரிக்கை எண். 8

1. 701 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் தானியங்கி பால் பரிசோதனை உபகரணங்கள் ரூ.8.76 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

தரமான பால் உற்பத்தி செய்ய ஏதுவாக, நடைமுறையில் உள்ள பால் பரிசோதனை முறைகளில் உள்ள இடர்பாடுகளைகளையும் பொருட்டும், உற்பத்தியாளர்களின் பாலுக்கு சரியான விலை கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டும் 701 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு தலா ரூ.1.25 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.8.76 கோடி மதிப்பீட்டில் தானியங்கி பால் பரிசோதனை கருவிகள் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நிறுவப்படும்.

2. எட்டு மாவட்ட ஒன்றியங்களில் 5,000 லிட்டர் கொள்ளளவில் 34 மொத்த பால் குளிர்விப்பான்கள் ரூ.4.76 கோடி செலவில் அமைக்கப்படும்.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் ஆரம்ப நிலையில் பாலின் தரத்தினை உறுதி செய்திடவும், பால் மற்றும் பால் உப பொருட்களை உற்பத்தி செய்ய ஏதுவாகவும், காஞ்சிபுரத்தில் 4 அலகுகள், விழுப்புரம் 5 அலகுகள், தர்மபுரி 15 அலகுகள், புதுக்கோட்டை 3 அலகுகள், விருதுநகர், திண்டுக்கல், திருநெல்வேலி ஒன்றியங்களில் தலா 2 அலகுகளும் மற்றும் திருச்சி ஒன்றியத்தில் 1 அலகும், தலா 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மொத்தம்

34 தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் ரூ.4.76 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அமைக்கப்படும்.

3. 350 மொத்த பால் குளிர்விப்பு மையங்களில் கிளவுட் சார்ந்த கண்காணிப்பு ரூ.1.75 கோடி செலவில் நிறுவப்படும்.

350 மொத்த பால் குளிர்விப்பு மையங்களின் பால் கொள்முதல், பால் பரிசோதனை மற்றும் பால் குளிர்விப்பு செயல்பாடுகளை கண்காணிக்கவும், நிர்வகிக்கவும், கிளவுட் சார்ந்த கண்காணிப்பு வசதிகள் தலா ரூ.50,000/– வீதம் மொத்தம் ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நிறுவப்படும்.

4. 103 பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு பால் கலப்படம் கண்டறியும் கருவிகள் ரூ.2.06 கோடி செலவில் வழங்கப்படும்.

எளிய முறையில் பால் கலப்படத்தை கண்டறியவும், தரமான பால் உற்பத்தியை உறுதி செய்யவும், பாலில் கேடு விளைவிக்கும் கலப்பட பொருள் சேர்ப்பதை கண்டறியவும், 103 பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு ரூ.2.06 கோடி மதிப்பீட்டில் பால் கலப்படம் கண்டறியும் கருவிகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வழங்கப்படும்.

5. ஈரோட்டில் இயங்கும் கால்நடை தீவன தொழிற்சாலையின் தினசரி உற்பத்தி திறன் 150 மெட்ரிக் டன்னிலிருந்து 300 மெட்ரிக் டன் திறனாக ரூ.3.40 கோடி மதிப்பீட்டில் உயர்த்தப்படும்.

பால் உற்பத்தியாளர்களுக்கு தேவையான தீவனம் வழங்கும் பொருட்டும் அதன் மூலம் பாலின் தரத்தினை உயர்த்திடவும்

ஈரோடு கால்நடை தீவன தொழிற்சாலையின் உற்பத்தி திறனை நாளொன்றுக்கு 150 மெட்ரிக் டன்னிலிருந்து 300 மெட்ரிக் டன் ஆக உயர்த்திட ரூ.3.40 கோடி மதிப்பீட்டில் பணிகள் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மேற்கொள்ளப்படும்.

6. விழுப்புரம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெண்ணெய், நெய், தயிர் தயாரிப்பதற்கான வசதிகளை ரூ.6.45 கோடியில் மேம்படுத்தப்படும்.

விழுப்புரம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் 1982ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்டாதாக நிறுவப்பட்டது. தற்போது நாளொன்றுக்கு ரூ.2 இலட்சம் லிட்டராக பால் உற்பத்தி உயர்ந்து வருவதை கையாளுவதற்கு ஏதுவாகவும் மேலும் நெய், வெண்ணெய், தயிர் ஆகிய மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிப்புகள் உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள ரூ.1.26 கோடி மற்றும் இயந்திர தளவாடங்கள் ரூ.5.19 கோடி உட்பட மொத்தம் ரூ.6.45 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நிறுவப்படும்.

7. சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் ரூ.3.51 கோடி செலவில் பனீர், லஸ்ஸி, தயிர் உற்பத்திக்கான உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

மதிப்பு கூட்டப்பட்ட பால் உப பொருட்களின் விற்பனையை அதிகரித்து கூடுதல் வருவாய் பெற ஏதுவாகவும் உயர்ந்து வரும் நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்ய ஏதுவாகவும் பனீர்,

லஸ்ஸி, தயிர் ஆகிய பால் உபபொருட்கள் உற்பத்தி செய்வதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் மேம்படுத்தும் பொருட்டு ரூ.3.51 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மேற்கொள்ளப்படும்.

8. திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் வசதி மற்றும் தினசரி 1.50 இலட்சம் லிட்டர் பால் கையாளுவதற்கு உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

திருநெல்வேலி பால் பண்ணையில் கையாளும் திறனை நாளொன்றுக்கு ஒரு இலட்சத்தில் இருந்து 1.5 இலட்சம் லிட்டராக உயர்த்திடவும், குல்பி, நறுமணப்பால் ஆகிய மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்களின் உற்பத்தி பிரிவில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தவும் அதன் மூலம் ஒன்றியத்தின் வருவாயை பெருக்கிடவும், பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய நலன்கள் கிடைத்திடவும் ரூ.3 கோடி மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மேற்கொள்ளப்படும்.

9. புதிதாக உருவாக்கப்பட்ட திருப்பூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் விற்பனை அலு–வலகம், மொத்த பால் குளிர்விப்பான்கள் மற்றும் பால் குளிர்விப்பு அறைகள் ரூ.4.95 கோடி மதிப்பில் நிறுவப்படும்.

புதிதாக உருவாக்கப்பட்ட திருப்பூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் புதிய பால் பண்ணை தொழிற்சாலை மற்றும் பால் உபபொருட்கள் உற்பத்தி துவங்கும் வரை,

தாராபுரம், அவினாசி மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய பகுதிகளில், பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பாலை குளிர்விக்க ஏதுவாக மொத்த பால் குளிர்விப்பான்களும், பால் விற்பனை செய்ய பால் குளிர்விப்பு அறைகளும் மற்றும் சேமிப்பு கிடங்குகளும் ரூ. 4.95 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நிறுவப்படும்.

10. 250 தொடக்க பால் உறபத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு அலுவலக கட்டடம் ரூ.37.50 கோடியில் கட்டித்தரப்படும்.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில், பால் பரிசோதனை ஆய்வகம், தீவன கிடங்கு மற்றும் தூயமுறையில் பால் கொள்முதல் மையத்துடன் கூடிய சொந்த கட்டடங்கள் அமைத்து, சங்கங்கள் திறம்பட செயல்படவும், பால் உற்பத்தியாளர்கள் தரத்துடன் பால் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கவும், கால்நடை தீவனத்தை சேமிக்க வசதி ஏற்படுத்தவும், 250 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் அலகு ஒன்றிற்கு ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் 250 அலுவலக கட்டடங்கள் கட்டுவதற்கு மொத்தம் ரூ.37.50 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சொந்த கட்டடங்கள் கட்டப்படும்.

11. மாதவரத்தில் அமைந்துள்ள நிர்வாக அலுவலக கட்டடம் பயிற்சி மையமாக ரூ.1 கோடி செலவில் மாற்றப்படும்.

இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய பணியாளர்களின் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்கள் சார்ந்த துறையின் ஆக்கத்திறனை உயர்த்தி அனைத்து பிரிவுகளிலும் மேம்பட்ட உற்பத்தித்திறனை உறுதி செய்திடவும், மாதவரத்தில் அமைந்துள்ள நிர்வாக அலுவலகத்தை அனைத்து

வசதிகளுடன் கூடிய பயிற்சி நிலையமாக ரூ.1 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மாற்றி அமைக்கப்படும்.

12. தர்மபுரி ஒன்றியத்தில் புதிய ஒருங்கிணைந்த நிர்வாக கட்டடம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

தர்மபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் உற்பத்தி / உள்ளீடு பிரிவு அலுவலக கட்டடங்களை ஒருங்கிணைக்கவும், செயல் திறன் மேம்பாட்டுக்காகவும், நிர்வாக வசதிக்காகவும் ஒருங்கிணைந்த அலுவலக கட்டடம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கட்டப்படும்.

13. இணையம் மற்றும் அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு கருணை ஓய்வூதியம் மாதத்திற்கு ரூ.3,500ல் இருந்து ரூ.4,000 ஆகவும், கருணை குடும்ப ஓய்வூதியம் மாதத்திற்கு ரூ.1,750இல் இருந்து ரூ.2,000 ஆகவும் உயர்த்தி ரூ.2.99 கோடி செலவில் வழங்கப்படும்.

இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு அதிகரித்து வரும் வாழ்வாதார செலவினத்தை நிறைவு செய்வதற்காக, கருணை ஓய்வூதியம் ரூ.3,500ல் இருந்து ரூ.4,000 ஆகவும், கருணை குடும்ப ஓய்வூதியம் ரூ.1,750ல் இருந்து ரூ.2,000 ஆகவும் உயர்த்தி ரூ.2.99 கோடி செலவில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வழங்கப்படும்.

14. விருதுநகர் மாவட்டம் சாத்தூர், திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி மற்றும் களக்காடு பகுதிகளில் அதிநவீன ஆவின் பாலகங்கள் மொத்தம் ரூ.1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

விருதுநகர் மாவட்டம் சாத்தூர், திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி மற்றும் களக்காடு பகுதிகளில் நுகர்வோர்களிடையே அதிகரித்து வரும் ஆவின் பால், பால்பொருட்கள் மற்றும் உபபொருட்களின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டும், விற்பனையை அதிகரித்து மாவட்ட ஒன்றிய வருவாய் உயர்த்திடவும், ஒன்றியம் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் நலனுக்காகவும், நுகர்வோர்களுக்கு சிறந்த சேவைகளை அளிக்கும் பொருட்டு அனைத்து வசதிகளுடன் கூடிய ஆவின் அதிநவீன பாலகங்கள் விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் ரூ.50 இலட்சம் செலவிலும் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் ரூ.25 இலட்சம் மற்றும் களக்காட்டில் ரூ.50 இலட்சம் செலவிலும் ஆக மொத்தம் ரூ.1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அமைக்கப்படும்.

❖ ❖ ❖

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மானியக் கோரிக்கை எண். 44

1. திருச்சி மாவட்டத்திலுள்ள வெங்கடாசலபுரம் அரிசன செங்கல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கத்திற்கு பேவர் பிளாக் இயந்திரம் மற்றும் சாம்பல் செங்கல் தயாரிக்கும் இயந்திரம் ரூ.73 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்திடல்.

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம் வெங்கடாசலபுரம் அரிசன செங்கல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கமானது, 25.03.1960இல் பதிவு செய்யப்பட்டு 319 உறுப்பினர்களைக் கொண்டு அரசின் பங்கு மூலதனம் ரூ.2.14 இலட்சம் உட்பட ரூ.7.77 இலட்சம் பங்குத் தொகை மூலதனத்துடன் ஆதி திராவிட மக்களுக்கு தொடர்ச்சியாக வேலைவாய்ப்பினை வழங்கி செயல்பட்டு வருகிறது. சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் மாற்றுத்தொழிலான சாம்பல் (Flyash) செங்கல் தயாரிக்கும் தொழிலின் மூலம் உறுப்பினர்களுக்கு தொடர்ச்சியாக வேலைவாய்ப்பினை வழங்கிட ஏதுவாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இச்சங்கத்திற்கு பேவர் பிளாக் இயந்திரம் மற்றும் சாம்பல் செங்கல் தயாரிக்கும் இயந்திரம் ஆகியவை ரூ.73 இலட்சம் அரசு நிதியுதவியுடன் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

2. மதுரை ஆட்டோமொபைல் கூட்டுறவு தொழிற்பேட்டையில் உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்துதல்.

மதுரை ஆட்டோமொபைல் கூட்டுறவு தொழிற்பேட்டை 22.06.1991இல் பதிவு செய்யப்பட்டு 639 உறுப்பினர்களுடன்,

உறுப்பினர்கள் பங்குத் தொகை ரூ.16.82 இலட்சம் மற்றும் அரசு பங்குத் தொகை ரூ.5 இலட்சம் ஆக மொத்தம் ரூ.21.82 இலட்சம் பங்கு மூலதனத்துடன் செயல்பட்டு வருகிறது. இத்தொழிற் பேட்டைக்கு 23.90 ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது. அதில் தற்போது 177 உறுப்பினர்களுக்கு மனைகள் பிரித்து வழங்கப்பட்டு அவற்றுள் 150 மனைகளில் வெவ்வேறு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. அந்நிறுவனங்கள் சிரமமின்றி செயல்பட ஊக்குவிக்கும் விதமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை ஆட்டோமொபைல் கூட்டுறவு தொழிற்பேட்டையில் தார்ச்சாலை, கழிவுநீர் வசதி மற்றும் சாலையில் மின்சார விளக்கு அமைத்தல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.50 இலட்சம் அரசு நிதியுதவியுடன் செய்து தரப்படும்.

3. கோவை மாவட்ட ஆயுத சேம படை காவலர் குடும்ப நல தொழிற்கூட்டுறவு சங்கத்தின் பழுதடைந்த தொழிற்கூடத்தினை ரூ.7.88 இலட்சம் செலவில் புதுப்பித்தல்.

கோவை மாவட்ட ஆயுத சேம படை காவலர் குடும்ப நல தொழிற்கூட்டுறவு சங்கமானது, 04.01.1961இல் பதிவு செய்யப்பட்டு, 115 உறுப்பினர்களுடன் ரூ.16,960/– பங்குத் தொகை மூலதனத்துடன், 21.1.1961 முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இச்சங்கமானது ஆயுதசேமபடை காவலர்களின் குடும்பத்தில் உள்ள நபர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி அவர்களுக்கு நிரந்தர வேலையினை வழங்கி வருகிறது.

இச்சங்க உறுப்பினர்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய ஏதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இச்சங்கத்தின் பழுதடைந்த தொழிற்கூடங்கள் ரூ.7.88 இலட்சம் அரசு நிதியுதவியுடன் புதுப்பிக்கப்படும்.

4. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருவரங்குளம் கயிறு தொழிலாளர் தொழிற்கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.10 இலட்சம் செலவில் தானியங்கி கயிறு திரிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்திடல்.

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலத்தில் திருவரங்குளம் கயிறு தொழிலாளர் தொழிற்கூட்டுறவு சங்கம் 10.12.1981இல் 75 உறுப்பினர்களுடன் அரசு மூலதனமாக ரூ.1,75,310/–மற்றும் உறுப்பினர் பங்கு மூலதனமாக ரூ.1,420/–உடன் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் சங்கம் மகளிரை கொண்டு கயிறு உற்பத்தி தொழில் செய்வதின் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பினை நல்கி வருகிறது.

இச்சங்க உறுப்பினர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பினை வழங்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இரண்டு தானியங்கி கயிறு திரிக்கும் இயந்திரம் மற்றும் இதர கயிறு இயந்திரங்களும் ரூ.10 இலட்சம் அரசு நிதியுதவியுடன் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

5. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள வல்லவாரி ஆதிராவிடர் கயிறு தொழிலாளர் தொழிற்கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.10 இலட்சம் செலவில் தானியங்கி கயிறு திரிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்திடல்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வல்லவாரி ஆதி திராவிடர் கயிறு தொழிலாளர் தொழிற்கூட்டுறவு சங்கம் 09.05.1990 இல் பதிவு செய்யப்பட்டு 81 உறுப்பினர்களுடன் உறுப்பினர் பங்குத்தொகை ரூ.8,750/– மற்றும் அரசு பங்குத்தொகை ரூ.2,75,000/– உடன் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் தேங்காய் நார் கொள்முதல் செய்து கைராட்டைகள் மூலம் கயிறு உற்பத்தி செய்து விற்பனை செய்வதன் மூலம், ஆண்டு முழுவதும் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

இச்சங்க உறுப்பினர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பினை அளிக்கும்பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இரண்டு தானியங்கி கயிறு திரிக்கும் இயந்திரம் மற்றும் இதர இயந்திரங்களும் ரூ.10 இலட்சம் அரசு நிதியுதவியுடன் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

6. திருப்பூர் மாவட்டத்திலுள்ள அலங்கியம் ஆதிதிராவிடர் சேம்பர் செங்கல் தயாரிப்போர் தொழிற்கூட்டுறவு சங்கத்தில் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் செங்கல் சூளை மற்றும் கிடங்கினை கால்வனைசிங் தகடுகளால் மூடுதல்.

திருப்பூர் மாவட்டத்தில் அலங்கியம் ஆதிதிராவிடர் சேம்பர் செங்கல் தயாரிப்போர் தொழில் கூட்டுறவு சங்கம் 20.08.1991இல் பதிவு செய்யப்பட்டு 139 உறுப்பினர்களுடன் அரசு பங்கு மூலதனமாக ரூ.3,50,000/–, உறுப்பினர் பங்குத்தொகை ரூ.3,66,950/– உடன் செயல்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி, அவர்களால் உற்பத்தி செய்யப்படும் செங்கற்களை சங்கம் விற்பனை செய்து வருகிறது.

மழைக்காலங்களில் செங்கல் உற்பத்தி பாதிக்காத வகையில் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பினை வழங்க ஏதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.22 இலட்சம் அரசு நிதியுதவியுடன் இச்சங்கத்தின் செங்கல் சூளை மற்றும் கிடங்குகளில் மேற்கூரை கால்வனைசிங் (Galvanising sheet) தகடுகளால் மூடி மேம்படுத்தப்படும்.

7. திருப்பூர் மாவட்டத்திலுள்ள முத்தூர் ஆதிதிராவிடர் சாக்குப்பை தைப்போர் தொழிற்கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.18.35 இலட்சம் மதிப்பீட்டில் பட்டறை அமைத்தல் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்தல்

திருப்பூர் மாவட்டத்தில் முத்தூர் ஆதிதிராவிடர் சாக்குப்பை தைப்போர் தொழிற்கூட்டுறவு சங்கம் 31.07.1985இல் பதிவு

செய்யப்பட்டு, 145 ஆதிதிராவிடர் உறுப்பினர்களுடன் பங்கு மூலதனமாக ரூ.51,330/– உடன் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் பழுதடைந்த காலி சாக்குப் பைகளை கொள்முதல் செய்து அதனை பழுது நீக்கம் செய்யும் வேலைவாய்ப்பினை உறுப்பினர்களுக்கு வழங்கி வருகிறது.

தற்போது சங்கமானது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் காலியான பழுதடைந்த சாக்குப்பைகளை கொள்முதல் செய்து பின்னர் பழுது நீக்கம் செய்து அதனை அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருகிறது. இச்சங்க உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கி உற்பத்தியை அதிகரிக்கும் விதமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.18.35 இலட்சம் அரசு நிதியுதவியுடன் அங்கு பட்டறை அமைத்து சணல் (Jute) தைக்கும் தையல் இயந்திரம் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

8. கரூர் ஆடைகள் உபபொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை தொழிற்கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.1.26 இலட்சம் மதிப்பீட்டில் தையல் இயந்திரங்கள் கொள்முதல் செய்திடல்.

கரூர் ஆடைகள் உபபொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை தொழிற்கூட்டுறவு சங்கம் 29.01.1986இல் பதிவு செய்யப்பட்டு 138 உறுப்பினர்களுடன் உறுப்பினர்களின் பங்கு தொகை ரூ.24,875/– உடன் செயல்பட்டு வருகிறது.

இச்சங்க உறுப்பினர்களால் தயாரிக்கப்படும் மேஜைவிரிப்பு, போர்வை, தலையணை உறை, துண்டு வகைகளை கொள்முதல் செய்தும் தேவைப்படும் நேர்வில் தையல் தொழிலை மேற்கொண்டும், தேசிய துணியக நிறுவனம் (NTC), கோவை மற்றும் இதர அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருகிறது.

சங்க உறுப்பினர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பினை வழங்கும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.1.26 இலட்சம் அரசு நிதியுதவியுடன் புதிய தையல் இயந்திரங்கள் கொள்முதல் செய்து இச்சங்கத்திற்கு வழங்கப்படும்.

9. மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், அம்பலக்காரன்பட்டி கிராமத்தில் சிட்கோ நிறுவனத்தின் மூலம் புதிய தொழிற்பேட்டை அமைத்தல்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பு நிதி ஆண்டு 2019–2020இல் மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் அம்பலக்காரன்பட்டி கிராமத்தில் சுமார் 38 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற்பேட்டை, சிட்கோ நிறுவனத்தின் மூலம் ரூ.18.80 கோடி திட்ட மதிப்பில் உருவாக்கப்படும். இத்திட்ட மதிப்பில், குறு, சிறு நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MSE-CDP) மைய அரசின் பங்கு 60 விழுக்காடாகவும் மற்றும் சிட்கோ நிறுவனத்தின் பங்கு 40 விழுக்காடாகவும் இருக்கும். இத்தொழிற்பேட்டையை உருவாக்குவதன் மூலம், அங்கு தொழில் முனைவோர்கள் தொழில் துவங்க வசதி செய்யப்படுவதன் வாயிலாக இப்பகுதி இளைஞர்களுக்கு அதிகப்படியான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

❖ ❖ ❖

பட்டுவளர்ச்சித் துறை

பட்டுவளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள்

மானியக் கோரிக்கை எண். 18

1. உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்:

உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 2019–2020ஆம் ஆண்டில், ஒரு ஏக்கருக்கு ரூ.10,500 வீதம் 3,500 ஏக்கரில் மல்பெரி நடவு செய்திட இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3 கோடியே 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

2. மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்பாசனம் அமைக்க உதவித்தொகை வழங்குதல்

2019–2020ஆம் ஆண்டில், 1,000 ஏக்கர் பரப்பிலான மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு உதவிட இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

3. பட்டுப்புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல்

சுகாதாரமான முறையில் பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொண்டு, பட்டுக்கூடு உற்பத்தி செய்யவும், மற்றும் தரத்தினை உயர்த்திடவும், புழுவளர்ப்புக் குடில்கள் அமைப்பதற்கு ஒவ்வொன்றிற்கும், அதன் பரப்பிற்கேற்ப முறையே ரூ.63,000 அல்லது ரூ.82,500 அல்லது

ரூ.87,500 வீதம் 2019–2020ஆம் ஆண்டில், 800 பட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 6 கோடியே 48 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

4. நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் வழங்குதல்

வெண்பட்டுப்புழு வளர்ப்பில் பட்டுக்கூடுகளின் தரம், உற்பத்தி திறன் அதிகரித்திட, 2019–2020ஆம் ஆண்டில், 1,000 விவசாயிகளுக்கு நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கிட இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

5. சிறந்த பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசு வழங்குதல்

2019–2020ஆம் ஆண்டில் வெண்பட்டுக் கூடுகள் உற்பத்தி திறனை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட அளவில் 31 மாவட்டங்களில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே ரூ.25,000, ரூ.20,000, ரூ.15,000 பரிசும், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே, ரூ,1,00,000, ரூ.75,000, ரூ.50,000 பரிசுகள் வழங்கிட இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

6. அரசு ஆதார விதைப் பண்ணைகளை வலுப்படுத்துதல்

வர்த்தக ரீதியிலான பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யும் ஐந்து ஆதார விதைப் பண்ணைகளை வலுப்படுத்திட, 2019–2020ஆம்

ஆண்டில் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

1. சேலத்தில் புதிய விற்பனை நிலையம் கட்டுதல்

சேலம் நகரத்தின் முக்கியத்துவம், வளர்ச்சி மற்றும் வர்த்தக ரீதியிலான சாத்தியக்கூறுகள் அமைந்திருப்பதினால் இந்நகரில் பூம்புகார் விற்பனை நிலையம் கட்டுவதற்காக இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

2. கடலூர் விற்பனை நிலையம் புதுப்பித்தல்

கடலூரில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையம் முக்கிய வர்த்தக மையங்கள் அமைந்திருக்கும் பகுதியில் அமைந்திருப்பதாலும் அக்கட்டடத்தின் பழுதடைந்த நிலையினை கருத்தில் கொண்டும் அதனை புதுப்பிக்க இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

3. கண்காட்சி நடத்த நிதியுதவி அளித்தல்

கைவினைஞர்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தவும், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் மற்றும் பொதுமக்கள் கைவினைப் பொருட்களை ஒரே இடத்தில் வாங்குவதற்கு வசதியாக 2019–2020ஆம் ஆண்டு நாட்டின் முக்கிய பெருநகரங்களில் கண்காட்சிகளை (Craft Bazaar) நடத்த, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 75 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

4. கோயம்புத்தூர் விற்பனை நிலையத்தை விரிவாக்குதல்

கோயம்புத்தூரில் இயங்கி வரும் பூம்புகார் விற்பனை நிலையத்தில் தொடர் கண்காட்சிகளை நடத்தவும், கைவினைப் பொருட்களை அதிக அளவில் காட்சிப்படுத்தவும், வாடிக்கையாளர்களின் வசதிக்காக இவ்விற்பனை நிலையத்தினை விரிவுபடுத்தவும் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

5. மதுரையில் புதிய விற்பனை நிலையம் அமைத்தல்

மதுரையில் பூம்புகார் விற்பனை நிலையம் வாடகை கட்டடத்தில் இயங்கி வருவதாலும், அக்கட்டடம் மிகவும் பழமையாக உள்ளதாலும், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், மதுரையில் உள்ள தமது சொந்த இடத்தில் உள்ள கட்டடத்தினை புதுப்பித்து புதுப்பொலிவுடன் விற்பனை நிலையம் அமைக்க, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 30 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

❖ ❖ ❖

போக்குவரத்துத் துறை

மானியக் கோரிக்கை எண். 48

1. **அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு பேருந்துகளில் மின் உதவியுடன் நீராற்றலால் இயங்கும் சக்கர நாற்காலி தூக்கி** (Electrically Operated Hydraulic Wheelchair Lift) **வசதி செய்து தருதல்.**

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாற்றுத் திறனாளிகளுக்கு அரசால் வழங்கப்படும் சேவைகளில் போக்குவரத்துத் துறையின் சேவை மிகவும் முக்கியப் பங்காற்றுவதால், மாற்றுத் திறனாளிகளின் நலன் கருதி அவர்களின் பேருந்து பயணத்தினை எளிதாக்கும் விதமாக அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் முதற்கட்டமாக 25 பேருந்துகளில் ரூ.61.25 இலட்சம் மதிப்பீட்டில் ‘‘மின் உதவியுடன் நீராற்றலால் இயங்கும் சக்கர நாற்காலி தூக்கி’’ (Electrically Operated Hydraulic Wheelchair Lift) வசதி செய்து தரப்படும்.

2. **அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் கொடைக்கானலில் அடுக்குமாடி சீருந்து நிறுத்தம்** (Multi Level Car Parking) **ஏற்படுத்துதல்.**

கொடைக்கானல் ஒரு சுற்றுலாத் தலமாக அமைந்துள்ளதால் விடுமுறை நாட்கள் மற்றும் கோடை காலங்களில் வருகை தரும் சுற்றுலா பயணிகளின் வாகனங்களை நிறுத்துவதற்கு ஏதுவாக இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கொடைக்கானலில் ‘‘அடுக்குமாடி சீருந்து நிறுத்தம்’’ (Multi Level Car Parking) ரூ. 20 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

3. அரசு போக்குவரத்துக் கழகங்களில் பரிட்சார்த்த அடிப்படையில் பொது இயக்கப் பயண அட்டை (Common Mobility Card) அறிமுகப்படுத்துதல்.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நேரடிப் பணப் பரிமாற்றங்கள் வெகுவாகக் குறைந்து வரும் இன்றைய பொருளாதார சூழ்நிலையில், பொது மக்கள் மற்றும் பயணிகள் விரும்பத்தக்க வகையில் அனைத்து வகையான பயண முறைகளுக்கு பயன்பெறும் வகையிலும் மற்றும் பணம் கையாளுதல் சிக்கலை நீக்கும் வகையிலும் ''பொது இயக்கப் பயண அட்டை'' (Common Mobility Card) படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும்.

4. அரசு போக்குவரத்துக் கழகங்களின் கட்டுப்பாட்டிலுள்ள பணிமனைகளில் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்துதல்.

சென்னை மாநகரத்தில் வாகனங்களின் எண்ணிக்கை தற்போது நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சூழ்நிலையில், பணிமனைகளில் பேருந்துகளின் பராமரிப்பு நடவடிக்கை என்பது முக்கிய பங்காற்றுகிறது. எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் கட்டுப்பாட்டிலுள்ள 322 பணிமனைகளில் பேருந்துகளின் பராமரிப்பு நடவடிக்கையினை கண்காணிக்க மாநில அளவில் ஒரு மையக் கட்டுப்பாட்டு அறையை நிறுவி, ரூ.2 கோடி மதிப்பிலான கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தப்படும். இதன் மூலம் போக்குவரத்துப் பணிமனைகளின் செயல்பாடுகளை துல்லியமாக கண்காணிக்க முடியும்.

5. மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் புதிய நவீனரக வாகனங்களுக்கான மின்னணு பழுதுகள் கண்டறியும் கருவிகள் (Diagnostic Tools) கொள்முதல் செய்தல்.

வாகன தயாரிப்பாளர்கள் சர்வதேச தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கேற்ப வாகனம் இயங்கும் தொழில்நுட்பங்களை அவ்வப்போதுமாற்றம்செய்துவருகிறார்கள்.வாகனங்களில்மின்னணு முறையில் இயங்கும் தொழில்நுட்பங்களை கண்காணிப்பதற்கும், பரிசோதிப்பதற்கும், பழுது நீக்கம் செய்வதற்கும், பழுதுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அதற்கான பராமரிப்பு பணிகளை குறைந்த செலவில், குறைந்த கால அளவில் சரிசெய்ய இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மின்னணுமூலம் ‘‘பழுதுகளை கண்டறியும் கருவிகள்’’ (Diagnostic Tools) ரூ.15 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதனை சென்னை, மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய அரசு தானியங்கி பணிமனைகளுக்கு முன்னோட்ட அடிப்படையில் வழங்கப்படும்.

6. மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் இயக்குநரக செயல்பாடுகள் மற்றும் அரசு தானியங்கி பணிமனைகளை கணினிமயமாக்குதல்.

மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின்கீழ் செயல்படும் அரசு தானியங்கி பணிமனை பணிகளான வாகனங்களை அனுமதித்தல், பணி அட்டை துவங்குதல், பண்டக சாலையிலிருந்து உதிரிகள் வழங்குதல், பட்டியல் தயாரித்தல், பழுது சரிசெய்யப்பட்ட விவரங்களை உரிய பதிவேடுகளில் பதிவு செய்தல், வாகனங்களை விடுவித்தல் மற்றும் இதர அலுவலக பணிகள் தற்போது பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்செயல்பாடுகளை கணினிமயமாக்குவதன் மூலம் இப்பணிகளை விரைவாகவும், குறைந்த கால

அளவிலும், குறைவான பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள இயலும். எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் இயக்குநரகம் மற்றும் அரசு தானியங்கி பணிமனைகள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கணினிமயமாக்கப்படும். இத்திட்டம், தமிழ்நாடு மின்னணு நிர்வாக முகமை (Tamil Nadu e-Governance Agency) மூலம் செயல்படுத்தப்படும்.

❖ ❖ ❖

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

இயக்கூர்திகள் சட்டங்கள் – நிருவாகம்

மானியக் கோரிக்கை எண். 25

1. கிராமங்களிலும், கல்லூரிகளிலும் பழகுநர் ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கென மடிக்கணினிகள், அச்சுப்பொறிகள் மற்றும் தரவு அட்டைகள் வாங்குதல்.

Purchase of Laptops, Printers and Data Cards to issue Learner's Licence in villages and colleges.

கிராமங்களுக்கும், கல்லூரிகளுக்கும் நேரடியாக சென்று பொதுமக்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும் சாலையில் பயணிக்கும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் மற்றும் சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி அவ்விடத்திலேயே ஓட்டுநர் பழகுநர் உரிமம் (Learner's Licence) வழங்கும் வசதிக்காக அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் மடிக்கணினிகள், அச்சுப்பொறிகள்மற்றும் தரவு அட்டைகள் (Data Card) வழங்குவது அவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, போக்குவரத்துத் துறையின் கீழ் இயங்கும் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் ரூ. **63.09** இலட்சம் செலவில் மடிக்கணினிகள், அச்சுப்பொறிகள் மற்றும் தரவு அட்டைகள் வாங்கப்படும்.

2. அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களுக்கு பல்லூடக படக்கருவிகள் (LED Projector) வாங்குதல்.

Purchase of LED Projectors for all Regional Transport Offices and Motor Vehicle Inspector Offices.

ஒவ்வொரு நாளும் பல்வேறு பணிகளுக்காக போக்குவரத்து அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களுக்கிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தவும், போக்குவரத்து விதிமுறைகளை கற்றுக்கொடுக்கவும் மற்றும் அலுவலக கூட்டங்களை நடத்துவதற்கு ஏதுவாகவும் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களுக்கு பல்லூடக கருவி (LED Projector) வழங்குவது அவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, போக்குவரத்துத் துறையின் கீழ் இயங்கும் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களுக்கு ரூ.77.29 இலட்சம் செலவில் 145 பல்லூடக படக்கருவிகள் (LED Projectors) வாங்கப்படும்.

3. வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களுக்கும் ரூ.4322.97 இலட்சம் செலவில் சொந்த கட்டடம் மற்றும் தேர்வுத் தளங்கள் கட்டப்படும்.

Construction of own building and testing track for Regional Transport Offices and Motor Vehicle Inspector Offices at a cost of Rs.4322.97 Lakh.

3.1 திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் தேர்வுத்தளம் அமைத்தல்.

Formation of Driving Testing Track in the Regional Transport Office at Poonamallee in Tiruvallur District.

போக்குவரத்துத் துறையின் கீழ் இயங்கி வரும் 87 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில், 39 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டடத்தில் இயங்கி வரும் பூந்தமல்லி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கான தேர்வினை நடத்தி, வாகனம் ஓட்டும் திறனை துல்லியமாக மதிப்பிட ஓட்டுநர் தேர்வுத்தளம் இருப்பது அத்தியாவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ரூ.50 இலட்சம் செலவில் ஓட்டுநர் தேர்வுத்தளம் அமைக்கப்படும்.

3.2 சேலம் (கிழக்கு), மேட்டூர் ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்.

Construction of own building for the Regional Transport Offices at Salem (East) and Mettur.

போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் 87 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் 53 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு கட்டுமானப் பணிகள்

நடைபெற்று வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் பொதுமக்கள் காத்திருப்பு அறை, பழகுநர் உரிமம் வழங்கும் அறை, ஓட்டுநர் உரிமம் வழங்கும் அறை, பதிவறை, பொது கழிவறை, கட்டணம் செலுத்துமிடம், சாலைப் பாதுகாப்பு வகுப்பறை, வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற அடிப்படை வசதிகள் இல்லையாதலால் அவ்வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது அவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேலம் மாவட்டம், சேலம் (கிழக்கு) மற்றும் மேட்டூர் ஆகிய இரண்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு பல்வேறு வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் ரூ. 755.50 இலட்சம் செலவில் கட்டப்படும்.

3.3 மேட்டுப்பாளையம், நாகர்கோவில், திருச்சிராப்பள்ளி (கிழக்கு) ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு தேர்வுத் தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டுதல்.

Construction of own building with Driving Testing Track for the Regional Transport Offices at Mettupalayam, Nagercoil and Tiruchirappalli (East).

போக்குவரத்துத் துறையின் கீழ் இயங்கி வரும் 87 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில், 39 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன சொந்த கட்டடங்கள் கட்டுவது அரசுக்கு வாடகையை மிச்சப்படுத்துவதுடன் அவை அரசின் சொத்தாகவே அமைகின்றன. எனவே, பொதுமக்களின் நலன்

கருதி பல்வேறு வசதிகளுடன் கூடிய ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டுவது அத்தியாவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கோயமுத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி (கிழக்கு) ஆகிய மூன்று வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு ரூ.1,230 இலட்சம் செலவில் ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

3.4 செஞ்சி, வாழப்பாடி, அவிநாசி ஆகிய பகுதி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்.

Construction of own building for the Motor Vehicle Inspector Offices (Unit Office) at Gingee, Valapadi and Avinashi.

போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் 58 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களில் 18 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஒன்பது மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வாடகை கட்டடங்களில் இயங்கும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களில் பொதுமக்கள் காத்திருப்பு அறை, பழகுநர் உரிமம் வழங்கும் அறை, ஓட்டுநர் உரிமம் வழங்கும் அறை, பதிவறை, பொது கழிவறை, கட்டணம் செலுத்துமிடம், சாலைப் பாதுகாப்பு வகுப்பறை, வாகனங்கள் நிறுத்துமிடம் இடம் போன்ற அடிப்படை வசதிகள் இல்லை.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விழுப்புரம் மாவட்டம், செஞ்சி, சேலம் மாவட்டம், வாழப்பாடி மற்றும் திருப்பூர் மாவட்டம் அவிநாசி ஆகிய மூன்று மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களுக்கு ரூ. 675.40 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

3.5. செய்யாறு, காரைக்குடி, மன்னார்குடி, வாடிப்பட்டி, சீர்காழி ஆகிய பகுதி அலுவலகங்களுக்கு ஓட்டுநர் தேர்வுத்தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டுதல்.

Construction of Own building with Driving Testing Track for the Motor Vehicle Inspector Offices (Unit Offices) at Cheyyar, Karaikudi, Mannargudi, Vadipatti and Sirkali.

போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் 58 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களில் 6 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. பொதுமக்கள் காத்திருப்பு அறை, பழகுநர் உரிமம் வழங்கும் அறை, ஓட்டுநர் உரிமம் வழங்கும் அறை, பதிவறை, பொது கழிவறை, கட்டணம் செலுத்துமிடம், சாலைப் பாதுகாப்பு வகுப்பறை, வாகனங்கள் நிறுத்துமிடம், ஓட்டுநர் தேர்வுத் தளம் போன்ற வசதிகள் வாடகை கட்டடங்களில் இயங்கும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களில் இல்லை. மேலும், சொந்தக் கட்டடங்கள் கட்டுவது அரசுக்கு வாடகையை மிச்சப்படுத்துவதுடன் அவை அரசின் சொத்தாகவே அமையும். எனவே, பொதுமக்களுக்கு பல்வேறு வசதிகளுடன் ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டுவது அவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு, சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி, நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஆகிய ஐந்து மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களுக்கு ரூ.1612.07 இலட்சம் செலவில் ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

❖ ❖ ❖

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை

மானியக் கோரிக்கை எண். 32

1. **அம்பத்தூரில் புதியதாக கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தின் நிருவாக கட்டிடம் மற்றும் விடுதி கட்டிடத்திற்கு தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.**

Provision of basic infrastructure facilities for the administrative block and hostel block of new building of Tamil Nadu Institute of Labour Studies at Ambattur under construction.

அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்திற்கான புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளது. இந்நிலையத்தின் நிருவாக கட்டிடம் மற்றும் விடுதி கட்டிடத்திற்கு தேவையான அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1.61 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

2. **காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள் கட்டுதல்.**

Construction of Integrated Labour office complexes with basic infrastructure facilities in Kancheepuram and Tiruvallur Districts.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 4.18 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

3. சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (பொது), சென்னை மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகம் மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கான தேசிய தொழில் நெறி சேவை மையம் ஆகிய அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த அலுவலக வளாக கட்டிடம் கட்டுதல்.

Construction of Integrated Office complex for District Employment Office (General), Chennai, Office of Regional Joint Director (Employment), Chennai and National Career Service Centre for Scheduled Castes / Scheduled Tribes.

சென்னை சாந்தோமில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (பொது), சென்னை மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகம் மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கான தேசிய தொழில்நெறி சேவை மையம் ஆகிய அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த அலுவலக வளாக கட்டிடம் கிண்டியில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 3.30 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

4. தனியார் துறை நிறுவனங்களில் வேலைநாடுநர்களை பணியமர்த்துவதற்கான வேலைவாய்ப்பு முகாம் நடத்திட நிதி ஒதுக்கீடு வழங்குதல்.

Sanction of funds for conducting job fairs for private sector placements.

தனியார் துறை நிறுவனங்களில் வேலைநாடுநர்களை பணியமர்த்துவதற்கான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. வேலைநாடுநர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் சந்திப்பதற்கான இணைப்பு பாலமாக வேலைவாய்ப்பு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்முகாம்களை நடத்த ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கும் ஒரு காலாண்டிற்கு ரூ.1 இலட்சம் வீதம் 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஆண்டு ஒன்றுக்கு 1.28 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.50,000/–லிருந்து ரூ.72,000/–ஆக உயர்த்துதல்.

Enhancement of annual income ceiling for Unemployment Assistance Scheme from Rs.50,000/- to Rs.72,000/-.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து உயிர் பதிவேட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் காத்திருக்கும் வேலைநாடுநர்களுக்கு வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித் தொகை, மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. பிப்ரவரி 2017 முதல் வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை இருமடங்காக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அதிக அளவில் பயன்பெறும் வகையில் தற்போதுள்ள ஆண்டு வருமான உச்சவரம்பு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா

அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.50,000/–லிருந்து ரூ.72,000/–ஆக உயர்த்தப்படும். இதற்காக, ரூ.2.33 கோடி கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்து செல்லும் பயிற்சியாளர்கள் உயர்கல்வியைத் தொடரும் வகையில் அவர்களது தகுதிக்கேற்ப 10ஆம் வகுப்பு அல்லது 12ஆம் வகுப்புக்கு இணையான கல்விச் சான்றிதழ் தேசிய திறந்தநிலை கல்வி நிலையம் வழியாக வழங்குதல்.

Equivalence to ITI certificate on par with SSLC & HSC to ITI trainees through National Institute of Open Schooling (NIOS) for pursuing higher education.

தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழிற்பயிற்சி முடித்த பயிற்சியாளர்கள் மேற்படிப்பினைத் தொடர ஏதுவாக 8ஆம் வகுப்பு முறையாகப் பயின்று இரண்டு ஆண்டுகள் தொழிற்பயிற்சி நிலையத்தில் வெற்றிகரமாக பயிற்சி முடித்தவர்களுக்கு 10ஆம் வகுப்புக்கு இணையான சான்றிதழும், 10ஆம் வகுப்பு முறையாகப் பயின்று இரண்டு ஆண்டுகள் தொழிற்பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவு செய்யும் பயிற்சியாளர்களுக்கு 12ஆம் வகுப்புக்கு இணையான கல்விச் சான்றிதழும் வழங்கும் திட்டம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தேசிய திறந்தநிலை கல்வி நிலையத்துடன் இணைந்து 12.40 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

7. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் பாதுகாப்பாக பயிற்சி பெறும் பொருட்டு தனிநபர் பாதுகாப்பு சாதனங்கள் (Personal Safety Equipments) வழங்குதல்.

Distribution of Personal Safety Equipments to the trainees of Government ITIs.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் தினந்தோறும் ஐந்து மணி நேரம் செயல்முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இப்பயிற்சியாளர்கள் பாதுகாப்பாக பயிற்சி பெறும் பொருட்டு அவர்களது தொழிற்பிரிவிற்கேற்றவாறு தனிநபர் பாதுகாப்பு சாதனங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 49.34 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

8. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெறும் ஆட்டோமொபைல் தொழிற்பிரிவு பயிற்சியாளர்களுக்கு மின்சார வாகன (Electric Cars) பராமரிப்பு பயிற்சி வழங்குதல்.

Providing training to the trainees of Mechanic Motor Vehicle trade in maintenance of Electric Cars.

இந்தியாவில் மின்சார போக்குவரத்து வாகனங்கள் தற்போது பெருமளவில் விற்பனைக்கு வரத் துவங்கியுள்ளன. இந்த வாகனங்களை பராமரிக்கத் தேவையான திறனுள்ள தொழிலாளர்களை உருவாக்க வேண்டியுள்ளது. எனவே, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மோட்டார் மெக்கானிக் பிரிவு பயிற்சியாளர்களுக்கு மின்சார வாகனங்களின் இயக்கம் மற்றும் பழுதுகள் நீக்குவது குறித்த பயிற்சிகள் அளிப்பதற்காக இந்தியாவிலேயே முதன்முறையாக மாண்புமிகு இதய தெய்வம்

அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 53 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மின்சார வாகனங்கள் (Electric Cars) 4.77 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

9. **வேலைவாய்ப்பில் பின்தங்கியுள்ள பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பிரிவினருக்கான திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திறன்பயிற்சி வழங்குதல்.**

Skill Development programme for marginalized categories inclusive of Women, Scheduled Castes, Scheduled Tribes, Minorities and Differently abled persons.

படித்த வேலைவாய்ப்பற்ற 18 வயது முதல் 45 வயதுக்குட்பட்ட பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு அல்லது சுயதொழில் முனைவதற்கான குறுகிய கால திறன் பயிற்சி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மத்திய, மாநில அரசு பயிற்சி நிறுவனங்கள் மற்றும் முன்னணி தனியார் பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 100 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

10. அனுபவத்தின் மூலம் பெற்ற தொழிற்திறனை அங்கீகரித்தல் **(Recognition of Prior Learning)** திட்டத்தின் கீழ் கட்டுமான தொழிலாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல்.

Bridge course for construction workers under Recognition of Prior Learning (RPL).

கட்டுமான தொழிலாளர்களின் பாதுகாப்பு, தொழில் சார்ந்த சுகாதார தரம், தர நிலைகள், உற்பத்தி திறன் மேம்பாடு, தற்போதைய தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு ஆகியவை மேம்படும் வகையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலமாக கட்டுமான தொழிலாளர்களுக்கு மூன்று நாட்கள் திறன் மேம்பாட்டு பயிற்சி மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1.86 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

11. புதியதாக 16 இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவங்குதல்.

Opening of 16 new Employees State Insurance (ESI) Dispensaries.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின்கீழ் 16 புதிய இடங்களில், 40,533 தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 14.30 கோடி ரூபாய் செலவில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் புதியதாக துவங்கப்படும்.

12. 25 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் ஆய்வக வசதிகள் ஏற்படுத்துதல்.

Establishment of Laboratory facilities in 25 Employees State Insurance (ESI) Dispensaries.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட 25 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் 2,95,112 காப்பீட்டாளர்களும், அவர்களது குடும்பத்தினரும் பயன்பெறும் வகையில் ஆய்வக வசதிகள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 57 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். ❖

தகவல் தொழில்நுட்பவியல் துறை

மானியக் கோரிக்கை எண். 31

1. தகவல் தொழில்நுட்பவியல் வளர்ச்சிக்கான நிதியை அதிகரித்தல்.

தகவல் தொழில்நுட்பவியல் வளர்ச்சிக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த ரூ.1 கோடியை ரூ.5 கோடியாக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது.

2. தமிழ் மேகம்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் (TNSDC) தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் அமைக்கப்பட்டிருக்கும் மேகக்கணினி அமைப்பு (TN CLOUD), இனி முதற்கொண்டு தனிப்பட்ட அடையாளத்துடன் “தமிழ் மேகம்” என்ற பெயரில் அறியப்படும். இந்த தனிப்பட்ட அடையாளத்திற்கான காப்புரிமை சம்பந்தப்பட்ட அமைப்பிடமிருந்து தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் பெறப்படும். இத்திட்டத்திற்கு ரூ.0.05 கோடி செலவினம் ஏற்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

3. மேகக்கணினி உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் மேகக்கணினி உட்கட்டமைப்பிற்குப் பேரிடர் மீட்பு வசதிகளை விரிவுபடுத்துதல்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் தற்போது எல்காட் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள மேகக்கணினி உட்கட்டமைப்பானது பயன்பாட்டு மென்பொருட்களை மூன்று அல்லது நான்கு **பேரிடர்** இயந்திரங்களில் (virtual

machines) பதிவேற்றம் செய்யக்கூடிய அளவில் அமைந்துள்ளது. இந்த மேகக்கணினி உட்கட்டமைப்பு தனது கொள்ளளவில் 70 சதவிகிதம் வரை பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரசுத் துறைகளின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளுக்கேற்பவும், பேரிடர் கால தரவு மீட்பு வசதிக்காகவும் 100 சதவிகித பயன்பாட்டினை உறுதிசெய்யும் வகையிலும் இக்கட்டமைப்பினை விரிவாக்கம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் ரூ.10 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்படும்.

4. தொழில்முனைவோரின் கூட்டு முயற்சியுடன் எல்காட் நவீன தொழில்நுட்ப இல்லம் (ELCOT Smart Homes)

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் பொருட்களுக்கான இணையவசதி என்பது “அன்றாடம் உபயோகிக்கும் கணித்தல் கருவிகளின் தகவல்கள் பரிமாற்றத்திற்கும் தொலைதூரத்திலிருந்து கண்காணிப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் உரிய இணைப்புகளை இணையம் வழியாக ஏற்படுத்துவதாகும்”. எல்காட் நிறுவனம் இந்த தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினை உபயோகித்து சிறந்த தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோர்களின் ஆரம்பகட்ட நிறுவனங்களின் துணைக்கொண்டு நவீன தொழில்நுட்ப இல்லங்களை உருவாக்க உள்ளது. வீடுகளுக்கு அவரவார் தேவைகளுக்கேற்ப வெவ்வேறு தொகுப்புகளில் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படும். IoT எனப்படும் பொருட்களின் இணையம், பொதுமக்கள் தங்கள் வீட்டு உபகரணங்களை கைபேசியில் உள்ள செயலி வாயிலாக எந்நேரமும் எவ்விடத்திலிருந்தும் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பத்துடன் ஒரு செயலி மூலமாக கட்டுப்படுத்த முடியும். முதற்கட்டமாக இந்த தொழில்நுட்பம் சென்னை நகரத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. இதன் உத்தேச மதிப்பீடு ரூ. 0.50 கோடி ஆகும்.

5. அரசு இணையதளங்கள் பாதுகாப்பு

பாதுகாப்பு விதிகளின்படி, இணையப் பதிவேற்றம் செய்யப்பட்ட வலைத்தளங்கள் / இணையப் பயன்பாடுகள் அனைத்தும் பாதுகாக்கப்பட்ட சாக்கெட் அடுக்கு / போக்குவரத்து அடுக்குப் பாதுகாப்பினைக் (SSL / TSL) கொண்டிருக்க வேண்டும். இதில் பயனர்களின் பொருண்மைகள் தொடக்கம் முதல் முடிவு வரை முழுமையாக சர்வர் கணினியில் குறியீடு செய்யப்பட்டு இணைய உலாவியில் (Browser) காண்பிக்கப்படுகின்றன. இதன்மூலம் இணையவழி தரவுப் பரிமாற்றத்தின்போது தகவலின் ரகசியத்தன்மை பாதுகாக்கப்படுகிறது. SSL / TSL சான்றிதழ்கள் கட்டணத்தின்பேரில் பல்வேறு சான்றளிப்பு முகமைகளால் அளிக்கப்படுகின்றன. LetsEncrypt என்பது SSL / TSL சான்றிதழ்களை இலவசமாக அளிக்கும் ஒரு சான்றளிப்பு முகமையாகும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் இவ்வசதி அனைத்து அரசுத் துறைகள் மற்றும் முகமைகளுக்குத் தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் ஏற்படுத்தித் தரப்படும்.

6. தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான மின்னஞ்சல் கணக்குகள்

தமிழ்நாடு அரசின் கீழ் இயங்கும் பல்வேறு துறைகள் / நிறுவனங்கள் / முகமைகள் / வாரியங்கள் மற்றும் பொதுத் துறைகளில் சுமார் 10 இலட்சம் ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் அனைத்துப் பணியாளர்களுக்கும் தேசிய தகவலியல் மையத்தின் (NIC) உதவியுடன் தனிநபர் மற்றும் அலுவல் சார்ந்த மின்னஞ்சல் முகவரிகள் tn.gov.in என்ற தளப்பெயருடன் (domain) தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் வழங்கப்படும்.

7. தமிழ்நாடு அரசின் ஒற்றை மின்னணு கட்டண செலுத்தும் தளம் (single e-Payment gateway)

நமதுநாடு மின்னணு பரிவர்த்தனை முறையைப் பெரிய அளவில் நடைமுறைப்படுத்தும் நோக்கில் மேற்கொண்டு வருகிறது. எனவே,

அரசுத் துறைகள் மற்றும் அதன் நிறுவனங்கள் அதைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகிறது. இதற்கு ஏதுவாக தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) ஒரு மின்னணு பணம் செலுத்தும் தளத்தை நிறுவும். ஒவ்வொரு அரசுத் துறையும், அரசு நிறுவனமும், மேற்கண்ட பணப்பரிமாற்றப் பயன்பாட்டு மென்பொருளை அவர்களுக்கென பிரத்யேகமாக உருவாக்கும் போது மேற்கண்ட தளமானது ஒரு மூல மென்பொருளாகப் பயன்படும். அதனால், பணம் செலுத்தும் முகப்பு வழியை உருவாக்க அவர்கள் தனியாக ஏல முறைகளைப் பின்பற்ற தேவையில்லை. மேலும், RTGS, NEFT, netbanking, பணப்பைகள், UPI, மொபைல் வங்கி, போன்ற அனைத்துக் கட்டண இடை முகங்கள் இந்தத் தளங்களின் மூலம் ஒருங்கிணைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் இந்த ஒற்றை மின்னணு கட்டணம் செலுத்தும் தளம் ரூ. 1.60 கோடி மதிப்பில் நிறுவப்பட உள்ளது.

8. தமிழ்நாடு அரசின் ஒற்றைச் சாளரக் குறுந்தகவல் முகப்பு வழி (Single SMS Gateway)

அனைத்து அரசுத் துறைகள் / நிறுவனங்கள் பயன்படுத்தும் விதத்தில் குறைந்த செலவில் குறுந்தகவல் முகப்புவழி ஒன்றை தமிழ்நாடு மின்னாளுமை முகமை அமைத்திடும். இந்தக் குறுந்தகவல் முகப்புவழியானதுபாதுகாப்பானதகவல்பரிமாற்றத்தைஉறுதிசெய்யும் விதத்தில் வடிவமைக்கப்படும். மென்பொருள் உருவாக்குனர்கள் தங்களது மென்பொருளில் எளிதில் இந்த குறுந்தகவல் வசதியை ஒருங்கிணைத்திட தேவையான மென்பொருள் ஒருங்கிணைப்புடன் வழங்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் இந்த சேவை ரூ.1.65 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

9. மக்களுக்கான ஒரே இணைய தளம்

அரசு வழங்கும் சேவைகளை, பொதுமக்கள் பல்வேறு துறைகளின் வலைதளங்களை பயன்படுத்துவதன் மூலமாகவும் மற்றும் அரசு இ–சேவை மையங்கள் மூலமாகவும் பெற்று வருகின்றனர்.

இந்த இரண்டு நிகழ்வுகளிலும் வெவ்வேறு இணைய முகவரிகளை (URLs) பயன்படுத்த வேண்டியுள்ளது. அரசின் அனைத்து சேவைகளையும் திறந்த வலைதளம் மூலம் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. எனவே, ஒரே பயனர் குறியீடு மற்றும் கடவு சொல்லுடன் கூடிய மக்களுக்கான ஒரே வலைதளத்தை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் இவ்வலைதளம் மூலம் அரசின் பல்வேறு துறை சார்ந்த சேவைகளை ஒருங்கிணைத்து வழங்கும். இதன் மூலம் பொதுமக்கள் ஒரே இணைய முகவரியை நினைவில் கொண்டு அனைத்து சேவைகளையும் பெற்று பயன்பெறலாம். இந்த சேவை ரூ.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

10. ஒற்றை கைபேசி செயலி (Single Mobile App)

தற்காலத்தில் அரசு வழங்கும் சேவைகளைப் பொதுமக்கள் தங்களது ஸ்மார்ட் கைபேசி மூலமாக எளிதில் பெற்றுக் கொள்ள முடியும். பொதுமக்களுக்கான அரசின் சில குறிப்பிட்ட சேவைகள், கைபேசி செயலிகளான அம்மா, உழவன், காவலன் போன்றவை வழியாக அளிக்கப்பட்டு வருகின்றன.

ஸ்மார்ட் போன்களின் பயன்பாடுகள் அதிகரித்ததன் மூலம் மாநிலம் முழுவதும் அதிக அளவிலான தரவு இணைப்பு கிடைப்பதன் காரணமாக அரசின் சேவைகள் பொதுமக்களை சென்றடைய ஒரு ஒற்றை கைபேசி செயலி உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது பொதுமக்களுக்கு பேருதவியாக இருப்பதோடு அல்லாமல் நினைவில்

வைத்துக்கொள்வதற்கு எளிதான ஒற்றை செயல்பாடாகவும் இருக்கும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் இந்த ஒற்றை கைபேசி செயலி பயன்பாடு ரூ.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

11. கொள்கைகள்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் நம்பிக்கை இணையம் (Blockchain), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திரக் கற்றல் (Machine Learning), பொருட்களின் இணையம் (IoT), மெய்நிகர் உண்மை (Virtual Reality) / மிகைநிகர் உண்மை (Augmented Reality), ஆளில்லா குறுவிமானங்கள் (Drones), தரவு பகுப்பாய்வு (Data Analytics) போன்றவற்றிற்கான கொள்கைகள் தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் (TNeGA) உருவாக்கப்படும்.

12. பொருட்களின் இணையத் தொழில்நுட்பம் (IoT) சார்ந்த மேலமார்வு பெட்டிகள்

தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம், சந்தாதாரர்களின் பயன்பாட்டிற்காக "IoT" தொழில்நுட்பம் சார்ந்த குரல்வழிச் செயலாக்கம் செய்யும் திறன்வாய்ந்த மேலமர்வு பெட்டிகளை அறிமுகப்படுத்த இருக்கிறது, இவ்வகையான மேலமர்வு பெட்டிகளைக் கோரும் பயனாளிகள் அதற்கான கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மேற்கண்ட "IoT" தொழில்நுட்பம் சார்ந்த மேலமர்வு பெட்டியில் கீழ்க்காணும் இரண்டு சிறப்பு அம்சங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அ) குரல்வழி மூலமாக தொலைக்காட்சி சேனல்களைச் செயலாக்கம் செய்யலாம்.

ஆ) இந்த மேலமர்வு பெட்டிகள் மூலமாக வீட்டு மின்னாற்றல் / மின்னணுவியல் உபகரணங்களைக் கட்டுப்படுத்த முடியும்.

13. அரசுத் துறை / நிறுவனங்களின் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு உருவாக்குதல்.

அரசுத் துறைகள் / நிறுவனங்களின் திட்டங்கள் மற்றும் சேவைகள் சார்ந்த விவரங்களை ஒளிபரப்புவதற்குத் தேவையான தொலைக்காட்சி சேனல்களுக்கான கட்டமைப்பு தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்தால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் உருவாக்கப்படும்.

14. தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் கணினித் தமிழுக்கென தனிப்பிரிவு

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் முக்கிய செயல்பாடு இணைய வாயிலாக தமிழ்மொழியை உலகெங்கும் கற்பிப்பது ஆகும். தமிழ் இணையக் கல்விக்கழகம் 7 நிரந்தரப் பணியாளர்களைக் கொண்டு தனது கணினிச் சேவையை 19 ஆண்டுகாலமாகத் தொடர்ந்து செய்து வருகிறது. கணினித்தமிழ் சார்ந்த பெரிய திட்டங்களைப் புறப்பணியாளர்களைக் (Outsourced staff) கொண்டு தமிழ் இணையக் கல்விக்கழகம் செய்து வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் இந்நிறுவனத்தைப் பலப்படுத்தும் வகையில் போதுமான பணியாளர்களுடன் கணினித் தமிழ்ப் பிரிவு உருவாக்கப்படும். இதற்கான தொடர் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ.0.50 கோடியாகும்.

15. கல்விக் காணொலிகளின் தமிழாக்கம்

தமிழ் இணையக் கல்விக்கழகம் அமெரிக்காவிலுள்ள கான் கல்விக்கழகம், மற்றும் வெற்றிவேல் அறக்கட்டளையுடன் ஒரு முத்தரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. கான் கல்விக்கழகம் பல்வேறு பாடங்கள் சார்ந்த எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட கல்வி சார்ந்த காணொலிகளை ஆங்கில மொழியில் கற்பிக்க உருவாக்கியுள்ளது. அந்த காணொலிகளுக்குத் தமிழ் குரல் வழங்கி தமிழக மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் முதற்கட்டமாக 1,000 காணொலிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும். இதற்கான செலவினம் ரூ. 0.12 கோடியாகும்.

❖ ❖ ❖

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

மானியக் கோரிக்கை எண். 4

1. **ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் இயங்கும் உயர்நிலைப் பள்ளிகளில் அறிவுத்திறன் வகுப்பறை** (Smart Class Room) **ஏற்படுத்துதல்.**

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 116 உயர்நிலைப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கர்களின் கல்வித் திறனை மேம்படுத்தும் வகையிலும், அவர்கள் மருத்துவம், பொறியியல் போன்ற மேற்படிப்புகளை பயில ஏதுவாக 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பாடங்களை மாணாக்கர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், கணினி வாயிலாக கற்பித்தல் முறையினை செயல்படுத்திட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முதற்கட்டமாக 20 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளில் அறிவுத்திறன் வகுப்பறைகள் (Smart Class Room) ரூ.1.12 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.1.12 கோடி மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

2. **ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிகளில் தற்போது இயங்கிவரும் அறிவுத் திறன் வகுப்பறைகளை** (Smart Class Rooms) **மெய்நிகர் கலந்தாய்வு வகுப்பறைகளாக** (Virtual Interactive Classrooms) **மாற்றி மெய்நிகர் கலந்தாய்வு கற்பித்தல் முறையினை** (Virtual Interactive Teaching) **ஏற்படுத்துதல்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு ஆதிதிராவிட நல மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 83 பள்ளிகளில் ஏற்கனவே இருக்கின்ற அறிவுத் திறன் வகுப்பறைகளை மெய்நிகர் கலந்தாய்வு வகுப்பறைகளாக தரம் உயர்த்தி, மெய்நிகர் கலந்தாய்வு கற்பித்தல் முறையில் வகுப்புகள் நடத்துவதற்கான காணொலி மையம் ரூ.68.15 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.68.15 இலட்சம் மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

3. ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு ஆளுமைத் திறன், மொழி மற்றும் தகவல் தொடர்புத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குதல்.

ஆதிதிராவிட மக்கள் பெரும்பாலானோர் சமூக, பொருளாதார, கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். இவர்களின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக இவ்வரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அரசு மற்றும் தனியார் துறைகளில் உள்ள வேலைவாய்ப்பு போட்டிகளை எதிர் கொள்ளும் திறன் உள்ளவர்களாக ஆதிதிராவிடர் கல்லூரி மாணாக்கர்களை மாற்றிடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 158 ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கர்களுக்கு வாரந்தோறும் ஆளுமைத் திறன், மொழி மற்றும் தகவல் தொடர்புத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் ரூ.1.41 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.1.41 கோடி மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

4. 100 ஆதிதிராவிடர் நல விடுதிகள் மற்றும் 50 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் (Water Filters) அமைத்தல்.

ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவர்களின் சுகாதாரம் மற்றும் உடல் நலனை பேணிக் காத்திடவும் அவர்களை சுகாதாரமற்ற குடிநீர் பருகுவதால் உண்டாகும் தொற்றுநோய் ஆபத்திலிருந்து காத்திடவும் அவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட ஏதுவாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 100 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கும், 13 மாவட்டங்களில் உள்ள 50 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும், தலா ரூ.70 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.1.05 கோடி செலவில் குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் (Water Filters) அமைக்கப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.70 இலட்சம் மாநிலத் திட்ட நிதியிலிருந்தும் மற்றும் ரூ.35 இலட்சம் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்தும் ஒதுக்கப்படும்.

5. பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தாட்கோ மூலம் செயல்படுத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, ஈரோடு,

கன்னியாகுமரி, மதுரை, நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியின மக்கள் வருமானம் ஈட்டக்கூடிய தொழில் புரிய ஏதுவாக சுய உதவிக் குழு, பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், தொழில் முனைவோர் திட்டம், நில மேம்பாட்டுத் திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.10 கோடி மானியத்தில் 2019–2020–ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

மேற்படி திட்டங்களை செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.10 கோடி ஒதுக்கப்படும்.

6. பழங்குடியின மாணவ / மாணவியரை 2 ஆண்டுகள் கல்வியியல் பட்டயப் படிப்பு (D.T.Ed) பயில வைத்து பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியராக பணி வழங்குதல்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி பயிலும் 100 பழங்குடியின மாணவ / மாணவியர் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு தேர்ச்சி பெற்றவுடன், அவர்களது விருப்பத்தின் அடிப்படையில் கல்வியியல் பட்டய படிப்பில் (D.T.Ed) சேர்த்து, அவர்கள் அப்பட்டயப்படிப்பை முடித்த பின் தமிழ்நாடு அரசு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வில் (Tamil Nadu Teachers Eligibility Test) வெற்றி பெற தனியார் பயிற்சி நிலையங்களில் சேர்த்து, அத்தகுதித் தேர்வில் வெற்றி பெறும் பழங்குடியின இடைநிலை ஆசிரியர்கள் தர வரிசை அடிப்படையில் இத்துறையின் கீழ் இயங்கும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடத் தொடக்கப்பள்ளிகளில் இடைநிலை ஆசிரியராக பணி நியமனம் செய்யப்படுவர்.

இத்திட்டத்தின் கீழ் 100 மாணாக்கர் கல்வியியல் பட்டயப் படிப்பு பயில்வதற்கு ஆகும் கல்விக் கட்டணம், புத்தகக் கட்டணம், விடுதிக் கட்டணம், சீருடைக் கட்டணம், இதர செலவினங்கள் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெற தனியார் பயிற்சி நிலையங்களில் ஏற்படும் செலவினங்கள் முழுவதையும் அரசே ஏற்கும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.35 இலட்சம் ஒதுக்கப்படும்.

7. பத்து அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு புதிய வகுப்பறைகள் கட்டுதல்.

பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கிவரும் 308 பள்ளிகளில் 24,931 மாணாக்கர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கத்தோடும், பழங்குடியின மாணாக்கர்கள் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டும், மாணவ/மாணவியர் பள்ளிக்கு வெகுதூரம் செல்வதைத் தவிர்க்கும் பொருட்டும் அவர்தம் குடியிருப்புகளுக்கு அருகில் உள்ள பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2019–2020–ஆம் நிதியாண்டில் இப்பள்ளிகளில் 10 பள்ளிகளுக்கு, ஒரு பள்ளிக்கு ரூ.20 இலட்சம் வீதம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.2 கோடி ஒதுக்கப்படும்.

8. ஐந்து அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் இருக்கை வசதிகளுடன் கூடிய நூலகங்கள் அமைத்து தருதல்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் பொது அறிவினை வளர்த்திடும் வண்ணம் அவர்களின் புத்தகம் படிக்கும் ஆர்வத்தினை தூண்டும் வகையில் முதற்கட்டமாக 4 மாவட்டங்களில் உள்ள 5 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் இருக்கை வசதிகளுடன் கூடிய நூலகங்கள் அமைக்கப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டநிதியிலிருந்து ரூ.75 இலட்சம் ஒதுக்கப்படும்.

9. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டுதல்.

பழங்குடியினர் நலத் துறையின் கீழ்17 மாவட்டங்களில் இயங்கி வரும் 308 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 24,931 மாணாக்கர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கத்தோடும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2019–2020–ஆம் நிதியாண்டில் 5 மாவட்டங்களில் உள்ள 10 பள்ளிகளுக்கு, ஒரு பள்ளிக்குரூ.8.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.85 இலட்சம் ஒதுக்கப்படும்.

10. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் சுகாதாரத்தினை கருத்தில் கொண்டு 20 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு புதிய கழிவறைக் கூடங்கள் கட்டுதல்.

பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 308 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளிகளில் கல்வி

பயிலும் மாணவ, மாணவியர் சுத்தமான மற்றும் சுகாதாரமான சூழலில் கல்வி பயில்வதை உறுதி செய்யும் பொருட்டு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளின் அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, **2019–2020–**ஆம் நிதியாண்டில் **6** மாவட்டங்களில் உள்ள **20** பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிய கழிவறைக் கூடங்கள் கட்டப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ.2 கோடி ஒதுக்கப்படும்.

11. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு நீள் இருக்கை, சாய்வு மேசை, கட்டில், கரும்பலகை, எழுதுகோலுடன் கூடிய வெண்பலகை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.

பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளிகளில் உட்கட்டமைப்பினை உயர்த்திடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, **308** அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு நீள் இருக்கை, சாய்வு மேசை, கட்டில், கரும்பலகை, எழுதுகோலுடன் கூடிய வெண்பலகை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் ரூபாய் ஒரு கோடி செலவில் வழங்கப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டநிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்படும்.

❖ ❖ ❖

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

தமிழ் வளர்ச்சி

மானியக் கோரிக்கை எண். 46

1. அருட்பெருஞ்சோதி வள்ளலார் அவர்களின் பெயரில் புதிய விருது தோற்றுவித்து ஆண்டு தோறும் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சமரச நெறிகளால் ஆன்மிகத் தொண்டாற்றும் ஒருவருக்கு அருட்பெருஞ்சோதி 'வள்ளலார்' பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும்.விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதிச்சான்றும் பொன்னாடையும்வழங்கப்பெறும். இவ்விருதிற்கென ஆண்டுதோறும் ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

2. தேவநேயப் பாவாணர் அவர்களின் பெயரில் புதிய விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் வேர்ச்சொல் ஆய்வு, அகராதி உருவாக்குதல் மற்றும் தனித்தமிழைப் பின்பற்றுதல் உள்ளிட்ட ஆய்வும் தமிழ் ஈடுபாடும் கொண்டு பணியாற்றும் தமிழறிஞர் ஒருவருக்குத் 'தேவநேயப் பாவாணர்' அவர்களின் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதிச் சான்றும் பொன்னாடையும் வழங்கப்பெறும். இவ்விருதிற்கென ஆண்டுதோறும் ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

3. காரைக்கால் அம்மையார் அவர்களின் பெயரில் புதிய விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, காரைக்கால் அம்மையாரின் படைப்பிலக்கிய நெறிகளில் தமிழ்த் தொண்டாற்றி வரும் மகளிர் ஒருவருக்கு 'காரைக்கால் அம்மையார்' அவர்களின் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும் ஒருசவரன் தங்கப் பதக்கமும் தகுதிச் சான்றும் பொன்னாடையும் வழங்கப்பெறும். இவ்விருதிற்கென ஆண்டுதோறும் ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

4. வீரமாமுனிவர் அவர்களின் பெயரில் புதிய விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வீரமாமுனிவர் நெறியில் அவர்தம் படைப்பு நடையில் காவியங்கள், சிற்றிலக்கியங்கள், மொழி பெயர்ப்புகள் என்ற வகையில் தமிழ்த் தொண்டாற்றிவரும் தமிழறிஞர் ஒருவருக்கு 'வீரமாமுனிவர்' அவர்களின் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும்ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதிச்சான்றும் பொன்னாடையும் வழங்கப்பெறும். இவ்விருதிற்கென ஆண்டுதோறும் ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

5. வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் மொழி ஆய்வுக்கூடம் தொடங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் ஆணைப்படி, வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் அயல்மொழியினருக்கு எளிதாகவும், விரைவாகவும் தமிழ் கற்பிக்கும் வகையில் மொழி ஆய்வுக்கூடம் தொடங்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 9 இலட்சத்து 60 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

6. வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்கும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் இளநிலை, முதுநிலைப் பட்டயப் படிப்பு மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆண்டுதோறும் வழங்கப்படும். இதற்கெனத் தொடர்செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 85 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

7. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் மயங்கொலிச் சொல்லகராதி உருவாக்கப்பட்டுஎழுதுபொருள் அச்சுத்துறையின் மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

தமிழ்மொழியில் உள்ள மாற்றொலியின் எழுத்துகள் தவறான பயன்பாட்டில் பொருள் மாற்றம் பெற்றுவிடுகின்றன. எனவே அவற்றைத் தெளிவிக்கும் வகையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மயங்கொலிச் சொல்லகராதியை 3 ஆண்டுக் காலத்திற்குள் தொகுத்து 200 பக்க அளவில் எழுதுபொருள் அச்சுத் துறை மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

8. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் தமிழ் மரபுத்தொடர் அகராதி உருவாக்கப்பட்டு எழுதுபொருள் அச்சுத்துறையின் மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொழில்முறைத் தொடர்பாகவும் பேச்சுவழக்குத் தொடர்பாகவும் தமிழ் மொழியில் வழங்கும் மரபுத் தொடர்களைத் தொகுத்து 300 பக்கங்களில்'தமிழ் மரபுத்தொடர் அகராதி' எழுதுபொருள் அச்சுத் துறை மூலம் அச்சிட்டு 3 ஆண்டுக் காலத்திற்குள் வெளியிடப்படும்.

9. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் பையடக்க அகராதி (Pocet Dictionary) உருவாக்கப்பட்டு எழுதுபொருள் அச்சுத்துறையின் மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாணவர்களும், பேராசிரியர்களும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில் சொற்களைத் தொகுத்து அவற்றிற்கான பொருள்கள், இலக்கணக் குறிப்புகள், இலக்கியக் குறிப்புகள், வாக்கிய வடிவங்கள் உள்ளிட்ட குறிப்புகளைத் தொகுத்து பையடக்க அகராதி மூன்றாண்டுக் காலத்திற்குள் எழுதுபொருள் அச்சுத் துறை மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

10. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் 'சொல்வயல்' என்ற பெயரில் மாத இதழ் தொடங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, சொல்லாய்வுகள், ஆய்வுக் கட்டுரைகள், அகராதியியல் சார்ந்த கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் தொடர்பான செய்திகளை ஆவணப்படுத்திச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநரை இதழாசிரியராகக் கொண்டு ‘சொல்வயல்’ என்ற பெயரில் மாத இதழ் வண்ணப்படங்களுடன் எழுதுபொருள் அச்சுத் துறை மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

11. தமிழ்ப் பல்கலைக்கழக மின் அமைப்புகளை சிறப்புச் சீர்காப்பு செய்திட ரூபாய் 30 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்ப் பல்கலைக்கழக உயரழுத்த மின் நிலைய பகுதிக்கும் நூலகக் கட்டடத்திற்கும் இடையில் 36 ஆண்டுகள் பழமையான பழுதுற்ற புதை மின்வடத்தை மாற்றி புதிய மின்வடம் அமைக்கவும் மின் அமைப்புகளை புதுப்பிக்கவும் தொடராச் செலவினமாக ரூபாய் 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

12. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக ஆண்டுதோறும் 50 தமிழாசிரியர்களுக்கு 20 நாள்கள் ‘மொழியியல் நுணுக்கப் பயிற்சி’ எனும் பொருண்மையில் புத்தாக்கப் பயிற்சி அளிக்க ஆண்டுதோறும் ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வளர்ந்து வரும் தமிழியல் தொடர்பான நுணுக்கங்களையும் கணினித் தமிழ் வளர்ச்சிப் போக்குகளையும் அறிந்துகொள்ள ஏதுவாக ஆண்டுதோறும் 50 தமிழாசிரியர்களுக்கு‘மொழியியல் நுணுக்கப் பயிற்சி’ எனும் பொருண்மையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழ் மொழி

மற்றும் மொழியியல் புலத்தின் வாயிலாக 20 நாள்கள் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

13. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அண்ணா கருத்தரங்கக் கூடத்தின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திட ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் புதிய அலுவலகக் கட்டடத்தில் 200 பார்வையாளர்கள் அமரும் வகையில் கட்டப்பட்டுள்ள அண்ணா கருத்தரங்கக் கூடத்தில் பார்வையாளர்கள், சிறப்பு விருந்தினர்கள் அமர்வதற்கான நாற்காலிகள் மற்றும் தரை விரிப்புகள் மேலும் குளிர் வசதிக்கு ஏற்ற வகையில் அறையை மேம்படுத்துதல் ஆகிய உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

14. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கல்வெட்டியல் மற்றும் சுவடியியல் தொடர்பான கோடைக் காலப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு ஆண்டுதோறும் ரூபாய் 2 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கல்வெட்டியல் மற்றும் சுவடியியல் தொடர்பான தேடல்களைக் கொண்டுள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்வெட்டியல் மற்றும் சுவடியியல் தொடர்பான கோடைக்காலப் பயிற்சி வகுப்புகள் ஆண்டுதோறும் மே திங்களில் நடத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

15. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மாணவர்கள் பிற மொழிகளைக் கற்றுக் கொள்ளச் சிறப்பு மொழிப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு ரூபாய் 6 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் தமிழ் மொழியின் வளமையையும் அதன் சிறப்புகளையும் பிறமொழியினரிடையே எடுத்துக்கூறி கருத்துப் பரிமாற வசதியாக பிற மொழிகளைக் கற்றுக்கொள்ளும் வகையில் அம்மொழிகளில் புலமை பெற்ற சிறந்த மொழி ஆசிரியர்களைக் கொண்டு சிறப்பு மொழிப் பயிற்சி ஆண்டுதோறும் அளிக்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 6 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

16. உலகத் தமிழ்ச் சங்கம் வாயிலாக உலகத்தமிழ் அமைப்புகள் 2ஆம் தொகுதி நூல் வெளியிடப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் அமைப்புகளின் பங்களிப்பினைத் தொகுத்தளிக்கும் வகையில் உலகத் தமிழ் அமைப்புகள் 2ஆம் தொகுதி நூல் வெளியிடப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 3 இலட்சம் வழங்கப்படும்.

17. தொல்காப்பியர் திருவுருவச் சிலைக்கும் மற்றும் தமிழ்த்தாய் சிலைக்கும் சிறப்புச்செய்ய ரூபாய் 1 இலட்சத்து 80 ஆயிரம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சித்திரை முழுமதி நாளன்று சென்னைப் பல்கலைக்கழக மெரினா வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள தொல்காப்பியர்

திருவுருவச் சிலைக்கும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் காப்பியக்காட்டில் அமைந்துள்ள தொல்காப்பியர் திருவுருவச் சிலைக்கும் ஆண்டுதோறும் மாலை அணிவித்தும் மலர் தூவியும் சிறப்புச் செய்யப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 60 ஆயிரமும், மதுரை, தமுக்கம் மைதானத்தில் அமைந்துள்ள தமிழ்த்தாய் சிலைக்கு நாள் தோறும் சிறப்புச் செய்திட தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரமும் என மொத்தம் ரூபாய் 1 இலட்சத்து 80 ஆயிரம் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும்.

18. தமிழ் ஆட்சிமொழிச் சட்ட வாரம் ஆண்டுதோறும் ரூபாய் 32 இலட்சம்செலவில் கொண்டாடப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956 ஆம் நாளை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் டிசம்பர் 21 முதல் 27 முடிய ஆட்சிமொழிச் சட்ட வாரமாக அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

19. தமிழ் வளர்ச்சித் துறை, காட்சி ஊடகங்களுடன் இணைந்து தமிழ்நாடு அளவில் மாணவர்களுக்கு குறள்வினாடி–வினா ஆண்டுதோறும் நடத்திப் பரிசுகள் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் வளர்ச்சித் துறை காட்சி ஊடகங்களுடன் இணைந்து தமிழ்நாடு அளவில் மாணவர்களுக்கு குறள் வினாடி–வினா நிகழ்ச்சி ஆண்டுதோறும் நடத்திப் பரிசுகள் வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

20. திருக்குறளை உலக நூலாக ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின் மூலம் (யுனெஸ்கோ) அங்கீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருக்குறளை உலக நூலாக ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின் மூலம் (யுனெஸ்கோ) அங்கீகரிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

21. தமிழ் இலக்கியம் மற்றும் பிற பாடங்களைத் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குத் 'தமிழால் முடியும்' என்ற வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி மையம் தொடங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாட்டில் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தமிழ் இலக்கியம் மற்றும் பிற பாடங்களைத் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குத் 'தமிழால் முடியும்' என்ற வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி மையம் சென்னை, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் தொடங்கி 32 மாவட்டங்களிலிருந்து 200 மாணவர்களை ஆண்டுதோறும் அழைத்து அவர்களுக்கு 3 நாள்கள் பயிற்சி அளிக்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 21 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

22. தமிழில் உள்ள உன்னத இலக்கியப் படைப்புகள் ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின் (யுனெஸ்கோ) நடைமுறைக்கேற்ப உலக மொழிகளில் வெளியிடப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, தமிழில் பாதுகாக்கப்படவேண்டிய உலகின் உன்னதப் படைப்புகளான (Memories of the world) சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை உள்ள அரிய மற்றும் தரமான படைப்புகளை ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின் (யுனெஸ்கோ) நடைமுறைக்கேற்ப வெளிப்படுத்தி ஏற்பு பெற்று உலக மொழிகளில் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலம் ஆண்டுதோறும் வெளியிடப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

23. மொழிபெயர்ப்புத் துறை அலுவலர்களுக்குச் சிறப்பு ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மொழிபெயர்ப்புத் துறை அலுவலர்களுக்கு சென்னையிலுள்ள பிரிட்டிஷ் கலை நிறுவனத்தில் (British Council) 15 நாள்களுக்கு சிறப்பு ஆங்கிலப் பயிற்சியும் மற்றும் ஐதராபாத்திலுள்ள ஆங்கிலம் மற்றும் அயல்நாட்டு மொழிகளுக்கான மத்திய (Central Institute of English and Foreign Languages) நிறுவனத்தில் ஒரு மாதப் பயிற்சியும் அளிக்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 15 இலட்சம் வழங்கப்படும்.

24. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடத்தின் வழியே திருக்குறள் ஓவியப் போட்டிகள் நடத்தி ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் பரிசுகள் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம் வழியாக

ஆண்டு தோறும் ஓவியப் போட்டிகள்நடத்தப்படும். இப்போட்டியில் திருக்குறள் நெறிப்படி சிறந்த ஓவியம் படைப்பவருக்கு பரிசு வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

25. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் கல்விப் புலங்களின் வழியே துறை சார்ந்தப் பயிற்சிப் பட்டறைகள் நடத்துவதற்கு ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் செயல்பட்டு வரும் தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம், தமிழ் இலக்கியம் மற்றும் சுவடியியல் புலம், சமூகவியல்—கலை மற்றும் பண்பாட்டுப் புலம், அயல்நாட்டுத் தமிழர் புலம் ஆகிய கல்விப் புலங்களின் வழியே மாணவர்களுக்குத் துறை சார்ந்த பயிற்சிப் பட்டறைகள் ஆண்டுக்கு நான்கு நடத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

26. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நிறுவிய பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர்த் திங்கள் 15ஆம் நாளை நிறுவனர் நாளாக ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 50 ஆயிரம் செலவில் கொண்டாடப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிப்பதற்கு முழு முதற்காரணமாக விளங்கிய மேனாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர்த் திங்கள் 15ஆம் நாள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நிறுவிய 'நிறுவனர் நாள்' என ஆண்டுதோறும் கொண்டாடப்படும். மேலும், அன்றைய

நாள் நிறுவன வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

27. மதுரையில் உள்ள சங்கத் தமிழ்க் காட்சிக் கூடத்தில் உள்ள ஓவியங்கள், சிலைகள், கற்சிலைகள் உள்ளிட்ட கலைப் பொருள்களைப் புனரமைத்துப் பராமரிக்க ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சங்கத் தமிழ்க் காட்சிக்கூடத்தில் அமையப் பெற்றுள்ள ஓவியங்கள், சிலைகள், கற்சிலைகள் உள்ளிட்ட கலைப் பொருள்களைப் புனரமைத்தல், அலுவலகக் கட்டமைப்பை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சமும் தொடராச் செலவினமாக ரூபாய் 5 இலட்சமும் வழங்கப்படும்.

28. மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் கருத்தரங்கம் மற்றும் இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்திட ரூபாய் 25 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தேசிய, பன்னாட்டுக் கருத்தரங்கங்கள், இலக்கிய, இலக்கண வகுப்புகள், தமிழ் அமைப்புகளுடன் இணைந்து தேசியக் கருத்தரங்குகள், அயலகத் தமிழ் அமைப்புகளுடன் இணைந்து இலக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் அயலகத் தமிழறிஞர்கள் பங்குபெறும் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆகியவை ஆண்டுதோறும் நடத்தப்படும். இதற்கெனத்தொடர் செலவினமாக ரூபாய் 25 இலட்சம்ஒதுக்கீடு செய்யப்படும்.

29. உலகத் தமிழ்ச் சங்க அலுவலகப் பயன்பாட்டிற்குக் கணினிகள் மற்றும் அச்சுக் கருவிகள் வாங்கிட ரூபாய் 3 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மதுரை, உலகத் தமிழ்ச் சங்க அலுவலகப் பயன்பாட்டிற்கென 5 கணினிகள் மற்றும் அச்சுக் கருவிகள் வழங்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

30. மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் கண்காணிப்புக் கருவிகள் பொருத்திட ரூபாய் 9 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகத்தில் வெளிப்புறப் பகுதியில் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 9 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

31. தமிழ் அகராதியியலின் தந்தை எனப் போற்றப்படும் வீரமாமுனிவரின் பிறந்த நாளை தமிழ் அகராதியியல் நாளாகக் கொண்டாடப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் அகராதியியல் அமைப்பு முறைக்கு முன்னோடியாக விளங்கிய வரும் தமிழ் அகராதியியலின் தந்தை எனப் போற்றப்படுபவருமான 'வீரமாமுனிவரின்' பிறந்த நாளான நவம்பர் 8–ஆம் நாள் 'தமிழ் அகராதியியல் நாள்'என ஆண்டுதோறும் கொண்டாடப்படும். இந்நிகழ்ச்சியில் அயல் நாட்டுத் தமிழறிஞர்

ஒருவரை அழைத்து கருத்தரங்கம் நடத்துதல் உட்பட ஆகும் செலவினங்களுக்கு ஆண்டுதோறும் ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

32. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழாய்வு மாணவர்கள் பரிமாற்றத் திட்டத்திற்கு தற்பொழுது அரசு வழங்கும் தொகையான ரூபாய் 9 இலட்சத்திலிருந்து ரூபாய் 40 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் செயற்படுத்தப்பட்டுவரும் மாணவர்கள் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் அந்நிறுவனத்தில் பயிலும் முனைவர் பட்ட மாணவர்கள் வெளிநாட்டிற்கும், வெளிநாட்டு மாணவர்கள் இந்நிறுவனத்திற்கும் வருகைபுரிந்து ஆய்வினை மேற்கொள்ள ஆண்டுதோறும் ரூபாய் 9 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை விரிவுபடுத்திடும் நோக்கில் பல அயல்நாடுகளுக்கு 15 மாணவர்களுடன் 2 பேராசிரியர்கள் ஆண்டுதோறும் உயர்ஆய்வுக்கு சென்றுவருவதற்கென ரூபாய் 40 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

33. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள புலங்களுக்கு வருகைதரு பேராசிரியர்கள் மற்றும் இலக்கிய ஆளுமையாளர்களை அழைத்து அவர்களின் அனுபவத்தையும் அறிவாற்றலையும் பயன்படுத்திக் கொள்ள ஆண்டுதோறும் ரூபாய் 54 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் ஆணைப்படி, தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் பிற பல்கலைக்கழகங்களிலிருந்து ஒய்வு பெற்ற பேராசிரியர்களின் அனுபவம் மற்றும் அறிவாற்றலை, ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ளும் விதமாக 10 வருகைதரு பேராசிரியர்களையும் 5 இலக்கிய ஆளுமையாளர்களையும் அழைத்தல். இவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூபாய்.30,000/ வீதம் (ரூபாய் முப்பதாயிரம்) மதிப்பூதியமாக அளிப்பதற்குத்தொடர்ச் செலவினமாக ரூபாய் 54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

34. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழ் இலக்கியம் மற்றும் ஒருங்கிணைந்த முதுகலைத் தமிழ் இலக்கிய மாணவர்களுக்கு ரூபாய் 39 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழ் இலக்கியம் மற்றும் ஒருங்கிணைந்த முதுகலைத் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்திட திங்கள்தோறும் 45 மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகையாக ரூபாய் 2000/ வீதம் வழங்கப்படும். இதற்கெனத் தொடர்ச் செலவினமாக ரூபாய் 39 இலட்சத்து 60 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

35. சங்கப் புலவர்களுக்கு நினைவுத் தூண் அமைத்து ஆண்டுதோறும் மாலை அணிவித்துச் சிறப்புச் செய்யப்படும்.

சங்கப் புலவர்களை நினைவுகூரும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறையால் 1990ஆம் ஆண்டு 4 இடங்களில் நினைவுத் தூண்கள் நிறுவப்பட்டன. அதேபோன்று மாண்புமிகு இதய

தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் மகிபாலன்பட்டியில் கணியன் பூங்குன்றனாருக்கு ஒரு நினைவுத் தூணும், விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூரில் கபிலருக்கு ஒரு நினைவுத் தூணும், தூத்துக்குடி மாவட்டம் கொற்கையில் மாறோக்கத்து நம்பலத்தனார், மாறோக்கத்து நப்பசலையார், மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர் காவிதியார் மகன் புல்லங்காடனார், வெறி பாடிய காமக்கண்ணியார், முன்றுறையரையனார் ஆகிய 6 சங்கப் புலவர்களுக்கும் சேர்த்து ஒரு நினைவுத் தூண் என மொத்தம் 3 நினைவுத் தூண்கள் நிறுவிட தொடராச் செலவினமாக ரூபாய் 40 இலட்சமும், இந்த 3 நினைவுத் தூண்களுக்கு ஆண்டு தோறும் மலர் தூவிச் சிறப்புச் செய்திட தொடர் செலவினமாக ரூபாய் 90 ஆயிரமும் என மொத்தம் ரூபாய் 40 இலட்சத்து 90 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

36. தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்களின் பெயரில் ’சிற்றிதழ் பரிசு’ என்ற புதிய விருது தோற்றுவித்து ஆண்டு தோறும் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்மொழியில் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றியும், பிறமொழிக் கலப்பின்றி எழுதியும் வெளியிடப்பட்டுவரும் நாளிதழ், வாரஇதழ் மற்றும் திங்களிதழ் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ஓர் இதழைத் தெரிவு செய்து ‘தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார்’ அவர்களின் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். இவ்விருது ஒவ்வொன்றிற்கும் விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், கேடயம், பாராட்டிதழ் மற்றும் பொன்னாடையும் வழங்கப்பெறும். இவ்விருதிற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 3 இலட்சத்து 75 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

37. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அயல்நாட்டுத் தமிழ் மாணவர்கள் ஆசிரியர்களுக்கான இலக்கிய – இலக்கண– பண்பாட்டுப் பயிற்சித் திட்டத்திற்கு ரூபாய் 30 இலட்சம் வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் மொழியைக் கற்பித்தல், இலக்கிய–இலக்கணப் பாடங்களின் வழி பேச்சு–எழுத்துத் தமிழை மேம்படுத்துதல் என்னும் அடிப்படையில் பிஜி மற்றும் கயானா (பிரிட்டிஷ்கயானா) நாட்டில் வாழும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் தமிழ்ப் பயிலும் மாணவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கு தொடராச் செலவினமாக ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ ❖ ❖

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

கலை மற்றும் பண்பாடு, அருங்காட்சியகங்கள், தொல்லியல்

மானியக் கோரிக்கை எண். 29

1. தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.

தஞ்சாவூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி, தஞ்சாவூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்திற்கு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம் பிள்ளையார்பட்டி கிராமத்தில் புதிய கட்டடம் கட்டப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுதல்.

இசைப் பள்ளி மற்றும் சவகர் சிறுவர் மன்றத்தில் பயிலும் மாணாக்கர்களின் இசைக் கல்வி நலன் கருதி, தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம் மாப்பிள்ளையூரணி கிராமத்தில் புதிய கட்டடம் கட்டப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. கலை பண்பாட்டுத் துறைக்கு சொந்தமான கட்டடங்களை பராமரிக்க ஒதுக்கீடு செய்யப்படும் தொகையினை ரூ.80 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பொதுப்பணித் துறையால் பராமரிக்கப்படும், கலை பண்பாட்டுத் துறைக்கு சொந்தமான கட்டடங்களின் ஆண்டு பராமரிப்பு பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.80 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென, ஆண்டொன்றுக்கு தொடரும் செலவினமாக ரூ.50 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. அரசு இசைக்கல்லூரி ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்தல்.

இசைக் கல்வியில் சிறந்த மாணாக்கர்களை உருவாக்கும் வண்ணமும் தற்போது இசை உலகில் உள்ள மாற்றங்கள், நவீன கற்பித்தல் முறைகள் என ஆசிரியர்கள் தங்களை புதுப்பித்துக்கொள்ளும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை, மதுரை, திருவையாறு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு அரசு இசைக் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கு, சிறந்த கலை வல்லுநர்களைக் கொண்டு, புத்தாக்கப் பயிற்சிகள் வழங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்தல்

கவின் கலைகளில் சிறந்த மாணாக்கர்களை உருவாக்கும் வண்ணமும் தற்போது கவின் கலைகளில் உள்ள மாற்றங்கள், நவீன கற்பித்தல் முறைகள் என ஆசிரியர்கள் தங்களை புதுப்பித்துக் கொள்ளும் வகையிலும், நவீன தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையிலும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக்கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு, சிறந்த கலை வல்லுநர்களைக் கொண்டு, புத்தாக்கப் பயிற்சிகள் வழங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம் வழங்கப்படும் பொற்கிழியினை உயர்த்தி வழங்குதல் மற்றும் அதற்கான மூலநிதியினை, ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்.

கலைமாமணி விருது பெற்று, வறிய நிலையில் உள்ள மூத்த கலைஞர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக, ஒருமுறை மட்டும் வழங்கப்படும் பொற்கிழி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.25,000/–லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக மன்றத்தில் ஏற்படுத்தப்பட்ட மூலநிதி, ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக கூடுதலாக ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. மறைந்த மூத்த கலைஞர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் வழங்கப்படும் குடும்ப பராமரிப்பு உதவித் தொகையினை உயர்த்தி வழங்குதல் மற்றும் அதற்கான மூலநிதியினை ரூ.28.76 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்.

மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக, ஒருமுறை மட்டும் வழங்கப்படும் குடும்ப பராமரிப்பு உதவித் தொகை, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.10,000/–லிருந்து ரூ.25,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக மன்றத்தில் ஏற்படுத்தப்பட்ட மூலநிதி ரூ.28.76 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக கூடுதலாக ரூ.21.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

8. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள், ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்கிட நிதியுதவி வழங்குதல்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொன்மை சிறப்புமிக்க தமிழக கிராமியக் கலைகளைப் போற்றி வளர்க்கும் கலைஞர்களையும், கலைக்குழுக்களையும் ஊக்குவிக்கும் வகையில், இசைக் கருவிகள், ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்கிட தனிப்பட்ட கலைஞர் ஒவ்வொருவருக்கும், ரூ.5000/– வீதம் 500 கலைஞர்களுக்கு ரூ.25 இலட்சமும், கலைக்குழு ஒவ்வொன்றுக்கும் ரூ.10,000/– வீதம், 100 கலைக் குழுக்களுக்கு,

ரூ.10 இலட்சமும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் நிதியுதவி வழங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. அரிய கலை நூல்களை மறுபதிப்பித்து வெளியிடுவதற்கு நல்கை வழங்குதல்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக, இயல், இசை, நாட்டியம், நாடகம் ஆகிய கலைகள் குறித்த அரிய நூல்களை பதிப்பிக்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மன்றத்தில் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு, இருப்பில் குறைவாக உள்ள 18 அரிய நூல்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மறுபதிப்பு செய்யப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.3.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

10. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்கு புதியதாக கணினிகள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்கு, புதியதாக கணினிகள், பிரிண்டர்கள் உள்ளிட்ட இதர உபகரணங்கள் வாங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.4.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

11. தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்திற்கு புதியதாக இசைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தில் பயிலும், முதுகலை / முதுகவின்கலை பட்டப்படிப்பு மற்றும் பொதுப் பிரிவில் பயிலும் மாணாக்கர்களின் கல்வி நலன் கருதி, புதியதாக இசைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.32.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

அருங்காட்சியங்கள் துறை

1. சென்னை அரசு அருங்காட்சியகத்தின் இரு சிற்பப் பூங்காக்களை மேம்படுத்துதல் மற்றும் ஒரு புதிய சிற்பப் பூங்கா அமைத்தல்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியகத்தில் தற்போதுள்ள இரு சிற்பப் பூங்காக்கள் மேம்படுத்தப்படும். மேலும், சேமிப்பில் உள்ள அனைத்து கற்சிற்பங்களை, பார்வையாளர்கள் எளிதில் பார்வையிட ஏதுவாக, ஒரு புதிய சிற்பப் பூங்கா இவ்வளாகத்தில் உள்ள பாரம்பரிய கட்டடங்களுக்கு ஏற்றவாறு ஏற்படுத்தப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. சென்னை அரசு அருங்காட்சியகத்தில்புனை மெய்யாக்கம் (Augmented Reality), மெய்நிகர் காட்சி (Virtual Reality) மற்றும் உடல் அசைவுகள் அடிப்படையிலான தொழில்நுட்பத் தீர்வுகள் (Touch based Technology Solutions) அமைத்தல்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியகத்தில், புனை மெய்யாக்கம், மெய்நிகர் காட்சி மற்றும் உடல் அசைவுகள் அடிப்படையிலான தொழில்நுட்பத் தீர்வுகளை கொண்ட ஊடாடும் காட்சித் தளங்களில், முக்கிய காட்சிப்பொருட்கள் தொடர்பான விவரங்களும் நுணுக்கங்களும் காட்சிப்படுத்தப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. சென்னை அரசு அருங்காட்சியக காட்சிக் கூடங்களில் காணொலி காட்சித் திரைகள் (Video Wall) அமைத்தல்.

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியக காட்சிக்கூடங்களில், கலைப்பொருட்கள் மற்றும் அறிவியல் மாதிரிகள் தொடர்பான கூடுதல் தகவல்களை தரும் வகையில், காட்சி பின்புலம் மற்றும் முன்புற காட்சியமைப்புகளை, நவீன தொழில்நுட்பச் சாதனங்கள் மூலம் உருவாக்கி, அவற்றை பார்வையாளர்கள் காணும் வகையில் சிறப்புமிக்க காட்சிக்கூடங்களில், காணொலி காட்சித் திரைகள் நிறுவப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பாதுகாப்பு மேலாண்மை கட்டுப்பாட்டு அமைப்பினை (Security Management Control System - SMCS) நிறுவுதல்

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,

சென்னை அரசு அருங்காட்சியகத்தில், தற்போது உள்ள பாதுகாப்பு சாதனங்களை மாற்றி, புதியதாக உள்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள், டிஜிட்டல் வீடியோ ரிகார்டர்கள், மானிட்டர்கள், காட்சிப்பொருள் பாதுகாப்பு அமைப்பு, பொது தகவல் அளிக்கும் அமைப்பு மற்றும் கூடுதல் தீ பாதுகாப்பு முன்னறிவிக்கும் சாதனங்களை உள்ளடக்கிய பாதுகாப்பு மேலாண்மை கட்டுப்பாட்டு அமைப்பை (SMCS) உள்வலைச் சுற்றில் (LAN) இயங்கும் வகையில் நிறுவப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.250 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அருங்காட்சியகங்கள் துறையின் கீழ் செயல்படும், 20 மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில், தலா ரூ.3 இலட்சம் செலவில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. சென்னை அரசு அருங்காட்சியக படிம காட்சிக்கூடங்களில் குளிர்சாதனக் கருவிகளை மாற்றியமைத்தல்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியகத்தில், சுமார் 15000 சதுர அடி பரப்பளவில் சைவம், வைணவம், பௌத்தம் மற்றும் சமண படிமங்கள் உள்ள தனித்த படிம காட்சிக்கூட கட்டடத்தின் மூன்று தளங்களில் உள்ள பழைய குளிர்சாதனக் கருவிகளை முற்றிலுமாக

மாற்றிவிட்டு, நவீன வி.ஆர்.வி. (Variable Refrigerant Volume) குளிர்சாதனக் கருவிகள், உரிய மின் பேனல்களுடன் நிறுவப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தொல்லியல் துறை

1. தமிழ்நாட்டின் கலாச்சார மரபினை வெளிக்கொணரும் வகையில் தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளுதல்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நவீன தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு ஆய்வு நடத்துவதன் மூலம், தமிழ்நாட்டின் சிறந்த கலாச்சார மரபினை அனைத்து மக்களுக்கும் வெளிச்சமிட்டு காட்ட இயலும் என்ற வகையில் முறையான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படும். இதற்கென, தொடரும் செலவினமாக ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன் அவர்களின் நினைவாக "பண்டைய தமிழ் பண்பாடு மற்றும் மரபு" என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் ஆண்டுதோறும் நடத்துதல்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் பிராமி கல்வெட்டுகளைப் படித்து பொருள் அறிவதிலும், சிந்து சமவெளி கல்வெட்டுகளைப் படிப்பதிலும்,

நிபுணத்துவம் பெற்ற, பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன் அவர்கள் தமிழ் பண்பாடு மற்றும் மரபிற்கு ஆற்றிய பங்களிப்பினைப் போற்றும் வகையில் அன்னாரின் நினைவாக, ‘‘பண்டைய தமிழ் பண்பாடு மற்றும் மரபு’’ என்னும் தலைப்பில், தொல்லியல் துறையால் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்படும். இதற்கென, தொடரும் செலவினமாக ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. வருங்கால தலைமுறையினரின் நலனுக்காக தமிழ்நாட்டிலுள்ள ஓலைச்சுவடிகளை ஆவணப்படுத்திட மாநில அளவிலான சுவடிக் குழுமம் (State Manuscript Mission) ஏற்படுத்துதல்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வருங்கால தலைமுறையினரின் நலனுக்காக தமிழ்நாட்டில் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிடம் உள்ள ஓலைச்சுவடிகள் அனைத்தையும் முறையாக பாதுகாத்து, எண்ணிலக்கம் செய்து ஆவணப்படுத்திட ‘‘மாநில அளவிலான சுவடிக் குழுமம்’’ (State Manuscript Mission) ஏற்படுத்தப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.10 இலட்சமும், தொடரும் செலவினமாக ரூ.50 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாக்கப்பட்ட சின்னங்களில் தமிழ் மரபுசார் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மக்கள் கூட்டம் அதிகமாக வரும் திருவிழாக் காலங்களில் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சாவூர் அரண்மனை, டேனீஷ்

கோட்டை போன்ற முக்கிய பாதுகாக்கப்பட்ட சின்னங்களின் வளாகங்களில் தமிழ் மரபுசார் கலை நிகழ்ச்சிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் நடத்தப்படும். இதற்கென, தொடரும் செலவினமாக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. தொல்லியல் துறையின் அகழ்வைப்பகங்கள் மற்றும் சார் அலுவலகங்களின் பாதுகாப்பினை கண்காணிக்க நவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொல்லியல் துறையின் அகழ்வைப்பகங்கள் மற்றும் சார் அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள தொல்பொருட்கள், கல்வெட்டுப்படிகள், ஆவணங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பினை, சென்னை தலைமை அலுவலகத்திலிருந்து கண்காணிக்க நவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ ❖ ❖

கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

மானியக் கோரிக்கை எண். 18

1. ரூ.68.50 இலட்சம் செலவில் சேலம் மாவட்டத்தில் உள்ள அண்ணா பட்டு மாளிகை வணிக வளாக கட்டடம் புனரமைக்கப்படும்.

சேலம் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு சொந்தமான அண்ணா பட்டு மாளிகை வணிக வளாக கட்டடம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 68.50 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்.

2. ரூ.15 இலட்சம் செலவில் ஈரோடு மாவட்டத்தில் வாரியத்திற்கு சொந்தமான கதர் கிராமத் தொழில்கள் உதவி இயக்குநர் அலுவலக கட்டடம் புனரமைக்கப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு சொந்தமான கதர் கிராமத் தொழில்கள் உதவி இயக்குநர் அலுவலக கட்டடம் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 15 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்.

3. ரூ.12 இலட்சம் செலவில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பட்டு நெசவாளர்களுக்கு தறி உபகரணங்கள் வழங்கப்படும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் நெசவுத் தொழில் புரியும் பட்டு நெசவாளர்களின் பணிச்சுமையினைக் குறைக்கவும், உற்பத்தியினைப் பெருக்கவும், இதயதெய்வம்

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பட்டு நெசவாளர்களுக்கு 12 இலட்சம் ரூபாய் செலவில் தறி உபகரணங்கள் வழங்கப்படும்.

4. ரூ.2 இலட்சம் செலவில் திண்டுக்கல் மாவட்டம் வேடப்பட்டி கிராமத் தொழில் அலகில் மூலிகை பல்பொடி செய்திட அரைவை இயந்திரம் கொள் முதல் செய்து நிறுவப்படும்.

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திண்டுக்கல் மாவட்டம் வேடப்பட்டி கிராமத் தொழில் அலகில் உற்பத்தி செய்யப்படும் மூலிகை பல்பொடி தயாரிக்க தேவைப்படும் மூலப்பொருட்களை அரைவை செய்யும் இயந்திரம் 2 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

5. ரூ.3 இலட்சம் செலவில் சிவகங்கை மாவட்டம் கண்டனூார் திரவ சோப்பு மற்றும் ஷாம்பு உற்பத்தி அலகில் சிறிய பவுச்சுகளில் ஷாம்பூ நிரப்பும் இயந்திரம் நிறுவப்படும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் சிவகங்கை மாவட்டம் கண்டனூார் திரவ சோப்பு மற்றும் ஷாம்பூ உற்பத்தி அலகில் சிறிய பவுச்சுகளில் ஷாம்பூ நிரப்ப ஏதுவாக இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 3 இலட்சம் ரூபாய் செலவில் இயந்திரம் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

6. ரூ. 10 இலட்சம் செலவில் திருச்சி மாவட்டம் சமயபுரம் சோப்பு அலகில் தானியங்கி சோப்பு மேலுறை மடிக்கும் இயந்திரம் நிறுவப்படும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம் சமயபுரம் சோப்பு அலகில் உற்பத்தி செய்யப்படும் சோப்புகளின் மேலுறைகளை தானியங்கி மூலம் மடிக்கும் வகையில் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 10 இலட்சம் ரூபாய் செலவில் தானியங்கி சோப்பு மேலுறை மடிக்கும் இயந்திரம் நிறுவப்படும்.

7. ரூ.15 இலட்சம் செலவில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் சிவகங்கை மாவட்டம் காஞ்சரங்காலில் (திருப்பத்தூர் ரோடு) காகிதக்கூழ் குடுவை தயாரிக்கும் அலகு தொடங்கப்படும்.

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் சிவகங்கை மாவட்டம் காஞ்சரங்காலில் (திருப்பத்தூர் ரோடு) 15 இலட்சம் ரூபாய் செலவில் காகிதக்கூழ் குடுவை தயாரிக்கும் அலகு தொடங்கப்படும்.

8. ரூ. 7 இலட்சம் செலவில் கன்னியாகுமரி மாவட்டம் அம்சி தேன் பதப்படுத்தும் நிலையத்தில் பதப்படுத்திய தேனை பாதுகாக்க 50 எவர்சில்வர் கொள்கலன்கள் கொள்முதல் செய்யப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம் அம்சி தேன் பதப்படுத்தும் நிலையத்தில், தேனீ விவசாயிகளிடமிருந்து வாங்கி பதப்படுத்திய தேனை பாதுகாக்கும் வகையில் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 50 எவர்சில்வர் கொள்கலன்கள் 7 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

9. ரூ.15 இலட்சம் செலவில் திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் காலணி அலகில் தோலினாலான பெல்ட் உற்பத்தி செய்வதற்கு புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் காலணி அலகில் காலணிகளுடன் தோலினாலான பெல்ட் உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புதிய இயந்திரங்கள் 15 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

10. ரூ.5 இலட்சம் செலவில் திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் காலணி அலகிற்கு 500 பிவிசி ஷூ அச்சுக்கள் கொள்முதல் செய்யப்படும்.

நவீன காலத்திற்கேற்றவாறு, நவீன வடிவமைப்புடன் கூடிய ஷூக்கள் உற்பத்தி செய்ய ஏதுவாக இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் காலணி அலகிற்கு 500 பிவிசி ஷூ அச்சுக்கள் 5 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

❖ ❖ ❖

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

இந்து சமய அறநிலையங்கள்

மானியக் கோரிக்கை எண். 47

1. இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் உள்ள எட்டு திருக்கோயில்களில் ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து எட்டு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் மதிப்பீட்டில் திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேலம் மாவட்டம் மற்றும் நகர், அருள்மிகு கோட்டை அழகிரிநாதர் சுவாமி திருக்கோயிலில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், நெருப்பூர் அருள்மிகு முத்தத்ராயசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், அய்யம்பாளையம் அருள்மிகு உத்தமராயர் திருக்கோயிலில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி நகர், புதுக்காமூர் அருள்மிகு புத்திரகாமேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 95 இலட்சம் மதிப்பீட்டிலும், செய்யாறு வட்டம், முனுகப்பட்டு அருள்மிகு பச்சையம்மன் சமேத மன்னார்சாமி திருக்கோயிலில் ரூபாய் 47.25 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவத்திபுரம் அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 95 இலட்சம் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பெரிய நெகமம் அருள்மிகு நித்தீஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 63.70 இலட்சம் மதிப்பீட்டிலும், கிணத்துக்கடவு வட்டம், சென்றாம்பாளையம் அருள்மிகு சென்றாயசுவாமி திருக்கோயிலில்

ரூபாய் 45.60 இலட்சம் மதிப்பீட்டிலும் திருக்கோயில் திருப்பணிகள், திருக்கோயில் நிதி / பிற திருக்கோயில்நிதி / துறை நிதி / பொதுமக்கள் பங்களிப்பு / உபயதாரர் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

2. திருப்புகழ் அருளிய அருளாளர் அருணகிரிநாதர் புகழை போற்றும் வகையில் திருவண்ணாமலையில் மணிமண்டபம் மற்றும் விழுப்புரம் மாவட்டம், இராவுத்தநல்லூர் திருக்கோயிலில் முன்மண்டபம் ஆகியவை ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் நகர் அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் 'அருளாளர் அருணகிரிநாதர் மணிமண்டபம்' மற்றும் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், இராவுத்தநல்லூர் அருள்மிகு சஞ்சீவராயர் திருக்கோயிலில் ரூபாய் 62.50 இலட்சம் மதிப்பீட்டில் முன் மண்டபம் ஆகியவை திருக்கோயில் நிதி / துறை நிதி / பொதுமக்கள் பங்களிப்பு / உபயதாரர் நிதியிலிருந்து கட்டப்படும்.

3. திருக்கோயில்களில் சுவாமிக்கு நெய்வேத்தியம் படைத்திடவும், சேவார்த்திகளுக்கு பிரசாதம் வழங்கிடவும் இரண்டு திருக்கோயில்களில் ரூபாய் ஐம்பத்து ஏழு இலட்சத்து எழுபதாயிரம் மதிப்பீட்டில் மடப்பள்ளிகள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், அடையகருங்குளம் அருள்மிகு நாராயணசாமி திருக்கோயிலில் ரூபாய் 7.20 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மடப்பள்ளி கட்டுதல் மற்றும்

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 50.50 இலட்சம் மதிப்பீட்டில் மடப்பள்ளி புனரமைக்கும் பணி துறை நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

4. திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களின் உடைமைகள் பாதுகாப்பிற்காக தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் பொருட்கள் வைப்பறை ரூபாய் இருபத்து இரண்டு இலட்சத்து பத்தாயிரம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக ரூபாய் 22.10 இலட்சம் மதிப்பீட்டில் பொருட்கள் வைப்பறை திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

5. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் நான்கு திருக்கோயில்களில் ரூபாய் தொண்ணூற்று ஆறு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரம் மதிப்பீட்டில் குளியலறை மற்றும் கழிவறைகள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், முனுகப்பட்டு அருள்மிகு பச்சையம்மன் சமேத மன்னார்சாமி திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், செங்கம்பூண்டி அருள்மிகு சித்தாத்தூர் மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம் அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன்

திருக்கோயிலில் ரூபாய் 29.20 இலட்சம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், நாகர்கோவில் அருள்மிகு நாகராஜா திருக்கோயிலில் ரூபாய் 17.73 இலட்சம் மதிப்பீட்டிலும் பக்தர்கள் வசதிக்காக புதிய குளியலறை மற்றும் கழிவறைகள் திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து கட்டப்படும்.

6. திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் நலன் கருதி அவர்கள் இளைப்பாறுவதற்கு வசதியாக ஆவணியாபுரம், அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் ரூபாய் நாற்பத்து ஐந்து இலட்சம் மதிப்பீட்டில் ஒய்வுக்கூடம் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சா் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம், ஆவணியாபுரம், அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் பக்தர்கள் ஓய்வுக்கூடம் திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து கட்டப்படும்.

7. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு ரூபாய் முப்பத்து நான்கு இலட்சத்து எண்பதாயிரம் மதிப்பீட்டில் இரண்டு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சா் அவர்களின் ஆணையின்படி,விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் ரூபாய் 18 இலட்சம் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகுவனபத்ரகாளியம்மன்திருக்கோயிலில்ரூபாய் 16.80 இலட்சம் மதிப்பீட்டிலும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

8. திருக்கோயில்களின் பாதுகாப்பு கருதி இரண்டு திருக்கோயில்களில் ரூபாய் எழுபத்தாறு இலட்சத்து ஐம்பதாயிரம் மதிப்பீட்டில் திருமதிற்சுவர் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், முனுகப்பட்டு அருள்மிகு பச்சையம்மன் சமேத மன்னார்சாமி திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம் மற்றும் நகர் அருள்மிகு பொன்மலை வேலாயுதசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 26.50 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய மதிற்சுவர் திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து கட்டப்படும்.

9. காவிரிக் கரையோரம் அமைந்துள்ள பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயிலின் பாதுகாப்பு கருதி கரை தடுப்புச்சுவர் ரூபாய் எழுபத்து இரண்டு இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஈரோடு மாவட்டம், பவானி வட்டம் மற்றும் நகர் அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயிலின் அருகே சேதமுற்ற காவிரிக்கரை தடுப்புச்சுவரை ரூபாய் 72 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து சீரமைக்கப்படும்.

10. திருக்கோயில் திருக்குளங்கள் ரூபாய் எழுபது இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி செப்பனிடப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், கொளத்தூர் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலின் திருக்குளத்தினை ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி நகர் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலின் திருக்குளத்தினை ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும் துறை நிதியிலிருந்து செப்பனிடப்படும்.

11. ஏழு திருக்கோயில்களில் புதிய திருத்தேர்கள் மற்றும் சப்பரங்கள் ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஆறு இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், வெடால் அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், தையூர் அருள்மிகு தடுத்தாண்டீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 37 இலட்சம் மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 33 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு கோணேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 37 இலட்சம் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் வட்டம், குள்ளம்பாளையம் அருள்மிகு மாரியம்மன் கருப்பராயன் திருக்கோயிலில் ரூபாய் 19 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய திருத்தேர்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், சேவூர் அருள்மிகு விருப்பாட்சீஸ்வரர் திருக்கோயிலில்ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி நகர் அருள்மிகு பூந்தேவி மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய சப்பரங்கள் திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து செய்யப்படும்.

12. திருத்தேர்களின் பாதுகாப்பின் அவசியத்தை கருதி பேரூர், அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் அறுபத்து நான்கு இலட்சம் மதிப்பீட்டில் திருத்தேர் பாதுகாப்பு கொட்டகை அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயிலின் திருத்தேர்களுக்கென ரூபாய் 64 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக திருத்தேர் கொட்டகை திருக்கோயில் நிதியிலிருந்து அமைக்கப்படும்.

13. இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் உள்ள மூன்று திருக்கோயில்களில் ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரம் மதிப்பீட்டில் வணிக வளாகங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை மாவட்டம், அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் உபகோயிலான சோழவந்தான் அருள்மிகு பதினெட்டாம்படி கருப்பண்ணசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 13.50 இலட்சம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடசேரி அருள்மிகு பூதம்வணங்கும் கண்டன் சாஸ்தா திருக்கோயிலில் ரூபாய் 68.79 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் வட்டம், தென்மாதிமங்கலம் அருள்மிகு கரைகண்டீஸ்வரர் மற்றும் மல்லிகார்ஜுனசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 71.40 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய வணிக வளாகங்கள் திருக்கோயில் நிதி / பிற திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து கட்டப்படும்.

14. திருக்கோயிலுக்கு சொந்தமான இடங்களில், நான்கு திருமண மண்டபங்கள் ரூபாய் ஏழு கோடியே பதினாறு இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை மாவட்டம் மற்றும் நகர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 96 இலட்சம் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கல் அருள்மிகு நவநீதேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் நகர், வெளிப்பாளையம் அருள்மிகு அகஸ்தீஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 3 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பெண்ணாத்தூர் வட்டம், பூதமங்கலம் அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய திருமண மண்டபங்கள் திருக்கோயில் நிதி / பிற திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

15. அன்னதானத் திட்டம் நடைபெறும் திருக்கோயில்களில் சேவார்த்திகளின் பயன்பாட்டிற்கென ஏழு திருக்கோயில்களில் ரூபாய் மூன்று கோடியே எண்பத்து எட்டு இலட்சம் மதிப்பீட்டில் அன்னதானக்கூடங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களி ஆணையின்படி, திண்டுக்கல் மாவட்டம், பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு பெரியநாயகியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், அம்மன்கோவில்படைவீடு அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயிலில் ரூபாய் 53 இலட்சம் மதிப்பீட்டிலும், விழுப்புரம்

மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், பரிக்கல் அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 53 இலட்சம் மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், சுவாமிமலை, அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான இன்னம்பூர் அருள்மிகு எழுத்தறிநாதர் திருக்கோயிலில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டிலும், பாபநாசம் வட்டம் மற்றும் நகர், 108 சிவாலயம் அருள்மிகு இராமலிங்கசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 62 இலட்சம் மதிப்பீட்டிலும், திருத்துறைப்பூண்டி வட்டம், கோவிலூர் அருள்மிகு மந்திரபுரீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய அன்னதானக் கூடங்கள் திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து கட்டப்படும்.

16. திருக்கோயில் அர்ச்சகர்களுக்காக ரூபாய் அறுபத்தொரு இலட்சத்து இருபத்து ஏழாயிரம் மதிப்பீட்டில் குடியிருப்புகள் கட்டப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடசேரி அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயில் சார்பில் ரூபாய் 61.27 இலட்சம் மதிப்பீட்டில் அர்ச்சகர் குடியிருப்பு திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

17. இந்து சமய அறநிலையத்துறை நிர்வகிக்கும் இரண்டு கல்லூரிகள் மற்றும் இரண்டு பள்ளிகளில் ரூபாய் ஏழு கோடியே பதினெட்டு இலட்சத்து எண்பத்து நான்காயிரம் மதிப்பீட்டில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மகளிர் மேல்நிலைப் பள்ளியின் முதல் தளத்தில் ரூபாய் 45.30 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று புதிய வகுப்பறைகள், பழநி அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரியில் ரூபாய் 5 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைகள், நூலகம் மற்றும் ஆய்வகம், கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறை ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி வளாகத்தில் ரூபாய் 88.54 இலட்சம் மதிப்பீட்டில் ஆராய்ச்சிக் கூடம், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், பாளைமேட்டுத்திடல், ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் ஆகிய பணிகள் திருக்கோயில் நிதி / கல்லூரி மேம்பாட்டு நிதி / பள்ளி மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

18. மலை மேல் அமைந்துள்ள இரண்டு திருக்கோயில்களுக்கு பக்தர்கள் எளிதாக சென்று வரும் பொருட்டு ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து நான்கு இலட்சம் மதிப்பீட்டில் மலைப்பாதை சீரமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் மற்றும் நகர் அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் மலைப்பாதை ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டில் அகலப்படுத்துதல், சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், வடசென்னிமலை, அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மலைப்பாதை ரூபாய் 54 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைத்தல் ஆகிய பணிகள் திருக்கோயில் நிதி / துறை நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

19. தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டை அருள்மிகு காலபைரவர் திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்காக ரூபாய் ஐம்பது இலட்சம் மதிப்பீட்டில் இரும்புத்தள நடைபாதை அமைக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான்கோட்டை அருள்மிகு சென்றாயசுவாமி சோமேஸ்வரர் வகையறா காலபைரவர் திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் இரும்புத்தள நடைபாதை திருக்கோயில் நிதியிலிருந்து அமைக்கப்படும்.

❖ ❖ ❖

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

மானியக் கோரிக்கை எண். 9

1. விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள், சமையல் பாத்திரங்கள், மரச்சாமான்கள் வழங்குதல்

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1,074 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்களும், 1,258 விடுதிகளுக்கு சமையல் பாத்திரங்கள் மற்றும் மரச்சாமான்களும் (Furniture) 6 கோடியே 64 இலட்சத்து 30 ஆயிரம் **ரூபாய்** செலவில் வழங்கப்படும்.

2. விடுதிகளில் சிறப்பு பழுது பார்ப்பு மற்றும் சீரமைக்கும் பணிகளுக்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தல்

அரசு கட்டடங்களில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு பல்வேறு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வது அவசியமாகிறது. மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இவ்விடுதிகளில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை, முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளும் வகையில் நடப்பாண்டிற்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

3. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு தனித் திறன் வளர்க்கும் பயிற்சி மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி அளித்தல்.

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு 1 கோடியே 70 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் வளர்க்கும் பயிற்சி அளிக்கப்படும். இதனால் 3,450 மாணவ, மாணவியர் பயன் பெறுவர்.

4. 230 கல்லூரி விடுதிகள், 60 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகள் / உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றிற்கு அகன்ற அலைவரிசை வசதியுடன் (Broadband) BSNL தொலைபேசி இணைப்பு வழங்குதல்.

230 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்லூரி விடுதிகளுக்கும் மற்றும் 60 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் மற்றும் கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் அலுவலகத்திற்கும் அகன்ற அலை வரிசை இணைய வசதியுடன் (Broadband) BSNL தொலைபேசி இணைப்புகள் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 37 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

5. 213 கள்ளர் சீரமைப்பு தொடக்கப் பள்ளிகளில் மரத்தாலான இருவர் அமரும் வசதியுள்ள மேஜையுடன் கூடிய பெஞ்ச் வழங்குதல்.

இத்துறையின் கீழ் பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி மேம்பாட்டிற்காக 213 கள்ளர் சீரமைப்பு தொடக்கப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இத்தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் நலனுக்காக 213 கள்ளர் சீரமைப்பு

தொடக்கப்பள்ளிகளுக்கு மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 4 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் மரத்தாலான இருவர் அமரும் வசதியுள்ள மேஜையுடன் கூடிய பெஞ்ச் வழங்கப்படும்.

6. 15 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் ஆங்கில வழிக் கல்வி தொடங்குதல்.

2011–2012 ஆம் கல்வியாண்டில் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் தலா 5 பள்ளிகள் வீதம் 15 அரசு கள்ளர் தொடக்கப் பள்ளிகளில் ஆங்கில வழியிலான மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்டன. இப்பள்ளிகளில் தற்போது 5 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இம்மாணவ, மாணவியர் தொடர்ந்து ஆங்கில வழி கல்வி பெறும் பொருட்டு 15 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 6 ஆம் வகுப்பில் ஆங்கில வழி கல்வி வகுப்புகள் தொடங்கப்படும்.

7. 23 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class Room) ELCOT **நிறுவனம் மூலம் அமைத்தல்.**

இத்துறையின் கீழ் 38 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் 15 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஏற்கெனவே திறன்மிகு வகுப்பறைகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. மீதமுள்ள 23 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடியே 5 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class Room) ELCOT நிறுவனம் மூலம் அமைத்துத் தரப்படும்.

8. 10 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் வழங்குதல்.

10 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஆய்வக உபகரணங்கள் வழங்கப்படும்.

9.7 பள்ளி விடுதிகளை கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்துதல்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர் நலனுக்காக மாநிலம் முழுவதும் 1,106 பள்ளி விடுதிகள் மற்றும் 242 கல்லூரி விடுதிகள் உயர்கல்விப் பயிலும் மாணவ, மாணவியரின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகின்றன. 7 பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 46 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

10. அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்க அனுமதிக்கப்படும் மாணவ, மாணவியரின் பெற்றோரது ஆண்டு வருமான வரம்பினை ரூ.50,000–லிருந்து ரூ.1,00,000 ஆக உயர்த்துதல்.

அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதாந்திர உணவு மானியம் வழங்குவதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள, பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, உயர்த்தப்படும்.

11. பிற்படுத்தப்பட்டோர் இயக்ககம் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

பிற்படுத்தப்பட்டோர் இயக்ககம் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களில் உயர் அலுவலர்களின் அறைகளை நவீனப்படுத்துதல், கூட்ட அரங்கினை புனரமைத்தல், அலுவலக வசதிகளை மேம்படுத்துதல், தடையற்ற மின்சாதன கருவி மற்றும் குளிர்சாதன கருவிகள் ஏற்படுத்தி தருதல் போன்ற பணிகள் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

12. விடுதி பணியாளர்களுக்கு பரிசுகள் வழங்குதல்

மாநில அளவில் விடுதிகளை நல்ல முறையில் பராமரிக்கும் காப்பாளர் / காப்பாளினிகளுக்கு தற்போது மாநில அளவில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூ.5,000, ரூ.3,000 மற்றும் ரூ.2,000 வழங்கப்பட்டு வருகிறது. விடுதி பணியாளர்கள் அனைவரையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் 3 சிறந்த விடுதிகளை தேர்ந்தெடுத்து அவ்விடுதிகளில் பணியாற்றும் விடுதி பணியாளர்களான காப்பாளர் / காப்பாளினி, சமையலர், காவலர் மற்றும் ஏவலர் மற்றும் துப்புரவு பணியாளர் ஆகியோருக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக காப்பாளர் / காப்பாளினிகளுக்கு ரூ.20,000, ரூ.15,000 மற்றும் ரூ.10,000 காவலர் மற்றும் ஏவலர் மற்றும் சமையலருக்கு ரூ.10,000, ரூ.5,000 மற்றும் ரூ.3,000 மற்றும் துப்புரவு பணியாளருக்கு ரூ.5,000, ரூ.3,000 மற்றும் ரூ.2,000 என மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வழங்கப்படும். இதற்காக 1 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

13. 83 கல்லூரி விடுதிகளுக்கு கட்டில்கள் வழங்குதல்

அரசு கட்டடங்களில் இயங்கி வரும்78 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதிகள் மற்றும் 3 சிறுபான்மையினர் கல்லூரி விடுதிகளுக்கு இரண்டு அடுக்கு இரும்பு கட்டில்கள் மற்றும் மலை பிரதேசங்களில் உள்ள 2 கல்லூரி விடுதிகளுக்கு மரக்கட்டில்கள் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 5 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

14. போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்துதல்.

பிற்படுத்தப்பட்டோர்,மிகப்பிற்படுத்தப்பட்டோர்மற்றும்சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் சென்னை, கோயம்புத்தூர், சேலம், திருப்பூர், ஈரோடு, திருச்சி, மதுரை, திண்டுக்கல், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 11 மாநகராட்சிகளில் UPSC, TNPSC Gr.I & II,TRB, RRB, வங்கித் தேர்வு போன்ற போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2 கோடியே 86 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

15. விடுதிகள் பராமரிப்பிற்கு குழாய் சீரமைப்பாளர் மற்றும் மின்வினைஞர் பணியிடங்கள் உருவாக்குதல்

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விடுதிகளில் பழுது நீக்கும் பணிகளுக்காக ஒரு மாவட்டத்திற்கு 1 குழாய் சீரமைப்பாளர் (Plumber) மற்றும் 1 மின்வினைஞர் (Electrician)

பணியிடங்கள் என 31 மாவட்டங்களுக்கு 62 பணியிடங்கள் 1 கோடியே 72 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாக உருவாக்கப்படும்.

16. 18 மாணவியர் விடுதிகளுக்கும் மற்றும் 46 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கும் காவலர் மற்றும் ஏவலர் பணியிடங்கள் உருவாக்குதல்

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 18 மாணவியர் விடுதிகளுக்கும் மற்றும் 46 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தலா ஒரு காவலர் மற்றும் ஏவலர் பணியிடம் வீதம் மொத்தம் 64 பணியிடங்கள் 1 கோடியே 45 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

17. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் ஆண்டு நிருவாக மானியத்தினை உயர்த்துதல்.

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் ஆண்டு நிருவாக மானியம் 1 கோடி ரூபாயிலிருந்து 2 கோடி ரூபாயாக 2017–2018ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டது. இந்த ஆண்டு, நிருவாக மானியம் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2 கோடி ரூபாயிலிருந்து 2 கோடியே 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

❖ ❖ ❖

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
மானியக்கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது
அறிவிக்கப்பட்ட துறை வாரியான அறிவிப்புகளின்
மொத்த எண்ணிக்கை : 837

எவ்வளவு சோதனைகள் வந்தாலும், அந்த சோதனைகளையெல்லாம் மக்கள் துணைகொண்டு நாங்கள் வெற்றிபெறுவோம். ஏனென்றால், மக்களுக்கு தேவையான திட்டங்களை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி** K.**பழனிசாமி** அவர்கள்